
# தமிழ்நேசன்

மலர் 22 1991 இதழ் 3

அக்டோபர்





# இந்த இதழில்...


மாண்புமிகு முதல்வர்
அவர்களின் டில்லிப் பயணம் ... 2

படமும் செய்தியும் ... 5

காவிரி நீர்ப் பிரச்சினை:
—முதல்வரின் முக்கிய அறிக்கைகள் ... 7

நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும்
—மாண்புமிகு முதல்வர் ... 9

காவிரி நீர்: அனைத்துக்கட்சித்
தீர்மானம் ... 14

இந்திய வேளாண்மை விஞ்ஞானி
டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு
அமெரிக்க விருது ... 17

தமிழ் வளர்த்த பெரியார்
அ.கி. பரந்தாமனார் ... 19

கோழிப் பண்ணையைப்
பராமரிப்பது எப்படி? ... 22

சேலம் மாவட்டம்
போதமலைப் பழங்குடிகள் ... 24

அரசின் அறிவிப்புகள் ... 28

புஞ்சை நிலத்தில் வருவாய்
பெருகப் புதிய அணுகுமுறை ... 29

மிளகு - ஏலக்காய் ... 32

மீன்பிடித்தல் தடை தளர்ப்பு ... 33

மாணவர் நலனில் சென்னைப்
பல்கலைக் கழகம் ... 34

மாணவர் பக்கம் ... 37

பழம்பெரும் கற்காலச் சின்னங்கள் ... 39

செய்திகள் ... 41

புறநானூற்றில் வரலாற்றுச் சுவடுகள் ... 42

இதய நோய்களும் தடுக்கும் முறைகளும் ... 45



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

ஆடித் திங்கள் - 16

மலர்:22 இதழ்:3

1-8-1991


காவிரி நதி நீர்ப்பிரச்சினைகுறித்த நடுவர் மன்றத் தீர்ப்பைச் செயல்படுத்தாத கர்நாடக அரசைக் கண்டித்துத் தமிழ்நாடெங்கும் அமைதியான முறையில் 26.7.91 அன்று முழு அடைப்பு அறப்போராட்டம் (பந்த்) நடத்தப்பட்டது. அன்றைய தினம் சென்னையில் உள்ள சாலைகள் வெறிச்சோடிக் கிடந்த காட்சி!







# தமிழ்நாட்டின் தேவைகள்:

# இந்தியக் குடியரசுத் தலைவர்-பிரதமர் ஆகியோருடன் தமிழக முதல்வர் பேச்சு

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்ற பின் முதன் முறையாக 15.7.1991 அன்று மாலை புதுடெல்லிக்குப் பயணமானார். முதல்வருடன் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., முதல்வரின் இணைச் செயலர் திரு. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., ஆகியோர் டெல்லிக்குச் சென்றனர். சென்னை விமான நிலையத்தில் முதல்வர் அவர்கள் நிருபர்களிடம் பேசுகையில்,

''தமிழகத்தின் தேவைகள் குறித்தும், தமிழகத் திற்குத் தேவைப்படும் நிதி உதவிகள் குறித்தும் பிரதமருடன் பேசுவேன். மேலும் தமிழகத்தில் பல்வேறு திட்டங்களைச் செயல்முறைப்படுத்த மத்திய அரசின் உதவி குறித்தும், காவிரி நதி நீர்ப் பங்கீடு டிரிபியூனலின் இடைக்கால உத்தரவை அமல்படுத்த வகை செய்யும்படி கர்நாடக அரசை அறிவுறுத்த வேண்டும் என்றும் பிரதமரிடம் வலியுறுத்துவேன்'' என்று கூறினார்.

புதுடெல்லியில் முதல்வர் அவர்கள் குடியரசுத் தலைவர்திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களையும், பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களையும் சந்தித்துப் பேசினார்.

தமிழக காவிரி டெல்டா பகுதியில் வாடும் பயிர்களைக் காப்பாற்ற, காவிரி நடுவர் மன்ற (Tribunal) தீர்ப்பின்படி, ஆண்டு ஒன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடக அரசு தமிழகத் திற்கு உடனே வழங்க, இந்திய அரசியல் நிர்ணய சட்டம் 256 பிரிவின்படி, மத்திய அரசு ஆணை யிட வேண்டும். இடைக்கால ஆணையை அரசிதழில் (Gazette) வெளியிட வேண்டும் எனவும் தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டார்.

இது குறித்து தமிழக, கர்நாடக அரசு முதல்வர் களுடன் பேசி, சுமுகமான தீர்வைக் காண தயாராக இருப்பதாக பிரதமர் அவர்களும், மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. வி.சி.சுக்லா அவர்களும் அறிவித்தார்கள். ஆனால் பேச்சு வார்த்தைக்கு முன்பாக இடைக்காலத்தீர்ப்பின்படி தண்ணீர் திறந்து விட்டாக வேண்டும். இடைக்கால தீர்ப்பு கெஜட்டில் அறிவிக்கப்பட வேண்டும் என் பதை தமிழக முதல்வர் உறுதியாகத் தெரிவித்தார். மேலும் கர்நாடகாவில் பலத்த மழை பெய்து, ஏரிகளெல்லாம் நிரம்பி வழிவதால், தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடுவதை மேலும் காலந்தாழ்த்து வதில் எவ்வித நியாயமும் கிடையாது என்பதையும் தெளிவுபட எடுத்துக் கூறியுள்ளார்.



தமிழகப் பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாறுதலை ஏற்படுத்துவதற்கு இன்றியமையாத, பல்வேறு முற்போக்குத் திட்டங்களைப்பற்றி பிரதமரிடமும், மற்ற மைய அமைச்சர்களிடமும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விவாதித் தார். அவைகள் பின்வருமாறு:-

★ தமிழகத்தில் ரூ.6,000 கோடி செலவில் ஒரு ஆரோமேடிக் தொழிற்சாலையைத் தொடங்கிட மைய அரசு உடனடியாகத்தேவையான நடவடிக் கைகளை எடுக்க வேண்டும்.

★ தென்னக எரிவாயு இணைப்புக் குழாய் திட்டத்தை உடனடியாக தமிழகத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

★ தமிழகத்தின் நீண்ட நாள் கோரிக்கையான ஊட்டி கலர் பிலிம் தொழிற்சாலையை ரூ.250 கோடி செலவில் விரைவில் துவங்க வேண்டும்.

★ கனிமச் சுரங்கத் தொழில்களை மாநில அரசு தனியாகவோ, மத்திய அரசின் துணை யுடனோ நிறைவேற்ற அனுமதி வழங்க வேண்டும்.

★ தனியார் துறையில் மின்சாரம் தயாரிக்க மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும். ஜயங் கொண்டத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க ஆதரவு தர வேண்டும்.

★ நெய்வேலி முதல் சுரங்கத்தை விரிவு படுத்தவும், ரூ.2,500 கோடி செலவில் இரண்டு புதிய அனல் மின் தொழிற்சாலைகள் (210x2 மெகாவாட்) அமைத்திடவும், மூன்றாவது சுரங்கம் அமைத்திடவும், இதில் வரும் மின்சாரம் முழு வதும் தமிழகத்திற்கே கிடைத்திடவும், மத்திய அரசு வழி வகை செய்திடல் வேண்டும்.

★ பாரதீப் துறைமுகத்தில் நிலக்கரி கையாளு வது இயந்திரமயமாக்கப்பட வேண்டும்.

★ நிலக்கரி இல்லாமல் மின்வாரியம் மிகவும் கடினமான கட்டத்தில் இருப்பதால் ஒரு மாதத் திற்குத் தேவையான ஏழு இலட்சம் டன் நிலக் கரியை இறக்குமதி செய்ய மைய அரசு அனுமதி வழங்க வேண்டும்.



★ சிங்கரேணியில் நிலக்கரியில்லாத காரணத் தால், மேட்டூருக்குத் தேவையான நிலக்கரியை பீகார் மற்றும் ஒரிஸ்ஸாவிலிருந்து இரயில் மற்றும் கடல் வழியாகக் கொண்டுவர, வருடத்திற்கு ஆகும் ரூ.150 கோடி செலவினை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

★ எண்ணூரில் ஒரு துணைத்துறைமுகம் (Satellite Port) நிறுவப்பட வேண்டும்.

★ தமிழகத்தின் நீண்ட நாள் கனவாகவே இருக்கும் சேது சமுத்திரம் திட்டத்தை விரைவில் நிறைவேற்றிடத் தேவையான நடவடிக்கைகளை மைய அரசு மேற்கொள்ள வேண்டும்.

★ சாலைப் போக்குவரத்துக் கழகத்திற்கு விதிக்கப்பட்டுள்ள 10 சதவிகித டீசல் குறைப்பு விலக்கப்பட வேண்டும்.

★ கிழக்குக் கடற்கரை ஓரத்தில் தேசிய நெடுஞ் சாலை அமைத்திடல் வேண்டும்.

★ கரூர்-தூத்துக்குடி அகல இரயில் பாதை யும், சென்னை துரித இரயில் திட்டமும் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

★ நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்.

★ கிராமங்களில் குடிநீர் விநியோகம் செய்யும் திட்டத்திற்கு 91-92-ஆம் ஆண்டிற்கு ரூ.40 கோடி வழங்கப்பட வேண்டும்.

★ தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் பெறக்கூடிய குடிநீரைத் தேக்கி, விநியோகம் செய் யும் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து, ரூ.600 கோடி பெற்றுத்தர வேண்டும்.

★ திருப்பூர், ஆம்பூர், ராணிப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய இடங்களில் ஏற்றுமதி தொழிற்சாலை மண்டலங்கள் (Export Processing Zones) அமைக்கப்பட வேண்டும்.

★ காவல்துறையை நவீன மயமாக்கவும், நவீன ஆயுதங்களை வாங்கவும், காவல் கல்வி நிலையம் (Police Academy) ஏற்படுத்தவும், சிறப்பு அதிரடி போலீஸ் பயிற்சி அகாடமி ஏற்படுத்தவும், கடல் பாதுகாப்புப்படை (Marine Wing for Patroling Coastline) அமைக்கவும், கடலோரப் பாதுகாப்புக்காக ரூ.70 கோடி நிதியுதவியும், வழங்கவேண்டும்.

★ நீளமான கடல் எல்லையைக் கொண்டுள்ள தமிழகத்தில் பரவி விட்ட பயங்கரவாதத்தை மத்திய அரசின் ஒத்துழைப்பின்றி ஒழித்துவிட முடியாது. இதேபோல் பயங்கரவாதத்தால் பாதிக் கப்பட்ட பஞ்சாப், காஷ்மீர் மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் உதவிகளைப் போல 100 சதவிகித உதவி தமிழகத்திற்கு வழங்கவேண்டும்.

★ மாநில அரசின் திட்ட மதிப்பீடு ரூ.1,600 கோடி. இதில் ரூ. 1,230 கோடி பற்றாக்குறை. 91-92-க்கு மற்ற மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கிய உதவிகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| மேற்கு வங்கம் | 65.95 சதவிகிதம் |
| உத்திரபிரதேசம் | 33.5 ,, |



| | | |
|---|---|---|
| ஆந்திரபிரதேசம் | 36.6 | ,, |
| மகாராஷ்டிரா | 42 | ,, |
| பஞ்சாப் | 50.4 | ,, |
| மத்திய பிரதேசம் | 20.71 | ,, |

ஆனால் தமிழ்நாட்டுக்கு 9.7 சதவிகிதம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

எனவே சிறப்பு நிதி உதவியாக தமிழகத்திற்கு வழங்கப்பட்ட ரூ.450.17 கோடி ரூ.600 கோடியாக உயர்த்தப்பட வேண்டும். யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா சிறு தொழில்களில் முதலீடு செய்யும் தொகை ரூ.16 கோடியிலிருந்து ரூ.300 கோடியாக உயர்த்தப்பட வேண்டும். (Market borrowing) வெளிக்கடன், ரூ.321.79 கோடியில் இருந்து ரூ.450 கோடிக்கு உயர்த்தப்பட வேண்டும்.

★ மலிவு விலை மதுவை ஒழித்ததனால் அரசுக்கு நடப்பு ஆண்டு ரூ.322 கோடியும் ஒரு முழு ஆண்டில் ரூ.390 கோடியும் வருமான இழப்பு ஏற்படுகிறது. மதுவிலக்கினால் ஏற்படும் நஷ்டத்தை 100 சதவிகிதம் மைய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

★ ஜனதாதள அரசு ரூ.10,000/- வரையிலான விவசாயிகளின் கடனை ரத்து செய்ததாக அறிவித்தது. அதில் 50 சதவிகிதம் மைய அரசும், 50 சதவிகிதம் மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஆணையிட்டது. இதன்படி ரூ.145 கோடியை மூன்று ஆண்டுகளில் நாம் செலுத்த வேண்டும். நடப்பு ஆண்டில் ரூ.54 கோடியைச் செலுத்த வேண்டும். மேற்படி கடனை மைய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். இல்லையெனில் கட்ட வேண்டிய காலத்தை நீட்டிக்க வேண்டும் என்றும் தமிழக முதல்வர் அவர்கள் பிரதமரை வலியுறுத்தியுள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் துணைவியார் திருமதி சோனியா காந்தி அவர்களைத் தமிழக முதல்வர் அவர்கள் சந்தித்து திரு. ராஜீவ் காந்தி மறைவுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

தமிழகத்தில் பொற்காலம் படைத்திடத் தேவையான முக்கியமான திட்டங்களை நிறைவேற்றும் முதற்கட்டமாக அமைந்திட்ட இந்த புதுடெல்லி பயணத்தின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள், துணை ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா, உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான், நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங், நீர் வளத்துறை அமைச்சர் திரு. வி.சி. சுக்லா, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மாதவ் சின் சோலங்கி, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. பல்ராம் ஜாக்கர், தொழிலாளர் நல இணை அமைச்சர் திரு. கே. இராமமூர்த்தி ஆகியோரைச் சந்தித்து இத்திட்டங்கள் குறித்து விவாதித்தார்.

தமிழகத்தில் பொற்காலத்தை உருவாக்குவதில் இப்பயணம் முதல்படியாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

- நமது செய்தியாளர்.

## சில மாவட்டங்களின் பெயர்களில் மாற்றம்

தமிழகத்தில் சில மாவட்டங்களின் பெயர்கள் மாற்றம் செய்யப்படுகின்றன.

'செங்கை-அண்ணா மாவட்டம்' என்று குறிப்பிடப்பட்ட மாவட்டம் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் என அழைக்கப்படும்.

'பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்' என அழைக்கப்பட்ட மாவட்டம் 'பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்' எனப்படும்.

பெரிய மாவட்டங்களில் ஒன்றான தஞ்சை மாவட்டம் நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்கப்படும். தஞ்சாவூரைத்தலைநகராகக் கொண்ட மாவட்டம் 'தஞ்சாவூர் மாவட்டம்' எனவும், நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட கிழக்குத் தஞ்சை 'காயிதே மில்லத் மாவட்டம்' எனவும் அழைக்கப்படும்.

திண்டுக்கல் [illegible] மாவட்டம் 'திண்டுக்கல் [illegible] மாவட்டம்' என அழைக்கப்படும்.



# படமும் செய்தியும்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் முதலாவது டில்லிப் பயணம்.



டில்லிக்குச் சென்றிருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.7.91 அன்று அங்கு மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களையும்...



மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. சவான் அவர்களையும்...



மாண்புமிகு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மாதவ் சின் சோலங்கி அவர்களை



மாண்புமிகு திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களையும் சந்தித்தார்.



மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் 17.7.91 அன்று புதுடில்லி சென்றிருந்த போது, மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்களின் துணைவியார் திருமதி சோனியா காந்தி அவர்களைச் சந்தித்தார்.



# காவிரி நீர்ப் பிரச்சினை : முதல்வரின் முக்கிய அறிக்கைகள்

தமிழ்நாட்டு மக்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்றும், அனைத்துக கட்சித் தலைவர்களின் வேண்டுகோளை ஏற்றும் தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தத்தினை முழுமையாக வெற்றிபெறச் செய்தமைக்காகத் தமிழக மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்கள் காவிரி நீர்ப் பிரச்னையில் தங்களது உணர்வுகளை வன்முறை இல்லாமல் அமைதியான முறையில் வெளிப்படுத்தும் வகையில் பொது வேலை நிறுத்தத்தினை வெற்றிகரமாக நடத்திக் காட்டியுள்ளனர்.

கர்நாடக அரசின் பிடிவாதப் போக்கினையும், மூர்க்கத் தனமான போக்கினையும் கண்டித்து, அமைதி வழியில் தமிழக மக்கள் வெளிப்படுத்தியுள்ள இந்த ஒட்டுமொத்த உணர்வுகளைக் கர்நாடக அரசு மதித்து, காவிரி நீரைத் தமிழகத்திற்குத் திறந்துவிடுவது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

எனவே - அண்டை மாநிலங்களோடு சகோதரத்துவம் நல்லுறவு இவைகளை வளர்க்க எண்ணுகிற தமிழகத்தின் நியாயமான குரலுக்குச் செவிசாய்த்து, நடுவர் மன்றத் தீர்ப்பினை மதித்து, உடனடியாகத் தமிழ்நாட்டிற்கு நியாயமாகச் சேரவேண்டிய தண்ணீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசினைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலத் தமிழக மக்களின் கோரிக்கையினை ஏற்று மத்திய அரசு தனது மெத்தனப் போக்கினைக் கைவிட்டு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று, தமிழக மக்களின் சார்பில் மத்திய அரசினைக் கேட்டுக் கொள்கிறேன்.

*(26.7.1991 அன்றிரவ வெளியிட்ட அறிக்கை)*

''பிரதமர் பி.வி.நரசிம்மராவ் இன்று மாலை என்னுடன் டெலிபோனில் பேசினார். காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து மத்திய மந்திரி சபையின் அரசியல் விவகாரக் கமிட்டி விரிவாக விவாதித்தது பற்றி எடுத்துச் சொன்னார்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் சுப்ரீம் கோர்ட்டின் கருத்தை அறிந்து கொள்வது என்று இந்தக் கமிட்டியில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவுப்படி 205 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விடும்படி கர்நாடக அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று நான் பிரதமரிடம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறேன்.

இந்தப் பிரச்சினையில் நீங்கள் (பிரதமர்) தமிழக மக்களுக்கு நீதி கிடைக்கும்படி செய்வதில் உறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தேன். அப்படியிருந்தும் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இப்போது காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து டெல்லி சுப்ரீம் கோர்ட்டிடம் கருத்து கேட்க மத்திய அரசு முடிவு எடுத்திருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது.

மத்திய அரசின் இந்த முடிவு தமிழக மக்களுக்குக் கொடிய அநீதியை ஏற்படுத்திவிட்டது என்றுதான் நாங்கள் உணர்கிறோம்.

இதன்மூலம், நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவை நிறைவேற்றாமல், கால தாமதப்படுத்த மத்திய அரசு முயற்சி செய்கிறது. சுப்ரீம் கோர்ட்டிற்கு இந்தப்பிரச்சினை சென்றுள்ளதால், அங்கு முறைப்படி எடுக்கப்பட வேண்டிய கோர்ட்டு நடவடிக்கைகள் காரணமாகக் காலதாமதம்தான் ஏற்படும். மத்திய அரசின் இந்தத் தீர்வு நடுவர் மன்ற இடைக்கால உத்தரவைக் கிடப்பில் போடுவதாகவே உள்ளது. இதனால் நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவிற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடுகிறது.

இது, தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகள் மற்றும்

விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்வா அல்லது சாவா என்ற பிரச்சினையாகும்.

இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காகத் தமிழக மந்திரி சபையின் அவசரக்கூட்டம் சென்னையில் 28-ந்தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது.

காவிரி நீர்ப் பிரச்சினையில் இனிமேல் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்.

—(27.7.1991 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை)

தலைமைச் செயலகத்தில் 28.7.91 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவைகளின் விவரம் வருமாறு:

1. காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் திட்டவட்டமான முடிவைக் காண்பதற்கு உச்சநீதி மன்றத்தில் வழக்குத்தொடர்வது என்று முன்பே எடுத்த முடிவுக்கு இணங்க, வழக்குத் தொடர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என அமைச்சரவை தீர்மானிக்கிறது.

2. காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை குறித்து, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவுகளை முறைப்படி நடைமுறைப்படுத்த சட்ட ரீதியான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வது என அமைச்சரவை தீர்மானிக்கிறது. காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்பை எதிர்த்துக் கர்நாடக மாநில அரசு எடுத்துள்ள முடிவு இந்திய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படுத்தியிருப்பதாலும், நடுவர் மன்றத்தையும், உச்சநீதி மன்றத்தையும் மதிக்காத போக்கை உருவாக்கியிருப்பதாலும் அவற்றைக் காப்பாற்ற எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும், அனைத்திந்தியக் கட்சிகளின் தலைவர்களுக்கும் தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்றும் அமைச்சரவை தீர்மானிக்கிறது.

3. காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை முறைப்படியும், சட்டப்படியும், நியாயப்படியும் தீர்க்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசு அனுமதி பெறாமலும், தமிழக அரசின் ஒப்புதலைப் பெறாமலும், கர்நாடக அரசு புதிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தமிழகத்திற்குப் பாதகம் ஏற்படுத்திய நிலையை மத்திய அரசு ஆரம்பத்திலேயே தடுத்து திருத்தியிருக்க வேண்டும். 27 தடவைகள் பேசிய பேச்சு வார்த்தைகளில் முடிவேற்படாததால் பிரச்சினை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டது. நடுவர் மன்றத்திடம் தமிழக அரசு இடைக்காலத் தீர்ப்பைக் கோரியது. உச்சநீதி மன்றத்தின் ஆணையின்படி நடுவர் மன்றமும் ஒரு இடைக்காலத் தீர்ப்பினை வழங்கியுள்ளது. இடைக்காலத் தீர்ப்பு முழுத் திருப்தியைத் தமிழகத்திற்கு அளிக்காவிட்டாலும், உடனடியாக இந்தத் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. அளவு நீர் கிடைப்பதைத் தமிழக அரசு வரவேற்றது.

நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவைக் கர்நாடக அரசு நிறைவேற்றும் என்று தமிழ்நாடு அரசு எதிர்பார்த்தது. கர்நாடக அரசோ இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுத்திருப்பது மட்டுமல்லாமல், அதற்கு எதிராக ஒரு அவசரச் சட்டத்தையும் வெளியிட்டுள்ளது. மைய அரசு தலையிட்டு இந்தப் பிரச்சினையில் நியாயம் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு கோரியது. ஆனால் மத்திய அரசு தமிழ் மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கி இந்தப் பிரச்சினையை மத்திய அரசே தீர்க்க முன் வராமல் தேவையற்ற விளக்கங்களைக் கேட்டு வீணே காலம் தாழ்த்துகிற வகையில் உச்சநீதி மன்றத்தின் கருத்தைக் கேட்டுள்ளது.

மைய அரசின் முடிவைத் தமிழக மக்கள் விரும்பவில்லை என்பதோடு, அதை வன்மையாகக் கண்டிக்கின்றனர். காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் மத்திய அரசு தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் எடுத்துள்ள இந்த நடவடிக்கை விபரீதமானது. இதனால் மக்களிடையே கொதிப்பு உணர்ச்சியும், போராட்ட உணர்வும் வெடித்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டாம் என்கிற கருத்தைப் பல்வேறு தரப்பினரும் தெரிவித்துள்ளனர். தமிழக மக்கள் காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் ஒன்றுபட்டு ஒருமித்த கருத்துடன் தங்கள் உணர்வினை வெளிப்படுத்த வேண்டும் என்கிற உயரிய எண்ணத்துடன் உள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைப்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. இவற்றையெல்லாம் ஆழ்ந்து பரிசீலித்து உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை இப்போது நடத்தாமல் ஒத்தி போடுவது என்று அமைச்சரவை முடிவு செய்கிறது.

—இவ்வாறு அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



★ குடி என்பது,
வளர்ந்துகொண்டே
வரும் ஒரு
சமூகத் தீமை!





# நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும்! அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல்வர் முழக்கம்!

**கா**விரி நீர்ப் பிரச்னை குறித்துப் பேச மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 22.7.91 அன்று, அரசு தலைமைச் செயலகத்தில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் அனைத்துக் கட்சிகள் கூட்டமொன்றைக் கூட்டிக் கலந்தாலோசித்தார். மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாண்புமிகு மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு வாழப்பாடி இராமமூர்த்தி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். கூட்டத்துக்கு வந்திருந்தோரை அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி.வெங்கட்ராமன் வரவேற்றார்.

காலை 10.15 மணியளவில் தொடங்கி, நடுப்பகல் 1.30 மணிவரை நடைபெற்ற காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிய இக்கூட்டத்தில்- தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்(இ.காங்.), திரு. ஆலடி அருணா (திமுக), திரு. ஆர். நல்லகண்ணு(வ.கம்), திரு. ஏ.நல்லசிவம் (இ.கம்), திரு. கோ. வீரையன் (இ.கம்) திரு. இரா.செழியன், திரு. தஞ்சை சு. இராமமூர்த்தி (ஜனதா தளம்), திரு. ஜி.ஜி.குருமூர்த்தி (சமாஜ்வாடி), திரு. டி. சடகோபன் (பாரதீய ஜனதா), திரு. நெல்லை ஜெபமணி, திரு. கே.ஆர்.ராஜ்குமார்(ஜனதா), திரு. ஆர்.எழில்மலை (பாட்டாளி மக்கள் கட்சி), திரு. எஸ். திருநாவுக்கரசு (அண்ணா புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகம்), திரு. டி. ராஜேந்தர் (தாயக மறுமலர்ச்சிக் கழகம்), திரு. பி.சி.பழனியாண்டி (லோக் தளம்), திரு. வை. பாலசுந்தரம் (அம்பேத்கர் மக்கள் இயக்கம்), திரு.செ.கு.தமிழரசன் (குடியரசுக் கட்சி), திரு. ஆண்டித்தேவர் (பார்வர்டு பிளாக்), திரு. அப்துல் லத்தீப் (மு.லீக்), செங்கம் ஜப்பார் (முன்னேற்ற முஸ்லீம் லீக்), திரு. கந்தசாமி (பார்வர்டு பிளாக்-கே), திரு. அய்யன் அம்பலம் (பார்வர்டு பிளாக் ஐ.ஏ.), திரு. இளையபெருமாள் (இந்திய மனித உரிமைக் கட்சி), திரு. இரா.குலசேகரன் (தமிழ்நாடு விவசாயி மற்றும் தொழிலாளர் கட்சி), திரு. ப. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), திரு. நெப்போலியன், ஏ.பால்ராஜ் (தமிழ்நாடு பொது மக்கள் சமூகநலச் சங்கம், டாக்டர் சிவசாமி (இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி), திரு. ஜோசப் பெர்னாண்டோ (கிறிஸ்தவ முன்னேற்றக் கழகம்), திரு. ஏ.கே.தாஜுதீன் (தமிழ்நாடு முன்னேற்ற முஸ்லீம் லீக்) உள்ளிட்ட 54 கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டம் முடிவடைந்த பிறகு- மாண்புமிகு முதல்வர் அவர்களின் இணைச் செயலாளரும், செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநருமான திரு. கே.கணேசன் அவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்களைச் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார் (இவ்விதழில் உள்ள 'அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள்' பகுதியில் அவை இடம் பெற்றுள்ளன).

காவிரி நீர் பிரச்னை குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், வருகை தந்தோரின் கருத்தறிந்தபின்- மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரையின் முழுவிவரம் வருமாறு:

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மாண்புமிகு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர்



# காவிரி நதிநீர்ப் பிரச்சினை; நடுவர் மன்ற உத்தரவை நிராகரிப்பது நியாயமற்றதும் கண்டனத்திற்கு உரியதுமாகும்!

அவர்களே! பல்வேறு அரசியல் கட்சிகளின் பாசத்திற்குரிய தலைவர்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! அரசு அதிகாரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்கள்!

தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சனையும், முன்னுரிமையோடு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய முக்கியத்துவமும் கொண்டுள்ள காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை பற்றிக் கருத்துக் கூற, எனது அழைப்பை ஏற்று வந்திருக்கிற உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் ஒருமித்த பதிலை மத்திய அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் எடுத்துக் கூறுவதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்று, வாராந்திர அடிப்படையில் நமக்கு வழங்க வேண்டிய தண்ணீரைத் தற்போது கர்நாடக அரசு வழங்க மறுத்து வருகிறது. ''தென்னகத்தின் நெற்களஞ்சியம்'' என்று சரித்திரச் சிறப்போடு அழைக்கப்படும் தஞ்சை மாவட்டத்தின் விவசாயிகள்,- நடப்பு ஆண்டில் குறுவை சாகுபடியினைத் தொடர முடியுமா என்கிற கேள்விக்குறி தற்போது எழுந்துள்ளது.

**இப்படித் தமிழக விவசாயிகள் படுகிற இன்னல்களையும், காவிரி நதி நீர்ப் பங்கீட்டில் தொடர்ந்து தமிழகத்திற்கு இழைக்கப்பட்டு வரும் அநீதகளையும் கண்ணுற்ற நானும், பல்வேறு கட்சித் தலைவர்களும், நதிகளைத் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பல்வேறு சமயங்களில் வலியுறுத்தி உள்ளோம்.**

இப்பிரச்சினையில் கர்நாடக அரசின் பிடிவாதமும், அதன் விளைவாக எழுந்துள்ள சிக்கல்களும் தேசிய ஒருமைப்பாட்டையே சிதைக்கிற பின்னணியைத் தற்போது உருவாக்கியுள்ளது, ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்க விழையும் நல்லெண்ணம் கொண்ட அனைவருக்கும், கர்நாடக அரசின் அநியாயப் போக்கு மிகுந்த கவலையைத் தரக் கூடியதாகும். நடுநிலையோடு அணுகப்பட்டு, இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்தபின் வழங்கப் பட்ட நடுவர் மன்றத் தீர்ப்பினைக் கர்நாடக அரசு அலட்சியப்படுத்துவது தமிழக மக்களை வேதனைக்கும், கொந்தளிப்புக்கும் உள்ளாக்கியுள்ளது. எனவேதான் கட்சி மாச்சரியங்களை மறந்து, தமிழக மக்கள் அனைவரும் காவிரி நதி நீர்ப் பிரச்சனையில் ஒன்றுபட்டு நீதி கேட்டு நிற்கிறார்கள்.







காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றம் 25.6.1991 அன்று பிறப்பித்த இடைக்கால நிவாரண உத்தரவில், கீழ்க்கண்ட அம்சங்கள் அடங்கியுள்ளன.

அ) கர்நாடக அரசு மேட்டூர் நீர்த் தேக்கத்தில் ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. நீர் கிடைக்கும் வகையில், தனது நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் திறந்து விட வேண்டும். மாத வாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள நீரின் அளவுகளை நான்கு சம பாகங்களாகப் பங்கிட்டு, வாராந்திர அடிப்படையில் கொடுக்க வேண்டும். ஒரு வாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவில் குறைபாடு நேர்ந்தால் அதை அடுத்த வாரத்திலேயே சரி செய்ய வேண்டும்.

ஆ) அப்படிக் கிடைக்கும் நீரில் தமிழ்நாடு ஆண்டொன்றுக்கு 6 டி.எம்.சி. நீரைப் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த காரைக்கால் பகுதிக்குப் பாசனத் தேவைக்கேற்ப அனுப்ப வேண்டும்.

இ) கர்நாடக அரசு காவிரிப் படுகையில் தற்போது பாசனம் செய்து வரும் 11.20 இலட்சம் ஏக்கருக்கு மேல் இவ்விடைக் காலத்தில் பாசன விரிவாக்கம் செய்யக் கூடாது.

ஈ) இவ்விடைக்கால உத்தரவு இந்த ஆண்டு ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும். நடுவர் மன்றம் காவிரி பிரச்சினைக்கு இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரைதான் இவ்வுத்தரவு அமலிலிருக்கும்.

தமிழ்நாடு அரசும், புதுச்சேரி மாநில அரசும் காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றம் 28.7.90 அன்று கூடியதும், இடைக்கால நிவாரண ஆணைகள் கோரி மனுக்களைத் தாக்கல் செய்தன. அம்மனுக்களின் பேரில் நடுவர் மன்றம் விசாரணை தொடங்கி, படுகைப் பகுதிகளைப் பார்வையிட்டு, வேண்டிய குறிப்புகளையும், புள்ளிவிவரங்களையும் கேட்டுப் பெற்று, படுகை மாநில வழக்கறிஞர்களின் வாதங்களையும் கேட்டறிந்த பின்னரே மேற்கண்ட உத்தரவுகளைப் பிறப்பித்தது.

ஆனால், கர்நாடக அரசு காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அமல் செய்யாது நிராகரித்து வருகிறது. அம்மாநிலச் சட்ட மேலவையும், பேரவையும் உத்தரவை அமலாக்க வேண்டாமெனத் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. கர்நாடக முதல்வர் நடுவர் மன்றத்தின் உத்தரவை மத்திய அரசிதழில் பிரசுரிக்க

## கர்நாடக அரசின் பிடிவாதமானது தேசிய ஒருமைப்பாட்டையே சிதைப்பதாகும்!





வேண்டாமென மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

'காவிரி நதி நீர்த் தாவா நடுவர் மன்றம்' பாராளுமன்றத்தில் 1956-இல் நிறைவேற்றப்பட்ட 'பன்மாநில நதி நீர்த் தாவா சட்டத்தின்' கீழ், மத்திய அரசால் அமைக்கப்பட்ட, மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட நடுவர் மன்றமாகும். இச்சட்டத்தின் ஆறாம் பிரிவின் படி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் தீர்ப்பை மத்திய அரசு, தனது அரசிதழில் பிரசுரித்தாக வேண்டும். அத்தீர்ப்பு இறுதியானது, படுகை மாநிலங்களைக் கட்டுப்படுத்துவதும் மற்றும் அவற்றால் அமுலாக்கப்பட வேண்டியதுமாகும்.

சட்டம் இவ்வாறு இருக்கையில், கர்நாடகம், நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவை நிராகரிப்பது நியாயமற்றதும், கண்டனத்திற்கு உரியதுமாகும். பல ஆண்டுகளாக நடந்த பேச்சு வார்த்தைகளில் பலன் ஏற்படாததால், சட்ட ரீதியாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தமிழக அரசு எடுத்த முயற்சியின் பேரில், நாட்டின் உச்ச நீதி மன்றம் ஆணையிட்ட பிறகு மத்திய அரசு இந்நடுவர் மன்றத்தை அமைத்தது.

1974-ஆம் ஆண்டிலிருந்து கர்நாடக அரசு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்த விதிகளை மீறி, தன் போக்கில் புதிதாகக் கட்டிய அணைகளில் காவிரி நீரைத் தேக்கிப் புதிய கால்வாய் அமைப்புகளில் பாய்ச்சி, பாசனத்தை முறையின்றி விரிவாக்கி வருகிறது. அதனால் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு வரும் நீர் வெகுவாகக் குறைந்து, கடந்த சில ஆண்டுகளில் குறுவைச் சாகுபடி அறவே பாதிக்கப்பட்டு, ஒரு போகச் சம்பா சாகுபடியும் வானம் பார்த்துச் செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப் பட்டோம்.

**இந்நிலை மேலும் நீடித்தால் தமிழ்நாட்டின காவிரி டெல்டா பாசனம் சீரழிந்து விடும் என்று விளக்கியதன் பேரில், நடுவர் மன்றம் உண்மை நிலையை அறிந்து இவ்விடைக்கால நிவாரண உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இவ்வுத்திரவால் கர்நாடகம் தற்போது பாசனம் செய்யும் பரப்பிற்கு எந்தவிதப் பாதிப்பும் எழவில்லை. 1972-இல் 6.83 இலட்சம் ஏக்கராக இருந்த பாசனம், 1990-இல் 11.20 இலட்சத்திற்கு உயர்ந்திருப்பதாக அம்மாநிலமே நடுவர் மன்றத்தின் முன் வைத்த புள்ளி விவரங்களை ஏற்று, கர்நாடகம் மேலும் தனது பாசனப் பரப்பை விரிவாக்குவதைத்தான் நடுவர் மன்றம் தடை செய்துள்ளது. நடுவர் மன்றம் தன் இறுதித் தீர்ப்பை அளிக்கச் சில ஆண்டுகளாகலாம்; அதற்குள் தனது பாசனப் பரப்பை மேலும் வெகுவாகப் பெருக்கிக் கொண்டு விட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, கர்நாடக அரசு இந்தத் தடையை மீறத் துணிந்திருக்கிறது. அவ்வரசின் இந்தப் போக்கு, பெரிதும் வருந்தத்தக்கது மட்டுமல்ல - சட்டரீதியில் அனுமதிக்கக் கூடாத செயலுமாகும்.**

இவ்வாறு கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அமல்படுத்த மறுப்பதால் ஏற்பட்டிருக்கும் சிக்கலை எடுத்துரைத்து, மத்திய அரசு அவ்வுத்தரவைத் தனது அரசிதழில் பிரசுரிக்கவும், கர்நாடகம் அவ்வுத்தரவை ஏற்றுச் செயல்பட ஆவன செய்யவும் கோரி, கடந்த 5.7.1991 அன்று பாரதப் பிரதமருக்குச் செய்தி அனுப்பினேன். தமிழ்நாடு மாநிலச் சட்டப்பேரவையின் இது பற்றிய தீர்மானங்களும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளன. 11.7.1991 அன்று தமிழ்நாட்டைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாரதப் பிரதமரைச் சந்தித்து இடைக்கால உத்தரவை

## தமிழக மக்கள் அனைவரும் கட்சி மாச்சரியமின்றி இப்பிரச்சினையில் ஒன்றுபட்டு நீதிகேட்கிறார்கள்!



# நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை மத்திய அரசிதழில் பிரசுரிக்க வேண்டும்!

அமுல்படுத்தாததால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளை விளக்கி, இடைக்கால உத்தரவை அமுல்படுத்தும்படி கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டி ஒரு கோரிக்கை மனுவைச் சமர்ப்பித்தனர்.

கடந்த 16.7.1991 அன்று நான் புதுடெல்லியில் பாரதப் பிரதமரைச் சந்தித்துப் பேசிய போதும், இதுபற்றி நம்முடைய கருத்துக்களை எடுத்துரைத்து, நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் 256-ஆம் பிரிவின்படி, காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அமல்படுத்தக் கர்நாடக அரசை அறிவுறுத்த வேண்டியது மத்திய அரசின் கடமை என்றும், 1956-ஆம் ஆண்டு 'பன்மாநில நதி நீர்த் தாவா சட்டத்தின் படி' அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவைக் கர்நாடக அரசு உடனே அமல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்றும் கூறினேன். இச்சிக்கலைத் தீர்க்க ஒரு சுமுகமான வழியைக் காண முயற்சிப்பதாகப் பாரதப் பிரதமர் கூறினார். பின்னர் மைய அரசின் நீர்வளத் துறை அமைச்சரை நான் சந்தித்து இதுபற்றி உரையாடிய போது, அவரும் அதே கருத்தைத் தெரிவித்தார். சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் உத்தரவை முதலில் கர்நாடகம் உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும் என்பதை மீண்டும் அவர்களிடம் வலியுறுத்தி வந்துள்ளேன்.

**கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு ஒரு பலனும் கிட்டாததால்தான், நாம் சட்ட ரீதியாக ஒரு நடுவர் மன்றம் ஏற்பட வழி செய்தோம். இந்நடுவர் மன்றம் அமைக்கப்படுவதையே தடுத்து வந்த கர்நாடக அரசு, இம்மன்றத்தின் உத்தரவையும் புறக்கணிக்கத் துணிந்து, மறுபடியும் பேச்சு வார்த்தையைத் தொடங்க முயற்சிப்பதன் நோக்கம், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமலேயே ஒப்பந்த விதிகளை மீறி, தமிழகத்திற்கு வரவேண்டிய நீர் முழுவதையுமே தடுத்து நிறுத்தி, தானே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது.**

தமிழ்நாட்டின் உயிர்நாடியான இப்பிரச்சினையில் கர்நாடகத்தின் அநியாயமான, மூர்க்கத்தனமான போக்கினால், நடுவர் மன்றம் இடைக்கால உத்தரவு வழங்கியும், அதை நடைமுறைப் படுத்துவதில் தாமதமும், தேக்க நிலையும் ஏற்பட்டுள்ளது.

இடைக்கால உத்தரவை மத்திய அரசிதழில் பிரசுரிக்க வேண்டும் என்றும்,-

அரசியல் சட்டத்தின் 256-வது பிரிவின் கீழ் நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்பினை அமல்படுத்தக் கர்நாடக அரசுக்கு மத்திய அரசு ஆணையிட வேண்டும் என்றும்,-

இரண்டு கோரிக்கைகளை பாரதப் பிரதமர் முன் கடிதம் மூலமும், நேரிலும் வலியுறுத்தி உள்ளேன்.

எனினும் இதுவரை இவ்விரண்டு கோரிக்கைகளின் மீதும் மத்திய அரசின் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

எனவே தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதற்கிடையில் தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொருட்டு தமிழக அரசே மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தத்தை, உங்கள்

## இலவசத் தொலைக்காட்சிப் பெட்டிகள்!



சொந்த நிதிகளிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க முடியாத நிலையில் நிதி வசதி குறைந்த ஊராட்சிகளுக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கும் 1165 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தமிழ்நாடு அரசு 1990—91 ஆம் ஆண்டில் அளித்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டத்தின் கீழ், நிதி வசதி குறைந்த ஊராட்சிக்கு ரூ. 1.00 கோடிசெலவில் 1040 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் ரூ. 11.94 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கு 125 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் தமிழ்நாடு அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

# காவிரி நீர் :

## அனைத்துக் கட்சித் தீர்மானம்

**கா**விரி நீர்ச் சிக்கல்பற்றிப் பேசுவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 22.7.91-இல் அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றினைக் கூட்டினார். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அக்கூட்டத்தின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:

காவிரிநீர்த் தாவா நடுவர் மன்றம் அளித்த இடைக்கால உத்தரவைக் கர்நாடக அரசு அமல்படுத்த மறுப்பதும், இவ்வுத்தரவு அமல்படுத்தப்படும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை ஏதும் எடுக்கக் கூடாது என வற்புறுத்துவதும் நியாய மற்றதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

தமிழ்நாட்டிற்குக் காவிரியில் நியாயமாகக் கிடைக்கவேண்டிய நீரை 1974-ஆம் ஆண்டு முதல் கர்நாடகம் சட்டத்திற்கும், ஒப்பந்தங்களுக்கும் முரணாகத் தடுத்துத் தமிழ் நாட்டின் பாசனத்திற்கு இழைத்து வரும் பாதிப்பு மேலும் தொடரலாகாது.

தமிழ்நாட்டின் உயிர்ப்பிரச்சினையான இதில், காவிரி நதி நீர்த்தாவா நடுவர் மன்றம் தனது இடைக்கால உத்தரவை வழங்கி ஏறத்தாழ ஒரு மாத காலமாகியும், அவ்வுத்தரவை மைய அரசு தனது அரசிதழில் வெளியிடவேண்டுமென்று தமிழக முதல்வரும் சட்டமன்றமும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டும் மைய அரசு இன்னும் இதில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது ஆழ்ந்த கவலையையும், வருத்தத்தையும் அளிப்பதாக உள்ளது. இனியும் காலந் தாழ்த்தாது, நடுவர் மன்றம் வழங்கிய நீதி தமிழக மக்களுக்கு உடனடியாகக் கிடைக்கத்தக்க நடவடிக்கைகளை மைய அரசு எடுக்கவேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை இக்கூட்டம் ஆமோதிப்பதுடன், உத்தரவை உடனடியாக அமல்படுத்த மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு • தமிழக முதல்வர் அவர்கள் • முறைப்படி எடுக்கவேண்டும் என்றும்அவற்றிற்கு அனைத்துக் கட்சிகளும் தங்களது ஆதரவை அளிக்கும் என்றும் இக் கூட்டம் உறுதியளிக்கிறது.

கர்நாடக அரசு காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் இடைக் கால உத்தரவை நிறைவேற்றத் தவறி வருவதைக் கண்டிக்கும் வகையிலும், மத்திய அரசு இவ்விடைக்கால உத்தரவை நிறைவேற்றுவதில் தனது கடமையை இதுவரை செய்யத் தவறியுள்ளதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசிடம் நமது அதிருப்தியையும், வருத்தத்தையும் தெரிவிக்கும் வகையிலும், இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி தனது கடமைகளை மைய அரசு உடனடியாக ஆற்றுமாறு வற்புறுத்தும் வகையிலும் தமிழ் நாட்டில் 26.7.1991 தேதியன்று மாநிலம் தழுவிய முழு வேலை நிறுத்தத்தைத் தமிழக மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறிய கருத்தை ஒருமனதாக ஏற்று 26.7.91 அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை முழு வேலை நிறுத்தம் செய்ய இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மருத்துவமனைகள், மின்சார விநியோகம், குடிதண்ணீர் வசதி, பால் விநியோகம், ஆம்புலன்சு வசதிகள், பத்திரிகைகள் போன்ற அத்தியாவசியப் பணிகளுக்குப் பொது வேலை நிறுத்தத்திலிருந்து விலக்கு அளிக்கப்படும். ●

---

**தமிழரசு**

### சந்தா விவரம்

**தமிழ்:**

ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

**ஆங்கிலம்:**

ஓராண்டு = ரூ.12
(அரையாண்டு சந்தா கிடையாது)

**விவரங்களுக்கு:**

உதவி இயக்குநர்
தமிழரசு
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

---

**அனைவரின் ஒத்துழைப்போடு முன் நின்று நடத்தலாம் என கருதுகிறது.**


ஆகவே சில நண்பர்கள் வருகிற 24-ந் தேதி நடைபெறுவதாக அறிவித்துள்ள பொது வேலை நிறுத்தத்தைச் சற்றே ஒத்திப் போட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொது வேலை நிறுத்தம் முழுமையாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற வேண்டுமானால் அனைத்துத் தரப்பினருக்கும் தகவல் சென்றடையப் போதுமான கால அவகாசம் தர வேண்டும். எனவே வருகிற 26-ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பொது வேலை நிறுத்தத்தை வைத்துக் கொள்ளலாமா என்பது குறித்து தங்களின் மேலான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்''

—மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்தக் கோரிக்கை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

—நிகழ்ச்சித்தொகுப்பு:
இல.இராசேந்திரன்.






# நடமாடும் முதல் இரயில் மருத்துவமனை

**ந**டமாடும் நீதிமன்றம், நடமாடும் தபால் நிலையம் போன்று தற்போது நடமாடும் இரயில் மருத்துவ மனை ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. உலகிலேயே முதன் முதலாக நமது நாட்டில் பம்பாய் நகரில் இத்தகைய மருத்துவ மனை ஒன்று சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது. ''லைப்-லைன் எக்ஸ்பிரஸ்'' (Life-Line Express) என்றழைக்கப்படும் இந்த நடமாடும் இரயில் மருத்துவ மனை ''குஸிநகர் எக்ஸ் பிரஸ்'' இரயில் வண்டியுடன் இணைக்கப்பட்டு சமீபத்தில் பம்பாயில் விக்டோரியா இரயில் நிலையத்திலிருந்து வெள்ளோட்டம் விடப்பட்டது.

மூன்று பெட்டிகளைக் கொண்ட இந்த நடமாடும் மருத்துவமனை இரயில், நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் பயணம் செய்து, இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கும். கிராமப்புற இரயில் நிலையங்களில் இந்த இரயில் மருத்துவ மனை நிறுத்தப்பட்டு, அதன் சுற்றுவட்டாரங்களிலுள்ள கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதோடு அந்த இடத்திலேயே அறுவைச் சிகிச்சை செய்யவும் இதில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

''இம்பாக்ட் இந்தியா அறக்கட்டளை'' (Impact India Foundation) நிறுவனத்தால் வடிவமைத்து உருவாக்கப்பட்ட இந்த இரயில் மருத்துவமனைக்கு தேவையான மூன்று இரயில் பெட்டிகளையும் இந்திய இரயில்வே துறை வழங்கி இருக்கிறது.

இந்த இரயில் மருத்துவ மனையில் மூன்று அறுவைச் சிகிச்சை மேசையுடன் கூடிய ஒரு குளிரூட்டப்பட்ட அறுவைச் சிகிச்சை அரங்கம் நோயாளிகள் சிகிச்சை பெறும் அறை உட்பட ஆங்கு பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மனையின்பிற ஊழியர்கள் தங்குவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஒரு 'கணிப்பொறி' மையமும் (Computer Room) இந்த நடமாடும் மருத்துவ மனையில் அமைக்கப்பட்டு உள்ளது.

முதன்முதலாக இந்த இரயில் பீகார் மாநிலத்தில் ஐந்து மையங்களில் தனது பணியைத் தொடங்கும். சுமார் மூன்று வாரங்கள் ஒரு இடத்தில் இந்த இரயில் நிறுத்தி வைக்கப்பட்டு, அதன் சுற்று வட்டாரங்களில் வாழும் மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் அந்த வழியாகச் செல்லும் இரயில், இந்த நடமாடும் இரயில் மருத்துவ மனையை முன்கூட்டியே தெரிவு செய்யப்பட்ட இடத்தில் இறக்கிவிட்டுச் செல்லும்.

இந்த நடமாடும் இரயில் ஆஸ்பத்திரி குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சை அளிப்பதோடு, இந்த மருத்துவ மனைப் பணியாளர்கள், குழந்தை நோய்தடுப்பு முறை, சுகாதார கல்வி ஆகியவை சம்பந்தமாக மக்களிடையே பிரச்சாரமும் மேற்கொள்வார்கள். மருத்துவச் சிகிச்சை முடிந்து சில வாரங்களுக்குப் பிறகு அதே இடத்திற்கு மேல் நடவடிக்கைக்காக இந்த இரயில் செல்லவும் திட்டமிடப் பட்டுள்ளது.

பல சிறப்புகளைக் கொண்ட இந்த நடமாடும் இரயில் மருத்துவமனைக்கு ''ஜீவன் ரேகா'' என்று இன்னொரு பெயரும் உண்டு.

— நன்றி 'இந்து'

"நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"




தன்னிகரற்ற
**பன்மின்த்***
(மொரண்டெல் டிட்ரேட்)

நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

**பால் இழப்பே இல்லை.**
''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**
''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

**வசதி மிக்கதும் கூட.**
''சாப்பிட வெகு இலகு பன்மின்த். சுண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது பன்மின்த் விளைவை ஈடு செய்வது

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.**

**பன்மின்த்***
புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

UNTAS BMT 2221? TM

*யூ.எஸ்.ஏ. ஃபைசர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு: ஃபைசர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400021.



# இந்திய வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு அமெரிக்க விருது

இந்தியப் பசுமைப் புரட்சியின் சிற்பி என்று அழைக்கப்படும் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு, மிகவும் மதிப்பு வாய்ந்த அமெரிக்க விருதான 'டைலர் பரிசு' லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகரில் அண்மையில் வழங்கப்பட்டது.

உலக அளவில் வழங்கப்படும் இந்தப் பரிசை அவருடன் அமெரிக்காவின் முன்னாள் சர்ஜன் ஜெனரல் ஆன சி.எவரெட் கூப் என்னும் நிபுணரும் பகிர்ந்து கொள்கிறார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், தலைமைப் பண்பு ஆகியவற்றுக்காக வழங்கப்படும் இந்த மதிப்பு மிக்க விருதின் மொத்தப் பரிசுத் தொகை 1,50,00 டாலர்களாகும்.

### மெக்சிகோ கோதுமை

மெக்சிகோவைச் சேர்ந்த குட்டை ரகக் கோதுமை நாற்றுகளை டாக்டர் சுவாமிநாதன் இந்தியாவில் அறிமுகப்படுத்தினார். அவை இந்தியாவின் நெட்டை ரகக் கோதுமை நாற்றுகளைவிட நல்ல பயன் அளித்தன. இரசாயன உரங்களையும், இதர நவீன சாகுபடி உத்திகளையும் பயன்படுத்தி, இந்தக் குட்டைரகக் கோதுமை நாற்றுகளைப் பயிரிட்டால் நல்ல லாபம் கிடைக்கும் என்பதை இந்திய விவசாயிகள் உணர்ந்து கொண்டனர். இதனால் 1960-ஆம் ஆண்டுகளில் இந்தியாவானது வறட்சியினால் தாக்கப்படாமல் காப்பாற்றப்பட்டது.

1964-ஆம் ஆண்டில் டாக்டர் சுவாமிநாதன் இந்த உயர் மகசூல் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக, இந்திய விவசாயிகள் ஒரு கோடியே 40 இலட்சம் எக்டேர் நிலத்திலிருந்து ஒரு கோடியே 20 இலட்சம் மெட்ரிக் டன்கள் கோதுமையையே மகசூலாகப் பெற்றுக் கொண்டிருந்தனர். ஆனால் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, அவருடைய மேற்பார்வையில் இது சீரான வளர்ச்சி பெற்றது; தானிய உற்பத்தியும் சீராக அதிகரிக்கத் துவங்கியது. 1990-ஆம் ஆண்டில் கோதுமை உற்பத்தியானது, இத்திட்டம் துவக்கப்பட்டபோது இருந்ததைப் போல இரண்டு மடங்காக உயர்ந்தது.

### தாவர மரபுப் பொருள் வள வாரியம்

தாவர மரபுப் பொருள் வள வாரியம் ஒன்றைச் சர்வதேச அளவில் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை டாக்டர் சுவாமிநாதன் உணர்ந்தார். அத்தகைய அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்னும் யோசனையை 1971-ஆம் ஆண்டில் அவர் வெளியிட்டார். 1977-80-ஆம் ஆண்டுகளுக்கிடையே, இந்திய வேளாண்மை ஆய்வுக் கவுன்சிலின் தலைமை இயக்குநராக அவர் பதவி வகித்தபோது, இந்தியாவிலும் தாவர மரபுப் பொருள் வளக் கழகம் ஒன்றைத் தேசிய அளவில் அவர் ஏற்படுத்தினார்.



பிலிப்பைன்ஸ் நாட்டில் சர்வதேச நெல் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநராக டாக்டர் சுவாமிநாதன் 1982-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரையில் பணியாற்றினார். இத்தகைய ஆய்வுக் கழகங்களிலேயே முன்னோடியானது இதுதான். இக்கழகத்தில் உள்ள நெல் வகைகள் சேமிப்பு மையத்தை உலகத் தகுதி கொண்டதாக டாக்டர் சுவாமிநாதன் உயர்த்தினார். உலகின் பல்வேறு விதமான நெல் ரகங்களை இங்கே சேமித்து வைப்பதற்கு அவர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டார்.

### அபூர்வ நெல் ரகங்கள்

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலிருந்து மட்டும் 6,000 நெல் வகைகளை அவர் திரட்டினார். அப்பகுதியில் மாறி வரும் சாகுபடி முறைகள் காரணமாக இந்த அபூர்வ நெல் வகைகள் அழிந்து போகக் கூடிய நிலையில் இருந்தன. சுவாமிநாதனின் விடாமுயற்சியினால்தான் இந்த நெல் வகைகள் போற்றிக் காப்பாற்றப்பட்டுள்ளன. 'அஸ்ஸாம் கலெக்ஷன்' என்று இது இப்போது அழைக்கப்படுகிறது.

உலகில் உள்ள 1,25,000 நெல் வகைகளில் 75,000 வகைகள் இந்த மையத்தில் சேமித்து வைக்கப் பட்டுள்ளன. உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினரின் முக்கிய உணவு அரிசிதான். இந்த வகையில், இந்த நெல் ஆரார்ய்ச்சி

மையம் மூன்றாம் உலக நாடுகளின் வேளாண்மை வளர்ச்சிக்கு மிகவும் துணை புரிகிறது.

**கும்பகோணத்தில்...**

டாக்டர் சுவாமிநாதன் கும்பகோணத்தில் 1925 ஆகஸ்டு 7-ஆம் நாள் பிறந்தார். அவரது தந்தை கும்பகோணத்தைச் சேர்ந்த பிரபல டாக்டர் ஆவார். அங்கு, யானைக் கால் வியாதியை ஒழிப்பதில் மிகவும் துணை புரிந்தார் அவர். டாக்டர் சுவாமிநாதன் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்த பிறகு, 1952-ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தாவர மரபியல் துறையில் பி.எச்டி. பட்டம் பெற்றார். பின்னர் அவர் மாடிஸன் நகரில் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணி புரிந்தார். உருளைக்கிழங்குச் செடி குறித்து அவர் நடத்திய ஆராய்ச்சியானது அலாஸ்கா பிராஸ்ட்லெஸ் என்னும் புதிய வகை உருளைக்கிழங்கை உருவாக்க வழி வகுத்தது.

**● தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கிட வியர்வை சிந்துவோர், மக்கள் வசதிக்காகப் பாடுபடுவோர், உற்பத்தி, விநியோகம் இவற்றை நேர்மையாகச் செய்வோர் என் நண்பர்கள்-வணக்கத்திற் குரியவர்கள்.**



1954-ஆம் ஆண்டில் அவர் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்ந்தார். நெல், கோதுமை ஆகிய தானியங்களின் மரபியல் ஆய்வாளராக 1972-ஆம் ஆண்டு வரையில் அவர் பணி புரிந்தார். அதற்கு அடுத்த பதினேழு ஆண்டுகளுக்கு, அவர் இந்திய வேளாண்மை ஆய்வுக் கவுன்சிலின் தலைமை இயக்குநராகப் பதவி வகித்தார். 1979-80-ஆம் ஆண்டுகளில் மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் செயலாளராக டாக்டர் சுவாமிநாதன் பணியாற்றினார். அடுத்த இரு ஆண்டுகளுக்கு மத்திய திட்டக்குழு உறுப்பினராக அவர் இருந்தார்.

1987-இல் டாக்டர் சுவாமிநாதனுக்கு, 'உலக உணவு விருது' வழங்கப்பட்டது. அமெரிக்காவின் 'ஜெனரல் புட்ஸ் பண்ட் இன்கார்ப்பரேடட்' நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்த விருதைப் பெறுவோருக்கு 2 இலட்சம் டாலர்கள் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது. இப்பரிசு பெறுவதற்கு ஓராண்டிற்கு முன்னால், அவருக்கு 'ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் உலக அறிவியல் விருது' கிடைத்தது. வேளாண்மை இயலில் மகத்தான தொண்டு புரிந்ததற்காகக் 'கிருஷி ரத்னா' என்ற விருதையும் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் ஜைல்சிங் அவருக்கு வழங்கினார். குறைந்த பட்சம் 23 உயர் கல்வி நிறுவனங்கள் டாக்டர் சுவாமிநாதனுக்குக் கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன.

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**



மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த நாளான 15.7.91 அன்று, அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து வணக்கம் செலுத்தினார்.



**தமிழ் வளர்த்த பெரியார்:**

# அ.கி. பரந்தாமனார்

அல்லிக்குழி - திருவள்ளூர் தாலுகாவில் பிளேசபேட்டை வழியில் உள்ள ஒரு சிற்றூர்; குன்றுகள் வயல்கள் சூழ்ந்த அழகான ஊர்; எலுமிச்சை மரங்கள் நிறைந்தது; நீர் வளமும் நிலவளமும் மிக்கது.

இவ்வூரில் வாழும் வேளாளர் குடியிலிருந்து திரு. சவுந்திர முதலியார் சென்னைக்குக் குடியேறினார். இவர் தெய்வயானை அம்மாளை மணந்து, திரு கிருஷ்ணசாமி என்பாருக்குப் பெற்றோர் ஆயினர்.

செந்நீர்க்குப்பம் என்னும் ஊர் சென்னை நகருக்குப் பத்துக் கல் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் பிறந்த சந்தியப்ப முதலியார், புரசைப்பாக்க அட்டாவதானம் சபாபதி முதலியாரிடம் பாடங்கேட்டவர்; கவி பாடும் ஆற்றல் பெற்றவர். சென்னை 'ஏகாம்பரேசுவர் பதிகம்' பாடியவர். இவர் திருமதி தாயம்மாளை மணந்து சென்னை சூளை அவதானம் பாப்பையன் தெருவில் இல்லறம் நடத்தி வந்தார். இவர்களுக்குச் சிவக்கியானம் பெண் மகவாகப் பிறந்தார். அல்லிக்குழி கிருஷ்ணசாமிக்கும் சிவக்கியானம் அம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. இவ்விருவருக்கும் தர்மவர்த்தினி, செல்வவிநாயகம், பாலசுப்பிரமணியம் எனும் மக்கள் பிறந்தனர்.

பின்னர் திரு அ.கி. பரந்தாமனார் 15.7.1902-இல் அவர்களிடையே தோன்றினார். தம் தாய்வழிப் பாட்டனாராகிய சந்தியப்ப முதலியார் வீட்டில் அவர் வளர்ந்து வந்தார். இளமையில் தமிழ்ப் பற்றுக்கொண்டும், அறிஞர்கள் சொற்பொழிவுகளைக் கேட்டும் தமது அறிவை வளர்த்துக் கொண்டார். அவதானம் பாப்பையன் தெருவில் உள்ள தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்தார். பின்னர் 200 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வித் தொண்டு புரிந்துவரும் திருப்பவுர் பள்ளியில், பள்ளியிறுதி வகுப்புவரையில் படித்துத் தேறினார். அப்போது அங்குத் தமிழாசிரியர்களாக இருந்தவர்கள் மயிலை. சண்முகம் பிள்ளை, கா.ரா. நமச்சிவாய முதலியார், மணி. திருநாவுக்கரசு முதலியார், ச.த. சற்குணர் முதலானோர் ஆவர்.

**பேராசிரியர் ச.த. சற்குணர் அவர்கள் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவராயினும் பிற சமயத்தின் மீதும் பெருமதிப்பு உடையவர். புறநானூறு முதலான சங்கத்தமிழ் நூல்களின் தனி மாட்சியை அழகுபடவும் சுவைபடவும் எடுத்துரைப்பார். இவர் தாம் இறந்தபின், தாம் கையாண்ட புறநானூற்று நூலைத் தம்முடன் சவப் பெட்டியில் சேர்த்துப் புதைத்துவிட வேண்டும் என்று தம் மாணவரிடம் வேண்டிக் கொள்வாராம். இத்தகைய நற்குணமும் நற்பண்பும் கொண்ட திரு. சற்குணரின் தலை மாணாக்கராகத் திகழ்ந்தவர்தான் அ.கி. பரந்தாமனார்!**

தம் ஆசிரியரின் பரிந்துரையால் இவர் பயின்ற திருப்பவுர் பள்ளியிலேயே இவருக்கு உதவித் தமிழாசிரியர் பதவி கிடைத்தது. இப்பணியைச் செய்து - கொண்டிருக்கும்போது, எவ்வாறாவது தாம் பட்டப்படிப்புப் பெறவேண்டு

**மா.சு. சம்பந்தம்**

மென்ற பேரவா திரு. அ.கி. பரந்தாமனார்க்கு ஏற்பட்டது.

இவரது அவாவினை நிறைவேற்ற திரு. சற்குணர் துணை செய்தார். 1925-இல் திரு. அ.கி. பரந்தாமனார் பள்ளியில் படிப்புக்கென விடுப்புப் பெற்றுச் சென்னைப் - பச்சையப்பன் இடைநிலை வகுப்பிற் சேர்ந்து படிக்கலானார். அப்போது இவர் அரசியல், வரலாற்றுப் பாடங்களைச் சிறப்புப் பாடங்களாகக் கொண்டார். 'திராவிட இந்தியா', எனும் நூலை எழுதிப் புகழ் பெற்ற திரு டி.ஆர். சேஷ ஐயங்காரும், வரலாற்றுப் பேராசிரியர் சி.எஸ். சீனிவாச ஆச்சாரியாரும், திரு. பரந்தாமனார்க்கு ஆசிரியர்களாக அமைந்திருந்தனர். அதன் காரணமாக இவருக்கு வரலாற்றுத் துறையில் ஆர்வம் மிக்குற்றது; வரலாற்றறிவு பெருகிற்று.



கல்லூரியில் பயின்ற காலத்து திரு. பரந்தாமனார்க்கு ஈராண்டுகள் உதவித்தொகை கிடைத்தது. அவ்வப்போது நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் இவர் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றார். இளங்கலை வகுப்பின் முடிவில் 'பெருந்தகையாளர் பரிசு' (Gentleman Prize) இவருக்குக்கிடைத்தது. கல்லூரியின் தமிழ்மன்றச் செயலாளராகவும் இவர் பணி புரிந்தார். அப்போது தமிழ்ப் போராசிரியர் திருமணம் செல்வக் கேசுவராயர் முதலியாரின் திருவுருவப் படத்தைத் திறக்க ஏற்பாடு செய்தார்; பனகல் அரசர் மீது 'பனகல் மன்னர் மன்னைக் காஞ்சி' என்ற நூலை எழுதி வெளியிட்டார். தம் கல்லூரியின் முதல்வராக இருந்த டாக்டர் எம். இரத்தினசாமி மீது 'பெருமாணவர் ஆற்றுப்படை' என்ற செய்யுள் நூலையும் பாடினார். இப்படி நல்ல மாணவராக இருந்தும் திரு. பரந்தாமனார் 1929-இல் இளங்கலைத் தேர்வு எழுதியும், தேறமுடியாது போயிற்று! பின்னர்தான் இளங்கலை (பி.ஏ.) தேர்வில் தேறினார்.

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுத் திருப்பவுர் பள்ளியில் தமிழாசிரியர் பணியைத் தொடர்ந்தார். அங்குத் தலைமைத் தமிழாசிரியராக இருந்த திரு. சற்குணர், கிறிஸ்தவக் கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியராகச் சென்றுவிட்டதால், தலைமைத் தமிழாசிரியர் பணி திரு. அ.கி. பரந்தாமனார்க்குக் கிட்டியது. 1931-இல் இவர் சிதம்பரம் சென்று அங்கிருந்த 'மீனாட்சி கீழ்நாட்டு மொழி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி'யில் சேர்ந்து ஓராண்டு படித்து, 1932-இல் மார்ச்சுத் தேர்வு எழுதி முதல் வகுப்பில் தேறினார். மீண்டும் திருப்பவுர் பள்ளித் தலைமைத் தமிழாசிரியப் பணியை மேற்கொண்டார். இதே பள்ளியில் இவர் 23 ஆண்டுகளுக்குமேல் தமிழாசிரியராக இருந்து ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தமிழின் அழகை, மேன்மையை, உயர்வை, மாட்சியை எடுத்துரைத்து மாணவரிடையே 'நல்ல தமிழ் ஆசானாக'த் திகழ்ந்தார். இவர் 1949-இல் தமிழை முதன்மையாகக் கொண்டு முதுகலைத் (எம்.ஏ.) தேர்வு

## அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் இந்தியா பற்றிய கருத்தரங்கம்

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பிலடெல்பியாவில் உள்ள பென்ஸில்வேனியா பல்கலைக்கழகத்தில் இந்தியாவைப் பற்றிய கருத்தரங்கம் ஒன்று, ஜூன் மாதம் கடைசி வாரத்தில் நடத்தப்பட்டது. மாணவர்கள் இந்தியாவைப் பற்றி ஆழமாகவும் விரிவாகவும் புரிந்து கொள்ள இந்தக் கருத்தரங்கம் உதவியது. அமெரிக்காவில் வாழும் இந்திய இளைஞர்கள் தங்கள் தாய்நாட்டின், பண்பாட்டையும் அறிவுச் செழிப்பையும் பற்றி நன்கு அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் இந்தக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. எனினும், இந்தியர் அல்லாத மற்ற மாணவர்களும் இதில் பெருமளவில் கலந்து கொண்டனர்.

''இந்தியாவின் கடந்த காலமும் நிகழ்காலமும்: ஓர் அறிவுபூர்வமான அனுபவம்'' என்பது இந்தக் கருத்தரங்கின் முக்கியக் கருப்பொருளாகும். ஐரோப்பியத் தத்துவ வரலாற்றில் இந்தியாவின் பங்கு, இந்தியக் கலைஞனின் அறிமுகமும் சாதனைகளும், இந்தியாவில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, தெற்கு. ஆசிய மருத்துவப் பாரம்பரியம்: புராதன நூல்களும். தற்போதைய நடைமுறைகளும், இந்திய சினிமாவின் கதாநாயகர்களும், கதாநாயகிகளும் முதலிய தலைப்புகளில் அறிஞர்கள் பலர் உரையாற்றினார்கள். இந்தியாவைப் பற்றிய செய்திப்படங்களும் அங்கே திரையிடப்பட்டன.

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**

எழுதி, முதன்முறையிலேயே முதல தரத்தில் தேறினார்.

திருப்பவுற் பள்ளியில் பணிபுரிந்த திரு. அ.கி. பரந்தாமனார்க்கு மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பணி கிடைத்தது. 9.1.1950-இல், மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பொறுப்பேற்ற திரு அ.கி. பரந்தாமனார் அங்கு 14 ஆண்டுகள் வரை தொடர்ந்து பணி ஆற்றினார். மொத்தத்தில் 37½ ஆண்டுகள் வரை அவர் தமிழாசிரியராகச் சிறக்க வேலை பார்த்துள்ளார்.

சென்னையில் 15.1.1925-இல் 'தென்னிந்தியத் தமிழ்க் கல்விக் கழகம்' என்று ஓர் அமைப்பைத் தோற்றுவித்து, அதற்கு 7½ ஆண்டுகள் வரை செயலாளராக விளங்கி அருந்தொண்டு புரிந்துள்ளார். தமது அன்புக்குரிய ஆசிரியர் திரு. ச.த. சற்குணர், பி.ஏ., அவர்களைக் கொண்டு தமிழ் வகுப்புகளை நடத்தச் செய்தார். புரசைவாக்கத்தில் மதுவிலக்குப் பணியிலும், உடல்நலத்துக்குரிய வழி வகைகள் ஏழை மக்களுக்கு எடுத்து விளக்கியும் நண்பர் திரு ஆ.மு. கோட்டிலிங்கனார்க்குத் திரு. அ.கி. பரந்தாமனார் மெத்தவும் துணை புரிந்துள்ளார்.

**சென்னைப் புரசையிலுள்ள பொன்னன் சேரியில் தமது நண்பருடன் முதியோர் இரவுப் பள்ளி நடக்கவும் உதவிபுரிந்துள்ளார். மேலும் சென்னைத் திருவள்ளுவர் கழகத்தை உருவாக்கி அதன் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்து அரும் பணியாற்றியுள்ளார். சென்னை மாணவர் மன்றத்திலும், தமிழகப் புலவர் குழுவிலும் பங்கேற்றுள்ளார். இப்படியாகப் பொதுப்பணியிலும் சிறந்து விளங்கினார். இவர் சென்னையில் இருந்தபோது எப்படித் தமிழ்ப்பணியும் பொதுத்தொண்டும் செய்துவந்தாரோ, அதேபோல் மதுரையில் வாழ்ந்தபோதும் அப்பணிகளை விருப்பமுடன் செய்து வந்தார்.**

திருக்குறள் நெறி பரப்புதலே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட திரு. கி.ப. சுப்பிரமணிய தாசரால், மதுரையில் திருவள்ளுவர் கழகம் உருவாக்கப்பட்டது. தமிழ்த் தொண்டு செய்பவர்களையும் தமிழுக்குழைக்கும் புலவர்களையும் தக்க முறையில் பாராட்ட 'கணக்காயர்' எனும் பட்டம் தந்து போற்றியது; பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனார்க்குச் 'செந்நாப் புலவர் எனும் பட்டம் தந்து சிறப்பித்தது; வரலாற்றுப் புலமைமிக்க திரு தி.வை. சதாசிவ பண்டாரத்தாருக்குக் 'கல்வெட்டுப் பேராசிரியர்' எனும் சிறப்புமிக்க பட்டம் தந்து மகிழ்ந்தது. தமிழில் ஆட்சி நடத்த அடிகோலிய' இக்கழகம் திரு அ.கி.பரந்தாமனாரின் மணிவிழாவை 15.1.1962-இல் தமிழவேள் பி.டி. இராசன் தலைமையில் கொண்டாடியது. அவர் - சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் தமிழ்ப் பாவலர் எனும் அரிய பட்டத்தை வழங்கினார். தமிழவேள் திரு. அ.கி. பரந்தாமனார்க்குப் பொன்னாடை போர்த்தி 'வெள்ளிச் சுருள்' ஒன்றையும் கழகச் சார்பில் அளித்தார்.

மேலும் பல மன்றங்களின் சார்பில் வாழ்த்துரையும் பாராட்டுரையும் நல்கப்பட்டன. மதுரைத் தியாகராசர் கல்லூரிச் சார்பிலும் விழா நடத்தி பொன்னாடை போர்த்தினர். சென்னைத் திருவள்ளுவர் கழகத்தாரும் 9.6.1962-இல் சென்னையில் பைந்தமிழ்ப் பாவலருக்கு மிகச் சிறப்பாகப் பாராட்டு விழா நடத்தினர்.

திரு. அ.கி. பரந்தாமனார் 1.6.1921-இல் திருமிகு சுணேசம்மாளை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டார். இவர்களுக்கு 1933-இல் ஆண் மகவு பிறந்தது. அதற்குத் தந்தைவழிப் பாட்டனார் பெயராகிய சோமசுந்தரன் எனப் பெயர் இட்டனர். இம்மகன் வளர்ந்து பி.ஏ. பட்டம் பெற்றார். திருமதி சந்தான இலட்சுமியை மணமுடித்து இளங்கோ, அல்லி, மாதவி எனும் மக்களை அடைந்துள்ளனர். இளங்கோவிற்கும், அல்லிக்கும் திருமணமாகியுள்ளது.

திரு அ.கி. பரந்தாமனார் கல்வியில் உயர உதவி செய்தவர், அவரது அக்காள் திருமதி தர்மவர்த்தினியின் கணவரான திரு. தி. தங்கவேல் முதலியார் ஆவார். இவரது மகனான தி.தி. மார்த்தாண்டம் அவர்களின் மகனான திரு. செல்வத்திற்கும் அல்லிக்கும் அண்மையில் திருமணம் இனிது நடைபெற்றது. இவ்விரு குடும்பங்களும் ஒன்றுக்கொன்று கொண்டு கொடுத்து இடையறாது குடும்பத் தொடர்பைப் பேணிக்காத்து வருகின்றன.

**தம் குடும்பத்தையும், தம் சுற்றத்தாரையும் சுற்றந்தழுவிப் பேணிக்காத்தலில் சிறந்து விளங்கினவர் திரு. அ.கி. பரந்தாமனார். மேலும் தம்மிடம் பயின்றவர்களுக்கும் தமிழ் கற்றவர்களுக்கும் தம்மால் இயன்றளவு உதவி செய்யும் குணம் படைத்தவராகவும் சிறந்து மிளிர்ந்தார். அவர் ஓய்வின்றிப் படித்தவர்; படித்துத் தெளிந்தவர்; தெரிந்து உரையாற்றியவர்; தொண்டுள்ளம் படைத்தவர்; காலம் தவறாமையைக் கண்ணெனக் கொண்டவர். இவர் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதித் தமிழ்த் தொண்டு புரிந்தவர். தொடக்கத்தில் இவர் செவிமடுத்து உன்னிப்பாகப் பாடம் கேட்டவர். பாடத்தை ஐயமறக் கற்றுத் தெளிந்தவர். தமிழும் ஆங்கிலமும் முறையாகக் கற்றுத் தேர்ந்தவர்.**

திரு அ.கி. பரந்தாமனார் ஒரு முறை 'தமிழ் கற்பிக்கும் முறை' பற்றிப் பேசி, ''2000 ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழர் கற்பிக்கும் முறையைச் செவ்வனே அறிந்து கற்பித்தனர்'' என்று விளக்கிக் கூறினார் என்று புலவர் நா. சீனிவாசன் இயம்பியுள்ளார்.

திரு. அ.கி. பரந்தாமனார் சிறுவர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் ஏற்பப் பல பாட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் 'பாரதி தமிழ் வாசகம்' - 'திருவள்ளுவர் செந்தமிழ் வாசகம்', 'நவீன தமிழ் இலக்கியக் கோவை', 'மதுரை மணிமாலை', 'மானிடன் செய்த மாண்புறு செயல்கள்', 'தலை சிறந்த பாண்டியர்' என்பன குறிக்கத்தக்க- மாணவர்க்கு உகந்த இவர் எழுதியுள்ள நூல்களாகும்.

தென்னிந்தியத் தமிழ்க் கல்விக் கழகச் சார்பில் இவர் எழுதி வெளியிட்டது 'தமிழ்மகள் திருப்பள்ளியெழுச்சி'யாகும். இதன் சார்பில் 'பெருமக்கள் கையறு நிலையும் மன்னைக் காஞ்சியும்' எனும் செய்யுள் நூலையும், 'பேராசிரியர் ச.த. சற்குணர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு' நூலொன்றையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவர் மதுரையில் தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, வள்ளல் கருமுத்து தியாகராசச் செட்டியாரால் நடத்திவரப்பட்ட 'தமிழ்நாடு' எனும் நாளேட்டின் வார இதழில், 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?'' 'பேச்சாளராக', 'வாழ்க்கைக் கலை', 'மதுரை நாயக்கர் வரலாறு', 'வரலாற்றுக் கட்டுரை', 'திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும்' போன்றவற்றைத் தொடர்ந்து எழுதி வந்தார். இவை பின்னர் நூல்களாக இவராலே வெளியிடப்பட்டன.

**இவர் எழுதியுள்ள நூல்களில் 'வாழ்க்கைக் கலை' 9-ஆம் பதிப்பையும், 'பேச்சாளராக' - 6-ஆம் பதிப்பையும், 'கவிஞராக', 'திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும்' - 3-ஆம் பதிப்பையும், 'தமிழ் இலக்கியம் கற்க', 'காமக்கள் கோமஸ்' (மொழிபெயர்ப்பு) முதற் பதிப்பையும் கண்டுள்ளன.**

இவர் 'திருக்கோயிலும் திருத்தமும்' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு செய்துள்ளது நூலாக்கப் பட்டுள்ளது.

இவரது முன்னோர் 1906-இல் வெளியிட்ட 'ஏகாம்பரேசுவரர் பதிகம்' எனும் நூலை இவர் 1975-இல் இரண்டாம் பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

இவர் தொடர்பு கொண்டிருந்த தென்னிந்தியத் தமிழ்க் கழகம், நான்கு ஆண்டுகள் வரை ஓரணா விலையில் நாள்குறிப்பு வெளியிட்டுள்ளது.

தமிழ்ப் பெரியார் திரு.வி.க.-விற்கு மணிவிழா நடைபெற்றபோது, அவர்மீது திரு. அ.கி. பரந்தாமனார் ''திருத்தொண்டர் ஆற்றுப்படை'' இயற்றி பாமாலையாகச் சூட்டி மகிழ்ந்துள்ளார். இது இவரது 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' எனும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிறியவரோ பெரியவரோ - எவர் வந்து இவரைக் கண்டாலும் சிரித்த முகத்துடன் அவர்களை வரவேற்றுப் பேசும் வழக்கத்தைக் கொண்டிருந்தவர் திரு அ.கி. பரந்தாமனார். இவர் 'அல்லிக்குழி வாழ் உழுவித்துண்ணும் உயர் குடியைச் சேர்ந்தவர்'. 'சென்னை தூளை இளைஞர் கழகத்துத் தொண்டர்', 'தொன்மையை விடாமை, இந்நாள் தோன்றிடுமவற்றுள் ஏற்ற நன்மையைக் கோடல், இன்ன நலக்கெல்லாம் உறையுளாய்' ஆவோர். ''பூண்ட தலைப் பாகை, வெண்மைப் பொலிவழகும், பாண்டியரைப்போல் மீசை, பண் பொளிரும் புன்சிரிப்பு, கேட்க நடுக்கும் கிளர்குரலும், கேட்பார்க்கு வேட்கை உணர்த்தும் விரிவுரையும்' கொண்டவர் என்று இவரை திரு. இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்) அழகாகச் சித்திரித்துள்ளார். ''ஆற்றல் பெருந்தன்மை, அன்பு, கனிவுடைமை, தோற்றம், கடமையிலே கண்டிப்பு'' மிக்கவர் எனவும் திரு அ.கி.ப. சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

''இவர் உழைத்து முன்னேறியவர்; ஆங்கிலமும் தமிழும் வல்லவர்; உயர்ந்த எழுத்தாளர். சிறந்த ஆராய்ச்சியாளர்; கைதேர்ந்த கணக்காயர்'' என்று இவருடன் 30 ஆண்டுகள் பழகிய டாக்டர் மா. இராசமாணிக்கனார், திரு. அ.கி.ப.-வை எடைபோட்டுச் சொல்லிப்போயுள்ளார்.

> ★ நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால் குடிப் பழக்கத்தினையை விலக்க வேண்டும்!
>
> — காந்தியடிகள்

''அ.கி.ப. மொழி மரபும், பண்பு மரபும், குன்றாத தமிழ்த்தென்றல்; தமிழ் கற்றுத் தமிழ் காத்துத் தமிழாக்கித் தமிழ் பரப்பியவர்'' என்று டாக்டர் வ.சுப.மாணிக்கனார் மொழிந்துள்ளார்.

''புலமையும் பண்பும் சிறந்தவராகிய பரந்தாமனார் அவர்கள் பல நல்ல தமிழ் நூல்களை இயற்றியிருக்கிறார். அவற்றைப் படித்து மகிழ்ந்ததோடு, அவரையே ஒரு நல்ல புத்தகமாகப் படித்து நினைவில் இருத்திக் கொண்டிருந்ததாக''ப் பண்டித வித்துவான் (தீபம்) நா. பார்த்தசாரதி எழுதியுள்ளார்.

**தமிழாசிரிய நண்பர்கள் அ.கி.பரந்தாமனாரைப் 'பெரிய அண்ணா' என்றே அழைப்பர். பேராசிரியர் அ.கி. பரந்தாமனாரை மதுரை காமராசர் பல்கலைக் கழகம் சிறப்பாகப் பாராட்டி விருது அளித்துள்ளது. தமிழக அரசு, திரு.வி.க. விருது கொடுத்து. ரூ.5,000/- தொகையையும் அளித்துப் பெருமைப்படுத்தியுள்ளது**

**திரு. அ.கி. பரந்தாமனாரின் தோற்றம் கம்பீரமாக இருக்கும். ஆயினும் அவர் பழகுவதற்கு இனியவர்; கடுஞ்சொல் அற்றவர், தொண்டுள்ளம் கொண்டவர். அதே சமயத்தில் மரபுவழி பிறழாமலும், எளிய இனிய முறையில் எக்கருத்தையும் தமிழில் சொல்லமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கையும் கொண்டவர். மாற்றுக் கருத்தினரையும் தம்பக்கம் ஈர்க்கும் ஆற்றல் மிகப் படைத்தவர். வீணில் காலங்கழிக்க விரும்பாதவர். எதனையும் தெளிவாகவும் செய்ய வேண்டும் என்பதில் நாட்டங் கொண்டிருந்தவர்.**

இவர் நூல்களைப் படிப்பதன்மூலம் நாம் நல்ல தமிழை எழுத முற்படலாம். கவிஞராக விரும்புவோரும், பேச்சாளராக விழைவோரும், கட்டுரை எழுத ஆசைப்படுவோரும் வரலாற்று அறிவு கொள்ள நினைப்போரும் இவரது நூல்களைப் படித்தால்—முயன்றால் தாம் எண்ணியபடியே உயர்வு பெறலாம் என்பது திண்ணம்.

நல்ல குடும்பத் தலைவராக, நல்ல ஆசிரியராக, நல்ல வரலாற்று ஆசிரியராக, நல்ல கவிஞராக, நல்ல பண்புள்ள சான்றோராகத் திகழ்ந்த பேராசிரியர் அ.கி. பரந்தாமனார் தொண்டும் வாழ்வும் வரலாறும் நூல்களும், நமக்கு நல்லதோர் எடுத்துக்காட்டுகளாக என்றென்றும் நின்று நிலவும்.

இத்தகைய நற்குணங்கள் மிகுந்த சான்றோரான திரு. அ.கி.ப. அவர்கள் தமது 83-வது ஆண்டில் 24.2.86-இல் இயற்கை எய்தினார்.



# கோழிப் பண்ணையைப் பராமரிப்பது எப்படி?


க.திருநாவுக்கரசு

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்.


"சுத்தம் சோறுபோடும்" என்பார்கள். அதுபோலக் கோழிப் பண்ணையும் சுத்தமாக இருந்தால் தான் கோழிகள் நிறைய முட்டை இடும். லாபம் கிட்டும். அல்லவெனில் நோய் ஏற்பட ஏதுவாகி நஷ்டம்தான் ஏற்படும்.

சுகாதாரமான நிலை என்பது பண்ணையைச் சுத்தமாக வைத்திருப்பதே ஆகும். அதாவது பண்ணையில் நோய் கிருமிகளற்ற நிலையை உண்டாக்க வேண்டும்.

பண்ணையைச் சுகாதாரமாக வைத்திருப்பதன் மூலம் நோய்களைத் தவிர்க்கலாம். மேலும் நோய்கள் பரவுவதைத் தவிர்க்கலாம். பண்ணை சுத்தமில்லாமல் இருந்தால், உதாரணமாக ஆழ்குப்பையில் ஈரம் தங்கியிருந்தாலும் இறந்த கோழிகளைப் பண்ணையின் மூலையில் வீசுதல் போன்றவற்றாலும் நோய் பரவுவதற்கு எளிதாகிறது.

சுத்தமின்மை பல வகைகளில் கோழிகளைப் பாதிக்கிறது. நோய் ஏற்படுவதோடு மட்டுமில்லாமல் வளர்ச்சி குன்றி, உற்பத்தி குன்றி, இறப்பு விகிதம் அதிகரிக்கிறது. தரமான சுகாதார ஏற்பாடுகள் மூலம் முக்கிமாக வெள்ளைக் கழிச்சல் நோய் (Pullorum Disease) மற்றும் இராணிக்கெட் நோய் (New Castle Disease) ஆகிய நோய்களில் இருந்து கோழிகளைக் காக்கலாம்.

**பண்ணைவீடு கட்டும்போது கவனிக்க வேண்டியவை**

1. நல்ல காற்றோட்டமான வீடு முக்கியம்.

2. சிமெண்ட் தரை போடுவது நல்லது.

3. சுவற்றில் விரிசல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

4. எலி போன்றவை வீட்டுக்குள்ளே வராதபடி செய்வது நல்லது.

5. தீவனம் வைக்கத் தனி அறை அவசியம்.

6. இறந்த கோழிகளைப் புதைக்க பண்ணையின் ஒரு மூலையில் நிலத்தில் குழி தோண்டி, நாற்புறமும் சிமெண்டால் பூசுவது நலம். மேலும் சிமெண்ட் மூடி இருத்தல் நலம். (Disposal Pit)

**பண்ணையைச் சுத்தமாக வைத்திருக்கும் வழி முறைகள்**

1. கோழிகளை அதன் உற்பத்தி முடிந்து பண்ணையிலிருந்து காலி செய்த பிறகு, ஆழ்குப்பையை அப்புறப்படுத்துங்கள். இதை பண்ணையில் ஒரு மூலையிலேயோ அல்லது பண்ணையின் பக்கத்திலேயோ கொட்டிவைத்தல் கூடாது. மாறாக பண்ணை வீட்டுக்கு வெகு தொலைவில் கொட்டுங்கள். எரித்து விடுதல் நலம்.

2. பண்ணை வீட்டிலுள்ள தூசி, ஒட்டடைகளை அப்புறப்படுத்துங்கள்.



3. சுவர் மற்றும் தளம் ஆகிய வற்றிலுள்ள சந்து பொந்துகளை சிமெண்டால் பூசி அடையுங்கள்.

4. சன்னல், கதவுகள் சேதம் ஏற்பட்டிருந்தால் பழுது பாருங்கள்.

5. பண்ணை வீட்டில் பக்கவாட்டில் தொங்கவிட்டிருக்கும் சாக்குப் பைகளை கழற்றி, தூசி தட்டி, உலர்த்தி மீண்டும் கட்டுங்கள்.

6. பண்ணைச் சாதனங்களை அப்புறப்படுத்தி சுத்தம் செய்யுங்கள்.

7. வாஷிங் சோடாவை (Washing Soda) தரையில் தெளித்து, ஊற வைத்து அரை மணி நேரம் கழித்து நன்றாகக் கழுவி விட வேண்டும்.

8. தரையைச் சுண்ணாம்பு நீரை ஊற்றியும் கழுவி விடலாம்.

9. நெருப்பு கக்கி (Flame Gun) மூலம்கூட பண்ணையை சுத்தப் படுத்தலாம்.

10. வீடு முழுவதும் கிருமி நாசினி அடித்தல் வேண்டும்.

11. சுவற்றிலும் தரையிலும் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தலாம்.

12. சுவர்களுக்குச் சுண்ணாம்பு (வெள்ளை) அடிக்க வேண்டும்.

13. பின்பு, புதிய ஆழ்குப்பையைப் பரப்புங்கள்.

14. சுத்தப்படுத்திய சாதனங்களை மீண்டும் பண்ணையில் நிறுவுங்கள்.

15. பண்ணையை 7-10 நாட்களுக்கு எவ்வித இடையூறுமின்றி அடைத்துவைத்தல் நலம்.

**கிருமி நாசினி எப்படியிருக்க வேண்டும்:**

1. எல்லா வகை நுண்ணுயிர்களையும் அழிக்கவல்லதாகக் கிருமி நாசினி இருக்க வேண்டும்.

2. கோழிகளுக்கும், மனிதனுக்கும் எவ்விதத் தீங்கும் இழைக்கக் கூடாது.

3. கரிமப் பொருட்கள் (Organic matter) இருந்தாலும் நன்கு செயல் பட வேண்டும்.

4. அரித்தல், கரையாக்குதல் கூடாது.

5. தண்ணீரில் கரையக்கூடியதாக இருத்தல் அவசியம்.

6. சந்து பொந்துகளைச் சென்றடையக் கூடியதாக இருக்க வேண்டும்.



7. துர்நாற்றம் வீசக் கூடாது.

8. எளிதாகக் கிடைக்கக்கூடிய தாக இருக்க வேண்டும்.

9. அதே சமயத்தில் விலை குறைவானதுமாக இருக்க வேண்டும்.

**கிருமி நாசினிகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும்:**

**(அ) சில கிருமி நாசினிகள்**

சாதாரணமாக ஃபீனால் 5 சதவிகிதம் (Phenol) க்ரெசால் (Cresol) ப்ளிச்சிங் பவுடர் (Bleaching Powder) ஃபார்மலின் (Formalin) மாலத்தையான் (Malathion) வெந்நீர் (Hot Water) வாஷிங் சோடா (Washing Soda) போன்றவற்றை கிருமி நாசினியாகப் பயன்படுத்தலாம்.

**(ஆ) பயன்படுத்தும் முறைகள்**

1. வாஷிங் சோடாவைத் தரையில் தெளித்து, ஊறவிட்டுக் கழுவி விடலாம்.

2. தரையில் சுண்ணாம்பு நீரை ஊற்றிக் கழுவலாம். சுவற்றுக்குச் சுண்ணாம்பு அடிக்கலாம்.

3. ஒரு லிட்டர் தண்ணீரில் 100 கிராம் (10 சதவிகிதம்) மாலத்தையான் (Malathion) கலந்து தெளிப்பான் (கைத்தெளிப்பான் அல்லது விசைத்தெளிப்பான்) மூலம் தெளிக்கலாம்.

4. ஒரு லிட்டர் தண்ணீரில் 5 மில்லி க்ரெசால் கலந்து தெளிக்கலாம்.

5. 20 மில்லி பார்மலின் (Formalin) அல்லது 40 மில்லி ஆல்டிகால் (Aldekol) 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

**பண்ணையாளர் கவனிக்க வேண்டியவை:**

1. கிருமி நாசினியைத் தரை, சுவர், கூரை உட்பட பண்ணை வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும்.

2. கிருமி நாசினி தெளித்த பிறகு அவை நன்றாக உலர்ந்துபோக விடுங்கள்.

3. கிருமி நாசினி தீவனத்தில் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

4. கிருமி நாசினி மருந்து தெளிப்பவரைப் பாதிக்கா வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.


5. ஒரு செட் கோழிகளுக்குப் பயன்படுத்திய ஆழ்குப்பையை மற்றொரு பேட்ச் (Batch)-க்கு உபயோகிப்பதைத் தவிருங்கள்.

6. இறந்த கோழிகளை டிஸ்போசல் குழியில் (Disposal Pit) போடுங்கள்.

7. பண்ணைக்குள் செல்லும்போது, மருந்து தண்ணீரில் கால்களைக் கழுவிய பின்னரே உள்ளே செல்லுங்கள் (Foot Bath).

மேற்கண்ட முறையில் கோழிப் பண்ணைப் பராமரிப்பைக் கடைப்பிடிப்பதன் மூலம், நாம் பண்ணையின் உற்பத்தியைப் பெருக்க முடியும். சுத்தம் பேணினால், நாம் எண்ணியுள்ள அளவு இறைச்சியும் முட்டையும் கி.பி. 2000-இல் எளிதாக ஈட்ட முடியும். ●

# சேலம் மாவட்ட போதமலை பழங்குடிகள்- வரலாற்றுத் தொல்லியல் தடயங்கள்


கீழூர் போதமலைக் கிராமம்

நிலப்பரப்பில் சேலம் மாவட்டம் மற்ற மாவட்டங்களைவிட விரிவானதும் பெரிதானதுமாகும். இம் மாவட்டத்தில்தான் அதிக அளவில் மலைகள் பரவலாக உள்ளன. ஏற்காடு, கொல்லிமலை, சேர்வராயன்மலை, பெரியகல்வராயன் மலை, சின்னகல்வராயன்மலை, பச்சைமலை ஆகிய மலைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

சேலம் மாவட்டத்தில்தான், முக்கியமாக இதன் மலைகளில் பழங்குடிகள் அதிக அளவில் காணப்படுகின்றனர். இம்மாவட்டத்தின் சிறப்பு வாய்ந்த பழங்குடிகள் - மலையாளிகள் ஆவர். பிறப்பியல் படி, மலையில் வசிப்பவர் அல்லது அதை ஆட்சி செய்பவர் என்று பொருள்படும். இம்மாவட்ட மலைகளின் பெயர்களை முன் பெயராகக் கொண்டு இம்மலையாளிப் பழங்குடிகள் கொல்லி மலையாளிகள், பெரிய கல்வராயன் மலையாளிகள், சின்னக்கல்வராயன் மலையாளிகள், பச்சை மலையாளிகள் மற்றும் கவுண்டர் அல்லது வெறும் மலையாளிகள் என்று பல்வேறாக அழைக்கப்படுகின்றனர்.

இம்மாவட்டத்தின் மிகவும் அறிமுகப்படுத்தப்பட்ட பழங்குடிகள் வாழும் இடமாகக் கருதப்படுவது கொல்லிமலையாகும். இது தற்சமயம் ஒரு சுற்றுலாப் பயண இடமாகவும் மாற்றப்பட்டு வருவது நன்கு அறிந்ததே.

கொல்லி மலைக்குச் சற்று தள்ளியுள்ள மலையே போதமலையாகும். இம்மலை கிழக்கு-மேற்கு பரப்பில் பன்னிரண்டு கல்தொலைவில் படர்ந்து அனுமன் மலைப்பாறையில்


**ஜே.ஆர். அசோகன்**
**காப்பாட்சியர்**
**அரசு அருங்காட்சியம்**
**சேலம்.**

**டாக்டர் நே. தேவசகாயம்**
**மானிடவியல் காப்பாட்சியர்**
**அரசு அருங்காட்சியகம்,**
**சென்னை.**


கொல்லியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. இம்மலையின் சிகரத்தில் ஆனந்த மலையின் உச்சியும் அடங்கியுள்ளது. கிழக்குப் பக்கத்தில் ஐம்பூத்து மலையின் அடர்ந்த புதர்க் காடுகளின் நடுவில் ஆங்காங்கே வாசனை செறிந்த சந்தன மரங்களும் காணப்படுகின்றன.

இராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்டு சுமார் 3,776 அடி உயரத்தில் அமைந்துள்ளதே போதமலை என்னும் மலையும், மலைக் கிராமமுமாகும். இம்மலையின் உச்சியில் கீழூர் (3,776 அடி) மேலூர் (3,866 அடி), கெடமலை (4,105 அடி) என்னும் மலைகுக்கிராமங்கள் உள்ளன. கீழூர் மலைகுக்கிராமத்தில் நடுவலவு, குறிஞ்சியூர், நடுக்காடு என்னும் சிற்றூர்கள் பரவலாக உள்ளன.

போத அல்லது போதி என்ற பெயர் இம்மலைக்கு வரக்காரணம் யாது?, ஞானோதயமலை அல்லது அருணோதயமலை (Mountain of Enlightenment) என்றும், பௌத்தம் என்றும் புத்தம் என்றும் விளக்க கருத்துக்களைக் தன்னுள் கொண்டதாக இம்மலை அமைந்துள்ளது. பௌத்த மதத்தின் இணைப்பை, உறவை, இன்றும் ஊர்ஜிதப்படுத்துவதாக உள்ளது. ஆனந்தமலை இதன் சிகரங்களில் ஒன்றாகும். பதிமூன்றாம் நூற்றாண்டு வரை இம்மலை கருங்காலி மலை என்று அழைக்கப்பட்டது. அந்த நூற்றாண்டிலேயே தங்கள் குடும்பங்களில் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளிலிருந்து விடுபட, கொல்லிமலையாளிகள், தங்கள் கொல்லி மலையிலிருந்து பிரிந்து சென்று அருகிலுள்ள போதமலையில் குடியேறினர், சண்டையைத் தவிர்த்து சமாதானத்தை, அமைதியைப் பெற உதவியதால், இது பிற்காலத்தில் இம்மலையாளிகளால் போதமலை அல்லது போதிமலை என்ற பெயராகியது என்றால் அது மிகையாகாது.

இராசிபுரத்திலிருந்து வடுகம் வரை பேருந்தில் சென்று மூன்றுகல் தொலைவு நடந்து சென்று போதிமலையின் அடிவாரத்தை அடையலாம். போதிமலைக்குச் செல்ல மலை அடிவாரத்திலிருந்து கால் நடையாக ஒற்றையடிப் பாதையில் சுமார் 3,776 அடி உயரம் வரை நடந்து செல்லுதல் வேண்டும். இந்த ஒற்றையடிப் பாதை மிகவும் குறுகலானது, பல வளைவுகளைக் கொண்டது, பாறைகளைக் கொண்டது. புதியதாக மலை ஏறுபவர்களுக்கு சற்றுச் சிரமத்தை அளிக்கக்கூடியதாகும். அதிக அளவில் நேரடி ஏற்றத்தைக் கொண்ட இப்பாதையின் இருபுறங்களிலும், அடர்ந்த புதர்க் காடுகள் காணப்படுகின்றன. சுமார் இரண்டு மணிநேரம் நடந்தபிறகு நாம் அடையும் முதல் மலைக் கிராமம் கீழூராகும்.

கீழூர் அல்லது குறிஞ்சியூர் (குறிஞ்சிதலம் உள்ளதால்) எனப்படும் மலைக்கிராமம் சுமார் ஐம்பது மலையாளிக் குடும்பங்களைக் கொண்டதாகும். கருங்கல் மற்றும் மண்ணினால் கட்டப்பட்ட சுவர்களையும் கிணாங்கு அல்லது கோதைப் புல்லினால் வேயப்பட்ட கூரைகளையும் கொண்ட இவ் வீடுகள் சற்று பெரிய அளவில் ஒரு பெரு உள் அறையையும், சமையல் கட்டையும், வெளியில் முற்றத்தையும் கொண்ட நீண்ட சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர சமீபத்தில் ஐந்து புதிய கல் சுவர் ஓடு வீடுகளை அரசு அமைத்துள்ளது.


இந்த கீழூர் மலைக்கிராமத்தில் நம்மை வரவேற்பது, இங்கு அமைக்கப்பட்டுள்ள அஞ்சல் தந்தி அலுவலகமாகும். இதில் குறிப்பிடத்தக்கது இந்த அஞ்சல் நிலையத்தின் வெளிமுற்றத்தில் பாதுகாப்பான பெட்டியில் தொலைபேசி வைக்கப்பட்டுள்ளது. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மலையைப் பார்க்க வந்த ஒரு இளநிலைப் பொறியாளர் தொலைபேசியின் அவசியத்தை மிக் உணர்ந்து, இங்கு அதை நிறுவினார் என்று தெரிய வருகிறது.

அஞ்சல் நிலையத்தின் அருகில் காணப்படுவது குழந்தைகளின் காப்பகமாகும். சுமார் ஐந்து வயதிற்குட்பட்ட 25 குழந்தைகளுக்கு இது புகலிடமாக இருந்து வருகிறது. புதிய கல் கட்டடம் பாதி அளவில் எழுப்பப்பட்டுள்ளது. இது சமூகக் கூடமாகவும் குழந்தைகள் காப்பகமாகவும் செயல்பட உள்ளது. விரைவில் முற்றுபெற அனைத்து ஏற்பாடுகளும் கவனிக்கப்பட்டு வருகின்றன

மூன்றாவது கட்டடம், ஊரின் நடுவில், மேட்டில் சற்று கம்பீரமாகக் காட்சியளிப்பது பத்து ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட, துவக்கப்பட்ட பழங்குடிகளின் உணவு, உறைவிட துவக்கப்பள்ளியே ஆகும். 88 பள்ளி மாணவர் ஐந்தாம் வகுப்பு வரை இரு ஆசிரியர்களின் உதவியுடன் தமிழில் கல்வி பயிலுகின்றனர். அருகிலுள்ள இதர மலைப் பகுதிகளுக்கும் சேர்ந்தாற்போல் அமைக்கப்பட்டுள்ள இப்பள்ளியில் பாடநூல்கள், சீருடை, உணவு, காலணி, பாய் ஆகியவை இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. இவர்களில் படித்தவர்கள் ஒரு சிலரே. 5-ஆம் வகுப்பு முடித்த பிறகு மேல்படிப்பிற்காகக் குடும்பமாக இம்மலைமக்கள் கீழே சென்றுவிடுகின்றனர். இவ்விதமாக இருபது குடும்பங்கள் கீழே சென்றுவிட்டதாகத் தெரியவருகிறது. ஆகவே, இப்பள்ளியை எட்டாம் வகுப்பு வரை மாற்றினால் வசதியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

கொல்லிமலையிலிருந்து பிரிந்து வந்த இந்த போதமலை மலையாளிகளின் தொழில் என்ன?

காட்டைச் சிறிதுசிறிதாக அழித்து பயிரிடும் விவசாயம் முற்காலத்தில் இருந்தபோதிலும், தற்காலத்தில் தங்களின் பட்டா நிலமான மலைச் சரிவுகளில் படிக்கட்டுத் தளங்களில் பயிரிடுவதை இவர்கள் முதன்மையாகக் கொண்டுள்ளனர். சாமை, தினை, பனிவரகு, ராகி, மொச்சை, கொள்ளு, துவரை, கொத்தமல்லி ஆகியவை பயிரிடப்படுகின்றன இவர்கள் மழைநீரை நம்பி விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். ஆங்காங்கே வயல் வேலி வரப்புகள், மற்றும் இதர ஓரங்களில் கனிதரும் மரங்களான பலா, வாழை, மா ஆகியவை எழிலுடன் செழித்திருப்பதை நாம் காணலாம்.


மேலூரில் ஒருகல்லறை

குடிநீரைப்பெற துளைக் கிணறு இப்பகுதியில் போடப்பட்டுள்ளது. சமுதாயப் பொதுக் கிணறும் ஒன்று உண்டு. பன்றி, கோழி, ஆடுமாடு வளர்த்தலும் இவர்களின் இதர தொழில்கள் ஆகும். பட்டுப்பூச்சி வளர்ப்பு இப்பொழுது தொடங்கப் பட்டுள்ளது. மேலூர் மலையாளிகள் மூங்கிலினால் பட்டுவளர்ப்புக் கூடைகளைத் தயாரித்து வருகின் றனர். பலாப் பழங்களை இரண்டு அல்லது மூன்றாக இறுக கட்டி தலையில் வைத்து வேகமாக கீழே இறங்கி விற்பனையில் ஈடுபடுகின் றனர். விறகுகளை சுமந்து விற்கின் றனர். முற்காலத்தில் நாட்டு மருந் தில் நம்பிக்கை கொண்டிருந்த இம் மலை மக்கள், சமீப காலத்தில் நவீன மருந்தை ஏற்கவும் மற்றும் மருத்துவ மனை செல்லவும் ஆவல் கொண் டுள்ளனர். பிரசவக் காலத்தில் தடங்கல் இருக்குமானால் 'தூளி' கட்டி கர்ப்பிணியை இருவர் அல்லது மூவர் சுமந்து ஒற்றையடிப் பாதை யில் மலையிலிருந்து இறங்கி இராசி புரம் வரை செல்லுதல் வேண்டும். மருத்துவச்சியை அமர்த்தினால் இக் குறை தீரவழியுண்டு. அம்மை நோய் வரக்காரணம் ஏற்றபடி மாரியம் மனுக்குப் பூசை செய்யாததே என்று கருதுகின்றனர். பூசையுடன் ஆட்டுக் குட்டி, பன்றி ஆகியவை பலி இடுதல் உண்டு. குடும்பம் வாரியாக ரூபாய் ஐம்பது சேகரித்து பதினைந்து நாட்கள் மாரியம்மன் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முதல் நாளில் மரவள்ளிப் பொங்கல், இரண்டாம் நாள் ஆடு வெட்டுதல், மூன்றாம் நாளில் மஞ்சள் நீராட்டிக் குதுகலத்துடன் வழிபாடு செய்யப் படுகிறது. இவர்கள் வழிபடும் இதர தெய்வங்கள் நல்லம்மன் சாமி, கற்பகப் பிள்ளையார், சேலைகட்டி யான், போதமலை பெருமாள் ஆகியவராகும்.

மகள் வயதிற்கு வந்தவுடன், தாய் மாமன் கட்டிய தனிக்குடிசையில் ஏழு நாட்கள் தங்கிய பிறகு, விழாச் சாப்பாட்டுடன் வீடு திரும்புதல் உண்டு. திருமணம் தங்கள் குலத் துள், பெரியவர்கள் பார்த்து வைத்து முடிப்பர். விதவைத் திருமணம், மறுமணம், ஆகியவையும் அனுமதிக் கப்படுகிறது. காதல் திருமணம், கூடா உறவு ஆகியவைகளுக்கு ஊர் கவுண்டன் தலைமையில் அபராதம் போடப்படுகிறது.

விசாரணை பொதுவாக ஊர்ச் சாவடியில் நடைபெறும். பகல் வேளைகளில், இதற்கென கற்களி னால் எழுப்பப்பட்டுள்ள மேடை யில் நடைபெறும். இறந்தவர்களை எரித்தலும், புதைத்தலும் இவர்களிடம் உண்டு. தற்கொலையாயின் எரித்தல் அவசியம். கருமாதி மூன்று நாள் கழித்து விழாவாக, பன்றிச் சாப் பாட்டில் முடிவடையும்.

மின்சாரம், சாலை வசதி, மருத்துவ வசதி, 'லாம்பு' கூட்டுறவுச் சங்கம், கடை வசதி, உயர் கல்விப் பள்ளி வசதி யாவும் அறவே இல் லாத போதமலையில் மலையாளிப் பழங்குடிகளின் முன்னோர்களின் வரலாற்றுத் தொல் பொருளியல் தடயங்கள் காணப்படுகின்றன.

சேலம் மாவட்ட மலைகளில் சிறப்பாகச் சேர்வராயன் மலையில் **புதிய கற்கால மனிதன் வாழ்ந்தான், வாழ்க்கையை புதிய கற்கால ஆயுதங் களினால் சிறப்புறச் செய்தான் என்பதை நிரூபிக்க இம்மலையில் எண்பது எண்ணிக்கைக்கு மேற்பட்ட கல்கோடாரிகள் (Celts)**

**திரு இராபட் புரூஸ் புட் அவர் களால் சேகரிக்கப்பட்டு, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. இவ்வித மழமழப் பான கல் கோடாரிகள் இன்றள வும் சேலம் மாவட்ட மலைகளில் ஆற்றின் ஓரங்களில், காடுகளில் சிதறிக் கிடப்பதைக் காணலாம். மற்ற மலையாளி பழங்குடிகளைப் போன்றே போதமலை மலை** யாளிகள் இவ்வித புதிய கற்கால ஆயுதங்களான கற்கோடாரிகளை - உருவத்தில் சிறிதளவு பிள்ளையார் போன்றிருப்பதால், இவைகளை பிள்ளையாரின் குழந்தைகள் என்று கருதி அவைகளைச் சேகரித்து கீழூரில் உள்ள பிள்ளையார் கோவிலில், பிள்ளையார் சிலையைச் சுற்றி வைத்து வழிபடுவதை இன் றளவும் காணலாம். அருங்காட்சி யகத்திற்காக இக்கற்கருவிகளைப் பெறும் பொருட்டு போதமலை மலையாளிகளின் மனத்தை மாற்ற வும், ஊர்த் தலைவரின் ஒப்புதலைப் பெறவும் எடுத்த முயற்சி வீண் போகவில்லை. சிறிய அளவில் நடந்த பூசைக்குப் பிறகு ஊர்க் கவுண்டன் ஆறு புதிய கற்கால ஆயுதங்களை சேலம் அருங்காட்சி யகத்திற்கு வெகுமதியாக அளித்தார் என்றால் அம்மக்களின் தியாகச் சிந்தையை நாம் மெச்ச வேண்டிய வர்களாக உள்ளோம்.

கீழூரிலிருந்து மேலூர் மலைக் கிராமத்தின் மேலூர் மலை உச்சி யில் (3,866 அடி உயரம்) பெருங் கற்காலப் புதையல் சின்னங்கள், தடயங்கள் காணப்படுகின்றன. ஒற்றை யடிப் பாதையின் வழியே இச் சிகரத்தை அடையலாம். மலைச் சிகரத்தில் கருங்கற்களினால் கிணறு வடிவத்தில் (Cairn Packing) சுற்றி, சுற்றி ஏற்றப்பட்டுள்ள கற்கிடை உருவ அமைப்பு சிறப்பாக உள்ளது. இது கி.மு. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் நிறுவப்பட்ட பெருங்கற்காலக் கல்லறைகள் (Megalithic burials) என்று கருதப் படுகின்றன. இந்த நடு கல்லறை யைச் சுற்றி பதினாறு "கல்திட்டை" (Dolmenoid cist) சவக் கல்லறை களையும் காணலாம். இம்மலையின் உச்சியில் கருங்கல் பலகைகள் வெட்டி எடுக்கப்பட்டு அழகாகச் செதுக்கப்பட்டு, வடிக்கப்பட்டு கல்லறைகளின் சுவர்களாக எழுப்பப் பட்டிருப்பது வியப்பை எழுப்புகிறது.

இம்மலைவாழ் மக்களின் கதைப் படி, இவ்விதப் பெருங்கற்காலக் கல் லறைகளான கற்கிடை (Cairns) மற்றும் கல்திட்டை (Dolmenoid cist), பொதுவாக, பாண்டியன் கல்லு அல்லது பாண்டியன் குழு என்று அழைக்கப்படுகிறது. இவற்றை குள்ள பாண்டியர் எனப்படும் ஒருவகை இனமக்கள் ஒன்று அல்லது இரண்டு சாண் உயரமுள்ளவர் களாகவும் எருதிற்குப் பதிலாக முயல் களைக் கொண்டு நிலத்தை உழுத தாகவும், புற்களின் நீண்ட வேர் களைக் கயிறுகளாகக் கொண்டும், கருங்கல் பலகைகளைச் சுமந்து இந்த பெருங்கற்காலக் கல்லறைகளை அமைத்ததாகவும இவர்கள் நினைக் கின்றனர். ஒரு நாள் தங்களின் தெய்வம் விலை உயர்ந்த கற்களை யும், தங்கத்தையும் வானத்திலிருந்து மழையாகப் பொழிந்ததாகவும், அவையாவையும் இக்குள்ளர்கள் ஒன்றுவிடாமல் பொறுக்கி எடுத்து தங்களுக்கு வைத்துக் கொண்டதாக வும், அதனால் கோபம் கொண்ட தெய்வம் நெருப்பு மழையை அனுப் பியதாகவும், அதிலிருந்து தப்ப இக் குள்ளர்கள்இந்துப்பெருங்கற்கல்லறை

## முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி

**கோ**யம்புத்தூர் மாவட்டம், வால்பாறையைச் சேர்ந்த திரு அருணாச்சலம் என்பவர் 5.3.90 அன்று ஒரு காட்டு யானையால் தாக்கப்பட்டு இறந்து விட்டார். வறுமையால் வாடிய அன்னாரின் குடும்பத்தினர், மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தங்களின் ஆதரவற்ற குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டி கோரிக்கை விடுத்தனர்.

**அதனைக் கருணையுடன் ஏற்றுக் கொண்டு மறைந்த திரு அருணாச் சலத்தின் மகன் பிரான்சிசுக்குத் தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5,000/- நிதியுதவி அளிக்கும்படி தமிழக முதல்வர் 20.7.91 அன்று உத்தர விட்டார்.**



## இளைஞர்களுக்கு...

**கஷ்டங்களும், கடின சோதனைகளுமே ஒருவனை மனிதனாகச் செய்கின்றன. ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவையே அறிகுறியாகும். எல்லா இளைஞர்களுமே சுகமாயும், சௌகரியமாகவும் தேவை என்பதே இன்னதென்று தெரியாத முறையிலும் வாழ்க்கை நடத்தி வந்தால், சோதனை வரும்போது வெற்றியோடு அதிலிருந்து அவர்களால் மீள முடியாது. தியாகமே ஆனந்த மளிக்கும்.**

**-அண்ணல் காந்தியடிகள்**



## முதல்வரின் மாத ஊதியம் ஒரு ரூபாய்!

**மா**ண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சருக்கான மாத ஊதியத் தினைப் பெற்றுக்கொள்வதில்லை என முடிவு செய்துள்ளார். ஊதிய மாக ரூ.1/- மட்டும் பெறுவார்.

மக்களுக்குச் சேவை செய்வதற் காகவே தன்னைத் தமிழக மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றும், இந்தத் தொண்டிற்கு மாத ஊதிய மாக ஒரு தொகையைப் பெறுவது சரி இல்லை எனவும் முடிவு செய்து, மாத ஊதியத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மறுத்து உள்ளார்.



**• பெண்களின் நிலை உயரும்போது, ஆண்களின் நிலையும் உயரும்; இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்.**

களில் பதுங்கியதாகவும், நெருப்பினால் இவர்கள் இனமே கருகி மடிந்ததாகவும் கதை கூறுகிறது.

கீழூரில் உள்ள கல்வெட்டு ஒன்று இந்த போதமலைவாசிகள் யாவரும் கொல்லி மலையிலுள்ள மலைவாசிகளின் இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் இவர்களிடையே குடும்ப உறவுகள் நிலவி வந்துள்ளன என்று தெரிவிப்பதும் ஆராய்ச்சியில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

போதமலை மலையாளிகள் சாதி, சமூக நியாயங்களைத் தீர்ப்பதில் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை விளக்க சரித்திரச் சான்றுகள் உள்ளன. அதன்படி 1860-ஆம் ஆண்டில் போதமலை கீழூர் மசய கார்த்தாக் கவுண்டனுக்கும், மேலூர் சிரக்காளி அண்ணாமலை கவுண்டனுக்கும் உண்டான வழக்கை தீர்க்க மாநாடு கூடியதாகவும், கீழூர் மசய கார்த்தாக் கவுண்டர் தீர்ப்பு தனக்கு தேவையில்லை என்று மாநாட்டை அவமதித்து நாமக்கலில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தான் என்றும், அதில் மேலூர் அண்ணாமலை கவுண்டன் வெற்றி பெற்று அதனால் மசய கவுண்டனின் விருது, பட்டம்



மேலூர் மலையில் காணப்படும் 'கல்திட்டைக் கல்லறை'.

முதலியவை பறிபோயின என்றும் சுமார் 125 ஆண்டுகளுக்கு முன் கொடுக்கப்பட்ட செப்பேடுகளில் (Copper Plate Grants) தெரிய வருகிறது.

இங்கு கிடைக்கப் பெற்ற போதமலை மலையாளிகளின் பத்து அரும் கலைப் பொருள்களும் (கொத்து, குந்தாணி, சுரைக்காய் குடுவை, அரிவாள், பன்றியின் பாத்திரம் ஆகியவை) எட்டு' புதியகற்கால வெட்டும் கருவிகளும் (Celts) சேலம் அருங்காட்சியகத்தில் விரைவில் வைக்கப்பட உள்ளன.

## அரசின் அறிவிப்புகள் - ஆக்கப்பணிகள்

★ சென்னையில் குடிநீர் அசுத்தமாகி வருவதால், 1,500 கிலோமீட்டர் நீளத்தையுடைய பழைய குடிநீர்க் குழாய்களை மூன்றாண்டுக் காலத்திற்குள் 150 கோடி ரூபாய் செலவில் மாற்றியமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது என்று சென்னைப் பெருநகர்க் குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது. (15.7.1991)

★ சென்னை மாநகரில் சுமார் ஓராண்டுக்காலமாகவும் தமிழ்நாட்டில் இதர பகுதிகளில் எட்டரை மாதகாலமாகவும் பல ஏழைக் குடும்பங்களைப் பாதித்து வந்த மலிவு விலை மதுக்கடைகள் 16.7.1991 முதல் மூடப்பட்டன.

★ சென்னை மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் முக்கிய சாலைகளில் ஒரு இலட்சம் மரங்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. (15.7.1991)

★ மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணம் செய்து பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். (17.7.1991)

★ பொதுமக்கள் கொடுக்கும் புகார் மனுக்கள் மீது 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநகராட்சி அதிகாரிகளுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு ஆணையிட்டுள்ளார். (17.7.1991)



# புஞ்சை நிலத்தில் வருவாய் பெருகிட புதிய அணுகுமுறைகள்!



மழைத்துளி இப்பூமியில் விழாது போனால் பசும்புல்கூட முளைக்காது என்று மழையின் சிறப்பினை விளக்கியுள்ளார் வள்ளுவர். தமிழ்நாட்டில் சாகுபடி செய்யும் மொத்த பரப்பில் ஏறத்தாழ 58 சதவீதம் மானாவாரியாக, மழையினை எதிர்பார்த்தே சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்யப்படும் சுமார் 1.37 கோடி ஏக்கர் நிலப் பரப்பில் 80 இலட்சம் ஏக்கர்கள் மானாவாரியாக மழையினை நம்பியே உள்ளது. ஆகவே, மானாவாரி நிலங்களில் ஒன்று அல்லது இரண்டு சதவீதம் மகசூலைப் பெருக்கினாலே அது ஒரு கணிசமான உற்பத்திப் பெருக்கமாக அமைந்திடும். மாறாக இந்த மானாவாரி நிலங்களில் மிகக் குறைந்த அளவு மகசூல் குறைந்தாலும் அது ஒரு கணிசமான அளவு உணவுப் பற்றாக்குறையினை ஏற்படுத்திவிடக்கூடும்.

மானாவாரி நிலங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பல்வேறுபட்டவை. நிலையில்லாத பருவ நிலைகள், எளிதாக அரிப்புக்கு உட்படும் மண், மிகக் குறைந்த ஆதாரங்கள், அறிவியல் ரீதியாக மேலாண்மை செய்யப்படாமை போன்றவை மானாவாரி நில மக்களுக்குப் பிரச்சினைகளை மேலும் அதிகமாக்குகிறது.

**இன்றியமையாதது நீரே!**

மானாவாரி பகுதிகளில் மகசூலைக் கட்டுப்படுத்துவது நீர்தான். மானாவாரி பகுதிகள் பயிரின் நீர்த் தேவைக்கு மழையை மட்டுமே நம்பியுள்ளது.

நீரும் நிலமும் பயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாத இரண்டு அடிப்படைத் தேவைகளாகும். நீர் வளம் காத்து வேளாண்மை செய்தால்தான்

**நா. இராமலிங்கம்**
உதவி செயற் பொறியாளர் (வே.பொ)
தஞ்சாவூர்.


நிலம் நல்ல பயன்தரும். ஆகவே, மழை நீரைச் சேகரித்து, தேக்கி, கொண்டு சென்று பயன்படுத்தி மீதமுள்ள நீரை மண்ணிற்கும் பொருளுக்கும் இழப்பின்றி, பாதுகாப்பான முறையில் வெளியேற்றிடுதல் வேண்டும்.

இம்மழை நீர் நில மட்டத்திலோ அல்லது நிலத்தடியிலோ தேங்கிட வகை செய்திடல் வேண்டும். ஆகவே, தான் பெய்கின்ற மழை நீரை ஆங்காங்கே தேக்கி அதிக அளவில் மழை நீர் பூமியில் ஊடுருவிடச் செய்து ஈரப்பதம் காத்திட புதிய அணுகு முறைகள் தேவைப்படுகின்றன.

**மழை நீரைச் சேகரித்திட வழிகள்**

மழை நீரைச் சேகரித்திட பல வழிகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை:

1. ஊருணிகள், சிறிய குட்டைகள் ஆகியவற்றில் இருக்கின்ற கரைகளை வலுப்படுத்தி அதன் கொள்ளளவு குறையாது நீர் தேங்கிடச் செய்வது.



2. ஓடைகளில் தேவையான பொறியியல் அல்லது . தாவரவியல் முறைகளின் மூலம் கட்டுப்படுத்தி மழை நீர் வேகத்தைக் குறைத்து மெதுவாக நிதானமாகச் செல்ல வைக்க வேண்டும். இவ்வாறு மெதுவாக நீண்ட நேரம் செல்வதால் மண்ணில் ஈரப்பதம் அதிகப்பட்சம் ஊடுருவும்படியாகவும் நிலத்தடி நீர் மறு ஊட்டம் பெறவும் வழி செய்வதோடு ஓடை அரிப்பு கட்டுப்படுத்தப் படுகிறது.

3. மண்ணரித்து ஓடையாகிப் போன இடங்களில் அங்குள்ள மண் படிவத்தைப் பொறுத்து தாவரங்களாலோ, மண்ணாலோ, கற்களை அடுக்கியோ, கட்டுமானங்கள் மூலமோ தடுப்பணைகள் கட்டி அரிப்பைத் தடுத்து நீர் தேங்கிடச் செய்தல்.



4. ஒரு எக்டேருக்கு 250 கன மீட்டர் நீர் கொள்ளும் அளவிற்குப் பண்ணையின் அளவினைப் பொறுத்து பண்ணைக் குட்டைகள் அமைத்தல். பண்ணைக் குட்டைகள் என்பது விவசாய நிலங்களிலேயே அமைக்கக் கூடியதாகும். குட்டைகள் அமைப்பதனால் ஓரளவு நிலப்பரப்பு இழக்க நேரிட்டாலும் வறட்சிக் காலத்தில் பயிரைக் காத்திட இக்குட்டைகள் உதவிடும் எனும் நோக்கத்தில் இவை அமைக்கப்படுகின்றன. பண்ணைக் குட்டைகள் ஆரம்ப காலத்தில் நிலைப்படும்வரை சற்று பிரச்சினைகளைக் கொடுத்தாலும், பின்னால் மிகவும் பயனுள்ளதாக அமைந்து விடுகிறது. பயிர்கள் வாடும் காலத்தில் உயிர்த் தண்ணீர் பாய்ச்சிட இது மிகவும் உதவுகிறது. பண்ணைக் குட்டைகளின் கரைகளில் பயன் தரும் மரங்கள் வளர்த்தால், அது குட்டைக்கான செலவில் ஓரளவினை ஈடுகட்டிட உதவிடக்கூடும்.

5. பாசனத்திற்குதவிடாத நீர் வழிகள், ஓடைகள் ஆகியவற்றின் குறுக்கே அமைக்கப்படும் கசிவு நீர்க்குட்டைகளின் பயன் எல்லோரும் அறிந்ததே. எங்கெல்லாம் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க முடியுமோ அங்கெல்லாம் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்திடல் வேண்டும். இதனால் எந்தவிதப் பயனும் இன்றி வீணாகும் மழைநீர் சேகரிக்கப்படுவதோடு வறட்சிக் காலங்களில் கால்நடைகளுக்கும், நிலத்தடி நீர் மறு ஊட்டம் பெறவும் உதவிடும்.

**மழை நீர் தேக்கி மண்ணின் ஈரம் காத்திட புதிய அணுகுமுறைகள்**

மழை நீர் ஆங்காங்கே நிலத்திற்குள் ஊடுருவிட பல புதிய அணுகுமுறைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை-

**ஆழ உழவு செய்தல்**

அகல உழுவதைவிட ஆழ உழு என்பது ஆன்றோர் வாக்கு. மானாவாரிப் பகுதிகளில் அறுவடை முடிந்ததும் உழவு செய்திடுவது மிகவும் அவசியம்; அதோடு கோடையிலும் உழவு செய்திடல் வேண்டும். இவ்வாறு உழவு செய்திடும்போது சரிவுக்குக் குறுக்காகவும் அதே நேரம் ஆழ உழும்படியாகவும், முடியு மட்டும் சம உயரக்கோட்டில் உழவு செய்திடல் வேண்டும். இவ்வாறு செய்தால் சரிவுக்குக் குறுக்கே இந்த உழவுச் சால்கள் தடையாக அமைந்து மழை நீர் உழவுச் சால்களில் ஒரே சீராக எங்கும் பரவும், உழவுச் சால்களில் அதிக நேரம் மழைநீர் தேங்குவதால் பூமியில் அதிக நீர் ஊடுருவிடவும் வாய்ப்புள்ளது.

**பாத்தி அமைத்து நீர் தேக்குதல்**

ஒரு சதவீதத்திற்குக் குறைவான சரிவுள்ள நிலங்களில் 20x20 (அடி) பரப்பளவுள்ள சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து 15 செ.மீ. முதல் 20 செ.மீ. வரை உயரமுள்ள வரப்புகள் அமைத்தால் மழை நீர் இச்சிறுசிறு பகுதிகளில் தேங்கி மழை ஈரம் காத்திட மிகவும் உதவிடும். பயிர் செய்யாத நாட்களில் இதனைச் செய்யலாம்.

**அதிக சரிவுள்ள இடங்களில்**

படிப்படியாய் வரப்புகள் அமைத்திடும் இடங்களில் சால் வெட்டி, பார்அணைத்து மழை நீர் தேக்கிடலாம். சற்று சரிவு கொடுத்து இவைகளை அமைத்தால் அதிக மழை நீரால் பார் உடையாது காத்திடலாம். இவ்வாறு செய்வதால் மழை நீர் மெதுவாகச் சால்களில் செல்ல வைக்க இயலும். இவ்வாறு மெதுவாகச் செல்வதனால் மழை நீர் வெளியேற அதிக நேரம் எடுத்துக் கொண்டு அதிக அளவு மழை நீர் பூமியில் ஊடுருவிட வழி வகுக்கிறது.

**கரிசல் மண் பூமியில்**

விரைவில் நீர் ஊடுருவிடாத கரிசல் மண் பூமிகளில் 10 மீட்டர் இடைவெளியிட்டு சரிவுக்குக் குறுக்காக, அகழ் குழிகளில் தோண்டி, அதில் மண் மற்றும் கரிமப் பொருள்களை நிரப்புவது செங்குத்து ஈரப் பாதுகாப்பு மூட்டமிடல் என்று பெயர். இந்த அகழ் குழிகள் 15 முதல் 20 செ.மீ. அகலமும், 40 முதல் 60 செ.மீ. ஆழமும் உடையதாக இருக்கும். கரிசல் மண் பூமிகளில் இவ்வாறு செய்தால் பூமிக்குள் மழை நீர் அதிக அளவு ஊடுருவி ஈரபபதம் காத்திட உதவும்.

**செவ்வல் மண் பகுதிகளில்**

இரண்டு முதல் நான்கு சதவீதம் சரிவுள்ள நடுத்தரமான - செவ்வல் மண் பகுதிகளில் 0.2 முதல் 0.4 சதவீதம் சரிவுகளைப் படிப்படியாகப் பிரித்து நீள்பாத்தி அமைத்திடுவது ஒரு முறையாகும். சரிவுக்குக் குறுக்கே அடையாளக் கோடமைத்து இதனை 30 செ.மீ. செங்குத்து இடைவெளிகளில் நீள் பாத்திகள் அமைத்தால் மண் அதிக அளவு நகராமலும், ஈரப்பதம் அதிக அளவில் காத்திடவும் உதவும்.

**சரிவுக்குக் குறுக்காக ஆழச்சால் அமைத்தல்**

சம உயர வரப்புகளுக்கிடையில் சரிவுக்குக் குறுக்காக உழவு செய்யும் போது ஆழச்சால் ஒன்று ஏற்படுத்திடுவது நல்லது. உழும் இடத்தில் மண் தன்மைக்கேற்ப 10 மீட்டர் இடைவெளிகளில் 15 செ.மீ. ஆழத்திற்கு ஒரு ஆழச்சால் அமைத்திடல் வேண்டும். அதிக மழையுள்ள, அதே நேரம் நீர் ஊடுருவும் தன்மை குறைந்த மண் பகுதிகளில் 0.2 முதல் 0.4 சதவீதம் சரிவு உள்ள படியாக ஆழச்சால் அமைத்திடுதல் வேண்டும். இதனால் சரிவின் அகலம் குறைக்கப்பட்டு அதிக அளவு மழைநீர் பூமிக்குள் ஊடுருவிட வழிவகுக்கப்படுகிறது.

**சிறு வரப்புகள் அமைத்தல்**

சம உயர வரப்பிற்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் எங்கும் பரவலாக இருந்திடவும், வரப்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகளுக்குள்ளே மண் நகராமல் தடுத்திடவும் சரிவுகளின் இடைவெளியைக் குறைத்திட 20 செ.மீ. x 20 செ.மீ. (400 ச.செ.மீ.) குறுக்களவுள்ள சிறு வரப்புகள் சம உயர வகுப்புகளுக்கிடைப்பட்ட பகுதியில் 10 மீட்டர் இடைவெளிகளில் அமைக்கப் படுகின்றன.

மண் ஆழத்தினையும், மழை அளவினையும் பொறுத்த சம உயரக் கோடுகளிலோ, படிப்படியாக சம உயரத்திலோ அமைக்கப்படுகிறது. இச்சிறிய வரப்புகளில் ஆமணக்கு, துவரை அல்லது கூபாபுல் வளர்த்திட பரிந்துரைக்கப்படுகிறது. சிறு வரப்பிட்ட பகுதி வீணாகாமல் விவசாயி பலன்பெறும் நோக்கத்தில் இவ்வாறு பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு சிறு வரப்புகள் அமைப்பதால் மழை நீர் பரவலாகவும் எங்கும் ஒரே நீராகவும் இருந்திடவும், வரப்புகளுக்கிடைப்பட்ட பகுதிகளுக்குள்ளே மண் நகர்ந்து செல்லாமலும் தடுக்கப்பட்டு மண் வளமும் நீர் வளமும் காக்கப்படுகிறது.

**சம உயரக் கோட்டில் பயிரிடுதல்**

இம்முறையில் சம உயரக் கோட்டில் முன்னுழவு செய்தல், இரண்டாம் உழவு செய்தல், சம உயரக் கோட்டில் விதைப்பது, ஊடு சாகுபடி செய்வது என எல்லா விவசாய வேலைகளையும் சம உயரக் கோட்டில் செய்யும்படியாக உழவர்களை ஊக்குவிப்பதாகும். அவ்வாறு செய்வதால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு மழைநீர் அதிக அளவு ஊடுருவிட வழி வகுக்கப்பட்டு மகசூல் அதிகரிக்கச் செய்கிறது.

**மரம் நடுதல்**

வளம் குன்றியுள்ள புஞ்சை நிலங்களில் ஆண்டுப் பயிர்களைத் தவிர்த்து மண்ணின் தன்மைக்கேற்ப பயன்தரும் மரங்களான முந்திரி, வேப்ப மரம், புளிய மரம், வேல மரம் போன்ற மரங்களை நட்டு வருவாயைப் பெருக்கலாம்.

**புஞ்சை நிலத்தில் வருவாய் பெருகிட**

மானாவாரிப் பகுதிகளில் இப்புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தால் மண் வளமும் நீர் வளமும் காத்து மகசூல் பெருக்கி பஞ்சம் போக்கிட வருவாயைப் பெருக்க முடியும் என்பது திண்ணம். மானாவாரிப் பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்கள் இப்புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து மகசூல் பெருக்கத்திற்கு உதவிட வேண்டும். இதன் தொடர்பாக மேலும் விவரங்களுக்குத் தங்கள் பகுதியிலுள்ள மண்வளப் பாதுகாப்புத் திட்ட உதவிச் செயற் பொறியாளர்களை நாடலாம்.

## தோலாடை உற்பத்தியில் இந்தியா

**தோல் பொருள் ஏற்றுமதியில் கடந்த ஐந்தாண்டுகளில் முதலிடம் வகிப்பது தோல் ஆடைகள் ஏற்றுமதியே ஆகும். இதற்கு முக்கிய காரணம் உலக அரங்கில் அதுவும் முக்கியமாக முன்னேறிய நாடுகளில் தோலாடைகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதே யாகும்.**

**உலகச் சந்தையில் இந்தியத் தோல் பொருட்களின் பங்கு குறைவாகவே இருந்தாலும், தோலாடைகள் ஏற்றுமதியில் நமது பங்கு ஊக்குவிப்பதாகவே இருக்கிறது. தோலாடை ஏற்றுமதியில் நமக்குள்ள அனுபவமும், தோலாடைத் தயாரிப்புக்குத் தேவைப் படும் குறைந்த மூலதனமுமே இதற்கு முக்கிய காரணங்கள் ஆகும். மேலும், தோலாடை ஏற்றுமதி சிறுதொழில் பிரிவின் கீழ் வருவதால், இந்தத் தொழில் தொடங்க உரிமம் பெறவும் அவசியமில்லை.**

**தோலாடை ஏற்றுமதி**

**இந்தியாவில் தயாரிக்கப்படும் தோலாடைகளுக்கு உள்நாட்டில் அவ்வளவாக ஆதரவு இல்லாததனால், நமது நாட்டில் தயாராகும் தோலாடைகளில் பெரும் பகுதி அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், ஜப்பான் ஆகிய நாடுகள் இந்தியாவிலிருந்து அதிக அளவில் தோலாடைகள் வாங்கும் நாடுகளாகும். கடந்த 8 ஆண்டுகளில் தோலாடைகளின் ஏற்றுமதி கணிசமாக உயர்ந்திருக்கிறது.**

**இந்தியாவில் தற்சமயம் ஆண்டிற்கு 2 மில்லியன் அளவுக்கு மேல் தோலாடைகள் தயாரிக்க வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. இதில் சென்னையில் மட்டும் ஒரு மாதத்திற்கு ஒரு இலட்சம் தோலாடைகள் தயாரிக்கும் திறன் இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது.**

# மிளகு ஏலக்காய்

- எஸ்.சி. பாண்டியா

தற்போது எக்டேர் ஒன்றுக்கு 60-இல் இருந்து 65 கிலோ வரை ஏலக்காய் கிடைக்கிறது. புதிய உயர் விளைச்சல் ரகங்களைச் சாகுபடி செய்வதின் மூலம் விளைச்சல் சுமார் 5-இல் இருந்து 6 மடங்காக அதிகரிக்கும் வாய்ப்பிருக்கிறது. உலக அளவில் நடைபெறும் நறுமணப் பொருள் வர்த்தகத்தில் 1985-ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவின் பங்கு சுமார் 20 சதவிகிதம் மட்டுமே. இந்தியாவில் விளையும் சுமார் 20 இலட்சம் டன் நறுமணப் பொருள்களில் 80 ஆயிரம் டன் மட்டுமே ஏற்றுமதி ஆகிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 300 கோடி அன்னியச் செலாவணி கிட்டுகிறது. உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் நறுமணப் பொருள் விளைதிறன் மிக மிகக் குறைவு. குறிப்பாக மிளகு, ஏலக்காய், ஆகியவற்றின் விளைதிறன் மிகக் குறைவாகும்.



### அதிக அளவில் உற்பத்தியாகும் காய்கறி

**உலகிலேயே மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளில் முதலிடம் வகிப்பது உருளைக் கிழங்குதான். மிதமான சீதோஷ்ண நிலையைக் கொண்ட மலைப்பிரதேசங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப் படுகிறது. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில்தான் உருளைக்கிழங்கு அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. இதைத்தவிர நமது நாட்டில் கர்நாடக மாநிலத்தில் சில பகுதிகளிலும், உத்திரபிரதேச மாநிலத்தில் சில பகுதிகளிலும் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப் படுகிறது.**

**உருளைக்கிழங்குக்கு அடுத்து அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் காய்கறி தக்காளி ஆகும்.**

இந்தோனேஷியாவில் எக்டேர் ஒன்றில் 550 கிலோ மிளகு விளைகிறது. பிரேசிலில் 1200 கிலோ மிளகு ஒரு எக்டேரில் விளைகிறது. ஆனால் இந்தியாவில் எக்டேர் ஒன்றுக்கு 275 கிலோதான் மிளகு விளைகிறது. உலகச் சந்தையில் ஏலக்காய் வர்த்தகத்தில் முன்னணியில் இருக்கும் கௌதமேளாவில் ஒரு எக்டேரில் 250 கிலோ ஏலக்காய் விளைகிறது. ஆனால் இந்தியாவின் விளைச்சலோ சுமார் 65 கிலோ மட்டுமே. இருந்தபோதிலும் நம் நாட்டில் ஒரு இலட்சத்து ஐயாயிரம் எக்டேர் பரப்பில் சிறுவெட்டு ஏலக்காயும், சுமார் 23 ஆயிரத்து 310 எக்டேர் பரப்பில் பருவெட்டு ஏலக்காயும் பயிராகின்றன. தமிழ் நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இவ்வளவு விரிந்த பரப்பில் சாகுபடி செய்வதன் மூலம் ஆண்டொன்றுக்கு 4,000 டன்னுக்கும் சற்றே அதிகமாகத்தான் ஏலக்காய் கிடைக்கிறது. உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக மிகக் குறைவான இந்த விளைச்சலுக்குக் காரணம் உயர் விளைச்சல் ரகங்கள் இல்லாததும், வர்த்தக ரீதியில் முறையாகப் பயிரிடாததும், பூச்சித் தாக்குதலினால் ஏற்படும் பேரழிவுமே ஆகும்.

இவற்றுக்கு மாற்றாகப் புதிய உயர் விளைச்சல் ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம் எக்டேர் ஒன்றுக்கு 400 கிலோவிற்கும் அதிகமாக ஏலக்காய் விளையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது குறித்து விவசாயிகளுக்கு விளக்குவதற்காக 100 எக்டேர் பரப்பில் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றிலும் விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் ரகங்கள் குறித்து செயல் விளக்கங்கள் செய்து காட்டப் படுகின்றன. இந்த விளக்கப் பண்ணைகள் கேரளாவிலும், கர்நாடகத்திலும், தமிழகத்திலும் அமைந்துள்ளன.

இந்தச் செயல் விளக்கப் பண்ணைகளில் ஏலக்காய் நாற்றுக்கள் சுமார் எட்டு மாத காலம் நாற்றங்கால்களில் வைக்கப்பட்டு பின்னர் ஆறேழு சால் உழவு முடிந்து நடவு செய்யப் படும். விரிவாக்கப் பணியாளர்கள் தொடர்ந்து செயல் விளக்கப் பண்ணைகளுக்குச் சென்று விவசாயிகளுக்கு விளக்கம் அளிப்பர். இதற்குத் தேவையான பயிற்சிகள் ஏற்கெனவே விரிவாக்கப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.

உயர் விளைச்சல் ரகங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு நறுமணப்பொருள் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த வாரியத்திற்குத் தேவையான ஆராய்ச்சி உதவியை இந்திய ஏலக்காய் ஆராய்ச்சி நிலையம் வழங்கும். உயிரியல் நுட்பத்துறை இத்திட்டத்தை அமல்படுத்தும் தலைமை அமைப்பாகச் செயல் படும். புதிய ரக ஏலக்காய்களை வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கு வர்த்தக அமைச்சகம் உதவி புரியும். — **தகவல் : திட்டம்**

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில்



# மீன் பிடித்தல் தடை தளர்ப்பு

**மீ**ன் பிடித்தல் மீதான முக்கிய தடையொன்று தளர்த்தப்பட்டிருப்பது குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.7.91-இல் விடுத்துள்ள அறிக்கை விவரம் வருமாறு:

தற்போது நிலவி வரும் சட்டம், ஒழுங்கு நிலைமையையும் தமிழக மீனவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, இலங்கைத் தீவிரவாதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப் படுத்தும் பொருட்டு, 8.7.91 முதல் அனைத்து நாட்டுக் கடல் எல்லைப் பகுதியில் இருந்து 5 கடல் மைல்களுக்கு உட்பட்டு மீனவர்கள் மீன் பிடித்தலில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

மீனவ இனத்தைச் சார்ந்தவர்கள் பலர், முக்கிய மீன்பிடிப்பகுதியில் மீன் பிடிக்க இயலாததால், தங்களது வாழ்க்கையும், தொழிலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்று என்னிடம் முறையிட்டுள்ளார்கள். நான் அவர்களது கோரிக்கையைக் கவனத்துடன் பரிசீலனை செய்தேன். மத்திய, மற்றும் மாநில அரசு அலுவலர்களுடன் அதுபற்றிக் கலந்து ஆலோசித்த பின்னர், சில நிபந்தனைகளுடன் மீனவர்களை அனைத்து நாட்டு எல்லைக்கோடு வரை மீன் பிடிக்க அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள மீன்பிடிப் படகுகள் பத்துப் படகுகள்/ மீன்பிடிக் கலன்கள் கொண்டு குழுக்களாக அமைக்கப்படும்.

இந்தப் படகுக் குழுக்கள் இது வரை தடை செய்யப்பட்டிருந்த இடங்களில் மீன் பிடிக்க இனி அனுமதிக்கப்படும். அதாவது மீன் பிடிக்கலன் குழுக்கள் சர்வதேசக் கடல் எல்லை வரை சென்று மீன் பிடிக்கலாம்.)

ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் மீனவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவார். இது போல ஒவ்வொரு மீன்பிடி கலன்கள் குழுவிற்கும் ஒரு அரசு அலுவலர் இருப்பார். அரசு அலுவலர் தலைமை மீன்பிடி கலத்தில் இருப்பார். ஒவ்வொரு குழுவின் தலைமை மீன்பிடி கலத்திலும் கம்பி இல்லா தொலை தொடர்பு சாதனங்கள் பொருத்தப் படும். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் படகுகளை/ மீன்பிடி கலன்களை 10 படகுகள் வீதம் கொண்ட குழுக்களாகப் பிரிப்பார்கள். மேலும் தலைமை ஏற்று நடத்தும் கலனையும், மீனவர்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவரையும் மீனவர்களுடைய சங்கங்களைக் கலந்து ஆலோசனை செய்து முடிவு செய்வார்கள் மீன்பிடி கலனில் அரசு அலுவலரை நியமனம் செய்வது பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரே ஏற்பாடு செய்வார். காவல்துறை வானொலி நிறுவனம் மீன்பிடி கலன்களில் கம்பி இல்லாத்தொலை தொடர்பு சாதனங்களை அமைக்கும் ஒவ்வொரு குழுவினுடைய அனைத்து மீன்பிடி படகுகளும்/கலன்களும் இந்திய கப்பற் படையினருடனும், இந்திய கடற்கரை ரோந்து பிரிவினருடனும் தொடர்பு தொடர்ந்துவைத் திருப்பார்கள், இந்திய கடற்படையும் இந்திய கடற்கரை ரோந்து படையினரும் மீன்பிடி தொழிலை இந்த பகுதியில் மேற்பார்வையும், மீனவர்களுக்கு உரிய உதவியும் செய்யும். இந்தியக் கடற்கரை ரோந்துப் படையினரும் தொடர்ந்து கலன்களின் நடமாட்டத்தைக் கண்காணித்து அனைத்து நாட்டுக் கடல் எல்லைக் கோட்டுக்குள் மீன்பிடிக்குமாறு மீனவர்களுக்கு உரிய அறிவுரை வழங்குவார்கள். மீனவர்கள் இந்த அறிவுரைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாற்றியமைக்கப்பட்ட ஏற்பாடு அரசு அறிவிக்கை வந்த நாளிலிருந்து அமலுக்கு வரும். மீனவர்களின் நலன் கருதியும், அவர்கள் தங்களுடைய மீன்பிடி தொழிலினைத் தொடர்ந்து நல்ல முறையில் அனைத்து நாட்டுக் கடல் எல்லைக்கோடு வரை சென்று மீன்பிடிக்கவும் இந்த மாற்றியமைக்கப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இத்தகைய ஏற்பாடு மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், இந்திய தேசிய பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டும் முடிவு செய்யப் பட்டுள்ளதால், அனைத்து மீனவர்களும், இதனைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சென்னைப் பல்கலைக் கழகம்

"சென்னைப் பல்கலைக் கழகம் அன்னைப் பல்கலைக் கழகம்" என்று அனைவராலும் பாராட்டத் தக்க வகையில் தனது கல்விப்பணி யால் உன்னத இடத்தைப் பெற்றிருக் கும் பல்கலைக் கழகம்.

1857-ஆம் ஆண்டு தோற்று விக்கப்பட்ட தாய்ப் பல்கலைக் கழகம், தன் பிள்ளைகளுக்கு ஆற்றி வரும் சேவைகள் பல.

இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்து, வழி காட்டிகளாய் அமைந்து, கல்விக்கண் திறந்த துணைவேந்தர்களான திரு. இலட்சுமண சுவாமி முதலியார், திரு. நெ.து. சுந்தர வடிவேலு, டாக்டர் மால்கம் ஆதிசேசையா, திரு. ஜி.ஆர். தாமோதரன், டாக்டர் சாந்தப்பா, டாக்டர் பி.பி. சுந்தரேசன், டாக்டர் ஞானம் ஆகியோர், எனக்கு முன்னாலே தங்கள் சீரிய உழைப்பா லும் சேவை மனப்பான்மையாலும் மாணவ சமுதாயத்திற்குப் பலவகை யில் உதவிபுரிந்து வந்தனர்.

பல்கலைக்கழகத் துணைவேந்த ரின் ஆதரவாலும் பதிவாளரின் ஆதரவுமிக்க ஒத்துழைப்பாலும் செயல்பட்டுவரும் பல்கலைக் கழக மாணவர் ஆலோசனை மையம், இப்பல்கலைக் கழகம் ஆற்றிவரும் மாணவர் சேவைக்குக் கட்டியம் கூறுகின்ற வகையில் அமைகிறது.

**பேராசிரியர் சே.சாதிக்**
**துணை வேந்தர்**
**சென்னைப் பல்கலைக்கழகம்**

பல்கலைக் கழக வளாகத்தி லேயே செயல்பட்டுவரும் இம் மையத்தின் தலைவராகத் துணை வேந்தரும் செயலராகவும் இயக்குநராக வும் திருமதி சுசீலா மாரியப்பன் அவர்களும் பணியாற்றுகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் பெற்றோர் களும் இம்மையத்திற்கு வந்து ஆலோ சனை பெற்றுச் செல்வதைக் காணும் பொழுது, இம்மையத்தின் அவசியமும் தேவையும் நன்கு புலப்படும். இப் பெருமைக்குரிய ஒரு அமைப்பு ஆற்றிவரும் பணிகளைப் பலரும் அறிந்து கொள்வது அவசியம். அதனைப் பயன்படுத்திக் கொள்வது நன்மை பயக்கும்.

நமது இந்திய நாட்டில் என் னென்ன பல்கலைக் கழகங்கள் உள்ளன? அவற்றில் என்னென்ன பாடத்திட்டங்கள் கற்பிக்கப்படு கின்றன? அக்கல்வியினைப் பெறு வதற்கு உரிய வழிகளென்ன? என் பது போன்ற விவரங்களை - அறி வுரைகளை - இம்மையம் மாணவர் களுக்கும் பெற்றோர்களுக்கும் வழங்கு கிறது.

இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் கையேடு களையும் பெற்று அதன்மூலம் மாணவர்களின் தேவைகளை நிறை வேற்றுகிறது, அறிவுரைகள் வழங்கு கிறது.

நாடு முழுவதிலும் நடைபெறு கின்ற அரசுப்பணி தேர்வுகளில்



மாணவர்கள் வெற்றி பெறக்கூடிய வகையில் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

1985-ஆம் ஆண்டு முதல் இன்று வரை பதினைந்திற்கும் மேற்பட்ட அரசுப்பணி போட்டித் தேர்வு களுக்குப் பயிற்சி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு முதன்முறையாக, இந்திய ஆட்சிப் பணி (Civil Service Examinations) தேர்வுகளுக்காக இரண்டு மாத காலம் இங்கே பயிற்சி அளித்த பணி சிறப்பானதெனப் பலராலும் பாராட்டப்பட்டது.

இப்பயிற்சிகளில் பெரும்பான்மை யானவை அரசுமானியத்துடனும் ஒருசில பல்கலைக்கழக நிதியிலும் ஒரு சில மாணவர்களிடம் வசூலிக் கப்பட்ட குறைந்த கட்டணத்தின் மூலமும் நடத்தப்பட்டவை.

இவை தவிர, சுயவேலைவாய்ப்பை ஆதரிக்கும் பொருட்டும், அதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டும் பல பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுய வேலை வாய்ப்புப் பயிற்சியின் மூலம், சுமார் ஐந்து பெண்களும், நான்கு ஆண்களும் சுயமாகச் சிறுதொழில் நிறுவனங்களைத் தொடங்கி நடத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப் பல்கலைக் கழகம், மாண வர் ஆலோசனை மையத்தின் மூலம், அயல்நாட்டு மாணவர்களுக்கும் உதவிகள் செய்து வருகிறது. இந்தியக் கலாச்சாரத் தொடர்புக் கழகத்துடன் (I.C.C.R.) தொடர்பு கொண்டு, பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பல்வேறுபட்ட கலை நிகழ்ச்சிகளை நடத்தி, அதில் அயல் நாட்டு மாண வர்களைப் பங்கேற்கச் செய்கிறது. இதன் பயனாக, சென்னையில் ஒவ்வொரு நாட்டு மாணவர்களும் தங்கள் நாட்டின் பண்பாட்டை விளக்கும் வகையில் தனித்தனிப் பண்பாட்டுக் கழகங்களை அமைத் துள்ளனர். அக்கழகங்களுடன் இம் மையம் தொடர்பு கொண்டு, அந்த அயல் நாட்டு மாணவர்களுக்காக ஆங்கில வகுப்புகள், கலாச்சார நிகழ்ச்சிகள், இன்பச் சுற்றுலா போன்றவற்றை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.



• அறிவியல் துறையில் போட்டி வேண்டும்; ஆற்றலுக்கு முதலிடம் தரப்படவேண்டும்; ஆற்றல் இல்லாதவர்களுக்கு அது கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

மாணவர்களுடைய விருப்பத்தின் பேரில், ஆங்கிலம் பேசு மொழிப் பயிற்சி வகுப்பு (Conversational English) பொதுமக்கள் தொடர்புப் பயிற்சி (Public Relations) நேர்முகத் தேர்வு நுட்பங்கள் பற்றிய வகுப்பு (Interview techniques) மனிதத் திறன் மேம்பாடு (Personality Development) போன்ற பயிற்சி வகுப்புகளை அவ்வப்போது நடத்தி வருவது இம்மையத்தின் சிறப்பான பணி களுள் ஒன்று. பொதுமக்களின் நலனுக்காகக் குறைந்த கட்டணத்தில் - அதுவும், மாலை வேளைகளில் நடத்தப்படும் இப்பயிற்சிகள் மக்கள் நலனுக்கு மிகவும் அவசியமானவை எனலாம்.

படித்து முடித்த பின்னும் வேலை இல்லாமல் அவதிப்படும் மாணவர் களுக்கு அவ்வப்போது குறுகிய கால வேலைவாய்ப்புகளை ஏற் படுத்தித் தருவதில் இம்மாணவர் ஆலோசனை மையம் பெரிதும் கவனம் செலுத்தி வருகிறது.

பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, மூன்று மாத காலம் வரை மாணவர்களுக்குத் தற்காலிக வேலைவாய்ப்புகள் ஏற் படுத்திக் கொடுப்பதும் ஆராய்ச்சி நிறுவனங்களில் புள்ளி விவரங்கள், மற்றும் சில முக்கிய தரவுகளைத் திரட்டித் தருவதற்காகப் பரிந்துரை செய்து அப்பணியைப் பெற்றுத் தருவதும் இம்மையத்தின் சேவை களுள் சில. தற்காலிகப் பணி களுக்குப் பணியாளர்கள் தேவைப் படும் நிறுவனங்கள், இம்மையத்தை அணுகித் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவுக்கு இம்மாணவர் ஆலோசனை மையம் தொண்டு மனம் கொண்டு செயல் படுகிறது.

இந்தியாவிலிருந்து வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு வேண் டிய உதவிகளைச் செய்வதோடு, அவர்களின் சான்றிதழ்களைச் சரி பார்த்து அனுப்பும் பணியையும் மேற்கொள்கிறது.

ஒவ்வொரு நாளும் கல்வித் திட்டம் பற்றிய விவரங்களைக் கேட்டு அறிந்துகொள்ள அதிகமாக மாணவர்கள் இம்மையத்திற்கு வருவ தால், ஏற்படும் காலத் தாழ்வையும், வேலைப்பளுவையும் குறைக்கும் பொருட்டு, பலவகையான குறிப் பேடுகளை இம்மையம் வெளியிட்டு வருகிறது. சான்றாக - பல்கலைக் கழகக் கையேடு தமிழகப் பல்கலைக் கழகக் கையேடு மேல்நிலைக் கல்வித் துப்பின் கற்பதற்கு உகந்த கல்வித் திட்டம் பற்றிய கையேடு உதவித் தொகை விவரங்கள் கொண்ட கையேடு போன்றவற்றைக் கூறலாம்.

இம்மாணவர் ஆலோசனை மையத் தில் ஒரு நூலகம் அமைந்துள்ளது. அந்நூலகத்தில் - செய்தித்தாள், போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள், பலவகையான இதழ்கள் போன் றவை வரவழைக்கப்படுகின்றன. பல்வேறு துறைகள் தொடர்பான இந்நூல்களும், இதழ்களும் மாணவர் களின் அறிவுப் பெருக்கத்திற்கு உதவும் வகையிலும் அனைத்து மாணவர்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கிலும் மாண வர்கள் இவற்றை வெளியில் எடுத்து வந்து படிக்க அனுமதி மறுக்கப் படுவது நினைவு கொள்ளத்தக்கது.

டெல்லிப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழிக்கல்வி நிறுவனத்தின் அலுவலகம் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் இயங்குகிறது. அப்பல்கலைக் கழகத்தில் பதிவு செய்துள்ள மாணவர்கள் இந் நூலகத்தை அதிகமாகப் பயன் படுத்துகின்றனர்.

பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு இரயில், பேருந்து, விமானம் போன்றவற்றின் பயணங் களுக்கு உரிய விண்ணப்பப் படிவங் களும் மாணவர்கள் பேருந்து சலுகை பெறும் விண்ணப்பப் படிவங்களும்



மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களை, 19.7.91 அன்று சென்னையில், கடல் எல்லைப் பாதுகாப்புப் படையின் தளபதி திரு எஸ்.டபுள்யூ. லகார் சந்தித்து நல்வாழ்த்துத் தெரிவித்தார்.

இம்மையத்தில் வழங்கப்படுகின்றன.

மாணவர்களின் வசதிக்காக ஒவ்வொரு மாதமும் செய்தித் தொகுப்பு அட்டவணை அனைத்துக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்படுகிறது. இவ்வட்டணையில் பொதுவாக, வேலை வாய்ப்புகள், கல்விப்பாடத் திட்டங்கள் போன்றவை அந்த மாதத்தில் எந்தெந்தப் பல்கலைக் கழகங்களில் அறிவிக்கப்பட்டுள்ளன? அதை அணுகுவதற்கு இறுதி நாள் என்ன? எவ்வாறு நுழைவு விண்ணப் பம் அனுப்புவது? போன்ற விவரங் களை இவ்வட்டவணை தெளிவு படுத்துகிறது.

ஆண்டுக்கு இருமுறையாவது மாணவர்களின் கலைத்திறனை வளர்க்கும் பொருட்டு அவ்வப் போது பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நாடகப் போட்டி, ஓவியப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவைதவிர, UNIFEST, NEXUS, HIGH TIDE மற்றும் பல நூற்றாண்டு விழாக்கள், கலை விழாக்கள் இம்மையத்தால் நடத்தப் பட்டு மாணவர்களின் கலைத் திறன்கள் ஊக்குவித்து வளர்க்கப் படுகின்றன.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் மற்ற பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் நடைபெறும் விழாக் களில் பங்கேற்க விரும்பும் மாணவர் களைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் அனுப்பிவைக்கும் ஏற் பாட்டையும் இந்த மையமே செய்து வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கல்வி வழிமுறைகள், வேலை வாய்ப்புகள் எங்கெங்கு உள்ளன? என்பதைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, சுமார் ஐம்பது நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, ஆண்டுதொறும் பத்து நாட்களுக்கும் குறையாமல் ஒரு கண்காட்சியை (Career Guidance Exhibition) நடத்துகிறது. அப்படிப் பட்ட நாட்களில் - நாளொன்றுக்குச் சுமார் ஆயிரம் பேர்களுக்கும் மேலாக இக்கண்காட்சியைக் கண்டு களித்துச் செல்லுவது குறிப்பிடத்தக்கது. மேலும் புறநகர்ப் பகுதிகளின் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் கூட இத்தகைய கண்காட்சியை இம் மாணவர் ஆலோசனை மையம் நடத்தி வருகிறது.

மேற்கூறிய சேவைகளைத் தவிர, துணைவேந்தரின் வேண்டுகோளின் படி அவ்வப்போது மாணவர் களுக்குத் தேவையான பல்வேறு உதவிகளையும் பணிகளையும் மேற் கொள்வது இங்கு நினைவுகூரத் தக்கது.

''பல்கலைக் கழக மாணவர் ஆலோசனை மையத்தின் இவ்வரிய சேவைக்கும் வெற்றிக்கும் காரணம், ஆட்சிக் குழுவின் ஆதரவும், துணை வேந்தரின் சீரிய சேவை மனப் பான்மையும் பதிவாளரின் செயல் திறனும் ஒத்துழைப்புமே'' என்று எங்கள் பல்கலைக் கழக மாண வர்கள் மட்டுமல்ல; பெற்றோர் களும் கூறுவது காற்றுவாக்கில் எங்கள் செவிகளிலே விழுவது எங்களையெல்லாம் பெருமிதம் கொள்ளச் செய்கிறது. ●





# அறிவுச் சுடர்

## நிலவில் குடியேறலாம்


''அமைதிக் கடல்'', ''சூறாவளிக் கடல்'', ''பனிவளை குடா'' - இவை நிலவில் உள்ள இடங்களின் பெயர்கள். பிச்சைக் காரனுக்குக் கோடீசுவரன் என்ற பெயர் அமைந்திருப்பதுபோல், ஒரு சொட்டுத் தண்ணீரும் இல்லா இடங் களுக்கு இந்த அழகான பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன.

இன்று நிலவில் நீர் இல்லை. ஆனால் வருங்காலத்தில் அங்கே கடல்கள் உண்டாவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அவற்றை அறிவியல் அறிஞர்கள் உருவாக்கப்போகி றார்கள்.

நிலவின் பாறைகளிலும், துகள் களிலும், நீர்வளியும் உயிர்வளியும் சிறைப்பட்டுக்கிடக்கின்றன என்பதை அந்த அறிஞர்கள் ஆய்வின் மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவற்றை அவர்கள் சூடேற்றப்போகிறார்கள். 1650 டிகிரி பாரன்ஹீட் அளவு அவை வெப்பமூட்டப்பட்டால், அந்த இரு வளிகளும், விடுதலை பெறும் என்ற அளவில் அவை இணை யும். அப்போது, தண்ணீர் பிறக்கும். நிலவில் நீர்வளம் அமையும். அந்த நிலையில் மனிதக் குடியேற்றம் அமையும் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். ●

## சோதனைக் குழாயில் வளரும் பருத்தி!

அடுத்த நூற்றாண்டில் பருத்தித் தோட்டங்களே இல்லாமல் போய்விடும். அப்படியானால், பருத்தி ஆடையே இருக்காதா என்ற கேள்வி பிறக்கும். வருங்காலத்தில் பருத்தி ஆடை இருக்கும். ஆனால் பருத்திச்செடி இருக்காது. செடி இல்லாமல் எப்படி பருத்தி கிடைக்கும்? இது அடுத்த கேள்வி? அப்போது பருத்தி-பஞ்சு-நிலத்தில் வளராது. ஆய்வகத்தில் சோதனைக் குழாயில், குழந்தைக் கரு வளரு வதைப் போலப் பருத்தி நுண்ணியம் (Cell) ஆராய்ச்சிச்சாலைக் குழாயில் வளரும். தண்டு, காம்பு, வேர், என்ற பாகங்களில் உள்ள பருத்தி நுண்ணியங்கள் கோடிக் கணக்கில் வீணாகிவிடுகின்றன. இவற்றால் மனிதனுக்கு நன்மை இல்லை. எனவே, பருத்தி நுண் ணியம் மட்டும் தனியாக எடுக்கப் பட்டுச் சோதனைக் குழாயில் வளர்க் கப்படும். அப்படிச் செய்து, தேவை யான அளவுக்குப் பருத்தியை - பஞ்சை - மனிதன் பெறப்போகி றான் என்று கூறுகிறார் டெக் சாஸ்டெக் பல்கலைக் கழகத்தின் உயிரியல் பேராசிரியர் ஜோ.கூடின் என்பவர். ●



# ஆணி

கவிஞர் டி.பி.கே.ரெங்கநாதன்

அடிபட நானும் வந்தேன்;
அடித்திட நீவீர் வந்தீர்;
கடிந்திட வாயும் இல்லை;
கடித்திட நாயும் இல்லை;
இடியென அடித்த போதும்
இன்முகம் காட்டி நிற்பேன்;
படிந்திட்ட அகிம்சை வேதம்
பண்பாளர் 'காந்தி' தந்தார்!

கரும்பினில் பிறக்க வில்லை;
கடவுளும் ஏனோ என்னை
இரும்பினில் உருக்கி வைத்தான்;
கருநிறம் பெருக்கி வைத்தான்;
தரையினில் புதைந்து போனால்
வருத்திடும் வெயில் மழையில்
துருப்பிடித்துக் கதி கலங்கி
உருக்குலைந்து போவேன் நானும்!

பெயருமே ஆணி யாகும்;
உறுதியென் பாணி யாகும்!
பயமின்றி மரமும் நிற்கும்
பழுதிலா 'ஆணி' வேரில்!
பயின்றிடும் குழந்தை உள்ளம்
பசுமரத் தாணி யன்றோ!
பயனினை எண்ணி எண்ணி
பலவற்றில் இணைத்தா ரன்றோ!




## சட்டைப்பைத் தொலைக்காட்சிக் கருவி!

சில ஆண்டுகளுக்கு முன்பு வானொலி வந்தது. அதை மக்கள் விரும்பினார்கள். அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். அதை எப்போதும், தம்முடன் வைத் திருக்க நினைத்தார்கள். ஆகவே, 'டிரான்சிஸ்டர்' கண்டுபிடிக்கப் பட்டது. நடக்கும்போதும், காதருகில், சிறிய டிரான்சிஸ்டரை வைத்து இசை முதலியவற்றைக் கேட்டுக் கொண்டே நடக்கும் நிலை வந்தது.

வானொலிக்குப்பின் தொலைக் காட்சி வந்தது. கோயில் இல்லாத சிற்றூரையும் பார்க்கலாம். தொலைக் காட்சிப் பெட்டி இல்லாத எளிய வீட்டைப் பார்க்க முடியாது என்ற நிலைமை பிறந்தது.

தொலைக்காட்சி எப்போதும் தன்னிடம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அதனால், தூக்கிச் செல்லக்கூடிய சிறிய தொலைக்காட்சிப் பெட்டி தோன் றியது. அறிவியல் அதற்கு மேலும் வளர்ந்தது. உள்ளங்கை அளவுடைய-சட்டைப்பைக்குள் வைக்கக்கூடிய - தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்று வந்துவிட்டன. கருப்பு வெள்ளைப் பெட்டி முதலில் வந்தது பிறகு கண்ணைக் கவரும் வண்ணப் பெட்டி வந்தது. இது அமெரிக்கா வில் விற்கப்படுகின்றது. ●

- மலையமான்.




### கொங்குத் தமிழ்

**ஆசிரியர்:** டி.எம். காளியப்பா
**வெளியிட்டோர்:**
தேவி பதிப்பகம்
வீரநாச்சி தோட்டம்,
துடியலூர், கோவை-34

பக்கம்:52 விலை:ரூ.10

**த**மிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் தனித்தன்மையை உணர்த்தும் வகையில் சில வழக்காறுகள் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கொங்கு நாடு எனச் சொல்லப்படும் கோவை மாவட்டத்தில் உள்ள சில சொல் வழக்குகள் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றில் வேற்று மொழிச் சொற்களும் உள்ளன. என்றாலும் கொங்கு நாட்டில் பயன்படுத்தப் படுவதால் அவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன எனத் தெரிகிறது. இன்று புழக்கத்தில் உள்ள சொற்கள், பெருங் கதை, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள், அகநானூறு, ஆகிய இலக்கியங்களில் பயின்றுள்ளன என்பதைச் சான்றுடன் நிறுவியுள்ளார் நூலாசிரியர். இத்தொகுப்பு பயனுள்ள பணி; பாராட்டுக்கு உரிய பணி; பிற மாவட்டத்தார் பின்பற்ற வேண்டிய பணி.

— தமிழ்ப்பித்தன்.

### சித்திரை நிலவு

**ஆசிரியர்:** கவிஞர் சி.இராமசாமி
**வெளியிட்டோர்:**
தணிகேசன் பதிப்பகம், சி.புதூர்,
சிறுபாக்கம் அஞ்சல், திட்டக்குடி வட்டம்
தெ.ஆ. மாவட்டம்-606 123.

பக்கம்:321 விலை:ரூ.25/-

**த**மிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் அரசுத் திட்டத்தின் உதவியோடு உருவாக்கப்பட்டுள்ள கவிதை நூல் இது.

மரபுக் கவிதைகளும் இசைப் பாடல்களும் எடைக்கு எடை உள்ள இந்நூலில்- வாழ்த்துரை, அணிந்துரை வகையறாக்களும் கால்வாசிப் பக்கங்களை அடைத்துக் கொண்டுள்ளன. முருகனைப் போற்றும் கவிதைகள் அதிகமுள்ள இதில்- முருகப் பெருமானுக்குப் பன்னிரு கரங்கள் என்பதைப் போலப் பன்னிரண்டு பகுதிகளுக்கான பிரிவுகள் இதில் அடக்கம்.

பாடல்களின் முடிவுகள்தோறும் சிறுசிறு படங்கள் போடப்பட்டுள்ளன. சில இடங்களில் இரண்டிரண்டு படங்களும் இரண்டு மூன்று இடங்களில் இந்நூலின் சிறிய அளவு அட்டைப் படமும் போடப்பட்டிருப்பது நமக்கு முறையாகப் படவில்லை. சந்தப்பாடல் பிரியர்களை இந்நூல் கவரும்.

—'சோழராஜா'

### விடுதலைப்போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு

**ஆசிரியர்:** ந.இராசையா, எம்.ஏ.,எம்.எட்.,
**வெளியிட்டோர்:**
ஞானமுருகன் எழுத்தகம்(ந.இராசையா)
அயன்கொல்லங்கொண்டான்
இராசபாளையம் வட்டம் 626 142

பக்கம்: 92 விலை:ரூ. 15

**மு**தல் விடுதலைப் போர் தொடங்கி, இந்திய நாடு விடுதலை பெற்ற காலம் வரையில்- தாழ்த்தப்பட்டோர் பங்கு, விடுதலைப் போராட்டங்களில் எந்த அளவுக்கு இருந்தது என்பதைத்தக்க ஆதாரங்களோடு விளக்கும் நூல்இது. இந்த வகையிலான 25 கட்டுரைகளை இந்நூலில் தொகுத்தளித்திருக்கிறார் நூலாசிரியர்.

சில கட்டுரைகளில், தொடர்புடையவர்களின் படங்களும் போடப்பட்டுள்ளன; சில கட்டுரைக் கருத்துக்கள், வேறுசில மூத்த கட்டுரையாளர்களுக்கு மறுப்புரைகளாகவும் தயாரிக்கப் பட்டுள்ளன.

நாட்டுப்புறப் பாடல்களும், தக்கபடி நூலாசிரியரால் ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ள, நல்லதோர் ஆய்வுநூல் இது.

—'முடிகொண்டான்'

### மொகலாய மன்னர்கள்

**ஆசிரியர்:** தங்கவயல் லோகிதாசன்
**வெளியிட்டோர்:**
ஓரி நிலையம்
2/37, சத்தியமூர்த்தி நகர்
சென்னை-600 035

பக்கம்:120 விலை:ரூ.12

**ந**ம் நாட்டை ஆண்டு வந்து மொகலாயப் பேரரசர்களின் வரலாறுகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. கஜினி முகம்மது முதல் திப்பு சுல்தான் வரை பல மொகலாய மன்னர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக அவர்கள் பட்டபாடு முதலான வரலாற்றுக் குறிப்புகள் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

எல்லோரும் படித்துத் தெரிந்து கொள்ளக்கூடிய இனிய எளிய நடையில் எழுதியுள்ளார் நூலாசிரியர். மாணவர் மட்டுமல்ல மற்றவர்களும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல்.

— பி.வி.ஜி.

### சிந்தனை விருந்து

**ஆசிரியர்:** டாக்டர் வ. பெருமான்
**வெளியிட்டோர்:**
அமிழ்தப் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு
வ.உ.சி. நகர்
வேலூர்-1

பக்கம்:80 விலை:ரூ.8

**சி**ந்தனைத் தெளிவும், செயல் திறமும் இருந்தால் யாரும் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெற முடியும். சிந்தனை வேறு, செயல்வேறு என்றால் வாழ்க்கை வண்டி ஒழுங்காக ஓடாது. எனவே, இந்த நூலில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான அந்தகைய சிந்தனைத் துளிகள் விரவி உள்ளன. ஒவ்வொன்றும் முத்துக்களாக ஒளி வீசுகின்றன என்றாலும், பொருள் வாரியாகப் பிரித்துப் போட்டு இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஒட்டு மொத்தமாகத் திணித்தால் ஜீரணிப்பது கடினமன்றோ? ●

★ கல்வி என்பது ஒரு கருவியே தவிர, அதுவே ஒரு குறிக்கோள் அல்ல; நல்ல ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு உதவி செய்யும் கல்வி முறையைத்தான் உண்மையான கல்வி என்று சொல்ல முடியும்.

— காந்தியடிகள்







# பழம்பெரும் கற்காலச் சின்னங்கள்

**த**ருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் வரட்டனப்பள்ளி என்ற ஊருக்கு அருகில் பழைய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

மனிதன் நாகரிகம் அடைவதற்கு முன் காடுகளில் மிருகங்களைப் போலத் திரிந்து வாழ்ந்தான். அவன் உணவைத் தேடிச் சென்று பெற்றான். அத்தகைய காலத்தில் அவர்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள், கிருஷ்ணகிரி வட்டம், வரட்டனப் பள்ளியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய கற்கருவிகள் தமிழகத்தில் அச்சிறுபாக்கம் என்ற பகுதியில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. இரண்டாவதாக வரட்டனப்பள்ளியில் இக்கருவிகள் கிடைத்துள்ளன.

இங்கு பழைய கற்கால மக்கள் விட்டுச் சென்ற கைக்கோடாரிகள், கரண்டிகள், கிளீவர்கள், ஓவேட் எனப்படும் கருவிகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வரட்டனப்பள்ளியின் அருகிலுள்ள மலையில் இந்தக் கற்கருவிகள் சேகரிக்கப்பட்டன. எனவே, இப் பகுதியில் சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன் மக்கள் வாழ்ந்து உள்ளனர் என்பதை அறிய உதவுகின்றன.

**பெருங்கற்காலத் தாழி**

சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டது. இத்தகைய சவக்குழிகள் பாண்டவர் வீடு என்றும் பாண்டவர் காடு என்றும் பலவாறு பெயர் பெற்றது. தருமபுரி மாவட்டத்தில் இத்தகைய ஈமக் குழிகள் அதிக அளவில் கிடைத்துள்ளன. தொல்லியல் ஆய்வாளர்கள் இதைப் "பெருங்கற்காலச் சின்னங்கள்" என்று கூறுகின்றனர்.

பலவகையான பெருங்கற்காலச் சின்னங்கள் தமிழகத்தில் கிடைக்கின்றன. இவற்றில் ஒன்று பேழை எனப்படும் ஈமச்சின்னம். தருமபுரி



★ நமது பெண்கள், தங்களைப் பிறவி அடிமை என்று நினைத்துக் கொண்டிருப்பதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

— தந்தை பெரியார்

## முட்டை
### — சில தகவல்கள்

நமது உடல் நலம் நிலை பெற்று இருக்க அனைத்து விதமான சத்துக்களான புரோட்டீன், கொழுப்பு, கார்போஹைட்ரேட், வைட்டமின் மற்றும் தாதுப்பொருட்கள் தேவை, இவையனைத்தும் ஒருங்கே அடங்கிய உணவுப் பொருளை இயற்கையே நமக்கு வழங்கியிருக்கிறது. அதுவே முட்டையாகும்.

**புரோட்டீன்கள்:**

புரோட்டீன்கள் நம் உடலை உருவாக்குபவை. அவை வளரும் குழந்தைகளுக்கும் வளரும் வயதில் இருப்பவர்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் மட்டும் தேவையானவை அல்ல. பெரியவர்களுக்கும் அழிந்துவிட்ட திசுக்களைச் சரிசெய்வதற்கும் தேவைப் படுகின்றன.



ரோட்டீன்களில் நம் உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளன. இந்த அமிலங்களை நம் உடலில் நம்மால் உற்பத்தி செய்து கொள்ள முடியாது. நம் உடலுக்குத் தேவையான பல அமினோ அமிலங்களை ஒரு முட்டையின் 7 கிராம் புரோட்டீன் தரவல்லது.

**கொழுப்பு:**

நம் உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுப்பவை கொழுப்புகள். ஆனால் அதிகக் கொழுப்புச்சத்து நம் உடலுக்குத் தீமை விளைவிக்கும்.

ஒரு முட்டையில் 6 சதவிகிதம் தான் கொழுப்பு அடங்கியுள்ளது. இது மிகவும் எளிதில் செரிக்கும் தன்மையுடையது. எனவே, முட்டை குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும், நோயுற்றவர்களுக்கும் மிகச் சிறந்த உணவாகப் பயன்படுகிறது.

**வைட்டமின்கள் - தாதுப்பொருட்கள்:**

நாம் உண்ணும் உணவை நமது உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்றும் தன்மையுடைய இவை நம் உடல் நலத்தைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

முட்டையில் உள்ள வைட்டமின் 'ஏ' நமது கண் பார்வைக்கும், 'பி' சீரண உறுப்புகள் சரிவர இயங்குவதற்கும், 'டி' நமது எலும்புகள் உருவாவதற்கும் பயன்படுகின்றன.




முட்டையில் உள்ள இரும்புச் சத்து, கால்சியம் பாஸ்பேட் போன்றவை நமது உடல் நலத்திற்கும், பற்களுக்கும் எலும்புகளுக்கும் தேவை.

நம் உடல் நலத்திற்குத் தேவையான இரும்புச் சத்து, கால்சியம் பாஸ்பேட் போன்றவை முட்டையில் அடங்கியிருப்பதால், தேசிய சத்துணவு நிறுவனத்தால் சரிவிகித உணவு என முட்டை பரிந்துரை செய்யப் பட்டதில் வியப்பொன்றுமில்லை.

நாம் செலவழிக்கும் பணத்திற்கு இணையான பலனை நமக்குத் திருப்பிக் கொடுப்பதில் முட்டையை வெல்ல மற்ற எந்த உணவுப் பொருளாலும் முடியாது.

மாவட்டம் கிருட்டிணகிரிக்கு அருகில் உள்ள கொங்கன்பாளையம் என்ற ஊரில் ஈமப் பேழை ஒன்று கண்டெடுத்து இதை தருமபுரி தொல்லியல் ஆய்வுத்துறை அகழ்வைப்பகத்திற்குக் கிருஷ்ணகிரி தென்னிந்திய வரலாற்றுப் பேரவையினர் வழங்கி உள்ளனர். தருமபுரி மாவட்டத்தில் பேழை எனப்படும் ஈமச்சின்னம் கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும். இந்தப் பேழை 1.25 மீட்டர் நீளமும், 0.55 மீட்டர் விட்டமும் கொண்டது.



மண்ணால் செய்து சூளையில் இட்டு சுட்டுப் பின்பு இதை ஈமப் பெட்டியாகப் பயன்படுத்தியுள்ளனர். இந்தப் பேழையை இரண்டு பகுதியாகச் செய்துள்ளனர். பின்னர் இரண்டையும் இணைத்துள்ளனர். இதன் அடிப் பகுதியின் கால்கள், மண்ணால் செய்யப்பட்டுள்ளன. இப்பேழைக்கு 24 கால்கள் காணப் படுகின்றன. பெரும்பாலான பேழைகளுக்கு 6 முதல் 12 கால்கள் இருக்கும். இத்தகைய கால்களின் உட்பகுதியில் துவாரங்கள் காட்டப் பட்டுள்ளன.

பேழைக்கு அருகில் கத்தி, கோடாரி போன்ற இரும்பு ஆயுதங்களும் கிடைத்துள்ளன. இவை சடங்கின் பொருட்டு வைப்பது வழக்கமாகும். இவற்றுடன் மண் பாண்டங்கள் பல வகையானவை சேகரிக்கப்பட்டுள்ளன. கருப்பு-சிவப்பு மட்கலங்கள், சிவப்பு மட்கலங்கள் அதிக அளவில் இருந்து உள்ளன. இந்த மட்பாண்டங்களும், இரும்புப் பொருட்களும் 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்டன என்று தொல் பொருள் ஆய்வுத்துறையினர் கூறுகின்றனர்.

இந்தப் பேழை தருமபுரி தொல் பொருள் ஆய்வுத்துறையின் அகழ் வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது. ●





★ தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் அரசு முதலீட்டின் இலாபப் பங்காக முதல் தவணையாக ஒரு கோடி ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. எ. தியானேஸ்வரன், அவர்கள் 19.7.1991 அன்று அளித்தார். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் திரு ஆர். கிருபாகரன், அவர்களும் அப்போது உடனிருந்தார்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் இன்னும் கூடுதல் தொகை தரவும், இந்த ஆண்டு இரட்டிப்பாக இலாபப் பங்கு தர திட்டம் நிர்ணயிப்பதாக அதன் நிர்வாக இயக்குநர் தெரிவித்தார்.

★ "நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளை மீண்டும் தனியார் கையில் ஒப்படைக்க மாட்டோம்" என்று மக்களவையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தெரிவித்தார்.

—தொகுப்பு: 'இந்திரன்'

# செய்திகள்

★ புதுடில்லியில், தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக, மக்களவை முன்னாள் துணைத் தலைவரான திரு எம்.தம்பிதுரை அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஓராண்டுக்காலம் அவர் இந்தப் பொறுப்பை வகிப்பார்.

★ இந்தியாவுக்கு உடனடியாக 22 கோடி டாலர்- அதாவது, சுமார் 574 கோடி ரூபாய் கடனாக வழங்க, வாஷிங்டனில் உள்ள பன்னாட்டு நிதியத்தின் நிர்வாக போர்டு முடிவு செய்துள்ளது. இந்தியாவின் அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்க இந்தக் கடன் உதவும்.

★ மறைந்த முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களின் துணைவியார் திருமதி சோனியா காந்தி அவர்கள் 'இந்திரா காந்தி தேசிய சபை மையத்தின்' அறங்காவலராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

★ பிரிட்டனில் உள்ள மதிப்புமிக்க பொறியாளர் பேரவையின் அயல்நாட்டு உறுப்பினராக, நம் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி, டாக்டர் வி.எஸ். அருணாசலம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

★ தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு ஆங்கிலோ இந்தியச் சமுகத்தார் சார்பில் நியமிக்கப்பட்ட திருமதி பட்ரிக் டிசவுசா அவர்கள் 26.7.91 அன்று, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா அவர்கள் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

★ இந்திய இராணுவத்தில்- முப்படைகளிலும் உள்ள சில குறிப்பிட்ட துறைகளில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளுவது பற்றிப் பரிசீலித்து வருவதாக மாண்புமிகு மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு சரத்பவார் மக்களவையில் தெரிவித்தார்.

★ தமிழ்நாடு இலவசச் சட்ட உதவி ஆலோசனை போர்டு மூலமாக, 10 கோடி ரூபாய் அளவுக்கு விபத்து நட்ட ஈட்டுத்தொகை வாங்கித் தரப்பட்டுள்ளதாக, அதன் தலைவராக உள்ள மேதகு தமிழக ஆளுநர் திரு பீஷ்மநாராயண்சிங் அவர்கள் தெரிவித்தார்.

**முதலாம் அட்டையில்...**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.7.91 அன்று டில்லியில் சந்தித்தார்.

**இரண்டாம் அட்டையில்...**

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு சங்கர் தயாள் சர்மா அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் டில்லியில் 17.7.91 அன்று சந்தித்தார்.

**நான்காம் அட்டையில்...**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 16.7.91 அன்று டில்லியில் சந்தித்தார்.

# புறநானூற்றில் வரலாற்றுச் சுவடுகள்

**எஸ். பொன்னம்பலம்**

**த**மிழில் இப்போது கிடைக்கும் பழைய நூல்களுக்குள் கடைச்சங்க நூல்களாகக் கருதப்பெறும் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்பவற்றுள் புறப்பொருள் பற்றிய பனுவல்கள் யாவும் பண்டைத் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு அடிப் படையான மூலப் பொருள்களாகும் பண்டைத் தமிழர் வரலாறு என்னும் கோயிலுக்கு அப்பனுவல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு செங்கல் போன்றதாம். அகத்துறைப் பாக்களிலும் வரலாற்றுச் செய்திகள் சார்ந்து வகையாக அமைந்திருக்கும். பரணர் தாம் பாடும் பாடல்களில் எல்லாம் வரலாற்றுத் துணுக்குகளைப் பொருத்தியமைக்கும் இயல்புடையவர் (அகநானூறு).

புறப்பொருள் அமைதியையுடைய சங்கப்பாடல்களுள் பத்துப்பாட்டிலுள்ள பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப் படை, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன சரித்திரச் செய்திகள் பலவற்றை நமக்கு அறிவிக்கின்றன.

புறநானூற்றில் கடவுள் வணக்கத்துக்கு அடுத்தபடி உள்ள முதல் பாட்டு முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது. அவர் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனின் கொடைத் தன்மை பற்றி பாரதப்போரில் இருதிறத்து வீரமறவர்களுக்கும் சோறளித்த பாங்கினைப் பற்றிப் பாடுகிறார்.

''அலங்குளைப் புரவி ஐவரொடு
சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்
பூந்தும்பை
ஈரைம்பதின்மரும் பொருதுகளத்
தொழியப்
பெருஞ்சோற்று மிகு பதம்
வரையாது கொடுத்தோய்'' -புறம் 2

புறநானூற்றில் நேரே ஒரு நிகழ்ச்சியை அது நிகழ்ந்த காலத்திலேயே பாடிய பாடல்கள் பெரும்பாலும் உள்ளன.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் குமரியாறு, பஃறுளியாறு என்னும் ஆறுகளும் தமரியென்னும் மலையும் ஒரு காலத்தில் இருந்தன. தலைச் சங்கமும் இடைச்சங்கமும் இருந்த காலத்தில் அப்பகுதி இருந்தது என்பர். பிற்காலத்தில் அத் தென் பகுதி கடலாற்கொள்ளப்பட்டது. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்த வந்த நெட்டிமையார் 'நீ உன்னுடைய முன்னோனாகிய நெடியோனுக்குரிய பஃளியாற்று மணலைக் காட்டிலும் பல்காலம் வாழ்வாயாக' என வாழ்த்துகிறார்.

...................தங்கோச்
செந்நீர்ப்பசும்பொன் வயிரியர்க்கீந்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும்
பலவே. (9)

மௌரிய மன்னர் இந்நாட்டுக்கு வரும்போது மலைகளைப் பிளந்து வழி செய்தனரென்ற பழஞ் செய்தியை,

**'விண்பொரு நெடுஞ்குடைக்**
**கொடித்தேர் மோரியர்**
**திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த**
**உலக விடைகழி யறைவாய்'-175.**

**பாடப்பட்டோர்.-** புறநானூற்றில் பாடப்பட்டவர்களில் பெரும்பாலோர் சேர, சோழ, பாண்டியர்களே. பாரி, காரி, ஆய் முதலிய சிற்றரசர்களும் சில படைத் தலைவர்களும் சில வேளாளர்களும் அந்தணர் சிலரும் புலவரால் புகழப் பெறுகின்றனர். 2-வது பாட்டு முதல் 16-ஆம் பாட்டு வரையில் சேரர் பாண்டியர் சோழர் என்ற முறையில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. அதன் பின் இம்மூவரும் ஒரு முறையின்றி பாடப் படுகின்றனர். முதல் 85 பாடல்கள் முடிமன்னர்களாகிய இம்மூவரின் புகழைச் சொல்வன. அதன்பின் அதிகமான், பாரி, காரி, ஆய், பேகன், ஓரி முதலிய வள்ளல்களும் நாஞ்சில் வள்ளுவன் பிட்டங்கொற்றன் முதலிய வீரர்களும் பல வேளாளர்களும் புகழப் பெறுகின்றனர். 182 முதல் 185 பாடல்கள் வரை சில மன்னர்கள் தாமே எழுதிய பாடல்கள் உள்ளன. 186 முதல் 195 வரை பொதுவகையில் அமைந்த தனிப் பாடல்களும் 196 முதல் 211 வரையில் பரிசில் துறை பற்றிய பாடல்களும் 212 முதல் 223 வரை கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த செயலைப்பற்றிய பாடல்களும், 217-256 முடிய கையறு நிலையும் பிறவுமாகிய அவலச் சுவையமைந்த துறைப்பாடல்களையும் 251 முதல் ஒரு வரையறையின்றி பல புறத் துறையமைந்த செய்யுட்களையும் காணலாம். இடையிடையே பாணர் பாட்டு பாடாண்டிணை காஞ்சித் திணை பற்றிய பாடல்கள் பல ஒரு சேரக் காணப்படும். பொதுவாக புறநானூற்றுப் பாடல்களின் தொகுப்புக்கு உரிய முறை இன்னதுதான் என்று வரையறுத்துச் சொல்லவியலவில்லை. ஆகவே அந்த முறை பற்றிச் சரித்திரத்தை உணர்ந்து கொள்ள முடியாது.

**புறப்பாட்டின் காலப் போக்கும் வரலாற்றுச் சிறப்புடையார் குறிப்புகளும்.**

### 1. தருமபுத்திரன் (கி.மு. 1000)

அறவோர் மகனே மறவோர் செம்மால் என்று 366-ஆம் புறப் பாட்டில் கோதமனாரால் பாடப் பெற்ற தருமபுத்திரன் தமிழ்நாட்டு அரசனாகக் காண்கிலன். இவன் யமதருமன் மகன், பாண்டவருள் மூத்தவன் என்பதே பொருத்தமாகத் தெரிகிறது. பாரத வரலாறு கி.மு. 1000-இல் நடைபெற்றதாகக் கொண்டால் இப்புறப்பாட்டில் கண்ட தருமபுத்திரன் இவனைப் பாடிய கோதமனார் இவர் தம் காலம் ஏறத்தாழ கி.மு. 1000 எனலாம்.





### 2. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் (கி.மு. 1000)

''அலங்குளைப்புரவி ஐவரொடு
சினைஇ
நிலந்தலைக் கொண்ட
பொலம்பூந்தும்பை
ஈரைம்பதின்மரும் பொருது
களத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது
கொடுத்தோய்''-புறம்-2.

—இம்மன்னன் பாரத காலத்தவன். இச்செய்யுளைப் பாடியவர் முரஞ்சியூர் முடிநாகனார் ''இச்சேரன்-

- உதியஞ்சேரலாதன் இறந்த வீரரைப் பேணி அவர் பொருட்டுப் பெரும்பலி கொடுத்தவன்......'' இச்சேரன் பாரத காலத்தவன் ஆவான்'-என்று வரலாற்றுப் பேரறிஞர் திரு. மு. இராகவையங்கார் தனது தமிழ் வரலாறு (226-238) என்ற நூலில் தெளிவாகக் கூறுகிறார்.

### 3. வான்மீகியார்-

இராமகாதையை வடமொழியிற் பாடிய பெரியார் வால்மீகியார். புறப்பாட்டில் 358-ஆம் பாடலைப் பாடியவர் வான்மீகியார். இவ்விருவரும் ஒருவரே என்று திருநாராயண அய்யங்கார் செந்தமிழ் பத்திரிகையில் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிட்டுள்ளார் (செந்தமிழ் தொகுதி 1939-40). இவர் கருத்துப்படி புறப் பாட்டில் கண்ட வான்மீகியார் காலம் ஏறக்குறைய கி.மு. 600 எனலாம்.

### 4. வடிம்பலம்ப நின்ற பாண்டியன் (கி.மு. 500)

புறம் 9 ஆம் செய்யுளில்
''எங்கோ வாழிய குடுமி, தங்கோச்
செந்நீர்ப் பசும் பொன்
வயிரியர்க்கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும்
பலவே''

என்று வாழ்த்தப்படுகின்றான். இவனைப் பற்றிய செய்தி சிலம்பு, முல்லைக்கலி, மதுரைக்காஞ்சி முதலிய நூல்களிலும் பலவாகக் காணப்படுகின்றன.

**மோரியர் படையெடுப்பு-** சந்திர குப்தன் மகனான பிந்துசாரன் 28 ஆண்டுகள் பேரரசனாக இருந்தான். அவன் தமிழகம் ஒழிந்த டெக்கான் முழுவதையும் கைப்பற்றி ஆண்டான். அவன் காலத்தில் மோரியப் படை வீரர் வடுகர் படை கோசர்படை என்று தமிழகத்தினுள் நுழைந்து பலவாறு திரிந்து பல இடங்களில் தோல்வியும் வெற்றியும் பெற்று இறுதியில் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்பவரால் முற்றிலும் முறியடிக்கப்பட்டுத் திரும் பினர் என்பது புறப்பாட்டுக்களாலும் (175,378 அகப்பாட்டுக்களாலும்) அறியப்படும் செய்தியாகும்.

### 5. முதல் கரிகாலன் (கி.மு. 120 - கி.மு. 90)

கரிகால் பெருவளத்தானுக்குப் பாட்டனான இவனைப்பற்றிய புறப்பாட்டு 65, 66 ஆகும். இக் கரிகாலன் பெருஞ்சேரலாதனுடன் வெண்ணிப்பறந்தலையில் போரிட்ட போது புறப்புண்பட்ட சேரலாதன் வடக்கிருந்தான்.

### 6. இரண்டாம் கரிகாலன்

இமயம் சென்று மீண்டதாகச் சிலம்பு கூறும் மன்னன், தொண்டை நாட்டை வளப்படுத்திச் சோணாட்டைப் பெருக்கிய பெருவீரன். இவன் மரபினர் என்று பிற்காலக் கருநாடக- ஆந்திர அரசர்கள் செப்புப்பட்டயங்களிலும் கல்வெட்டுக்களிலும் கூறிக் கொண்டனர்.

### 7. பிற்பட்ட சோழர் (கி.மு.10 - கி.பி.150)-

2-ஆம் கரிகாலனுக்குப்பின் 1) நலங்கிள்ளி நெடுங்கிள்ளி, மாளவத் தான், 2) கிள்ளிவளவன், 3) கோப்பெருஞ்சோழன் 4) இராயசூயம்வேட்ட பெருநற்கிள்ளி, வேல் பல்தடக்கைப் பெருவிறற்கிள்ளி, முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, 5) சோழன் நல்உருத்திரன் முதலியோர் சோணாட்டை ஆண்டனர் என்பது புறப்பாக்களால் தெரிகிறது.

### 8. நெடுமுடிக்கிள்ளி -

மணிமேகலை காலத்தவன். மணிமேகலை இயற்றிய சாத்தனார் புறம் 59-ஆம் பாடல் பாடியவர். இவர் காலத்தில் நெடுமுடிக்கிள்ளி சோழ நாட்டை ஆண்டு வந்தான். செங்குட்டுவன் சேரநாட்டை அரசாட்சிபுரிந்து வந்தான். பாண்டிய நாட்டை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆண்டு வந்தான்.

### 9. கேச்செங்கட்சோழன் (கி.பி.200-250க்கு உட்பட்டவர்)

புறப்பாடல் 74-இன் மூலம் இவன் சேரனைப் புறங்கண்ட பெருவீரன் என்பதனை அறியலாம் இவன் சோழ மரபினனே என்பதைப் பிற்காலத்து சுந்தர சோழன் அன்பில் பட்டயத்தாலும் இராசேந்திரனின் ஆலங்காட்டுப் பட்டயத்தாலும் அறியலாம். இவன் சிறந்த சிவபக்தன் என பெரிய புராணமும் அப்பர் சுந்தரர் பாசுரங்களும் தெளிவு படுத்துகின்றன. இவனுக்குப் பின் கி.பி. 250-இல் தொண்டைநாடு பல்லவர் வயப்பட்டு விட்டது. அதன்பின் களப்பிரர் வரவினால் பாண்டி நாடு அடிமைப்பட்டது. இதுகாறும் கண்ட செய்திகளால் புறநானூற்றின்

பேரெல்லை கி.மு. 1000 எனலாம் என்பது ஒருவாறு புலப்படும்.

### தமிழக எல்லை

தமிழகம் ஒருகாலத்தில் தெற்கே மிக விரிந்திருந்தது என்பது சங்க நூற் குறிப்புக்களால் நன்கறியப் பட்டதே. அத்தெற்கெல்லை கடல் கோள்களால் வரவர எல்லையிற் சுருங்கி, இன்றுள்ள குமரிமுனையளவு நின்றதென்று கூறலாம்.

1. முதற் கடற்கோளால் உண்டான இழப்பு-

''பஃறுளி யாற்றுடன் பன்மலை
அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல்''

கொண்டது, தொல்காப்பியம் செய்யப்படுவதற்கு முன்னதாம், அக்கடல் கோளுக்குப் பின்,

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடை
தமிழ்கூறும் நல்லுலகம்''

எனப் பனம்பாரனார் பாயிரம் குமரியாற்றைத் தெற்கெல்லையாகக் கூறலால், தொல்காப்பியம் செய்யப் பட்ட காலத்தில்-சயமாகீர்த்தியின் காலத்தில் தமிழகத்தின் தெற்கெல்லை குமரியாறே என்பது தெளிவு. பாண்டியர் தலைநகரான கவாடபுரத்தில் தொல்காப்பியம் செய்யப்பெற்றதாகக் களவியல் கூறுகிறது. பின்னர் கவாடபுரமும் கடல்கோளில் அழிய இன்றைய மதுரை பாண்டியர் கோநகரம் ஆயிற்று. இவ்விரண்டு கடற்கோள்களும் இலங்கையில் உண்டான கடல் கோள்களுக்கு நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பது தெளிவு. இலங்கை வரலாறு அங்கு ஏற்பட்ட கடல்கோளின் காலம் முறையே கி.மு. 2358, கி.மு.504, கி.மு.306 என்று கூறுகின்றது. (Tennants History of Ceylon pp. 5-10) கவாடபுரமும் குமரியாறும் அதனைச் சார்ந்த குமரிமுனை வரையிலிருந்த நிலப்பகுதியும் அழிந்தகாலம் இலங்கை வரலாறு கூறும் கி.மு. 306 ஆகலாம்.

2. குமரியாறு-

தொல்காப்பியர்க்கு முன் தமிழகம் தெற்கே பஃறுளியாறு கொண்ட பெருநாடு முடியப் பரந்து இருந்தது. அவர் நூல் செய்தபொழுது அப் பெருநாடு கடல்கோளால் அழிந்து தெற்கே குமரியாறு வரை சுருங்கி இருந்தது.

3. குமரிமுனை-

குமரியாறு தமிழகத்தின் தென் எல்லையாகக் கி.மு. 306 வரை இருந்தது. அப்போது பாண்டியர் தலைநகரம் கவாடபுரம். சாணக்கியர் கி.மு. 4-ஆம் நூற்றாண்டினர் அர்த்தசாஸ்திரத்தில் முத்துக்களின் பெயர்களைக் கூறுமிடத்து பாண்டிய கவாடகம் என ஒரு முத்தின் வகையைக் குறிக்கிறார். கி.மு.306-இல் நடந்த இறுதிக் கடற்கோளால் இன்றுள்ள குமரிமுனையே தெற்கெல்லையாயிற்று. கவாடபுரமும் அழிந்து பாண்டியர் தலைநகரம் மதுரைக்கு மாற்றப்பட்டது. ஆதலின் ஏறத்தாழ கி.மு. 500 முதல் கி.மு.300 வரை குமரியாறு தமிழகத்தின் தெற்கெல்லையாக இருந்தது. கி.மு.300 முதல் இன்றளவும் குமரிமுனை தெற்கெல்லையாக இருந்து வருகிறது.

### அரசியல்

பேரரசர்-

நெடுங்காலந்தொட்டே தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர் முடியுடை வேந்தராக இருந்தனர் என புறநானூற்றின் மூலம் அறிய முடிகிறது. ஒவ்வொரு மரபிலும் கிளைகள் இருந்தன. உறையூர்ச் சோழர், புகார்ச் சோழர், தொண்டி, தகடூர் சேர மரபினர் மதுரை கொற்கை பாண்டிய மரபினர் புறப் பாடல்களில் இடம் பெற்றுள்ளனர். அக்கிளையினர் நாட்டைப் பிரித்து ஆண்டனர். ஏறத்தாழ இரண்டாம் கரிகாலன் காலம் வரை இந் நிலைமை தமிழகத்திலிருந்து வந்தது.

(கே.என். சிவராஜபிள்ளை Chronology of the Early Tamils)

கரிகாலன், சேரலாதன் போன்ற பேரரசர்கள் முழுத்தமிழ்நாட்டையும் வென்று ஆண்டனர்.

சிற்றரசர்

சேர, சோழ, பாண்டிய நாடுகளில் குறுநில மன்னர் பலர் இருந்தனர். அவர்கள் பாரி, ஓரி, காரி, மலையன், அதியமான். இவர்கள் பேரரசனை ஒரே வழி எதிர்த்துத் தோல்வியுறலும் உண்டு. பேரரசன் பிறிதொரு பேரரசனை எதிர்க்க விரும்பின் தன் சிற்றரசருடன் வந்து எதிர்த்தல் மரபு. இதனை, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இரு பெருவேந்தரும் வேளிர் ஐவரும் எதிர்த்தது கொண்டு உணரலாம்.

முடிவுரை

புறநானூற்றுப் புலவர் காலம் ஏறத்தாழ கி.மு. 1000 முதல் கி.பி. 250 வரைப்பட்டதாகும். தொகை நூற்கள் பரந்துபட்ட காலத்தன. கி.மு. 500-க்கு முற்பட்டன.

நன்றி: 'ஆவண அமுதம்'



● சமுதாய உணர்வோடு நாம் பிரச்சினைகளை அணுக வேண்டும்; நாம் தனி மனிதர்கள் என்பது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது நாம் ஒரு சமுதாயத்தின் அங்கங்கள் என்பது.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.



# இதய நோய்களும் தடுக்கும் முறைகளும்



இதயத்தின் வெளித் தோற்றம்

**இதய நோய்கள் தோன்றிடக் காரணங்கள் என்ன என்பது பற்றியும், நோயின் தன்மை, சிகிச்சை முறை, தடுப்புமுறை ஆகியவற்றைப் பற்றியும் விளக்குகிறது இக்கட்டுரை.**

**கட்டுரையாளர் டாக்டர் தணிகை வாசன் அவர்கள், அமெரிக்காவில் மிசௌரி மாநிலத்தில் உள்ள செயிண்ட் லூயிஸ் மருத்துவமனை, டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள டெக்சாஸ் இதய நோய் மையம், இங்கிலாந்திலுள்ள மிட்சல்ஸ் ஹோர்பீல்டு மருத்துவமனை போன்ற இதயச் சிகிச்சையில் தனித்தன்மை பெற்ற மருத்துவமனைகளுக்கெல்லாம் சென்று நவீன இதய அறுவைச் சிகிச்சைகளைக் கண்டறிந்து வந்தவர்.**

டாக்டர் ஆர். தணிகை வாசன்
தலைமை அறுவைச் சிகிச்சை மருத்துவர்,
துறைமுக மருத்துவமனை

மார்பின் மையப்பகுதியில், இடப்புறம் சற்று சாய்ந்தாற்போல் உட்பக்கம் வெற்றிடம் கொண்டு தசையால் அமைக்கப்பெற்ற உறுப்பு தான் - மனித இதயம். இது 250 முதல் 350 கிராம் எடை உள்ளது. ஒரு நிமிடத்திற்கு 80 முதல் 100 முறை வரை சுருங்கி விரிந்து 4 முதல் 7 லிட்டர் வரை இரத்தத்தை வெளியேற்றும் தசையால் ஆன பம்ப் போன்றது இந்த இதயம். இது போன்றதொரு பம்ப்பை உலகில் உள்ள அறிவியல் வல்லுநர் யாரும், பொறியியல் முறையில் வடிவமைத்ததாகக் கூறமுடியாது.

மேல் பகுதியில் இரண்டும், கீழ்ப் பகுதியில் இரண்டுமாக, நான்கு அறைகளைக் கொண்டது இதயம். மேல் அறைகள் ஏட்ரியம் என்று அழைக்கப்படுகின்றன. மேல் அறைகளுக்கு இடையே உள்ள தசைச் சுவருக்கு ஏட்ரியல் செப்டம் என்று பெயர். இத்தசைச் சுவரில் ஏற்படும் துவாரம் அல்லது நோயினை ஏ.எஸ்.டி. என்று அழைக்கிறார்கள். இது ஒரு பொதுவான இதயக் கோளாறு குறித்த நோயாகும்.

கீழ் அறைகளை வெண்டிரிக்கிள்ஸ் என்று அழைக்கிறார்கள். இவ்வறையின் நடுக்குச் சுவரில் ஏற்படும் துவாரத்தை வி.எஸ்.டி. என்று கூறுகிறார்கள். இதுவும் ஒரு பொதுவான இதயக் கோளாறு நோய் ஆகும்.

இதயத்தின் வலது பக்கம், உடலின் பல்வேறு பாகங்களில் இருந்து வருகின்ற தூய்மையற்ற (ஆக்சிஜன் குறைந்த) இரத்தத்தைப் பெற்று ஆக்சிஜன் பரிமாற்றம் பெற்று தூய்மையான இரத்தமாக மாற்றிட நுரையீரலுக்கு அனுப்புகிறது.

இதயத்தின் இடது பக்கமானது, தூய்மையான இரத்தத்தை நுரையீரலிலிருந்து பெற்று உடலின் பல்வேறு பாகங்களுக்குச் சுருங்கி விரிதல் மூலம் (பம்ப் செய்து) அனுப்பி, உடலில் உள்ள திசுக்கள் உயிர் வாழவும், இதன் மூலம் மனிதன் உயிருடன் இருக்கவும் ஆகிய முக்கிய பணியைத் தொடர்ந்து செய்கிறது.

இதயத்தில் உண்டாகக் கூடிய நோய்கள் பற்றியும், அவற்றைத் தடுக்கும் முறைகள் மற்றும் நோயின் தன்மைகள் பற்றியும் இப்பொழுது விவரமாகக் காண்போம்:

**இதயத்தில் ஏற்படக்கூடிய நோய்களின் வகைகள்**

1. பிறவியிலேயே ஏற்படும் இதயக் கோளாறு
2. ருமாட்டிக் காய்ச்சலினால் ஏற்படும் இதயக் கோளாறு
3. கரோனரி இரத்தக் குழாயில் ஏற்படும் இதய நோய்
4. உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்படும் இதயக் கோளாறு
5. பால்விலை நோய் காரணமாக உண்டாகும் இதய நோய்.

**1. பிறவியிலேயே ஏற்படும் இதயக் கோளாறு:**

பிறக்கும் 1000 குழந்தைகளில் 8 குழந்தைகளுக்கு இக்கோளாறு காணப்படுகிறது.


**நோய்க்குக் காரணம்**

1. பரம்பரையாக இந்நோய் சில குடும்பங்களில் சில நேரங்களில் ஏற்படுகிறது. கோளாறும் நோயும் தொடர்ந்து அவர்களின் சந்ததியினருக்கு ஏற்படுகிறது.

2. உறவு முறை திருமணம் ஒரு காரணமாகும். உறவு முறையில் திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு உண்டாக வாய்ப்பு உண்டு.

**தடுப்பு முறை**

உறவு முறை திருமணத்தைத் தவிர்ப்பதன் மூலம் இக்கோளாறு உண்டாவதைத் தவிர்க்கலாம்.




இதயத்தின் குறுக்குத் தோற்றம்

*3.* ரூபெல்லா என்னும் ஜெர்மன் தட்டம்மையும் இந்நோய் உண்டாகக் காரணமாகிறது. இரண்டு அல்லது மூற்று மாதக் கருவுற்றிருக்கும் தாய்க்கு ரூபெல்லா என்னும் ஜெர்மன் தட்டம்மை வந்தால், வயிற்றில் கருவாய் உள்ள குழந்தைக்குப் பிறவியிலேயே இதயக் கோளாறு தோன்றக் கூடும்.

**நோயின் அடையாள அறிகுறி**

காய்ச்சல், உடல் முழுவதும் சிவப்புப் புள்ளிகள் தோன்றுதல்.

**தடுப்பு முறை**

கருவுற்றிருக்கும் பெண்கள், ஜெர்மன் தட்டம்மை உள்ள நோயாளிகளின் தொடர்பு இல்லாதவாறு பார்த்துக் கொள்வதன் மூலமும், மகப்பேறு வயதில் உள்ள பெண்களுக்கு ஜெர்மன் தட்டம்மை தடுப்பு ஊசி போடுவதன் மூலமும் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

*4.* சில மருந்துகளை உட்கொள்ளுவதின் காரணமாயும் இந்நோய் வரலாம். அனாசின், ஆஸ்பிரின், சில தூக்க மாத்திரைகள் அல்லது நோய்த்தடுப்பு மருந்துகள், போதை தரும் மதுவகைகள் போன்றனவற்றைக் கருவுற்றிருக்கும் பெண்கள் உபயோகிப்பதால், கருவில் உள்ள குழந்தைக்கு இந்நோய் வருகிறது.

**தடுப்பு முறை**

டாக்டரின் ஆலோசனை இல்லாமல், கருவுற்றிருக்கும் பெண்கள், முதல் மூன்று மாதம் வரை, எந்தவித மருந்துகளையும் உட்கொள்ளுவதைத் தவிர்ப்பதின் மூலம் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

**பிறவியிலேயே ஏற்படும் பொதுவான இதயக் கோளாறு**

1. இதயத்தில் துவாரம் (ஓட்டை)

இதய மேல் அறைகளின் குறுக்குச் சுவரில் துவாரம் (A.S.D.)

இதயக் கீழ் அறைகளின் குறுச்குச் சுவரில் துவாரம் (V.S.D.)

**நோயின் அடையாள அறிகுறி**

1. வளர்ச்சியின்மை
2. அடிக்கடி சளி பிடித்தல், இருமல், மூச்சு விடுதலில் உண்டாகும் தொந்தரவுகள்.
3. சுவாசிப்பதில் சிரமம்
4. படபடப்பு

*சிகிச்சை:* திறந்த அறுவை சிகிச்சை (Open Heart Surgery) செய்து, இதய மேல் அறைகளின் குறுக்குச் சுவர் மற்றும் கீழ் அறைகளின் குறுக்குச் சுவர் ஆகியனவற்றில் ஏற்பட்டுள்ள துவாரங்களை மூடிவிடலாம். அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயளி நடைமுறை வாழ்க்கையைத் தொடரலாம்.

2. சைனாடிக் (Cyanotic) இதயக் கோளாறு. பால் ஆப் டெட்ராலஜி (Tetrology of Fallot)

**முக்கிய கோளாறுகள்**

1. இரத்தக் குழாயில் அடைப்பு, நுரையீரல் தமனியில் இரத்தம் செல்லும் அளவு குறைந்து விடும் வகையில் வால்வு துவாரம் அடைபடுதல்

2. இதயத்தின் கீழ் அறைகளின் குறுக்குச் சுவரில் துவாரம்(V.S.D.)

**நோயின் அடையாள அறிகுறி**

1. உதடுகள், கைவிரல்-கால்விரல் நகங்கள் நீல நிறமாகுதல்
2. மூச்சு விடுவதில் சிரமம்.
3. சரியாக சுவாசிக்க முடியாத நிலையில் மயக்கம்.

*சிகிச்சை:*

*1. தற்காலிக அறுவைச் சிகிச்சை*

**இந்த அறுவை சிகிச்சை இதயத்திற்கு வெளியில் செய்யும் அறுவை சிகிச்சையாகும்.**

**• நுரையீரல் தமனியில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்தல்.**

**• இந்த அறுவை சிகிச்சை முறை, இதயத்திற்கு வெளியில் உள்ள இரத்தக் குழாய்களில் செய்யப் படுகிறது.**

2. முழுமையாக குணப்படுத்துதல்

◦ இதயத்தைத் திறந்து (Open Heart Surgery) அறுவைச் சிகிச்சை செய்தல்

◦ நுரையீரல் தமனியில் அடைப்பை நீக்குதல்

◦ இதயத்தின் கீழ் அறைகளின் குறுக்குச் சுவரில் உள்ள துவாரத்தை அறுவை சிகிச்சை மூலம் அடைத்தல், இவ்வகை அறுவை சிகிச்சைக்குப் பின்னர் நோயாளி சுகமாக வாழ முடியும்.

**ருமாட்டிக் இதய நோய்**

**காரணம்:** ஸ்டெப்டோகாக்கஸ் என்னும் நுண்கிருமி.

**நோய்க்குக் காரணங்கள்**

1. வீடுகளின் நெருக்கமான அமைப்பு முறை
2. ஒரே வீட்டில் அதிக நபர்களின் கூட்டம்
3. பொருளாதார நலிவுள்ள மக்கள் வாழ்க்கை
4. சத்தற்ற உணவு மற்றும் தவறான உணவு முறை

**நோயின் அடையாள அறிகுறி**

1. தொண்டை கரகரப்பு மற்றும் தொண்டை வலி
2. காய்ச்சல்
3. முக்கிய மூட்டுகளில் வீக்கம்

ருமாட்டிக் காய்ச்சலால் ஏற்பட்ட தொற்று 5 முதல் பத்துப் பதினைந்து ஆண்டுகள் கழித்து, இதயக் கோளாறு உண்டாகக் காரணமாகிறது.

**தடுப்பு முறை:** தொண்டைப்புண், டான்சில்ஸ், தொற்று ஆகியனவற்றால் உண்டாகும் வலிக்கும் நோய்க்கும், பென்சிலின் மருந்து கொடுப்பதன் மூலம் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

◦ காய்ச்சல், தொண்டை வலி ஏற்பட்டால் உதாசீனம் செய்யாதீர். டாக்டரிடம் சென்று, சோதித்து சிகிச்சை பெறுங்கள்.

◦ தொண்டை வலிக்கு உரிய நேரத்தில், நோயின் ஆரம்ப கட்டத்தில் சிகிச்சை பெறுவதின் மூலம் இதய நோய் வராமல் தடுக்கலாம். ருமாட்டிக் இதய நோயினால் ஏற்படும் குறைபாடுகள்

◦ இதயத்தின் வால்வுகள்.

◦ வால்வு அடைப்பு ஏற்படுகிறது அல்லது வால்வில் கசிவு ஏற்படுகிறது.

***சிகிச்சை***

1. வால்வு அடைப்பு இருந்தால் மூடிய அல்லது திறந்த இதய அறுவை



சிகிச்சை மூலம்(Closed or Open Heart Surgery) வால்வில் வழியை அகலப்படுத்தலாம்.

2. வால்வில். கசிவு இருந்தால்; திறந்த இதய அறுவை சிகிச்சை மூலம் (Open Heart Surgery) புதிய வால்வைப் பொறுத்திக் குணப்படுத்தலாம்.

இந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளி, டாக்டரின் ஆலோசனைப்படி நடந்தால், சுகமான வாழ்க்கையைத் தொடர முடியும்.

***கரோனரி இதய நோய்க்குக் காரணங்கள்:***

**1. அதிகக் கொழுப்புச் சத்து இரத்தத் தில் கலப்பது**
**2. புகைப்பிடித்தல்**
**3. உயர் இரத்த அழுத்தம்**
**4. ஆண்களுக்கு இந்நோய் அதிகம் வருதல்**
**5. நீரிழிவு நோய்**
**6. உடல் உழைப்பு இல்லாத வாழ்க்கை முறை**
**7. அதிக உடல் பருமன்**
**8. அதிக பரபரப்பு, உணர்ச்சி வசப்படுதல், வேலை பளு.**
**9. குடும்பக் கட்டுப்பாது மாத்திரைகள் அதிகம் உட்கொள்ளுதல்.**

***உடற்கூறு மற்றும் மருத்துவக் காரணம்***

இரத்தக் குழாயில் கொழுப்பு சேர்வதால், இதயத்திற்கு இரத்தம் செல்லும் குழாயில் உள்ள தசையில் தடை ஏற்பட்டு மாரடைப்பு உண்டாகிறது.

***மாரடைப்புக்கு அடையாள அறிகுறிகள்***

***1. மார்பின் இடது பக்கத்தில் வலி உண்டாகுதல்.***
***இவ்வலி தோள் பட்டையையும் பாதித்தல்.***
***2. தொடர்ந்து அதிக வியர்வை உண்டாகுதல்.***
***3. மூச்சு விடுவதில் சிரமம் அல்லது மூச்சு நின்று மயக்கம்.***

***முதல் உதவி:*** கால தாமதம் இல்லாமல் நோயாளியைத் தீவிர சிகிச்சைப் பிரிவு உள்ள மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

***''சரியான நேரத்தில் கால தாமதம் இல்லாமல் அளிக்கும் சிகிச்சை உயிரைக் காக்கும்''***

***சிகிச்சை:***

***1. உரிய மருந்துகளும் மருத்துவ சிகிச்சையும்***

## இதய நோய் எந்த வயதிலும் வரலாம்

**பொதுவாக இதய நோய் எந்த வயதிலும் வரக் கூடிய ஒன்று. தனி மனித உடல் வாகினைப் பொறுத்து இந்நோயின் அறிகுறி விரைவாகவும், தாமதமாகவும் தெரிய வரும். பரம்பரை காரணமாகவோ, பிறவிக் கோளாறு காரணமாகவோ 'ருமாடிக்' எனப்படும் காய்ச்சல் காரணமாகவோ வரலாம். இன்னும் பல காரணங்களாலும் வரலாம். இதய அறுவைச் சிகிச்சை பெற்றவர்கள் - மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொண்டால் நீலமாக வாழ முடியும்.**

***2. இரத்தக் குழாய் மாற்று அறுவை சிகிச்சை*** (By Pass Surgery) - திறந்த இதய அறுவை சிகிச்சை செய்து (Open Heart Surgery) இரத்தக் குழாயில் உள்ள அடைப்பை நீக்குதல், இதன் மூலம் நோயாளி, நல்ல சுகமான வாழ்க்கையைத் தொடரலாம். இந்த அறுவை சிகிச்சையானது ஒரு காப்பு அறுவை சிகிச்சையே தவிர, நோயை முழுமையாகக் குணப்படுத்த அல்ல.

***தடுப்பு முறைகள்***

*தவிர்க்க வேண்டிய உணவு வகைகள் (கட்டாயமாக)*

◦ தேங்காய் எண்ணெய், பனை எண்ணெய் (Palm Oil)
◦ வறுத்த உணவு வகைகள்
◦ முட்டையின் மஞ்சள் கரு பகுதி
◦ ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றியின இறைச்சி
◦ வெண்ணெய், ஐஸ்கிரீம், பாலாடைக் கட்டி, முந்திரிப் பருப்பு
◦ இனிப்பு வகை, சாக்லேட்
◦ மாவுச்சத்து மிகுதியாய் உள்ள உருளைக் கிழங்கு போன்றவை.

***செய்ய வேண்டியவை:***

***1. உபயோகிக்க***

◦ சூரிய காந்தி எண்ணெய், நல்லெண்ணெய் போன்றனவற்றை சமையலுக்கு உபயோகித்தல்
◦ மீன், கோழிக்கறி
◦ காய்கறிகள்
◦ நார்ப் பொருள் மிகுந்த உணவுப் பொருள்கள்
◦ சோளம், கம்பு, கோதுமை

2. புகை பிடித்தலை உடனே விட்டொழியுங்கள், சிகரெட், புகையிலை, பீடி போன்றனவற்றை உபயோகிக்காதீர்கள். பணத்தை செலவு செய்து இதய நோய் மட்டுமல்லாது மற்றும் பல நோய்களை வாங்காதீர்கள்.

***புகை பிடிப்பவரின் அருகில் நிற்காதீர்கள்***

◦ தான் சிகரெட் பிடிக்கா விட்டாலும், புகை பிடிப்பவர் விடும் புகையை மூக்கின் வழியாக நுகர் தல் மிகவும் கெடுதல் ஆகும்.

***3. உயர் இரத்த அழுத்தம்:*** இந்நோய்க்கு உரிய மருத்துவம் பெற்றுக் கொண்டு, அந்நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்.

***4. நீரிழிவு நோய்:*** உரிய மருத்துவ முறையினைத் தொடர்ந்து நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்.


***5. உடல் பருமன்:*** உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் உடலைப் பேணுங்கள். அதிக எடை ஏறாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

***6. உடல் உழைப்பு குறைவான பணி:*** நல்ல உடற் பயிற்சி செய்யுங்கள். ஓடுதல் மற்றும் வேகமான நடை போன்ற தொடர்ந்த உடற் பயிற்சிகள் மாரடைப்பு நோய் வராமல் காக்கும்.

***7. உணர்ச்சிவசப்படுதல்***

◦ உணர்ச்சி வசப்படாத வகையில் உங்கள் வாழ்க்கை முறையினை அமைத்துக் கொள்ளுங்கள்.

◦ முக்கியமான பணியை முதலில் செய்யுங்கள்.



தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரத்தில், வங்கிக் கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட போலீஸ்காரர் திரு நாகராசனின் மனைவி மாதேஸ்வரிக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கினார் (23.7.91).

○ தியானம், யோகா போன்றவை மனநல நரம்புகளைச் சீர் செய்வதால், மாரடைப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பும், பாதிப்பும் குறைகிறது.

8. குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகள் உட்கொள்ளுதல்

தொடர்ந்து கருத்தடை மாத்திரைகள் உட்கொள்ளுவதைத் தவிர்க்கவும் தேவையானால் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு மட்டும் சாப்பிடுங்கள்.

**உயர் இரத்த அழுத்தத்தால் உண்டாகும் இதய நோய்**

**காரணம்:**

**வயது:** 20 வயதுக்கு மேல் இந்நோய் உண்டாகிறது.

**பாலினம்:** பெரும்பாலும் பெண்களுக்கு இந்நோய் உண்டாகிறது.

**நாடு:** ஆப்பிரிக்கா நாட்டில் வசிப்பவர்களுக்கு இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது.

**சந்ததி:** தொடர்ந்து ஒரு குடும்பத்தின் சந்ததியினருக்கு இந்நோய் வரக் கூடும்.

**உடற்கூறு:** குறுங்கழுத்து கொண்ட உருவ அமைப்பு உள்ளவர்களுக்கு இந்நோய் வருகிறது.

**உள்ளத்தின் அமைப்பு மற்றும் உணர்ச்சி வசப்படுதல்:** பொதுவான உடல் பருமன் உள்ளவர்களுக்கு இதய கீழ் அறையில் இந்நோய் ஏற்படுகிறது.

**சிகிச்சை:**

மருத்துவ சிகிச்சை தொடர்ந்து அளித்தல்

**தடுப்பு முறை**

1. போதிய ஓய்வு
2. உடல் எடையைக் குறைத்தல்
3. தியானம் மற்றும் யோகா பயிற்சி மேற்கொள்ளுதல்

**பால்வினை நோய்க் காரணமாய் உண்டாகும் இதய நோய்**

**காரணம்:** பால்வினை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விலை மாதர்களிடம் அந்தரங்க உறவு கொள்ளும் காரணத்தால் இந்நோய் வருகிறது.

**உடற்கூறு மற்றும் மருத்துவக் காரணம்:**

பிறப்பு உறுப்பின் வெளிப்புறத்தில் புண் போன்று உண்டாகும் பால்வினை நோய்க்கு உரிய மருத்துவ சிகிச்சை பெறுவதின் மூலம், இந்நோய் இதய நோயை உண்டாக்காமல் தடுக்க வாய்ப்பு உண்டு. அவ்வாறு உரிய மருத்துவ சிகிச்சை பெறாவிட்டால் 10 அல்லது 15 ஆண்டுகளில், இந்த பால்வினை நோய் இதய நோயைத் தோற்றுவிக்கும்.

— இதய வால்வு பாதிக்கப்படுகிறது.
— இதய வால்வில் கசிவு ஏற்படுகிறது.
— இந்நோய் இரத்தக் குழாய்களைப் பாதிக்கும்போது அதில் கட்டிகளையும், வீக்கத்தையும் ஏற்படுத்துகிறது.
— இக்கட்டிகள் உடைவதால் மரணம் ஏற்படக்கூடும்.

**சிகிச்சை:** திறந்த இதய அறுவை சிகிச்சை செய்து, பாதிக்கப்பட்ட வால்வை அல்லது கசிவுள்ள வால்வை எடுத்துவிட்டு, புதிய வால்வைப் பொறுத்த வேண்டும். இரத்தக் குழாயில் ஏற்படும் சிறு கட்டிகளை அகற்றிச் சீர் செய்யலாம்.

— நன்றி: 'சென்னைத் துறைமுகம்.'

**காவிரி நதி நீர்ப் பிரச்சினை: மற்ற செய்திகள், தமிழரசு 16.8.91 இதழில் தொடரும்.**


ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிட...
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 56892

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!






தமிழரசு



தோற்றம்:
26-8-1883

தமிழ்த் தென்றல் திரு.வி.க.

மறைவு:
17-9-1953

# இந்த இதழில்...


காவிரி நதி நீர்ப் பிரச்சினை ... 2

பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலை மீட்டுப் பெறும் விழா ... 5

ஆலயத் திருப்பணிக்கோர் அற்புதத் திட்டம் ... 8

படமும் செய்தியும் ... 9

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள் ... 10

நடந்தாய் வாழி காவேரி! (கவிதை) ... 12

மதுவும் மனநோய்களும் ... 13

சிந்தை கவரும் சிறுவர் அருங்காட்சியகம் ... 17

விடுதலை இயக்கப் பாடல்கள் ... 21

மண்வளம் காப்போம் ... 24

'வந்தே மாதரம்' வந்த கதை ... 26

தொலைக் கல்வியும் தொழில் வாய்ப்புகளும் ... 28

பிணி தீர்க்கும் கரும்பு ... 30

பொங்கி வரும் காவிரி ... 33

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-II ... 36

தமிழ்த் தென்றல் திரு.வி.க. ... 41

இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட வீராங்கனைகள் ... 43

செய்திகள்...செய்திகள்...செய்திகள்... ... 48




தமிழரசு

ஆடித் திங்கள் - 31

மலர்:22 இதழ்:4

திருவள்ளுவர் ஆண்டு 2022 16-8-1991

162342



# காவிரி நதிநீர்ப் பிரச்சினை

## மாநில முதல்வர்கள் - தேசிய கட்சித் தலைவர்கட்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடிதம்

தமிழகத்தின் பக்கம் உள்ள நியாயத்தை உணர்ந்துகொண்டு நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்தும் விதத்தில் தங்கள் கருத்துகளை அனைத்து மாநில முதல் அமைச்சர்களும்,தேசியத் தலைவர்களும் வெளியிட வசதியாகவே இந்தக் கடிதம் எழுதப்படுகிறது.

தமிழகத்தின் உயிர் நாடியாக விளங்கும் காவிரி, தமிழ்நாட்டின் நீர்ப்பாசனத் தேவைகளை 80 சதவிகிதம் அளவிற்குப் பூர்த்தி செய்கிறது. இந்த மாநிலத்தின் உணவு உற்பத்தி இந்த நதியின் நீர் எந்த அளவுக்குத் தமிழகத்துக்குக் கிடைக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை 20 ஆண்டுக் காலத்திற்கு மேலாக நீடித்துவருகிறது. இது குறித்துப் பலமுறை பேச்சு வார்த்தை நடத்தியும் பலன் இல்லை.

எனவே, தமிழகத்தின் முயற்சி காரணமாக மாநிலங்களுக்கு இடையேயான நீர்த் தகராறு சட்டத்தின் கீழ், இந்தத் தகராறு பற்றி விசாரித்துத் தீர்ப்பளிக்க நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

இறுதித் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னால் இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை. ஆனால், உச்ச நீதிமன்றத்தை அணுகியதைத் தொடர்ந்து ஒரு இடைக்கால உத்தரவை நடுவர் மன்றம் பிறப்பித்துள்ளது. இறுதித் தீர்ப்பு வழங்கப் படும் வரை ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. காவிரி நீரை, கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்ற இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இந்த அளவு நீர் தமிழகத்தின் தேவைக்குப் போதுமானதாக இல்லாவிட்டாலும் அதைத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டது. கர்நாடக அரசு இந்த உத்தரவை மதித்துத் தண்ணீரைத் திறந்துவிடும் என எதிர்பார்த்தோம். ஏமாந்தோம். மத்திய அரசும் இந்த உத்தரவை அரசு கெஜட்டில் வெளியிடும் என எதிர்பார்த்தோம். அதிலும் ஏமாற்றமே!

இடைக்கால உத்தரவுப்படி நீரைத் திறந்துவிட கர்நாடக அரசு, இடைக்கால உத்தரவே செல்லாத தாக்குவதற்கு, ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது.



இது போன்ற ஒரு சட்டத்தைப் பிறப்பிக்க கர்நாடக அரசுக்கு அதிகாரம் இல்லை என்பது எங்கள் கருத்து மட்டுமல்ல; சட்ட வல்லுநர்களின் கருத்தும் அதுதான்.

எனவே, இது குறித்து மத்திய அரசுடன் முறையிட்டோம். மத்திய அரசோ கர்நாடக அரசுக்கு நீரைத் திறந்துவிட வேண்டும் என்று கூறாமல் இந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்காக அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் பிரச்சினையின் உண்மை நிலைமையை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் மேலே குறிப்பிட்ட விவரங்களை உங்களுக்குத் தெரிவித்துள்ளேன்.

எங்களது கோரிக்கை எல்லாம், நடுவர் மன்றத்தின் உத்தரவுப்படி எங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நீர் தரப்பட வேண்டும் என்பதுதான்.

கடந்த சில ஆண்டுகளாகக் கர்நாடக அரசு மேற்கொண்டுள்ள கடுமையான நிலை காரணமாகத் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று கூறப்படும் காவிரி டெல்டா பகுதி, ஒரு பாலைவனமாக மாறக்கூடிய நிலைமை உருவாகி வருகிறது.

இந்த உயிர்ப் பிரச்சினை தமிழக மக்களைப் பெருமளவுக்குக் கவலை கொள்ளச் செய்தது. அதனால்தான் ஜூலை 26-ஆம் தேதி அன்று எங்கள் கருத்துக்களைப் பிரதிபலிக்க அனைத்துக் கட்சி சார்பில் முழு அடைப்புப் போராட்டம் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது.

நமது அரசியல் அமைப்பு, கூட்டாட்சித் தத்துவம் கொண்டது. அரசியல் சட்டத்தின் கீழ் எல்லா மாநிலங்களும் சமமான உரிமையைப் பெற்றுள்ளன.

இந்த நிலையில் நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், நலனையும் காப்பாற்ற வேண்டிய முக்கியப் பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளதாகக் கருதுகிறோம். மத்திய அரசு தனது அரசியல் சட்டக் கடமைகளை நிறைவேற்றும் போது, அரசியல் அல்லது கட்சிக் கண்ணோட்டத்தோடு செயல்படக்கூடாது என்று கருதுகிறோம்.

இந்தப் பிரச்சினையில் இடைக்கால உத்தரவாக ஒரு குறிப்பிட்ட அளவு நீரை கர்நாடக அரசு தமிழகத்துக்கு வழங்க வேண்டும் என்ற ஒரு உத்தரவு நடுவர் மன்றத்திலிருந்து பெற்ற பிறகும் எந்தவிதத் தவறையும் செய்யாத நாங்கள் பாதிக்கப் படும் நிலை உருவாகி உள்ளது.

இந்த நிலையில், கூட்டாட்சிக் கொள்கையின் நலனைப் பாதுகாக்கும் விதத்தில் தமது கடமையை நிறைவேற்ற மத்திய அரசு முன் வராவிட்டால் நமது நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படுவதுடன், அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என நாங்கள் அஞ்சுகிறோம்.

இந்தப் பிரச்சினையில், தமிழக மக்களின் எண்ணங்களை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கடிதத்தை எழுதுவது என்று தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படியே இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

காவிரிப் பிரச்சினை:

# 'தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் முடிவினை வரவேற்கிறோம்'

## — அரசியல் தலைவர்கள் கூட்டறிக்கை

காவிரிப் பிரச்சினை குறித்து - திரு.எஸ்.ஆண்டித்தேவர், எம்.எல்.ஏ., (அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி), திரு. ஏ. பீமராவ் (தலைவர், இந்தியக் குடியரசுக் கட்சி- தமிழ்நாடு), திரு. செ.கு. தமிழரசன், எம்.எல்.ஏ., (பொதுச் செயலாளர், இந்தியக் குடியரசுக் கட்சி), திரு. கே. செல்லமுத்து (தலைவர், உழவர் உழைப்பாளர் கட்சி) திரு. என்.எஸ். பொன்னுசாமி, எம்.எல்.ஏ., (உழவர் உழைப்பாளர் கட்சி), திரு. பொன்குமார் (பொதுச் செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி) ஆகியோர் இணைந்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்; அதன் விவரம் வருமாறு:

'தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையான 'காவிரி நீர்ப் பிரச்சினையில்' தீர்வு கண்டிட, கட்சிக் கண்ணோட்டங்களை மறந்து, தமிழகத்து அனைத்து மக்களும் ஒன்று திரண்டுள்ளனர். இந்த நிலையில் 10 இலட்சத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடக்கூடிய உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்தால், கட்சி ரீதியாகவும், வேட்பாளர் ரீதியாகவும், தமிழக மக்கள் பிரிந்துபட வேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனைத் தவிர்த்திட, உள்ளாட்சித் தேர்தல்களைத் தள்ளி வைத்திட வேண்டும் என்ற எங்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து, எங்கள் வேண்டுகோளை ஏற்று, உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளி வைத்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் முடிவினை வரவேற்கின்றோம்.

'காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழக முதல்வர் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பினைக் கொடுப்போம் என்று தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

இன்று தமிழகத்திலும், புதுவையிலும் பெரும் புயலைக் கிளப்பி உள்ள 'காவிரித் தண்ணீர் தாவா பிரச்சினை'-யில், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974-ஆம் ஆண்டு காலாவதியாகி விட்டதென்று கர்நாடக அரசே ஒருதலைப் பட்சமாக அறிவித்துவிட்டு, காவிரி நதியின் உப நதிகளிலும் பல அணைகளைப் புதிதாகக் கட்டி, தமிழக - புதுவை மாநிலத் தண்ணீர் உபயோகிப்பாளர்களின் உரிமையை மீறி, கர்நாடக அரசு 6 இலட்சம் ஏக்கர் பாசனப் பகுதியை 22 இலட்சம் ஏக்கராக இன்று விரிவாக்கிக் கொண்டு விட்டது. தமிழகத்தில், காவிரிப் பாசன விவசாயிகள் ஆண்டுதோறும் அவலப்பட்டு நஷ்டமுறும் நிலையை எண்ணி, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த அனைத்து முதல்வர்களும் பலமுறை கர்நாடக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தியும், எந்தவிதமான பலனும் ஏற்படாமல் போகவே, தமிழக அரசு காவிரி நீரின் உரிமையைக் கோரி உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. உச்ச நீதி மன்றம், மத்திய அரசு உடனடியாக நடுவர் மன்றம் அமைத்து அதன் தீர்ப்பை நடைமுறைப் படுத்தலாம் எனக் கூறியதன் பேரில், நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. உச்ச நீதி மன்ற நீதிபதியின் அதிகாரத்துடன் அமைக்கப்பட்ட நடுவர் மன்றம், இரண்டு மாநிலங்களிலும் பாசனம் பெறும் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து, நிலைமையை நேரில் கண்டறிந்து, இதுவரை நடைமுறையில் இருந்த தண்ணீர்ப் பங்கீடு அளவுகளையும் மனதில் கொண்டு, கர்நாடகம் தமிழ்நாட்டுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் உடனடியாக விட வேண்டும் என்று இடைக்காலத் தீர்ப்பாகக் கூறியது.

'உச்ச நீதி மன்றத்தின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசால் அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் தீர்ப்பினை 'அமல்படுத்த மாட்டேன்' என்று பகிரங்கமாகக் கூறி, நடுவர் மன்றத்தைக் கர்நாடக அரசு அவமதித்தது.

'நடுவர் மன்றத் தீர்ப்பை அரசு கெஜட்டில் வெளியிடக்கோரியும், தீர்ப்பை அமல்படுத்த, கர்நாடக அரசை நிர்ப்பந்திக்கவும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தமிழக மக்களின் ஒருமித்த எதிர்ப்பு உணர்வுகளைக் காட்டும் வகையில் ஜூலை 26-ஆம் நாள் பொது வேலை நிறுத்தம் அறிவித்து, மிக வெற்றிகரமாக வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதற்குப் போட்டியாகக் கர்நாடக அரசும் பந்த் நடத்தியதோடு மட்டுமல்லாமல், நடுவர் மன்றத் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் ஒரு அவசரச் சட்டத்தையும் அறிவித்துள்ளது. கர்நாடக அரசின் இந்தச் சட்டவிரோதச் செயல் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பெருத்த சவாலாக அமைந்துள்ளது. இதன் மூலம் இந்தியக் கூட்டாட்சித் தத்துவமே தகர்க்கப்படுகிறது. இந்த நடவடிக்கை ஒரு முன் மாதிரியாக அமைந்து விடக்கூடாது. ஆகவே, குடியரசுத் தலைவர் இதில் தலையிட்டு, உடனடியாகக் கர்நாடக அரசைக் கலைத்திட வேண்டுகிறோம்.

மேலும், மத்திய அரசு, நடுவர் மன்றத்தின் தீர்ப்பை கெஜட்டில் வெளியிட்டு, கர்நாடக அரசை அமல்படுத்தச் சொல்லி வலியுறுத்தாமல், மீண்டும் இப்பிரச்சினையை நீதி மன்றத்திற்கே கொண்டு போய், காலம் கடத்தி, தமிழக விவசாயிகளை அணு அணுவாகக் கொல்லுவதைத் தமிழக மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

மத்திய அரசின் ஒருதலைப் பட்சமாக இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். ●



# பத்தூர் - அருள்மிகு நடராஜர் சிலை மீட்டுப் பெறும் விழா



தஞ்சை மாவட்டத்தில் உள்ள பத்தூரிலிருந்து இலண்டன் மாநகருக்குக் கடத்திச் செல்லப்பட்ட அருள்மிகு விசுவநாத சுவாமி திருக்கோயில் நடராஜர் சிலை மீட்கப் பட்டது. இதனைத் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் எல்.எம். சிங்வி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இதற்கான விழா, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் - தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை 10-வது தளத்தில் அமைந்துள்ள கருத்தரங்கு கூடத்தில் நடைபெற்றது.

விழா மண்டபத்தில், பத்தூர் அருள்மிகு நடராஜர் விக்கிரகம் அழகுற அலங்கரித்து வைக்கப் பட்டிருந்தது.

9.6.1991 அன்று நண்பகல் 12.15 மணியளவில் தொடங்கிய இவ்விழாவிற்கு வருகை தந்தோரை அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

அதன்பின்-தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் எல்.எம். சிங்வி அவர்களிடமிருந்து நடராஜர் சிலையைப் பெற்றுக் கொண்டார்.

சிலையை வழங்கி, அவர் உரை ஆற்றிய பிறகு - அதைப் பெற்றுக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதன் தமிழாக்கம் வருமாறு:

### முதல்வர் உரை:

மாண்புமிகு இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் சிங்வி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, அரசு செயலாளர்களே, காவல்துறை அதிகாரிகளே, அழைப்பை ஏற்று வந்திருக்கும் சிறப்பு அழைப்பாளர்களே!

தஞ்சை மாவட்டம் பத்தூர் அருள்மிகு விசுவநாதசுவாமி கோவிலைச் சேர்ந்த விலை மதிக்கமுடியாத நடராஜர் சிலையை இங்கிலாந்து நாட்டிற்கான மாண்புமிகு இந்தியத் தூதர் டாக்டர் சிங்வி அவர்களிடமிருந்து பெறுகின்ற, வணிகவரி மற்றும் அறநிலையத் துறையினரால் நடத்தப்படுகின்ற, இந்த விழாவில் பங்கு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

### அட்டை சொல்லும் செய்தி:

தமிழ்நாட்டிலிருந்து கடத்தப்பட்டு, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு விற்கப் பட்டு, 10 ஆண்டுகளுக்கு மேலாக இலண்டன் மாநகரத்தில் ராயல் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் வெற்றி பெற்று, விலை மதிக்க முடியாத இந்த நடராஜர் சிலை நமக்குத் திரும்பவும் கிடைத்ததன் நினைவாகக் கொண்டாடப்படும் இந்த விழா, நம்மால் மறக்க முடியாத விழாவாகும். 12.7.1991 அன்று இலண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து டெல்லிக்கு வழங்கப்பட்ட இந்தச் சிலையை, சென்னையில் என்னிடம் ஒப்படைப்பதற்கான மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டு மாண்புமிகு டாக்டர் சிங்வி அவர்கள் இங்கு வந்துள்ளார்கள்.

சிலையை ஒப்படைப்பதற்காக டாக்டர் சிங்வி அவர்கள் தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்ட இந்த முயற்சி, நமது நெஞ்சை நெகிழ வைக்கிறது. மேலும், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவும், இந்தச் சிலையை என்னிடம் நேரடி

# மீட்கப்பட்ட சிலை : சில விவரங்கள்

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டிலிருந்து இலண்டனுக்குக் கடத்திச் செல்லப் பட்ட நடராஜர் சிலை மீண்டும் இந்தியாவுக்கு- குறிப்பாகத் தமிழகத்திற்குப் பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டது.

தஞ்சை மாவட்டம் கொறடாச்சேரி காவல் நிலைய சரகத்தைச் சேர்ந்த பத்தூர் கிராமத்தில், சரியான பராமரிப்பு இல்லாமல் பாழடைந்திருந்த அருள்மிகு விசுவநாத சுவாமி திருக்கோயில் வளாகத்திலிருந்து 1976-ஆம் ஆண்டு இந்தச் சிலை திருடிச் செல்லப்பட்டது; பின்னர், இலண்டனுக்குக் கடத்திச் சென்று விற்கப்பட்டது. இலண்டனிலுள்ள 'பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' என்கிற எண்ணெய் நிறுவனம் இந்தச் சிலையை வாங்கியது.

மிக நீண்ட காலம் மண்ணுக்குள்ளேயே புதைந்து கிடந்த காரணத்தால், நடராஜர் சிலையின் பல பகுதிகளின் மீது அகற்ற முடியாத அளவுக்கு மண் ஒட்டிக் கொண்டிருந்தது. எனவே, இந்தச் சிலையைத் தூய்மைப்படுத்துவதற்காக உலகின் மிகச் சிறந்த கலைப்பொருள் பராமரிப்பு நிபுணர்களைக் கொண்டு 'பிரிட்டிஷ் மியூசிய'த்துக்கு இந்தச் சிலையை மேலேகுறிப்பிட்ட நிறுவனம் அனுப்பிவைத்தது.

பிரிட்டிஷ் மியூசியத்திலிருந்து அதிகாரி ஒருவருக்கு இந்தச் சிலை எங்கிருந்தாவது கடத்திக் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் எழுந்தது. இதையடுத்து ஸ்காட்லாந்து யார்டு போலீசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் நடைபெற்றது. அதே ஆண்டில் திருவிலாக்குடி நடராஜர் சிலைக் கடத்தல் வழக்குத் தொடர்பாக இலண்டனுக்குச் சென்றிருந்த தமிழகக் காவல் துறை அதிகாரிகளுக்கும், ஸ்காட்லாந்து யார்டு காவல் துறையினருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதையடுத்து இந்த பத்தூர் நடராஜர் சிலை விவகாரமும் வெளிப்பட்டது!

இந்தச் சிலையை மீண்டும் தமிழ்நாட்டுக்கே திருப்பி அனுப்ப வேண்டும் என்று இலண்டன் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, 'பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' நிறுவனத்தார் பல மேல் முறையீடுகளைச் செய்தனர். எனினும், இறுதியில் நியாயம் வென்றது.

பத்தூர் நடராஜர் சிலை பத்திரமாக இலண்டனிலுள்ள இந்தியத் தூதுவரக அதிகாரிகளின் மூலம் தில்லிக்கு அனுப்பப்பட்டது; அதன்பின், தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

— என். இளங்கோ

யாக ஒப்படைப்பதற்காகவும் அவர் சென்னைக்கு வந்திருப்பது தமிழக மக்கள் மீது அவர் கொண்டிருக்கிற தளராத ஆர்வத்தைக் காட்டுகிறது.

நமது சட்ட வரலாற்றில் ஒரு மாநிலம், வெளிநாட்டில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கை நடத்தி வென்றது இதுவே முதல் முறை ஆகும். இந்த வெண்கல நடராஜர் சிலை 12-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியைச் சேர்ந்தது என அதன் வடிவமைப்பு நமக்கு எடுத்துக் காட்டு கிறது. இந்தச் சிலை எப்படி இங்கிலாந்து மாநகருக்குக் கடத்தப் பட்டது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

பத்தூரில் உள்ள அருள்மிகு விஸ்வநாதசுவாமி ஆலயத்தில் தற்போது சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாலும், கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதாலும், இந்த இடைக்காலத்தில் ஆறு மாத காலத்திற்குப் பாதுகாப்பாக இந்தச் சிலை, திருவாரூரில் உள்ள விக்கிரகங்கள் பாதுகாப்புக் கூடத்தில் வைக்கப்படும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடுமையான சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு நமக்குக் கிடைத்திருக்கிற பத்தூர் நடராஜர் விக்கிரகத்தினைத் திரும்பப் பெறுவதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த விக்கிரகத்தினைத் திரும்பப் பெறுவதிலே நடைபெற்ற வழக்கிலே பங்கு கொண்ட அனைவருக்கும் மீண்டும் தமிழக மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மறைந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்,

## கோயில் திருப்பணி நிதி

அருள்மிகு பத்தூர் விசுவநாத சுவாமி திருக்கோயில் நடராஜர் சிலை மீட்டுப் பெறும் விழாவின் தொடக்கத்தில்- இங்கிலாந்து நாட்டின் இந்தியத் தூதர் திரு. எல்.எம்.சிங்வி அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார்.

குத்து விளக்கேற்றி வைத்து, முறைப்படி அந்தச் சிலையைப் பெற்றுக் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப. அவர்கள் பொன்னாடையும், நினைவுப் பரிசும் வழங்கினார்.

இந்த விழாவில்- 'முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி'க்காக இங்கிலாந்து நாட்டுக்கான இந்தியத் தூதர் திரு. எல்.எம்.சிங்வி அவர்கள் தமது ஒருமாதச் சம்பளத்தை வழங்குவதாக அறிவித்தார். அதேபோல- வழக்கறிஞர் கோர்படே ரூ.5,001/-ம், சுந்தரம் ஃபைனான்ஸ் சார்பில் ஒரு இலட்சம் ரூபாயும், சுந்தரம் சாரிட்டிஸ் சார்பில் ஒரு இலட்சம் ரூபாயும், வி.ஜி.சந்தோஷம்- வி.ஜி. செல்வராஜ் ஆகியோரால் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது.



## நல்லதோர் பாடம்!

பத்தூர் நடராஜர் சிலையை வழங்கி, இங்கிலாந்து நாட்டுக்கான இந்தியத் தூதர் திரு எல்.எம்.சிங்வி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''முதலாவதாகத் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் இதே பெருமையோடும் பெருமிதத்தோடும் இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ்வாங்கு வாழ இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.''

''விலை மதிப்பற்ற இந்தச் சிலையை எப்படியும் மீட்போம் என்று தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரிடம் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி உறுதி கூறியிருந்தார். அப்படி உறுதி கூறிய வரும், அந்த உறுதிமொழியைப் பெற்றவரும் இன்றில்லை எனினும், அந்த வாக்குறுதி இன்றைய தினம் நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.''

''இந்த விக்கிரகம் சட்ட பூர்வமாக மீட்கப்பட்டுள்ளதன் மூலம் இந்தியாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையே மிக நல்ல நட்புறவு ஏற்பட்டிருக்கிறது; அதுமட்டுமல்ல; இந்தியாவிலிருந்து சிலைகளைத் திருடி வெளி நாடுகளுக்குக் கடத்துவோருக்கும் இந்த நிகழ்ச்சியானது நல்லதோர் பாடமாக அமையும்''.

பத்தூர் நடராஜர் விக்கிரகம் தமிழ் நாட்டிற்குத் திரும்பக்கிடைப்பதற்கு எடுத்துக்கொண்ட தளராத முயற்சியினை நான் நினைவுகூரக் கடைமைப் பட்டிருக்கின்றேன். இது தொடர்பாக அவர் தமிழக அரசிற்கு எழுதிய கடிதத்தில், இந்த விக்கிரகம் விலை மதிக்கமுடியாத தேசிய சொத்து என்பதால், இந்தச் சிலையைத் தமிழகத்திற்குக் கொண்டு வருகிற போக்குவரத்துச் செலவினையும், வழக்கிற்கு உண்டான செலவுத் தொகையினையும், மத்திய அரசின் பண்பாட்டுத் துறையே ஏற்கும் என்று எழுதியுள்ளார்.

மேலும், இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆற்றிய தொண்டிற்கும், வழங்கிய அறிவுரைகளுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, தமிழ் நாட்டின் முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் மற்றும் இங்கிலாந்து நாட்டிற்கான தற்போதைய இந்தியத் தூதர் டாக்டர் சிங்வி மற்றும் தூதரக அலுவலர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிக்கலான சட்ட நுணுக்கங்களை மிகவும் திறமையாக வாதாடியதால் தான் நமக்கு இந்த வழக்கில் வெற்றி கிடைத்திருக்கிறது. இந்தவகையில் - க்வீன்ஸ் வழக்கறிஞர் திரு. அட்ரியன் ஹேமில்டன், அவருக்கு உதவிய திரு. பாஸ்கர் கோர்படே மற்றும் திரு. லாரன்ஸ் கிரஹாம் ஆகிய வழக்கறிஞர்கள் இல்லாவிட்டால், இவ்வழக்கில் நாம் வெற்றி பெற்று இருக்க முடியாது. அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அதேபோல், இது தொடர்பான வழக்கில் தேவையான புலனாய்வினையும் மற்றும் சாட்சியங்களையும் வழங்கி சிலையைத் திரும்பப் பெற அரும்பணியாற்றிய தற்போதைய காவல்துறைத் தலைவர் (ஐ.ஜி.) திரு. கே.கே. ராஜசேகரன் நாயர், முன்னாள் சட்டத்துறைச் செயலாளர் திரு. எஸ். வடிவேலு, தடயவியல் இயக்குநர் பேராசிரியர் சந்திரசேகரன், அறநிலையத்துறை முன்னாள் இணை ஆணையாளர் திரு. சூரியராஜ் ஆகியோருக்கும், முன்னாள் தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் நாகசாமி அவர்களுக்கும் நம்முடைய நன்றி உரித்தாகுக.

தமிழக சரித்திரத்தில் நினைவு வைத்துக்கொள்ளத் தக்கதும், தனித்த புகழ் பெற்றதுமான மறக்கமுடியாத இந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் பங்கு கொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.''

- இவ்வாறு உரை நிகழ்த்திய பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதருக்கு நினைவுப் பரிசு வழங்கி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.


அதைத் தொடர்ந்து - நடராஜர் சிலை மீட்பு தொடர்பான வழக்கில் அரும்பணிபுரிந்த காவல்துறை அதிகாரிகள், முன்னாள் சட்டத்துறைச் செயலாளர், தடயவியல் இயக்குநர், அறநிலையத்துறை முன்னாள் அதிகாரிகள், தொல்பொருள் ஆய்வுத் துறை அதிகாரிகளுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழா முடிவில் - வணிகவரி மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார். **நிகழ்ச்சித் தொகுப்பு: இந்திரன்**

## பணியாற்றியோருக்குப் பரிசுகள்!

பத்தூர் நடராஜர் சிலை மீட்பில், உரிய நேரத்தில் தக்க நடவடிக்கைகளையும் பணிகளையும் மேற்கொண்டதற்காகக் கீழ்க்கண்ட 14 பேர்களுக்கு நடராஜர் சிலை போன்ற சிறியதோர் நினைவுச் சின்னம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

திரு. கே.கே.ராஜசேகரன் நாயர்- இன்ஸ்பெக்டர் ஜெனரல் (ரகசியப் புலனாய்வு), திரு. ஆர். ராஜகோபாலன்- சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர், திரு.பஞ்சாபகேசன்- ரகசியப் புலனாய்வுத்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல், டாக்டர் சந்திரசேகரன்- தடய அறிவியல் துறை இயக்குநர், திரு. ஜே.இராமகிருஷ்ணன்- உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் (நிர்வாகம்), திரு.மோகன்தாஸ்- காவல்துறை முன்னாள் தலைவர், திரு.கே. ஆளுடையபிள்ளை- ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் (இந்து சமய அறநிலையத் துறையின் முன்னாள் ஆணையர்) திரு. ஆர்.நாகசாமி- தொல்லியல் ஆய்வுத் துறையின் முன்னாள் இயக்குநர், திரு. எஸ்.வடிவேலு- முன்னாள் சட்டத்துறைச் செயலர், திரு. ராஜதேவன்- சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக் கண்காணிப்பாளர், திரு. ராஜாராம்- திரு. மருதமுத்து- சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு ஆய்வாளர்கள், திரு. சூரியராஜ்- அறநிலையத் துறையின் முன்னாள் இணை ஆணையர்.



# ஆலயத் திருப்பணிக்கோர் அற்புதத் திட்டம்

## 'முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' - தொடக்கம்

தமிழ்நாடு, பழம்பெரும் கோயில்களின் உறைவிடம் ஆகும். ஆனால், ஆயிரக்கணக்கான சிறு கோயில்கள் சிதைந்த நிலையில் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவற்றில் பல்லாண்டுக் காலமாகத் திருப்பணி வேலை எதுவும் நடத்தப் படவில்லை. மேலும், பல கோயில்கள் அன்றாட வழிபாடுகூட நடத்த முடியாத வறிய நிலையில் உள்ளன.

இப்படிப்பட்ட கோயில்களுக்கு எந்தவகையில் நம்மால் உதவ முடியும் என்று நான் சிந்தித்து வந்தேன். இந்தக் கோயில்களுக்குத் திருப்பணி செய்யவும், அவற்றைப் பராமரிக்கவும் பெரும் தொகை தேவைப்படுகிறது. இந்தச் சீரிய பணிக்குப் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பொருளுதவி பெறுவது விரும்பத்தக்கதாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

இதன் அடிப்படையில் ''முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி'' என்ற நிதியை ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது. இந்த நிதிக்குக் கொடையுள்ளம் படைத்தோர், தொழிலதிபர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் நன்கொடை வழங்கலாம். சீரமைப்புத் தேவைப்படும் திருக்கோயில்களில் திருப்பணியினை மேற்கொள்ளவும் அவைகளை நல்ல நிலையில் பராமரிக்கவும் இந்த நிதி பயன் படுத்தப்படும்.

இந்த நிதியிலிருந்து உதவி கோரும் கோயில்களுக்கு நிதி வழங்கும் அதிகாரம் பெற்றவர் தமிழ்நாடு முதலமைச்சராவார். அவ்வாறு உதவி பெறும் கோயில்களில் இந்தத் தொகை முறையாகப் பயன்படுத்தப்பட்டதா என்பதைச் சரி பார்க்கும் அதிகாரம் பெற்றவராக அரசின் வணிக

### மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் வேண்டுகோள்.

வரி மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் அல்லது இதற்கென முதலமைச்சரால் அங்கீகரிக்கப்படும் அலுவலர் செயல்படுவார்.


இந்த நிதிக்கு முதல் நன்கொடையாக நான் 1,00,008 (ரூபாய் ஒரு இலட்சத்து எட்டு) வழங்கியுள்ளேன். இந்த நன்கொடையோடு ''முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி'' தொடங்கப்படுகிறது.

இச்சீரிய பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்குமாறு கொடையுள்ளம் கொண்டோரையும், தொழில் அதிபர்களையும், பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.



வருமானம் இல்லாத கோவில்களைப் பராமரிக்கவும் வழிபாடு நடத்தவும் ''முதலமைச்சரின் கோவில் திருப்பணி நிதி'' என்ற நிதியை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அமைத்து, முதல் நன்கொடையாக ரூ.1 இலட்சத்து 8 ஆயிரம் வழங்கினார். இதற்கான காசோலையை அவரிடம் இருந்து கனரா வங்கியின் மண்டலத்துணை மேலாளர் திரு எச்.ஆர்.பட் அவர்கள் பெற்றுக் கொண்டார். (2.8.91)

## படமும் செய்தியும்



கப்பல் படைத்தளபதி எல்.ராம்தாஸ் அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்துப் பேசினார் (2.8.'91).

பிரான்ஸ் நாட்டிலுள்ள இந்தியத் தூதர் திரு. சி.வி.ரங்கநாதன் அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார் (2.8.'91).



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

### ஐந்தாம் வகுப்புவரை பெண் ஆசிரியர்களே!

மக்கள் தொகையில் சரிபாதி அளவில் உள்ள பெண்கள், ஆண்களுக்கு நிகரான சமூக, பொருளாதார வாய்ப்பு வளங்கள் அனைத்தையும் பெற வேண்டுமென்பதே இவ்வரசின் கொள்கையாகும். இக்கொள்கையை நடைமுறைப்படுத்த முதற் கட்டமாக, பெண்கள் தங்கள் பொருளாதாரத் தேவைகளுக்குப் பிறர் கையை எதிர்பாரா வகையிலும், தங்களது சொந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தும் வகையிலும், அவர்களுக்கென வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

தற்போது தொடக்கப் பள்ளிகளில் 3-ஆம் வகுப்பு வரை மட்டுமே பெண்கள் ஆசிரியைகளாக நியமிக்கப்பட்டு வருகின்றனர். 1991-ஜூலைத் திங்கள் 4-ஆம் நாள் சட்டமன்றத்தில் ஆளுநர் உரையில் அறிவித்த வண்ணம், தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1991-92 கல்வி ஆண்டு முதல், நான்காம் மற்றும் 5-ஆம் வகுப்புகளுக்கும் பெண்களையே ஆசிரியைகளாக நியமனம் செய்ய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

ஏற்கெனவே பணிபுரிந்து வரும் ஆண் ஆசிரியர்களுக்குப் படிப்படியாக இடமாற்றம் அளிக்கப்படும். இதற்கான அரசு ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது.

### உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கான 25 சதவிகித மின்வெட்டு ரத்து.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி நிலைமை சீரடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, 1.8.1991 அன்று முதல் பின்வருமாறு மின்வெட்டை அமல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது:

அடிப்படைப் பயனீட்டு அளவில் இதுவரை விதிக்கப்பட்டிருந்த 25 சதவிகித மின்வெட்டு நீக்குவது.

130 கேவிஏ அளவுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் உயரழுத்த மின் பயன்பாட்டுத் தொழிற்சாலைகளுக்கு அவற்றின் அனுமதிக்கப்பட்ட தேவை அளவில் 30 சதவிகிதம் வெட்டு விதிக்கப்பட்டிருந்தது. அதில் 10 சதவிகிதத்தைக் குறைப்பது.

130 கேவிஏ அளவுக்கு மேல் ஆக்ஸிஜன் தயாரிப்புத் தொழிற்சாலைகள், மாவாலைகள் குளிர் பதன நிலையங்கள், கடல்படு பொருட்களை உணவுப் பொருட்களாகத் தயாரிக்கும் தொழிற்காலைகளிலுள்ள குளிர்பதனக் கிடங்குகள் திரவ நைட்ரஜன் தயாரிப்புத் தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்குத் தற்போது விதிக்கப்பட்டுள்ள 1[illegible] சதவிகித அடிப்படை மின்வெட்டு 10 சதவிகி[illegible]மாகக் குறைப்பது

### புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்

ஒரு வேளை கூட உணவு இல்லாமல் தவிக்கு[illegible] ஏழை எளிய மக்களுடைய நலன் கருதி, நோயற்[illegible] வலிவுள்ள ஒரு புதிய தலைமுறையை உருவாக்கிட உலகெங்கிலும் பாராட்டைப் பெற்ற சத்துணவு[illegible] திட்டத்தை அளித்தவர் புரட்சித் தலைவர் என்[illegible]பதைக் கருத்தில் கொண்டு, இதுவரை "தமிழ்நா[illegible] அரசு சத்துணவுத் திட்டம்" என்று அழைக்கப்பட்[illegible] இத்திட்டம் இனிமேல் "புரட்சித் தலைவ[illegible] எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்" என்று அழை[illegible]கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வ[illegible] புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தற்போது "தமிழ்நாடு அரசு சத்துணவு[illegible] கூடங்கள்" என்று அழைக்கப்படுபவை இனிமே[illegible] "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு[illegible] கூடங்கள்" என்று அழைக்கப்பட வேண்டு[illegible] என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்க[illegible] உத்தரவிட்டுள்ளார். இதற்கான அரசாணையு[illegible] பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு கால்நடை அறிவியல் மற்று[illegible] மருத்துவப் பல்கலைக் கழகத்திற்குத் தலைமையிடம் அறிவிப்பு

**20.9.1989** அன்று தொடங்கப்பட்[illegible] தமிழ்நாடு கால்நடை அறிவியல் மற்றும் மருத்துவ[illegible] பல்கலைக் கழகத்திற்குத் தலைமையகம் நிர்ணயிக்[illegible] வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று - சென்னை[illegible]யிலுள்ள மாதவரம் பால் பண்ணையில் ஒ[illegible] பகுதியைத் தேர்ந்தெடுத்து அதனை இந்தப் ப[illegible]கலைக் கழகத்திற்குத் தலைமையிடமாக நிர்ண[illegible]யித்து தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு[illegible]ளார்.

### காவல்துறை உயர் அதிகாரிகள் வாகனங்களில் - கொடி! தமிழக முதல்வர் ஆணை.

மாநிலக் காவல்துறை இயக்குநர் மட்டுமே தனது வாகனத்தில்' கொடி (Flag) மற்றும் நட்சத்திரத் தகடுகளை (Star Plates) வைத்துக்கொள்ள இதுவரை அரசால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது காவல்துறை உயர் அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று நன்கு பரிசீலனை செய்த பின்னர், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் தாங்கள் சீருடையில் (Uniform) இருக்கும்போது தங்களது வாகனங்களில் கொடி மற்றும் நட்சத்திரத் தகடுகளை வைத்துக் கொள்ளலாம் என மாண்புமிகு தமிழக முதல்வர் -ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்

மின்வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் போன்றவைகளில் பணியாற்றும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நிலையிலுள்ள காவல்துறை அலுவலர்கள் தங்களது வாகனங்களில் கொடி மற்றும் நட்சத்திரத் தகடுகளைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மண்ணெண்ணெய் விற்பனை - உணவுத் துறை அமைச்சர் அறிக்கை

"ஆகஸ்ட்டு மாதம் முதல் தேதியிலிருந்து பொது மக்களுக்கு ரேஷன் கடைகளின் மூலம் விற்கப்படும் மண்ணெண்ணெயின் விலை லிட்டருக்கு 0.25 பைசா (இருபத்தைந்து பைசா) குறைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் பயனடைவார்கள்" என்று மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

### தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தமிழக அரசின் உடனடி நிவாரண உதவி.

சென்னையிலுள்ள மயிலை-திருவல்லிக்கேணி வட்டத்தில் அமைந்துள்ள நாவலர் நெடுஞ்செழியன் நகர் பகுதியில் 30.7.1991 அன்று காலை 11.45 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 125 குடிசைகள் எரிந்து சாம்பலாயின; இதனால் 141 குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

தீ விபத்தில் எரிந்துபோன குடிசைகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில், உடனடி நிவாரண உதவிகளாகக் குடிசை ஒன்றுக்கு ரூ.400 வீதம் 125 குடிசைகளுக்கு ரூ.50,000-மும், பாதிக்கப்பட்ட 141 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்குத் தலா 5 கிலோ அரிசி மற்றும் ஒரு வேட்டி - ஒரு சேலையும் 31.7.1991 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. மதுசூதனன் அவர்களும் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் வழங்கினார்கள்.

### காய்கறிகளின் விலைவாசிகள் குறித்து அமைச்சர் அறிக்கை

மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. க.ராசாராம் அவர்கள், 30.7.1991 அன்று வெளியிட்ட அறிக்கையொன்றின் முழு விவரம் வருமாறு:

'சென்னை நகரத்தில் காய்கறிகளின் விலைவாசிகள் ஏறிவருவதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவலை தெரிவித்ததையொட்டி, நான் சென்னையிலுள்ள மொத்த வியாபாரிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி விலைவாசிகளைக் குறைக்கக் கேட்டுக் கொண்டேன். பருவகாலத்தில் விளைச்சல் போதிய அளவு இல்லாததாலும் வெளியிடங்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வரத்துக் குறைவாக இருப்பதாலும் விலைவாசி ஏறியிருப்பதாகத் தெரிவித்தனர்.

சென்னை நகரில் கூட்டுறவு காய்கறி நியாய விலைக் கடைகள் குறைவாக இருப்பதால், கடந்த 25 நாட்களில் 48 புதிய காய்கறி நியாய விலைக் கடைகள் முறையே அண்ணா நகர், பெசண்ட் நகர், பெரம்பூர், வலசரவாக்கம், திருவான்மியூர், எழும்பூர், ஆழ்வார்பேட்டை, மைலாப்பூர், சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் திறக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 97 கடைகள் சென்னை நகரில் செயல்பட்டு வருகின்றன. சாதாரணமாக மாதத்திற்குச் சராசரியாக ரூ.4.50 இலட்சத்துக்கு மதிப்புள்ள காய்கறிகள் வியாபாரம் செய்து வந்தது கூட்டுறவுத் துறை. தற்போது கடந்த 25 நாட்களில் ரூ.5.80 இலட்சம் மதிப்புள்ள காய்கறிகளை வியாபாரம் செய்து வருகிறது. அதுவும் வெளிச் சந்தை விலையைவிட குறைவான விலைக்கு விற்கப்படுகின்றன. பெங்களூரிலிருந்தும், நீலகிரியிலிருந்தும், ஊட்டியிலிருந்தும் காய்கறிகள் வரவழைக்கப்பட்டு நியாய விலைக் கடைகள் மூலம் விற்கப்படுகின்றன.

இந்த முயற்சி தொடர்ந்து நடைபெறும். காய்கறி வரத்து மற்றும் விலைவாசிகள் தினமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மொத்தத்தில் தேவையான காய்கறிகள் சென்னை நகரத்திற்கு வந்தால்தான் நிலைமை சீரடையும். கூட்டுறவு நியாயவிலைக் கடைகளால் மட்டும் இதைச் சரி செய்துவிட முடியாது'.

# நடந்தாய் வாழி காவேரி!

இளந்தேவன்

காவிரித்த சோலையெல்லாம் கானல்நீர் ஆகாமல்
பூவிரித்துக் காப்பதற்குப் பொங்கிவந்தாய் காவேரி!

நெருப்புப் பொறிபறந்த நிலைமாற்றித் தமிழ்முகத்தில்
சிரிப்புச் சுடர்பரவச் சிலிர்த்துவந்தாய் காவேரி!

தண்ணார் தமிழ்பருகத் தண்ணீர்க்கும் தாகம்என்று
கண்ணாரக் காட்டுதற்குக் கடுகிவந்தாய் காவேரி!

அணைக்கட்டுச் சிறைதாண்டி அதிகார விலங்கொடித்து
மணக்கும் தமிழ்நிலத்தை மருவவந்தாய் காவேரி!

செயற்கை அரசியலால் சிறைப்பட்டுக் கிடந்தாலும்
இயற்கைத்தாய் விடுவிக்க எழுந்துவந்தாய் காவேரி!

அரசியல் நீதிவர ஆண்டுபல ஆனாலும்
இயற்கைதந்த நன்கொடையாய் இன்று வந்தாய் காவேரி!

தன்னுரிமை நிலைநாட்டும் தமிழகத்தின் முதலமைச்சாம்
பெண்ணரசி குரல்கேட்டுப் பெருகிவந்தாய் காவேரி!

என்றோ வரும்வெள்ளம் என்றிருந்தால் பெருமையுண்டா
என்றும் வரும் ஜீவநதி எனவருவாய் காவேரி!

தங்கத் தமிழகத்துத் தனிமுதல்வர் ஆணையிட்டால்
வங்கக் கடல்வரை நீ வரவேண்டும் காவேரி!

நீ எங்கள் பிறப்புரிமை! நின்வரவு தமிழ்க் கினிமை!
வா எங்கள் கண்மணியே! வரவேற்றோம் காவேரி!







# மதுவும் மனநோய்களும்!

டாக்டர் எஸ். நம்பி
அரசு மனநலக் காப்பகம், சென்னை.

மது அருந்துவது மனிதரிடையே தொன்றுதொட்டு நிலவிவரும் ஒரு பழக்கம். புராண காலங்களிலேயே சோமபானமும், சுராபானமும், மனிதன் கேளிக்கைகளில் ஈடுபட்ட போது பயன்படுத்தியதாகத் தெரிகிறது. நம் தமிழ்நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே குடிப்பழக்கம் அதிக அளவில் இருந்து வந்ததும், அதன் கேடுகள் அப்போதே மனிதனைச் சூழ்ந்ததும் - திருவள்ளுவர் பத்துக் குறட்பாக்களை 'கள்ளுண்ணாமை'யை வலியுறுத்திக் கூறியிருப்பதில் இருந்தே புலனாகும்.

**அந்த நாள் முதல்...**

தொடக்க நாளில் இருந்தே மனிதன் வலியை மறக்க, துன்பத்தைப் போக்கிக் கொள்ள, மகிழ்ச்சியைக் கொண்டாட, விழாக்காலங்களில் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள எனப் பல்வேறு காரணங்களால் மெய்மறந்த நிலைக்கு ஆளாக்கும் போதையை நாடத் தலைப்பட்டான். குடிப்பழக்கம் நாளடைவில் மனிதனை அழிக்க வல்ல சமுதாயச் சீர்கேடாகவே மாறிவிட்டது!

பழக்கச் சங்கிலி, தொடக்கத்தில் மெலிதாக இருந்து நாளடைவில் இறுகி, இறுகி லேசில் அறுக்க முடியாத அளவு வலிமை பெற்று விடுகிறது என்பது தெரிந்ததுதானே?

மது அருந்துவது என்பது ஒரு விதப் பழக்கம்; அந்தப் பழக்கத்தை நாம் ஏற்படுத்தி, பின்னர், நம்மை அதற்கே அடிமையாக்கிவிட (Addiction) வல்லது என்ற நிலை தற்போது நம்மில் பலரிடையே ஒரு வித நோயாகவே கருதப்படுகிறது.

மது அருந்துவது ஒரு தனிப்பட்ட மனிதனின் உடல் நலத்தைப் பாதிக்கின்றது; அவன் மனநலத்தையும் பாதிக்கின்றது; அவனைச் சார்ந்து இருக்கின்ற குடும்பத்தின் நிம்மதியைக் குலைக்கின்றது; அவனைச் சூழ்ந்துள்ள சமுதாயத்தைப் பாழ்படுத்துகிறது. இப்படி ஒரு மனிதனை எல்லா வகையிலும் பாதிப்புக்கு உள்ளாக்குகிற குடி, ஒரு நோயே; அதுவும் குணப்படுத்தக்கூடிய, அது தாக்கும் முன்னரே ஒழிக்கப்பட வேண்டிய நோயே என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!

**யார் குடி நோயாளி**

- எந்த மனிதன் எந்நேரமும் குடிப்பது பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறானோ...
- யார் அளவுக்கு அதிகமாகக் குடித்து, அதுவும் போதாத நிலையில் மேலும் மேலும் குடித்துக் கொண்டிருக்கிறானோ...
- யாருக்குக் குடிப்பழக்கம் உடல், மனநலப் பாதிப்புகளை உண்டாக்குகிறதோ...
- யாருக்குக் குடிப்பழக்கம் - குடும்பத்தில், பொருளாதாரத்தில், செய்யும் தொழிலில், சமுதாய மதிப்பில் சீர்குலைவை ஏற்படுத்துகிறதோ - அவனே குடிநோயாளி!

குடிநோயாளி எவருமே தான் குடிப்பதை, அதுவும் அதிகமாகக் குடிப்பதை, தன்னுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் குடிதான் என்பதை ஆரம்பத்தில் ஒத்துக் கொள்வதேயில்லை!

**குடிநோய்க்குக் காரணம் எது?**

குடி நோய்க்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. ஆகவே சமூக, உளவியல், உடல் ரீதியான காரணங்களாய் அவை பிரிக்கப்படும். குடிப் பழக்கம் உடையவரின் குழந்தைகளுக்கும் இந்தப் பழக்கம் எளிதாக, பரம்பரைச் சொத்தாகப் பாதிப்பை உண்டுபண்ண வாய்ப்புகள் அதிகம் உண்டு. விழாக்காலங்களும் மகிழ்ச்சியைக் கொண்டாடும் நேரங்களும், குடியை நாடுவதற்கு வாய்ப்புக்களை உருவாக்கித் தருகின்றன. இழப்புகளும், மன வருத்தங்களும் (Depression) மனிதன் மதுவை நாடத் துணை போகின்றன. மனிதனின் உடல் அயர்ச்சியும், அவனின் மன நெருக்கடிகளும் (Stresses) மதுவைத் தேட வைக்கின்றன. தோழமைக் கூட்டத்தின் பாதிப்பு (Peer Group Influence) வியாபார யுக்திகள் முதலியவும் மது அருந்தும் வாய்ப்புக்களைத் தூண்டுகின்றன.

நரம்புத் தளர்ச்சி,
வயிற்றுப்புண், ஈரல் வியாதிகள்
ஆகியவை மட்டுமல்ல; இன்னும்
பலவிதமான பாதிப்புகளுக்கும்
குடிப்பழக்கம் மனிதனை
ஆட்படுத்தும் என்பதை
விரிவாக விளக்கும் கட்டுரை

அதுதவிர, மதுவின் ஒருவித நச்சுத்தன்மையும், சிலரின் உடலியல் அதைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும் தன்மையும் குடிநோய்க்குக் காரணமாக அமைகின்றன.

குடிநோய் ஒரு மனிதனைப் படிப்படியாகத் தாக்கி, அவனை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. தொடக்கத்தில் நட்புக்காகவும், குடிப்பதே அந்தஸ்து உள்ளவனின் அடையாளம் என்ற வீண் கற்பனையினாலும், மதுவில் என்னதான் இருக்கிறது என்று பார்த்து விடுவோமே என்ற ஆவல் மேம்பாட்டினாலுமே பரீட்சார்த்தமாகக் குடிப்பழக்கம் ஆரம்பிக்கிறது. (Experimental Drinking) அதன் பின்னர் கேளிக்கையும், மகிழ்ச்சியும் போன்ற நிறைந்த வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் குடிக்கத் தோன்றும் (Recreational Drinking). பின்னர் தினந்தோறுமோ அல்லது அடிக்கடியோ குடித்தல் நன்றாய் இருக்கிறது, நிம்மதியாய் இருக்கிறது. என்றோ குடிப்பழக்கம் தொடருகிறது (Regular Drinking). இறுதியாக - குடிக்காமல் சரிவர உடலும், மனமும் இயங்கவில்லை. குடிக்காது போனால் உடல் தளர்ந்து ஆட்டம் கொடுக்கிறது, என்ற நிலையில் குடிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு குடிநோயாளியாக மாறுகின்றனர். (Compulsive Drinking).

### குடிப்பதால் ஏற்படும் நோய்கள்

குடிப்பழக்கம், உடலில் பல்வேறு வியாதிகள் வர வழி செய்கிறது. முக்கியமாக - நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப்புண், ஈரல் வியாதிகள் போன்றவைகள் குடியினால் உண்டாகின்றன.

சமுதாய அளவில் குடிநோய் தொழில் பிரச்சினைகள், அடிக்கடி வேலைக்குச் செல்ல முடியாத நிலை. குடும்பப் பிரச்சினைகள், கணவன் மனைவிக்கிடையே கோளாறுகள் ஆகியவற்றை உண்டாக்குகின்றன; வன்முறை, ஏமாற்று வேலை முதலியவைகளில் ஈடுபடவும் அந்தப் பழக்கம் வழிசெய்கிறது. இதனால், குடியர்களின் வாழ்க்கைத் தரமும் பாதிக்கப்படுகின்றது.

குடிநோய் நாளடைவில் அது உள்ளவரிடம் மனவருத்தத்தை (Depression) உண்டு செய்கிறது. குடியினால் ஏற்பட்ட இழப்புக்களோடு, மற்ற பொருளாதார, குடும்ப, சமூகப் பாதிப்புகளும், குடியனின் மனநிலையை வெகுவாகப் பாதிக்கின்றன இதன் காரணமாகவே குடிநோயாளிகளில் பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பலர் தங்களின் மன வருத்தத்தைப் போக்கவே குடிப்பதாகக் கூறினாலும் - குடியே மனவருத்தத்தை அதிகப்படுத்திவிடுகிறது என்பதை ஏனோ அவர்கள் அறியாதவர்களாகவே உள்ளனர்; அல்லது அறிந்து கொள்ள முயற்சிப்பதில்லை.

### குடியும் குடும்பமும்

குடிநோய் உள்ளவர்களுக்குத் தாம்பத்திய உறவுகளில் பல்வேறு பிரச்சினைகள் (Sexual Problems) உண்டாகும்.

நம் சமூகத்தில் பல ஆண்களிடம் தவறான ஒரு கருத்து நிலவி வருகிறது; மதுவை அருந்தினால், உடல் உறவு மூலமான இன்பம் அதிகரிக்கும் என்பதே அது. இது முற்றிலும் தவறான எண்ணம். குடிப்பழக்கம், வேட்கையை, வெறியைத்தான் தூண்டிவிடும். ஆனால் அதற்கான செயல் திறனைப் பாதித்துவிடும் (Alcohol increases the desire; But takes away the performance).

தாம்பத்திய வாழ்வில் பாதிப்பு, தன்னால் குடும்பத்தைச் சரிவர நிர்வகிக்க வருமானம் ஈட்ட முடியாத நிலை ஆகியவை காரணமாகவும், குடிநோயாளிகளின் மனைவியர் குடும்பத்தைக் காக்கவேண்டிய பணியில் சங்கடம் ஏற்படும். அன்றாடத் தேவைக்காகவே பலருடன் பழக வேண்டிய சூழ்நிலை உண்டாகும். இவையாவும், குடிநோயாளிகளின் அடிமனதில் சந்தேகப் புயலை உருவாக்கி, தாறுமாறான பல எண்ணங்களை, வளர்த்துவிடும். இவர்களின் மனதில் காரணமற்ற கற்பனை எண்ணங்கள் (Delusions) வளர்வதன் காரணமாகத் தனது மாசற்ற மனைவியின் நடத்தையிலேயேகூட சந்தேகம் (Morbid Jealousy), பொறாமை போன்றவை தோன்றி அவர்களை அடிக்கவும், துன்புறுத்தவும் தூண்டிவிடும்.

குடிநோயாளிகளின் மனநிலை சில வேளைகளில் முற்றிலும் பாதிக்கப்பட்டு முதிர் மனநோயினாலேயே (Alcoholic Psychosis) அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். உறக்கமின்மை, தனக்குத்தானே பேசி - சிரித்துக் கொள்ளுதல், காரணமற்ற கற்பனை எண்ணங்கள், கோபம், வெறுப்புணர்ச்சி, யாரும் இல்லாதபோதே - யாரோ காதில் பேசுவது, பயமுறுத்துவது (Hallucination). தன்னை யாரோ பின் தொடர்வது போன்ற பிரமை - தனக்கு மனநோய் இருப்பதையும் அதற்குக் காரணமே குடிதான் என்ற உண்மையையும் உணரமுடியாமல் போகின்ற நிலை; முதலிய அனைத்தும் இந்த முதிர்மனநோயால் காணப்படும் அறிகுறிகளாகும்.

இது தவிர, வெகுநாள் குடிப்பழக்கத்தில் உள்ளவர்க்கு நினைவு குழப்பமடைந்து, மறதி அதிகரித்து மூளையின் செயல்கள்யாவும் பாதிக்கப்பட்டு, மூளைத்திறன் மழுங்கு நோயால் (Alcoholic Demention) பாதிக்கப்படவும், வாய்ப்பு உள்ளது. குடிப்பழக்கம் ஒருவனிடத்து வன்முறை உணர்ச்சிகளையும், ஆவேச எண்ணங்களையும் தூண்டிவிடும். வன்முறையிலும், வெறிச் செயலிலும், ஈடுபடும் பல சமூக விரோதிகளின் போக்கைக் கவனித்தால் - குடிப்பழக்கத்தில் ஈடுபடுபவர்களே அவர்கள் என்பது தெளிவாகும்.

### விபத்துக்கான காரணங்கள்

குடிப்பழக்கம் மனிதனிடம் நினைவுத் தடுமாற்றத்தை உண்டு செய்து, பலவேறுவித விபத்துக்களையும் ஏற்படுத்தும். சாலை விபத்துக்களுக்குக் காரணம் என்னவென்று பாருங்களேன்! வாகனங்களை ஓட்டி வரும் பெரும்பாலான ஓட்டுநர்கள் குடிபோதையில் (Drunken Driving) இருந்ததாகவே அத்தகைய விபத்துக்கள் தொடர்பான ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

நீண்ட நாள் குடிப்பழக்கம் உள்ளவர்கள் தங்களின் குடியை ஓரிரு நாட்கள் நிறுத்தும்போதும், அளவைக் குறைக்கும்போதும், மனக் குழப்ப நடுக்க நோய்களுக்கு (Delirium Tremens) ஆளாக நேரிடும் அவர்கள் உடனடியாக மருத்துவ உதவி பெற்றால் அவர்கள் குடி தொடர்பான ஆபத்தில் இருந்தும் தப்பலாம், குடிப்பழக்கத்தை விட்டு விடவும் அது ஒரு வாய்ப்பாக அமையும்.

வெகுநாள் குடிப்பழக்கம் வைட்டமின் 'பி' குறைபாடுகளை - முக்கியமாக 'தயமின்' (Thiamine) என்ற 'பி' வைட்டமின் குறைபாட்டை ஏற்படுத்தி - மூளைப் பாதிப்பையும், அதன் அடிப்படையிலான மனநோயையும் உண்டு பண்ணுகிறது.

குடிநோய் காரணமாக ஏற்படும் மனநோய்கள் பலப்பல ஆகும். இவை குடிநோயாளிகள் யாருக்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் வர வாய்ப்பு உள்ளது.

### நாடு பாராட்டும் நடவடிக்கை

குடியினால் நேரிடும் உடல், மனநோய்களைத் தவிர்க்கும் ஒரே வழி குடிப்பழக்கத்திலிருந்து விடுபடுவது மட்டும்தான். இதற்கான முறையான சிகிச்சையை மனநல மருத்துவர்களிடம் பெற்று, மறு வாழ்வு பெறுவதுதான் அறிவுடைமையாகும். இதற்கான முறையான ஒத்துழைப்பும் குடும்ப ஆதரவும் குடிநோயாளிகளை மனிதர்களாக வாழ வழி செய்யும்.

தமிழக அரசானது மதுக்கடைகளை மூடியதும், குடிநோய் நீக்கும் முக்கியத் தடுப்பு நடவடிக்கை ஆகும். இதை நாடு பாராட்டும். மதுவினால் ஏற்படும் உடல், மனநல பாதிப்புக்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்ப சமூக பாதிப்புகள் ஆகியவற்றை முறையாகச் செய்திகள் மூலமோ, படம் பிடித்துக் காட்டியோ மக்களிடத்து அறிவுறுத்த வேண்டும். குடிநோய் வரவாய்ப்புகள் அதிகம் உள்ளவரிடம் கவனம் அதிகம் செலுத்துதல் வேண்டும்.

"படிப்படியாக நான் குடிப்பதை விட்டுவிடுவேன்" என்று நம்மை ஏமாற்றுவதற்காகக் குடிநோயாளி சொல்வதெல்லாம் அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் வேலைகளே!

குடிநோயின் கோரத்தை அறிந்து அதனை உடனடியாக, முழுமையாக விட்டுவிட, குடிநோயாளிகள் மருத்துவ உதவியை நாடுவதே புத்திசாலித்தனம் ஆகும். குடியினால் ஏற்படும் அவமானம் தனக்கு மட்டுமல்ல; தன் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோருக்கும்தான் என்பதை அவர்களெல்லாம் உணர வேண்டும்.

"துஞ்சினார் செத்தாரின்
வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்".

- குறள்

### கூட்டுறவுச் சங்கங்கள் கலைப்பு

தமிழ்நாட்டில், 1990-ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் குழுமங்களைக் கலைத்துவிட்டு, அதன் நிர்வாகத்திற்குத் தனி அலுவலர்களை நியமிக்கும் அவசரச் சட்டம் 29.7.91 அன்று தமிழ்நாடு அரசால் பிறப்பிக்கப்பட்டது.

### கோவை மாவட்டத்தில்...

**கோ**வை மாவட்டத்தில் உள்ள சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தியைப் பெருக்க உதவும் பெருநோக்குத் திட்டத்தின்கீழ் புதிய கிணறு தோண்டுதல், கிணறுகள் ஆழப்படுத்துதல், மோட்டார் பம்ப் செட் அமைத்தல், ஆயில் இஞ்சின் பொறுத்துதல், பைப் லைன் மற்றும் பம்பு ஹவுஸ் சப்மெர்சிபில் பம்ப் மோட்டார் பாசனத்திற்கு வாய்க்கால் மற்றும் குழாய் அமைத்தல் (நிலத்தடி பைப் லைன்) கிணற்றில் பக்கச் சுவார் கட்டுதல், நிலம் சமன் படுத்துதல், நிலம் சீர்படுத்துதல் ஆகியவற்றுக்காக வங்கிக் கடனும், அரசு மானியமும் வழங்கப்படுகிறது.

இக்கடனுதவி பெற ஐந்து ஏக்கர் புஞ்சை அல்ல 2.5 ஏக்கர் நஞ்சைக்குக் குறைவான நிலமுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களை அணுகி கடனுதவியைப் பெற்று பயன்பெறலாம்.

30.7.91 அன்று உடுமலைப்பேட்டை வட்டம் துங்காவி கிராமத்தில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு.கலைவாணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மனுநீதி மக்கள் தொடர்பு நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தீர்வு தெரிவிக்க வேண்டி முன்கூட்டி பெறப்பட்ட 213 மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. நடவடிக்கைக்கு உரிய பெரும்பாலான மனுக்கள் குடும்ப அட்டை வழங்கக் கோரியும், கடனுதவி கோரியும், முதியோர் உதவித்தொகை கோரியும், குடிநிர் வசதி கோரியும் பெறப்பட்டவை ஆகும். இக்கூட்டத்தில் மனுதாரர்களின் பெரும்பாலான நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

திரு. கருப்பசாமி என்ற உடல் ஊனமுற்றவர்க்கும் கணவனால் கைவிடப்பட்ட திருமதி. செல்வி என்கிற பெண்ணுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முதியோர் உதவித் தொகையை இக்கூட்டத்தில் வழங்கினார். நலிந்தோர் நலத் திட்டத்தின் கீழ் 4 பேர்களுக்குத் தலா ரூ.3,000, மற்றும் 26 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா, 11 பேர்களுக்கு சலவைப் பெட்டிகள், 110 பேர்களுக்குக் குடும்ப அட்டைகள் ஆகியவை இக்கூட்டத்தில் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்திலேயே இக்கிராம மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் 270 மனுக்களை நேரடியாக அளித்தனர். மெட்ராத்தி கிராமத்தில் இச்சிப்பட்டியைச் சார்ந்த சம்பூரணம் என்கின்ற பெண்மணி, தனது வறிய நிலையை எடுத்துக்கூறி தொழில் செய்ய கடனுதவி வழங்கக் கோரினார். இவருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், செம்மறி ஆடுகள் வளர்க்க ரூ.6,000 கனரா வங்கி மூலம் வழங்க வழிவகை செய்யப்பட்டது. இதேபோல பணத்தம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கார்த்திகேயணி என்ற பெண்மணிக்கும் உதவி செய்ய உறுதியளிக்கப்பட்டது.

# பார்த்தோம் படித்தோம்

1.7.91 தமிழரசு இதழில், தமிழக முதல்வர் பதவி ஏற்கும் காட்சி மற்றும் அமைச்சர் பெருமக்கள் பதவி ஏற்கும் காட்சி அத்துடன் 230 தொகுதி வாக்குகள் பெற்ற விவரம் யாவும் காணக் கிடைக்காத காட்சி ஆகும்.

-எஸ்.பி.வேலு
நஞ்செய்தயையூர்
(பெரியார் மாவட்டம்)

16.7.91 தமிழரசு இதழில், தமிழ்நாட்டுத் தன்னிகரற்ற தலைவர்களின் பிறந்த நாளில் அட்டைப் படத்தில் அவர்களின் திருவுருவப் படத்தையும் போட்டு, உள்ளே அவர்களைக்குறித்த கட்டுரைகளையும், வாழ்க்கைக் குறிப்புகளையும் வெளியிட்டு வரும் ஒரே இதழ் தமிழரசு எனலாம்.

—ந. சுந்தரபுத்தன்,
கண்கொடுத்தவனிதம்
(தஞ்சை மாவட்டம்)

தமிழக முதல்வரின் ''தமிழ் நாட்டின் உயிர்நாடி காவிரி'' என்ற கட்டுரையும், ''ஈடிணையற்ற மக்கள் தலைவர் ராஜீவ் காந்தி'' என்ற உரைக் கட்டுரையும் உரத்த சிந்தனையுடன் உணர்த்தி நிற்கின்றன!

—அரிமா. பூபாளம்
ப.முருகேசபாண்டியன்,
(கோவை மாவட்டம்)

கர்மவீரர் காமராசர் நாட்டுக்குச் செய்த அரிய சேவையை, இரா.சதாசிவன் அவர்கள் எழுதிய கட்டுரை உணர்த்தியது.

—ப.அருணாசல சண்முகம்,
களம்பூர்
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

''ஆடிப்பட்டம் தேடி விதை'' கவிதை அருமை, இனிமை. விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் அலுவலும், அறுவடையும் இருப்பதைப் பாங்குடன் பகர்ந்த கவிதைக்கும், கவிக்கும், வெளியிட்ட தமிழரசுக்கும் பாராட்டுக்கள்.

—எஸ்.வி.நரசிம்மன்.
சின்னமனூர்.

''மது ஒழிப்பு'' (16.7.'91) கட்டுரை என் மனதை வெகுவாகத் தொட்டது. கட்டுரையில் கூறப்பட்டுள்ள மதுவின் தீமைகளையும், அதனால் பெண்கள் படும் இன்னல்களையும், குடிப்பழக்கமுள்ள ஒவ்வொருவரும் படித்து, குடிப்பழக்கத்தைக் கைவிட்டால் பெரும்பாலான பெண்களின் துயர் துடைக்கப்படும் என்பது உறுதி!

—சு.காவேரி,
வாழப்பட்டாம் பாளையம்.

மது ஒழிப்பு கட்டுரை மதுவினால் உண்டாகும் தீமைகளைத் தெள்ளித் தெளிவாகக் கூறியது. இது, குடிப்பழக்கம் உள்ளவருக்கு ஒரு பாடமாக அமைந்திருந்தது.

—த.வசந்தாராஜா,
வாழப்பாட்டாம்பாளையம்.

''மதுவை ஒழிப்போம்'' பிரேமா நந்தகுமார் எழுதிய கட்டுரை பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.

—சி.அப்பர் சுந்தரன்,
உ.அம்மாபட்டி


**மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,**
**மதுரை-1.**

வாழ்வு வளம்பெற உங்கள் செல்லக் குழந்தைகளின் எதிர்காலம் செழிப்புற சிறப்புமிக்க எமது சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து இதர வங்கிகளைவிட அரை சதவிகித கூடுதல் வட்டி பெற்றுப் பயன்பெறுங்கள்.

1. வளரும் செல்வங்களுக்கு வளர்மதி சிறப்பு டிபாசிட்.
2. அணையா விளக்கு.
3. அமுதசுரபி,
4. ரொக்கச் சான்றிதழ்,
5. நிலையான இட்டுவைப்புகளுடன் ஏனைய வங்கிப் பணிகளும் உண்டு.

தங்கள் விலையுயர்ந்த உடைமைகளுக்குக்கொரு பாதுகாப்புப் பெட்டக வசதியுடன் கூடிய 14 கிளைகளும், தலைமையகமும் உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறது.

ஏனைய விவரங்களுக்கு, மாவட்டமெங்கிலுமுள்ள எமது 34 கிளைகளையும், தலைமையகத்தையும் அணுகும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

**தனி அலுவலர்.**




# சிந்தை கவரும்
# சிறுவர் அருங்காட்சியகம்

**நம்** நாட்டுத் தேசியக் கொடியின் வண்ணம் நமக்கும் தெரியும். ஆனால், அமெரிக்க நாட்டுத் தேசியக் கொடி எப்படி இருக்கும்?

கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் எப்படித் தயாரிக்கப்படுகிறது?

செயற்கைக் கோள் எவ்வாறு இயங்குகிறது ?

இந்த வினாக்களுக்கெல்லாம் விடை காண மட்டுமல்ல, விளக்கக் காட்சியையும் கண்டு மகிழ, சென்னை எழும்பூரிலுள்ள அரசு அருங்காட்சியக வளாகத்திலுள்ள சிறுவர் அருங்காட்சியகத்துக்குச் (Children's Museum) செல்ல வேண்டும்.

## கற்கால மனிதனும், தற்கால மனிதனும்

அமைதியான சூழ்நிலை. அழகிய சுற்றுப்புறம். இவற்றுக்கு மத்தியிலே எழிலுற அமைந்திருக்கிறது சிறுவர் அருங்காட்சியகம்.


1988-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற இவ்வருங்காட்சியகம், மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

●●●

**தமிழில் கலைக் களஞ்சியங்கள் வெளிவந்துள்ளன. அதேபோல சிறுவர்க்கென்றும் சிறுவர் கலைக் களஞ்சியம் வெளிவந்துள்ளது. பெரியவர்களுக்கென்று நூலகங்கள் இருந்தாலும் சிறுவர்க்கென்று நூலகமும் உள்ளது. 'சிறுவர் பூங்கா'க்கூட இருக்கிறது. அதைப்போல அருங்காட்சியகங்கள் பல இருந்தாலும், சிறுவர் அருங்காட்சியகம் ஒன்றும் சென்னையில் உள்ளது. இதன் சிறப்பு என்ன? அதை விளக்குகிறது இக்கட்டுரை...**

●●●

அவை: 1. நாகரிகங்கள் 2. பொம்மைகள் 3. அறிவியல்.



STEGOSAURUS
ஸ்டீகோசரஸ்

முதலில் நாம் பார்ப்பது, 'நாகரிகங்கள்' என்னும் பிரிவாகும்.

எந்தெந்தக் காலத்தில், எந்தெந்த நாகரிகம் தோன்றியது என்பதற்கான விளக்கக் காட்சிகள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

இங்கே கற்கால மனிதனையும் பார்க்கிறோம்; தற்கால மனிதனையும் பார்க்கிறோம். அதாவது வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன், பழைய கற்கால, இடைக்கால, புதிய கற்கால மனிதனின் படிப்படியான வளர்ச்சிகளை வண்ண ஓவியங்கள், பொம்மைகள் வாயிலாக இங்குள்ள கண்ணாடிப் பேழைகள் நமக்குக் காட்டுகின்றன.

கற்கால மனிதனின் கரடுமுரடான கற்கருவிகள், புதிய கற்கால மனிதனின் ஒழுங்கான கற்கருவிகள், அவற்றின் மூலம் அவன் வேட்டையாடியது. விலங்குகளின் இறைச்சியை உணவாக உட்கொண்டது, அவற்றின் தோலை ஆடையாக அணிந்து கொண்டது ஆகியவை அழகுற சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

அக்கால மனிதன் பயிர்த் தொழிலைச் செய்யக் கற்றுக் கொண்ட போது, அவன் வாழ்ந்த கிராமம் எப்படி இருந்திருக்கும் என்று யூகித்து, அந்த முதல் கிராமத்தை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்திருக்கிறார்கள்.

## நாகரிகத்தின் கதை!

மனித நாகரிகங்கள் தொடக்கமே ஆற்றங்கரையில்தானே? முதலில் நம் கண்ணில் படுவது சுமேரிய, எகிப்து நாகரிகங்களாகும். கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமேரிய நாகரிகத்தின் 'சுமர்' நகரின் அமைப்பின் மாதிரியைக் கண்டு வியக்கிறோம். இவர்களின் கோயில், அரண்மனை, இவர்கள் வழக்கத்தில் கொண்டிருந்த எழுத்துக்கள் முதலானவை சுமேரிய நாகரிகத்தின் மேன்மையைப் பறைசாற்றுகின்றன.

இதேபோல எகிப்து நாகரிகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் காட்சி அமைப்புகள், நம் மனத்தைத் தொடுவனவாக உள்ளன. சரித்திரப் பாடப் புத்தகத்தில் நாம் படித்த 'பிரமிடு'களை இங்கே நாம் பார்த்து பிரமிக்கிறோம். இந்தப் பிரமிடுகள் எப்படிக் கட்டப்பட்டன என்பதை இங்கே பார்த்துத் தெரிந்து கொள்கிறோம். எகிப்திய மன்னர்களான 'பரோக்கள்' இறந்த பிறகு, அவர்களது உடல் பதப்படுத்தப்பட்டு இந்தப் பிரமிடுகளில் வைத்துப் பாதுகாக்கப்பட்ட செய்தியை நாம் ஏற்கெனவே படித்திருக்கிறோம் அல்லவா?

மொகஞ்சதாரோ, ஹரப்பா என்றதும் நம் நினைவுக்கு வருவது, சிந்து சமவெளி நாகரிகம்தான். இவற்றின் மாதிரி அமைப்பு நம்மை மெய்மறக்கச் செய்கிறது. அடுத்து நாம் காண்பவை, பாபிலோனிய, ஆசீரிய, எபிரேய, பினிஷிய, மினோவா, மைசினிய நாகரிகங்களாகும்.

## உழைப்பின் சின்னம்

அதோ, அங்கே காட்சி தருவது எது தெரியுமா? ஏதென்ஸ் நகரம்!

அதைப் பார்த்ததும் கிரேக்கப் பேரறிஞர்களான அரிஸ்டாடில், பிளேட்டோ ஆகியோர் நம் நினைவுக்கு வருவது ஒருபுறமிருக்க, அங்கே அமைக்கப்பட்டுள்ள அழகிய மலையின் மீது, ஏதென்ஸ் தேவதை கோயில் கொண்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது.

பார்த்துக் கொண்டே போகிறோம். செல்டிக் நாகரிகம் நம் கண்ணில் படுகிறது. அதற்கு அடுத்ததாக இருப்பதுதான், உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர். 1,400 மைல் நீளமுள்ள இந்தப் பெருஞ் சுவரைப் பார்க்கிறோம் - மாதிரிதான்! இதனை எழுப்ப



எவ்வளவு மனித உழைப்பு தேவைப்பட்டிருக்கும். ஆம். உழைப்பின் சின்னமாகவும் அதைக் கருதலாமே!

அடுத்து உள்ள கண்ணாடிப் பேழையைப் பார்க்கிறோம். மாயமும் இல்லை. மந்திரமும் இல்லை. மாயன் நாகரிகத்தையே அது சித்திரிக்கிறது. கி.மு. 2000 ஆண்டில், மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த இம்மக்கள், எகிப்தியர்களைப் போன்றே பிரமிடுகளைக் கட்டினார்கள். கல்லறைகளை அமைத்தார்கள்.

## பண்டைத் தமிழகத்தைப் பார்ப்போமா?

இப்போது நாம் வந்திருப்பது, பண்டைத் தமிழகத்துக்கு!

ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - இவற்றுக்குரிய தெய்வங்கள், இந்நில மக்களின் தொழில்கள் எல்லாம் பாங்காய்க் காட்சியளிக்கின்றன.

பொம்மைகள் என்றால் யாருக்குத் தான் ஆசை வராது? குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் கூட அவை மெய்மறக்கச் செய்யுமே!

அதோ, எத்தனை வகையான பொம்மைகள்!

'ஒன்றே குலம்' என்று உணர்த்தும் உலக நாட்டுப் பொம்மைகள்!


அமெரிக்கா, மெக்சிகோ, ஹவாய், நியூசிலாந்து, பிஜித் தீவு, யுகோஸ்லாவியா, ஹங்கேரி... இப்படி உலக நாட்டுப் பொம்மைகள் கண்ணைக் கவரும் வகையில் வண்ண வண்ண உடைகளுடன் காட்சி தருவது கண்களுக்கு நல்ல விருந்து.

நமக்கென்று நடை, உடை, பாவனைகள் உண்டு. குறிப்பாக

சிறுவர் அருங்காட்சியகத்தின் முகப்பு







கிரேக்க நாகரிகம்- ஏதென்ஸ் நகரின் அமைப்பு

ஆடை அணிகலன்களை எடுத்துக் கொண்டால், உலக நாட்டு மக்கள் எப்படி ஆடை உடுத்துவார்கள் என்பதற்கு, அந்தந்த நாட்டு மக்களே நம் கண்முன் தோன்றுகிறார்கள் - பொம்மை வடிவாக!

## ஒவ்வொன்றும் ஒரு விதம்!

நடனங்கள் பலவிதம். அவை ஒவ்வொன்றும் ஒருவிதம்.

கேரளாவின் கதகளி, உத்திரப் பிரதேசத்தின் கதக், ஆந்திரத்தின் குச்சிப்புடி, மணிப்பூரின் மணிபுரி, தமிழ்நாட்டின் பரதநாட்டியம் - எல்லா நடனங்களையும் ஒரே சமயத்தில் பார்க்கும் வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்?

ஒரு கண்ணாடிப் பேழையில், 57 நாட்டுக் கொடிகள் காட்சி அளிக்கின்றன. மத்தியில் நம் நாட்டுக் கொடி காட்சி தருகிறது. அவற்றை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு அப்பால் செல்கிறோம்.

வெளிநாட்டுப் பொம்மைகளைப் பார்த்து மகிழ்ந்த நமக்கு, நம் நாட்டுப் பொம்மைகளைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநில மக்களையும் சித்திரிக்கும் அந்த ஒவ்வொரு பொம்மைக்கும் பின்னால், அம்மாநில முக்கியத்துவத்தைக் குறிக்கும் செய்திகளும் வரையப்பட்டுள்ளன.

## அற்புத உலகம்

இது அறிவியல் உலகம் -
இந்த உலகமே அலாதியானது.
அற்புதமானது -

இந்த விந்தை உலகத்தினுள் நுழைகிறோம்!

முதலில் நாம் வாழும் பூமியைப் பார்க்கிறோம். அங்கே எரிமலை தத்ரூபமாக அமைக்கப்பட்டிருக்கிறது. சூரியக் குடும்பம் உருவான கதையும் தெரிந்து கொள்கிறோம்.

அன்னை பூமி அள்ளித்தரும் செல்வங்கள் எண்ணில. இந்தியாவில் கனிமங்கள் எங்கெங்கு கிடைக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, அந்தக் கனிமங்களின் மாதிரிகளும் கூட இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

அற்றுப்போன விலங்குகளைச் சற்றுப் பார்ப்போமா?

200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்த பயங்கரப் பல்லிகள், டைமெட்ரோடரின், பிராண்டோசாரஸ், ராம்போரன்கஸ், டிரைசிரடாம்ஸ், ஸ்டீகோசரஸ் ஆகிய விலங்குகளைப் பார்த்து அதிசயிக்கிறோம். அதைவிட அதிசயம், இவையெல்லாம் சுத்த சைவமாம்! இயற்கையின் மாறுபட்ட சூழ்நிலைகளினால் இவையெல்லாம் அற்றுப்போயினவாம்.

அடுத்து நாம் காண்பது அற்றுப்போன பறவை இனங்களை!

ஆர்கியாடெரிக்ஸ் என்பது ஒரு பறவை. இதுவே உலகில் தோன்றிய முதல் பறவை! அது எப்படி இருக்கும் என்பதை இங்கே பார்க்கிறோம். 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த 16 அடி உயரமான இன்னொரு பறவையும், அதன் முட்டையும் மாதிரிகளாக இங்கே வைக்கப்பட்டிருக்கிறன்றன.

இதேபோல, அற்றுப்போன பாலூட்டிகளையும் பார்க்கிறோம். இவை 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவை.

## காட்சியும் மாட்சியும்

அடுத்து நாம் வருவது, தாவர உலகத்துக்கு. இங்கே இயற்கையின் அற்புதங்களைப் பார்த்து மகிழ்கிறோம்.

மனிதன் முழுமனிதனாக விளங்குவதற்குப் 'பொது அறிவு' மிகமிக அவசியமாகிறது.

வெப்ப நீருற்று எங்குள்ளது?

இமாசலப்பிரதேசம், பஞ்சாப், காஷ்மீர் மாநிலப் பொம்மைகள்



## விடுதலைக்கு வித்திட்ட வீரர் வ.உ.சி.



**1908**-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9-ஆம் நாள் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க வீரத் திருநாள். அன்று வங்காளத்தில் சிங்கம்போல் திகழ்ந்த விபின் சந்திரபால் ஆறு மாதச் சிறைத் தண்டனை முடிந்து விடுதலையான நாள்.

தேசத் தொண்டரான விபின் சந்திரபால் செய்த குற்றம் என்ன? ஆங்கிலேய அரசு அரவிந்தரின் மீது தேசத் துரோகக் குற்றம் சாட்டி வழக்கு தொடர்ந்தது. அரவிந்தருக்கு எதிராகச் சாட்சி கூறும்படி விபின் சந்திரபாலை அரசு கூறியது. அவர் மறுத்துவிட்டார். அதற்காக ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றார். அவரது விடுதலையை வங்காளம் மட்டுமல்ல நாடே கொண்டாடியது.

விபின் சந்திரரின் விடுதலை நாள் விழாவைத் தூத்துக்குடியில் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுச் செயல்பட்டார் ஒரு வழக்கறிஞர். இந்த விழாவின் மூலம் மக்களிடம் நாட்டுப்பற்றையும் சுதந்திர வேட்கையையும் வளர்க்க எண்ணினார் அவர்.

'பாலர் மீள்தினம்
பாரும் மீள்தினம்
சீலர் யாவரும்
சேர்வோம் அத்தினம்'

என்று முழக்கமிட்டார். அவரது குரல் கேட்டு நகரமே திரண்டது. நாடே அதிர்ந்தது.

ஆற்றல் மிக்க அந்த வழக்குரைஞரையும் அவரது நண்பரையும் அவர்களது விடுதலைப் பேச்சையும் செயலையும் கண்டு அஞ்சிய ஆங்கிலேய அரசு மார்ச்சு 12-ஆம் நாள் கைது செய்து வழக்கு விசாரணை என்று நாடகமாடியது.

அப்பொழுது திருநெல்வேலியில் நீதிபதியாக இருந்த ஆங்கிலேயர் வழக்கை விசாரித்து அந்த வழக்குரைஞருக்கு நாற்பதாண்டுகள் 'தீவாந்தரத் தண்டனையும்' அவரது நண்பருக்குப் பத்தாண்டுகள் தீவாந்தரத் தண்டனையும் விதித்தார். தீவாந்தரத் தண்டனை என்றால் நாடு கடத்தப்பட்டு அந்தமான் தீவில் அடைபட்டுக் கிடக்க வேண்டும். நாட்டுத் தொண்டிற்கும் பற்றுக்கும் அன்று கிடைத்த 'பரிசு' இது!

இந்தக் கொடுமையான தீர்ப்பைக் கேட்டு நாடே கலங்கியது. ஆனால் அந்த வழக்குரைஞரும் அவருடைய நண்பரும் சிறிதும் மனம் தளராமல் 'வந்தேமாதரம்' என்று முழக்கமிட்டுக் கொண்டே சிறை சென்றனர்.

அந்தச் சிங்கத் தமிழர்தான் ''கப்பலோட்டிய தமிழன்'' என்று நாடு போற்றிய வ.உ. சிதம்பரம் பிள்ளை. அவருடன் சிறை சென்ற அவரது நண்பர் பெயர் சுப்பிரமணிய சிவா. தமிழகத்தின் விடுதலை இயக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்து விடுதலைக்கு வித்திட்ட வீரர் வ.உ.சி.யின் வாழ்க்கை ஒரு தீரரின் வீர வரலாறாகும்.

**—''புதிய அறம் கூற வந்தோர்'' என்னும் நூலிலிருந்து.**

*உலகின் மிகப் பெரிய பாறை எது?*

*மிக உயரமான அருவி எங்கு உள்ளது?*

இதுபோன்ற பல வினாக்களுக்கு விடையை அங்கேயே நாம் தெரிந்து கொள்கிறோம், ஒரு மின்சாரப் பொத்தானை அழுத்துவதன் மூலமாக!

நமது உடல் அமைப்பு விசித்திரமானது. அதையும் இங்கே பார்த்துத் தெரிந்து கொள்கிறோம். இதே போல விலங்குகள், மண்புழு, மீன், தவளை, ஓணான், பறவை, முயல் ஆகியவற்றின் உட்புற உடலமைப்பையும் பார்க்கிறோம்.

காட்சிக் கூடங்களைக் காணக் காண அவற்றின் மாட்சிகள் நம் மனத்தில் பதிகின்றன.

### தோற்றமும் ஏற்றமும்

காந்தம், மின்சாரம், மின்னணு ஆகியவை இயங்கும் விதம் மிகவும் பயனுள்ளது.

போக்குவரத்தின் தோற்றமும் மாற்றமும் - ஏற்றமும் இங்கே விளக்கப்பட்டுள்ளன. தரை, நீர் வழி, ஆகாயப் போக்குவரத்துக்களின் வளர்ச்சிகளைக் காட்டும் மாதிரிகள் - உதாரணமாக 1885-இல் தோன்றிய சைக்கிள், 1909-இல் உருவான மோட்டார் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

தொலைபேசி இயங்கும் விதமும், வானொலி ஒலிபரப்பும் விதமும் நம் கருத்தைக் கவர்கின்றன. 1924-இல் சென்னை வானொலியில் பயன்படுத்திய அசல் ஒலிபரப்புக் கருவி இங்கே வைக்கப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் இயங்கும் விதத்தையும், காகிதம் தயாரிக்கும் விதத்தையும் நாம் கண்டு, கேட்டுப் பயன்பெற வேண்டும்.

ஒரு ஜெர்மன் கிராமம் எப்படி இருக்கும்? அதை இங்கே பார்க்கிறோம். இந்தக் கிராமத்தில் ஓடும் ரயிலின் மாதிரியும் பார்க்கப் பரவசமூட்டும். இந்த ரயிலை ஜெர்மன் நாடு நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

*சிறுவர் அருங்காட்சியகம் -*

இது சிறுவர்க்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் அருங்காட்சியகமாகும்.

மாணவ மணிகள் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய - தங்கள் பாடத்தோடு தொடர்புடைய பல செய்திகளை அறிந்து கொள்ள வேண்டிய கலைக்களஞ்சியமாக இது விளங்குகிறது.

ஆரவாரம் மிக்க சென்னை மாநகரின் மையப் பகுதியிலே, இப்படி ஒரு அற்புத உலகம் இருக்கிறது என்பது எத்தனைப் பேருக்குத் தெரியும்?

வெள்ளிக்கிழமை தவிர, மற்ற நாட்களில் நம் உள்ளம் மகிழ்விக்கும் இந்த குழந்தைகள் உலகத்தை இன்றே பார்த்துப் பயன்பெறுவோம்!

**- பி.வி. கிரி.**





# விடுதலை இயக்கப் பாடல்கள்

இங்கிலாந்துக்கும் கிழக்கு நாடுகளுக்கும் இடையே வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக - இங்கிலாந்து மன்னர், முதலாவது ஜேம்ஸின் பிரதிநிதியாக சர் தாமஸ் ரோ என்னும் ஆங்கிலேயர் 1615 செப்டம்பர் திங்களில் இந்தியாவுக்கு வருகை புரிந்தார்.

அந்நாளில் இந்தியாவை ஆட்சி செய்து வந்த மொகலாய மன்னரான ஜஹாங்கீரைச் சந்தித்து, வியாபாரத்துக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொண்டார். வியாபாரத்தைப் பெருகச் செய்ததுடன் கிழக்கிந்தியக் கம்பெனி என்னும் நிறுவனம் அமைவதற்குரிய வலுவான அடித்தளத்தையும் உருவாக்கினார் ரோ.

அவருக்குப் பின்னர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த வியாபாரிகள் பலர், ஒவ்வொருவராக இந்தியாவுக்கு வந்து சென்றனர்.

**அடிமை வாழ்வு**

ஔரங்கசீப்பின் காலத்தில் வந்த ஜாப் கார்னாக் என்னும் ஆங்கிலேயர், வங்க மாநிலத்தில் கல்கத்தாவில் ஹூக்ளி நதிக்கரையில் 1,690 ஆகஸ்டு 24 அன்று ஆங்கிலேயர்களின் கொடியை முதல் முதலில் பறக்கவிட்டு தங்களது வளர்ச்சிக்கு வழி வகுத்தார்.

பின்னர் வந்த ஆங்கிலேய அதிகாரிகள் கவர்னர் ஜெனரல்கள், வைஸ்ராய்கள் என்ற பெயரில் இந்தியாவுக்குள் நுழைந்தனர். இங்குள்ள குறுநில மன்னர்களிடையே இருந்த ஒற்றுமைக் குறைவைப் பயன்படுத்தி அவர்களுக்குள்ளே நடைபெற்ற போர்களில் தலையிட்டு ஒரு பகுதியினருக்கு உதவி செய்வதாகச் சொல்லி, அவர்கள் இந்திய மண்ணில் வேரூன்றத் தலைப்பட்டனர்; நிலங்களைச் சம்பாதித்துக் கொண்டனர். கொஞ்சம் கொஞ்சமாக இந்திய நாட்டை இங்கிலாந்து நாட்டுக்கு உரிமையுடையதாக்கி விட்டனர். இதன் காரணமாக இந்திய மக்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு அடிமை ஆகினர்.

மற்ற வல்லரசுகளுடன் ஆங்கிலேயர்கள் போர் தொடுத்த காலத்தில் எல்லாம் இந்தியாவும் இந்தியர்களும் அதில் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**விடுதலை உணர்ச்சி**

இந்தச் சூழ்நிலையில் 1885-இல் இந்தியர்களின் நலனுக்காக எழுந்தது இந்திய தேசிய காங்கிரஸ் தொடக்கத்தில், ''இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் அலுவல் தரப்பட வேண்டும்' என்பதுதான் இந்த இயக்கத்தின் கொள்கையாக இருந்தாலும், நாளடைவில் இயக்கம் வளர்ச்சி பெற்று 'இந்திய நாட்டின் விடுதலைதான் தனது குறிக்கோள்' என்ற கொள்கையை ஏற்படுத்திக் கொண்டது.

கோபாலகிருஷ்ண கோகலே, தாதாபாய் நெளரோஜி, பால கங்காதர திலகர் போன்ற பெரும் பெருந் தலைவர்கள் எல்லாம் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டனர். பின்னர் அண்ணல் காந்தியடிகள் இந்த இயக்கத்தில் ஈடுப்பட்டார். அவரது ஈடுபாட்டுக்குப் பின்னர் இயக்கம் வலுவடைந்தது. தன்னல மறுப்பும், அகிம்சையும் அவரது ஆயுதங்களாக மாறின. அதன் காரணமாக காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை இந்திய மக்கள் அனைவரின் இதயத்திலும் காந்தியடிகள் இடம் பெற்றார். மகாத்மா என்ற சிறப்புப் பெயரையும் மக்கள் அவருக்கு வழங்கினர்.

நாடெங்கும் தேசிய உணர்ச்சி பெருக்கெடுத்ததால்- ஆங்கில அரசு - அடக்குமுறையை அவிழ்த்து விட்டது. தடியடிப் பிரயோகம் - காட்டு தர்பார் - சிறையில் தள்ளுதல் - அராஜக நிகழ்ச்சிகள் - நூற்றுக் கணக்கானோரைத் துப்பாக்கிக்கு இரையாக்குதல் - இப்படிப் பலப்பல அநியாயங்களை ஆங்கில அரசு கட்டவிழ்த்து விட்டது. 'ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன' என்று எண்ணியிருந்த - சாதாரணப் பொது மக்களின் நெஞ்சத்தில் கூட விடுதலை உணர்ச்சி வீறிட்டெழச் செய்தது.

**நாடக மேடைகளில்...**

அரசியல் களத்தில் மட்டுமல்ல கலை, இலக்கிய மேடைகளிலும் காந்தியடிகளின் கொள்கைகள் முழங்கின. அண்ணல் ஏற்படுத்திய சுதந்திர உணர்ச்சி நாடக மேடைகளிலும் ஒலித்தது. நாடகத்தில் பங்கு கொண்ட கலைஞர்கள் - தேசிய உணர்ச்சிமிக்க பாடல்களையும் காந்தியடிகளின் புகழ்பாடும் பாடல்களையும் அவ்வப்போது ஆர்வத்துடன் பாடி வந்தார்கள். பொதுமக்களும், நாடக ரசிகர்களும் அந்தப் பாடல்களை விரும்பி வரவேற்றுப் போற்றினார்கள். அதுமட்டுமல்ல, ''தேசியப் பாடல் பாடுக'' என்று கலைஞர்களிடம் வேண்டுகோளையும் விடுத்தனர். நாடக நடிகர் - புராணப் பாத்திரத்தை ஏற்றிருந்தாலும் சரி, அது குறித்துக் கவலை கொள்ளாமல், மகாத்மாவைப் பற்றியும், கதர் இயக்கத்தைப் பற்றியும் மணிக் குரலில் பாடி, மக்களின் மனக்குமுறலுக்கு இதமளித்து வந்தனர்.

போராட்டங்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளை மட்டுமல்ல - தேசியப் பாடல் பாடியவரை





★ சுதந்திரம் பெறுவது கூட எளிது. ஆனால், பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பது மிகவும் கடினம். அதுபோலவே சுதந்திரம் கிடைத்ததால் ஏற்படும் பலன் எல்லோருக்கும் போய்ச் சேரச் செய்வது அதைவிட மிகக் கடினம்.

யும் கைது செய்து, சிறையில் அடைத்தது அந்நிய அரசு. இந்தத் துன்பத்தை எல்லாம் பொருட்படுத்தாமல் - நாட்டுக்காகப் பாடுபட்ட பாடகர்கள்-நடிகர்கள் மிகப் பலர். இந்திய விடுதலை கேள்வியில் நாடகக் கலைஞர்கள் ஆற்றிய பங்கும் குறிப்பிடத்தக்கது என்பதை மறந்துவிட முடியாது.

அத்தகைய கலைஞர்கள் பாடிய ஒரு சில பாடல்கள் 1933-இல் இசைத்தட்டுகளாகவும் வந்துள்ளன. இன்றைய தலைமுறையினர் இந்தப் பாடல்களைத் தெரிந்து கொள்வது அவசியம் என்பதால் ஒரு சிலரின் பாடல்களை, இங்கே தருகிறோம்.

### கதர்க்கப்பல் கொடி

**பாடியவர்: எஸ்.எஸ்: விஸ்வநாததாஸ்**

**பல்லவி**

கதர்க்கப்பல் கொடி தோணுதே
கரம்சந்த்ர மோகனதாஸ் காந்தி இந்தியா சுதேச
(கதர்)

**அனுபல்லவி**

அதற்கப்பால் ஞானாகாசம்
அதிலே பாரத வாசம்
இதற்குள் சிவப்ரகாசம்
இனி நமக்குச் சந்தோஷம் (கதர்)

**சரணம்**

மானிட சிப்பிக்குள்ளே
மகாத்மா ஓர் முத்துப்போலே
ஞானவடிவம் கொண்டு
நம்மைக் காக்க வந்ததாலே

லௌகீகம் விட்டால்
வைதீகம் பெற்றால்
மெய்தேகம் நாம்
நன்றாய்க் கொள்வோம் நாகரீகம் (கதர்)

பஞ்சத்தைப் பஞ்சால் வெல்வோம்
படையை உடையால் கொல்வோம்
வஞ்சத்தை விட்டகல்வோம்
மார்க்கத்திலே முயல்வோம்

மறை நேர்க்கும் இந்த
முறையேற்கும் மகாத்மா
உரைகாக்கும் நம்
மனைமக்கள் மானங் காக்கும (கதர்)

### காந்தியோ பரம ஏழைச் சந்நியாசி!

**பாடியவர்: கே.பி. சுந்தராம்பாள்.**

காந்தியோ பரம ஏழைச்சந் யாசி
கடவுளின் ப்ரதிநிதி யான விஸ்வாசி
சாந்த நெசவுவிவ சாயச் சுதேசி
சமத்துவச் சுதந்திரம் தருமுபன் யாசி (காந்தி)

தாழ்ந்த சோதரரின் தாய் தந்தை போலே
தரணியி லவதாரஞ் செய்தாரிக் காலே
ஆழ்ந்த கருத்துடைய ராட்டினத் தாலே
அடிமை யகற்றவந்தார் அன்பாய் முன்னாலே
(கா) (காந்தி)

மாசிலாத அவர் மார்க்கத்திற் சேர்வோம்
மடமைச் சாதிவித்யாச மாச்சர்யந் தீர்வோம்
கூசிடாம லன்பு கொண்டின்பம் ஆர்வோம்
கொடிய பஞ்சப்பிணியைக் கொன்றின்பஞ் சார்வோம்!
(காந்தி)

### ஆடு ராட்டே!

**பாடியவர்: எஸ்.ஆர். ரமாமணிபாய்**

நாட்டுப்பருத்தியை வித்து நீக்கி-நல்ல
நாகரீகமான பஞ்சுண்டாக்கி-நாம்
வீட்டிற் கொருவராய் மேற்கு நோக்கி-நன்றாய்
விரைந்து சுழன்றுநின் றாடுராட்டே-மகிழ்ந்

தாடு ராட்டே மகிழ்ந் தாடுராட்டே-சுய
ஆட்சியைக் கண்டோமென் றாடுராட்டே

கைத்தொழில் யாவையும் பறித்துப்போட்டார்-இதை
கேட்டாலெவர் தான் நகைக்கமாட்டார்-நன்றாய்
கிளர்த்தி யுணர்த்திநின் றாடுராட்டே

ஆடுராட்டே மகிழ் தாடுராட்டே-சுய
ஆட்சியைக் கண்டோமென் றாடுராட்டே

இந்து முஸ்லீம் மக்கள் ஒன்றுகூடி-காந்தி
இனிய தமிழ் பாஸ்கர கீதம் பாடி-
ஜெயமே அடைந்தோமென் றாடுராட்டே-சுய
ஆட்சியைக் கண்டோமென் றாடுராட்டே!

### சத்தியமெங்குமே தளரா நாடு!


**பாடியவர்: மதுரை எம். கண்ணம்மாள்**


சத்யமெங்கு மேதளரா நாடு-இந்து
தேசமதைப் புகழ்ந்து பாடு-இது
வித்யாநுகூலமுள்ள நாடு-இதில்
விளையுமல்லவோ சொர்ண மேடு (சத்ய)

கைத்தொழிலை விருத்திசெய்ய வாதா-இந்த
கன்னியரி யந்த்ரமென்ன தோதா-உள்ள
புத்தியும் நமக்குப்போ தாதா-காந்தி
போதனை நமக்குவொண் ணாதா (சத்ய)

மங்கள முடிக்கும் மனத் தலைவா-பிர்மன்
முடிச்சு அன்னிய நூலின் விளைவா-அது
மங்கையர் கழுத்தில் வந்துவிழவா-அதற்கு
மாங்கல்யமென்ற பெயருந்தரவா (சத்ய)

## அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்





அமெரிக்காவும், சோவியத் யூனியனும் தங்கள் வசமுள்ள அணு ஆயுதங்களில் 30 சதவிகிதத்தைக் குறைக்க ஒப்பந்தம் செய்துள்ளன. அமெரிக்க அதிபர் திரு ஜார்ஜ் புஷ்ஷும், சோவியத் அதிபர் திரு மைக்கேல் கார்பசேவும் அண்மையில் மாஸ்கோவில் சந்தித்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

அணு ஆயுதக் குறைப்பு பற்றிய பேச்சு வார்த்தை 1982-இல் துவங்கியது. கடந்த 9 ஆண்டுகால விவாதத்துக்குப் பிறகு முதன் முறையாகத் தொலை தூர அணு ஏவுகணைகளைக் குறைக்க இவ்விரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. இந்த ஆயுதக் குறைப்பு 7 ஆண்டுகளில் 3 கட்டமாக நடைபெறும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஒப்பந்தம் 15 ஆண்டுக் காலம் அமலில் இருக்கும்.

### சாந்த மிகுந்த காந்தி

**பாடியவர்: பி.எஸ். சிவபாக்கியம்**

ராஜி உடன் படிக்கை
முக்ய நட வடிக்கை
தேச குடி படைக்கே
நன்மை தரும் படிக்கே

**தொகையறா**

வைசிராயின் மாளிகையில்
வார்த்தை பேசிய நேர்த்தியாம்
(ராஜி) -

சாந்த மிகுந்த காந்தி வகுத்த
சாத்விக சட்ட மறுப்பையும்


தடுக்கும் சர்க்கார்
அடக்கு முறையின்

தாண்டவத்தையும் நிறுத்தியே
உப்பு வரி யொழித்தார்
ஒப்பியது மதித்தார்-அதிகார
வர்

காங்கிரசைத் தாங்கி நின்ற
கைதிகளை விடுவித்தனர் (ரா

தொகுத்த
புலவர் தமிழ்ப்பித்

## நீலகிரி மாவட்டம்



# மண் வளம் காப்போம்!

நீலகிரி மாவட்டம் எழிலுக்குப் பெயர் பெற்றது. இயற்கையின் பொழிலுக்கு இருப்பிடமாக அமையப் பெற்றுள்ளது. எங்கு நோக்கினும் வானளாவிய வளர்ந்தோங்கிய மரங்கள், பசுமை நிறைந்த புல் வெளிகள், தெளிந்த நீரோடைகள் தன்னகத்தே கொண்டு, கோடைக்கு இதமான மாவட்டமாக விளங்குவது நீலகிரி மாவட்டம்.

இயற்கை எழிலோடு காட்சி யளிக்கும் சில சமயங்களில் இம் மாவட்டம், இயற்கையின் இன்னல் களுக்கு இலக்காவதும் உண்டு. எனவே, இதனைக் கருத்திற்கொண்டு இம்மாவட்டத்தின் மண்வளத்தைப் பாதுகாக்க 1975-76-ஆம் ஆண்டு முதல் வேளாண்மைப் பொறியியல் துறையின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மண்வளப்பாது காப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மண் அரிப்பைத் தடுத்து மண் வளம் பாதுகாக்க சில பாதுகாப்புப் பணிகள் இத்துறை யினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. சம உயர கற்சுவர் அமைத்தல்
2. தடுப்புச்சுவர் அமைத்தல்
3. இடைவிட்ட சம உயரக் கால் வாய்கள் அமைத்தல்
4. காடுகள் வளர்த்தல்
5. சிறுசேமிப்புத் தொட்டிகள் அமைத்தல்
6. தடுப்பணைகள் அமைத்தல்
7. ஓடை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்

ஆகியவை முக்கியமானவையாகும்.

1975-76-ஆம் ஆண்டு முதல் 1990-91-ஆம் ஆண்டு வரை மொத்தம் 14,699.04 எக்டர் பரப்பில் ரூ.622.30 இலட்சங்கள் செலவில் இம்மாவட்டத்தில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கண்ட பணிகளால் பெரு விவசாயிகள் 47 பேர் சிறு விவசாயிகள் 328 பேர் நடுத்தர விவசாயிகள் 64 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 468 பேர் பயனடைந்துள் ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் வேளாண் மைப் பொறியியல் துறையின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத் தினரால் ஆய்வு செய்யப்பட்டு அதிகமாக மண் அரிப்பு ஏற்படும் 75 சிறு நீர்ப்பிடிப்புப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு மேற்கண்ட மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் விவசாயிகட்குத் தொழில் நுட்ப உதவியோடு அரசின் மானியம் மற்றும் கடனுதவியும் கிடைக் கின்றன.

இத்திட்டத்தின் மூலம் மேற் கண்ட பணியின் மொத்த மதிப்பில் சிறு மற்றும் பிற விவசாயிகளுக்கு 50 சதம் அரசு மானியமும் கிடைக் கிறது. மீதமுள்ள தொகை கடனாக எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் மேற்கொண்ட இரண்டு ஆண்டுகள் கழித்து 10 சம தவணைகளில் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப் படுகிறது.

1991 நிதியாண்டிற்கு இத் திட்டத்தின் கீழ் மண்வளப் பாது காப்புப் பணிகள் செய்ய, 1,500 எக்டர் பரப்பில் 77.55 இலட்சம் செலவில் திட்டங்கள் தயாரித்து அரசுக்கு அனுப்பப்பட்டு அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள விவ சாயிகள் மிகவும் சரிவான பகுதி களில்தான் விவசாயம் செய்து வருகின்றனர். நிலத்தின் சத்துமிக்க மேல்மண் மழை நீரின் விசையால் அடித்துச் செல்லப்படுவதால் இயற் கைச் சத்தை தாவரங்கள் இழக் கின்றன. மகசூலும் குறைகின்றது.


இவ்வாறு அடித்துச் செல்லப் படும் மேல்மண் மகசூலைக் குறைப்ப தோடு அணைகளில் தேங்கி அவற் றின் நீர் கொள்ளளவையும் குறைக் கின்றது. மேலும் அவ்வணையின் மூலம் கிடைக்கும் மின்சாரத்தின் அளவும் குறைகின்றது.

எனவே, விவசாயிகள் தங்கள் நிலத்தை மண் அரிப்பில் இருந்து பாதுகாத்து அதிக மகசூல் பெற்றிட வும், அணைக்கட்டுகளில் மண் சென்று தங்குவதைக் கட்டுப்படுத் திடவும், அணையின் மின் உற் பத்தியை அதிகப்படுத்தி நீலகிரி மாவட்டம் தொழில் துறையிலும் பிற துறைகளிலும் நன்கு முன்னேற வும் தங்கள் நிலங்களில் மேற்கண்ட மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க இத்துறை பெரிதும் உதவி புரிகிறது. இதன் மூலம் நீலகிரி மாவட்டத்தின் எழிலையும் வளத்தையும், வனச் செல்வங்களை யும் பாதுகாக்க அனைத்து நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படும்.

மண்வளம் காத்து, மலை வளம் காத்து, வனம் பல காத்து, மகசூலைப் பெருக்கி இம்மாவட்டத்தை முன் னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அனைவரும் ஒத்துழைப்போம்!



# அண்டார்டிகா ஒப்பந்தம்: சிறப்பு அஞ்சல்தலை வெளியீடு!



ஆயிரத்துத்தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்றாம் ஆண்டு ஜீன் 23-ஆம் நாள் ஏற்படுத்தப் பட்ட அண்டார்டிகா ஒப்பந்தம் பற்றி இரு சிறப்பு அஞ்சல்தலைகளை அஞ்சல்துறை ஜீன் 23-ஆம் நாள் வெளியிட்டது.

ரூ.5 மற்றும் ரூ.6.50 மதிப்பில் இந்த இரண்டு இரு வண்ண அஞ்சல்தலைகளும் வெளியிடப் பட்டன.

அண்டார்டிகா ஒப்பந்தம் 39 நாடுகளால் பின்பற்றப்பட்டு வருகிறது. அவற்றில் இந்தியா உட்பட 26 நாடுகளுக்கு ஆலோசனை வழங்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. அண்டார்டிகா தொடர்பான எல்லா முடிவுகளும் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான்எடுக்கப்படுகின்றன.

ஐரோப்பா கண்டத்தைவிடவும் பெரிதான அண்டார்டிகாவில் உலகின் சுத்த நீரில் 40 சதவீதம் பனிக்கட்டியாக உறைந்திருக்கிறது.

உலகிலேயே மிகக் குளிரான, பனிப்புயல் நிறைந்த பகுதியாகும் அண்டார்டிகா என்பது நாமறிந்ததே!

இந்தியாவின் முதல் அண்டார்டிகா பயணம் 1981-ஆம் ஆண்டுதான் நடைபெற்றது. 1984-இல், பனிக்கட்டியால் உருவாக்கப்பட்ட 'தக்ஷின் கங்கோத்ரி' நிலையம் இந்திய நிபுணர் களின் ஆராய்ச்சிக்குப் பயன்பட்டது. 1988-இல் அனைத்து ஆய்வு வசதிகளுடன் கூடிய மைத்ரி என்ற நிலையம் இதற்கெனக் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிறப்பு அஞ்சல்தலைகள் தொடர்பான முதல் நாள் அஞ்சல் உறையும் விளக்க ஏடும், நாட்டில் உள்ள அனைத்து அஞ்சல்தலை சேகரிப்பு நிலையங்களிலும் முக்கிய அஞ்சல் நிலையங்களிலும் ஜூன் 23 முதல் விற்கப்படுகின்றன.

# வந்தே மாதரம் வந்த கதை

'வந்தே மாதரம்' என்றால் என்ன?

இந்த இனிய பாடலை இயற்றியவர் யார்?

இந்த வினாக்களுக்குப் பின்னே ஒரு வரலாறே மறைந்து கிடக்கிறது. அந்த வரலாறு சுவையானது.

'வந்தே மாதரம்' என்றால், 'தாயே! நான் உன்னை வணங்குகிறேன்' என்று பொருள்.

'ஆனந்த மடம்' என்பது ஒரு வங்காள நாவல். இதிலே வரும் ஒரு பாடலின் முதல் வரிதான் 'வந்தே மாதரம்' ஆகும். இதனை இயற்றியவர் பங்கிம் சந்திரர். இவர் வங்காள மொழியில் எழுதிய அந்த நாவலின் பெயரே 'ஆனந்த மத்' என்பதாகும். அதுவே பின்னர் தமிழில் 'ஆனந்த மடம்' என்று வெளிவந்தது.

பங்கிம் சந்திரரால் வங்காள மொழியில் எழுதப் பெற்ற 'ஆனந்த மத்' என்னும் நாவல், 1882-ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஆனால், அதற்கு முன்பே இந்தப் பாட்டு இயற்றப்பட்டு விட்டது.

'வங்க தர்சன்' என்னும் வங்காள மொழிப் பத்திரிகை ஒன்று அப்போது வெளிவந்து கொண்டிருந்தது. அந்தப் பத்திரிகையில் பங்கிம் சந்திரர் நிறுவன ஆசிரியராகப் பணிபுரிந்தார். அந்த இதழில் தான் 'ஆனந்த மத்' நாவல் தொடர்ந்து வெளிவந்தது.

**'வந்தே மாதரம்' பாடல் எப்படி வந்தது? அதை விளக்குகிறது இக்கட்டுரை.**

பங்கிம் சந்திரர் மொழிப்பற்றோடு, நாட்டுப் பற்றும் மிக்கவராகத் திகழ்ந்தார். வாழ்நாள் முழுவதும் வெள்ளையரிடம் வேலை பார்த்தாலும், அவர் அவர்களுக்கு அடங்கி நடக்கவில்லை

பணியில் இருந்தபோதே அவர் இலக்கியத் தொண்டிலும் ஈடுபட்டார். முதன் முதலில் அவருடைய கவிதைகளே வெளியாயின. அவருடைய நாவல்களில் நாட்டுப் பற்றும், வீரமும் இழைந்தோடின.

நாட்டுப் பற்றை வலியுறுத்தும் நாவல்தான் 'ஆனந்த மடம்'. அதில் தான் முதன் முதலில் 'வந்தே மாதரம்' என்னும் நாட்டு வணக்கப் பாடல் இடம் பெற்றிருந்தது.

இந்த நாவலின் கதைச் சுருக்கம் இதுதான்:

ஒரு மடத்தில் சந்நியாசிகள் பலர் இருந்தனர். நாட்டைக் கைப்பற்றிய பகைவர்களை எதிர்த்து அவர்கள் வீர முழக்கமிட்டனர். தங்களுடைய இலட்சியம் நிறைவேறும் வரை அவர்கள் போராடினர். அதற்காக அவர்கள் உயிர் துறக்கவும் துணிந்தனர். இந்தத்துணிவுகளுக்கெல்லாம் அவர்களுக்குத் தாரக மந்திரமாக விளங்கியதுதான் 'வந்தே மாதரம்' என்னும் வீரம் செறிந்த பாடல்.

'ஆனந்த மடம்' ஒரு கற்பனைக் கதையே என்றாலும், அதில்தான் முதல் முதலில் அரசியல் கிளர்ச்சி கருத்துக்கள் கூறப்பட்டன. வெள்ளையர் அடக்குமுறையை எதிர்த்துப் போராடவும், தாய் நாட்டைக் காக்கவும் இளைய தலைமுறைக்கு வழி காட்டியது.





இந்தப் பாடலின் தொடக்கம் இதுதான்:

வந்தே மாதரம்...! வந்தே
மாதரம்!
ஸுஜலாம், ஸுபலாம், மலயஜ
சீதளாம்
ஸஸ்ய சியாமளாம்,
மாதரம்!
சுப்ர ஜ்யோத்ஸ்னாம் புளகித
யாமிநீம்,
புல்ல குஸுமிச த்ருமதள
சோபனீம்,
ஸுஹாஸ்னீம், ஸுமதுர
பாஷிணீம்
ஸுகதாம் வரதாம் மாதரம்!
(வந்தே)

தாய்நாடு காக்கத் தன் இன்னுயிரை ஈந்த வீரர்களுக்கெல்லாம் 'வந்தே மாதரம்' என்ற பாடலே தாரக மந்திரமாக இருந்தது.

'வந்தேமாதரம்' என்ற இந்த வீர முழக்கம், மூலை முடுக்கெல்லாம் பரவி வெள்ளையரை வெருண்டோடச் செய்தது. அத்தனைச் சக்தி இந்தப் பாடலுக்கு இருந்தது. அதன் அருமையினை உணர்ந்த தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் இந்தப் பாடலைத் தமிழாக்கம் செய்திருக்கிறார் என்றால் அதன் பெருமையினை நாம் நன்கு உணரலாம்.

மகாகவி பாரதியார் பாடிய அந்தப் பாடல் -

'வந்தே மாதாம்...! வந்தே மாதரம்!
இனிய நீர்ப்பெருக்கினை! இன்கனி
வளத்தினை!
தனி நறுமலயத் தன்காற் சிறப்பினை!
பைந்நிறப் பழனம் பரவிய
வடிவினை!
(வந்தே)


இந்தப் பாடலின் நூற்றாண்டு விழா, 1977-ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. தேசியப் பாடல் ஒன்று, நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது இதுவே முதல் தடவை.

1906-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 'வந்தே மாதரம்' என்ற ஆங்கில நாளிதழ் தொடங்கப் பட்டது. ராஜா சுபோத் சந்திர மல்லிக் என்பவரின் நன்கொடையால் இந்த இதழ் வெளிவந்தது. பிபின் சந்திரபால் அதன் ஆசிரியராக இருந்தார். பிறகு அரவிந்தர் அதன் இணையாசிரியராகப் பணி புரிந்தார். அரவிந்தரின் ஆற்றல் மிக்க கருத்துச் செறிவு கொண்ட எழுத்துக்கள் மூலம் 'வந்தே மாதரம்' இதழ் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியது அதன் தலையங்கங்கள் தேசிய உணர்வை ஊட்டின.

வந்தேமாதரத்தின் மூலம் முழுச் சுதந்திரக் கோரிக்கையை முதன் முதலில் எழுப்பியவர் அரவிந்தரே ஆவார். அவருடைய கருத்தை லோகமான்ய பாலகங்காதர திலகர் ஆதரித்தார். லாலா லஜபதிராய், விபின் சந்திர பாலர் ஆகியோரும் அதனை வெகுவாகப் பாராட்டினர்.

காங்கிரசின் 1886-ஆம் ஆண்டு மாநாட்டில், ரவீந்திரநாத் தாகூர் 'வந்தே மாதரம்' பாடலைப் பாடினார். அந்தப் பாடலுக்கு அவரே இசையமைத்தார். 1906-ஆம் ஆண்டில், காங்கிரசின் கல்கத்தா கூட்டத்திலும் அவர் இந்தப் பாடலை மீண்டும் பாடினார்.

— பி.வி.ஜி.



தமிழக அரசு கலப்புத் திருமண உதவித்திட்டம்

கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையில் கலப்புத் திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதிகளுக்குத் தமிழக அரசு தங்கப்பதக்கமும், ரூ.5,000/-க்கான சேமிப்புப் பத்திரமும் வழங்குகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த போது "தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்" எனப் பெயரிடப்பட்டுத் தொடங்கப்பட்டது. மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலும் இதே பெயரில் இத்திட்டம் செயல்பட்டுவந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் "அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித்திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இனி அது பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் அமைக்கப்பட்டது போலவே, "தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்" எனப் பெயர் பெறும். இந்த உதவியைப்பெற கலப்புத் திருமண தம்பதியினர் தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் 1990-91-ஆம் ஆண்டில் 507 தம்பதிகளுக்கு ரூ.25.35 இலட்சம் வழங்கப் பட்டது. 91-92-ஆம் ஆண்டில் 600 தம்பதிகளுக்கு ரூ.30 இலட்சம் வழங்கப்படும்.

—இத்தகவலை, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி. இந்திரகுமாரி அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் 30.7.91 அன்று தெரிவித்தார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

# தொலைக் கல்வியும் தொழில் வாய்ப்புகளும்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 1971-ஆம் ஆண்டு அஞ்சல் வழிக் கல்வித் துறையைத் தொடங்கியது. இவ்வஞ்சல்வழிக் கல்வித் துறை இந்திய நாட்டில் மிகத் தொன்மையானது. இக் கல்வித் துறையில் தொடக்க கால நிலையில் இருந்தே கல்வி அறிவும், பல ஆண்டுகள் பட்டறிவும் பெற்ற ஆசிரியப் பெருமக்கள் நிரந்தரப் பணி அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். இவ் ஆசிரியப் பெருமக்கள் மிக விரிவான பாடப் பொருளினைச் சுருக்கி மிகக் குறுகிய காலவரையறைக்குள் எடுத்துரைக்கும் திறன் பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

இந்திய நாட்டில் உள்ள அஞ்சல் வழிக் கல்வித் துறைகளில் மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள துறைகள் மட்டும் கல்வித் துறைப் பாடப் பகுதிகளை வானொலி வழி ஒலிபரப்புகின்றன. அவற்றுள் மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறையும் ஒன்றாகும். இதனால் கல்வி அறிவானது எவ்வித வாய்ப்புகளும் கிட்டாத கிராம, நாட்டுப்புறப் பகுதிகளையும் சென்றடைகின்றது.

இக்கல்வித் துறையினரால், தமிழ் இளங்கலை, முதுகலை போன்ற பட்டப் படிப்புகளும், பட்ட மேற் படிப்புகளும் கடல் கடந்து வாழும் மாணவர்களையும் சென்றடைகின்றன. குறிப்பாக, சிங்கப்பூர், மலேசியா போன்ற நகரங்களில் வாழும் தமிழ் மாணவர்கள் பலர் பயன் பெறுகின்றனர்.

அன்றியும் இவ் அஞ்சல்வழிக் கல்வித் துறை இந்திய நாட்டிலேயே மிகுதியான அளவிற்கு வெவ்வேறு பட்ட சான்றிதழ் வகுப்புகளையும் தொடங்கி நடத்தி வருகின்றது. இக்கல்வித் துறை 79 பிரிவுகளுக்கான உயர் கல்வியினை வழங்குகின்றது. அவைகளில் நாற்பது பிரிவுகள் பாரம்பரியமானவை. எஞ்சியுள்ள முப்பத்தொன்பது பிரிவுகள் வேலைவாய்ப்புத் தொடர்புள்ளனவாகவும், சுற்றுப்புறச் சூழலுக்குத் தேவையானவையாகவும் புதுமையானவைகளாகவும் அமைந்து விளங்குகின்றன.

இவ் அஞ்சல்வழிக் கீல்வித் துறையில் மாணவர்களுக்கு இரண்டு வகை அனுகுமுறையில் அனுமதி வழங்கப் படுகின்றது. ஒன்று, அடிப்படைக் கல்வித் தகுதி நிலைக்கேற்ப மாணவர்கள் உயர் வகுப்புகளில் அனுமதிக்கப்படுகின்றனர். மற்றொரு நிலையான 'திறந்த நிலைப் புல் கலைக் கழக' முறையில், வயதின் அடிப்படையில் கல்வித் தகுதி ஏதுமின்றி அனுமதிக்கப்படுகின்றனர். இருபது வயது நிறைவு பெற்றவர்கள் பட்ட வகுப்புகளுக்கும் (இளங்கலை: பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்) இருபத்து ஐந்து வயது நிறைவு பெற்றவர்கள் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கும் (முதுகலை: எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.காம்.,) சேர்க்கப் படுகின்றனர்.

மாணவர்களின் நலன் கருதி மதுரை, திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய ஐந்து மையங்களுள், மதுரை திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு மையங்களில் மட்டும் ஆண்டிற்கு நான்கு முறை இரண்டு நாட்கள் தொடர்பு வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. சென்னையில் மட்டும் ஆண்டிற்கு இரண்டு முறை மூன்று நாட்கள் தொடர்புவகுப்புகள் நடத்தப்படுகின்றன. அத்தொடர் வகுப்புகளில் மாணவர்களுக்கு எழக் கூடிய ஐயங்கள் போக்கப்படுகின்றன. இப்பணிக்கு இக்கல்வித் துறை ஆசிரியப் பெருமக்களுடன் பல்வேறு கல்லூரிகளில் பணியாற்றுகின்ற பேராசிரியப் பெருமக்களும் பயன் படுத்தப்படுகின்றனர்.

இக்கல்வித் துறையின் சிறப்பு அம்சம் என்னவென்றால், பல்வேறு சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் தவறு செய்து, நீதித்துறையினரால் தண்டிக்கப் பெற்றுச் சிறையில் இருக்கும் கைதிகளுள் உயர்கல்வி வேண்டுவோருக்குக் கல்விப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அக் கைதிகள் தொடர் வகுப்புகளுக்குச் செல்லவும் அனுமதிக்கப்படுகின்றனர். அவ் உயர் கல்விப் பயிற்சி பெற்று, கல்வி நிலை நிறைவு எய்திப் பட்டம் பெறுகின்ற வாய்ப்புக் கிட்டும் பொழுது, அக் கைதிகளுக்குச் சிறைச் சாலையிலேயே பட்டமளிப்பு விழாவிற்கு ஏற்பாடு செய்து பட்டமும் வழங்கப்படுகின்றது.

பழங்குடி மக்கள் மற்றும் மலைவாழ் சாதியினருக்கும் கட்டணச் சலுகை வழங்கப்பெற்று உயர் கல்வி அளிக்கப்படுகின்றது.

மேலும், இக்கல்வி ஆண்டில் பல சான்றிதழ் வகுப்புகளும், பட்டமேற் சான்றிதழ் வகுப்புகளும் தொடங்கப் படவுள்ளன. அவையாவன:

இப்படிப்புகளில் சான்றிதழ்ப் படிப்பு ஆறுமாதக் கால அளவிற்குள்ளும், முதுநிலைப் பட்டச் சான்றிதழ்ப் படிப்புகள் ஒரு ஆண்டுக் கால அளவிற்குள்ளும் கற்றுத் தர வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. புதிதாகத் தொடங்கப் பெறும் இப்படிப்புகளில் பல, இந்திய நாட்டிலேயே முதன் முதலாகத் தொடங்கப் பெறுபவை. சில சான்றுகள்:

★ சுற்றுச் சூழல் சட்டம்.
★ ஆற்றல் மேலாண்மை.
★ சுற்றுச் சூழல் மேலாண்மை.
★ கல்வித்துறை - திட்டமிடலும் மேலாண்மையும்
★ பங்குகள்முதலீட்டு மேலாண்மை.

திரைப்படத் திறனாய்வும் இதழியலும், நடப்பியல் அரபு மொழி, தெலுங்கு மொழி முதலிய சில படிப்புகளுக்கு நேரடித் தொடர்பு வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

அரசியல்வாதிகளும், அரசியலில் ஆர்வமுடையோர்களும், அரசியல் வாழ்வைத் திறம்பட மேற்கொள்ளும் வகையில் பொதுச் செயல்களும் ஆட்சியியலும் (Public Affairs and Administration) என்ற சான்றிதழ்ப் படிப்பும் தொடங்கப் படுகிறது. மேலும் நடப்பியல் ஆங்கிலம், ஆவணம் வரைவு, விளையாட்டுத்துறை, இதழியல், பங்குகள் முதலீடு, தொழில் முனைவோர் வளர்ச்சி போன்ற சான்றிதழ்ப் படிப்புகள் தொடங்கப்படுகின்றன.

முதுநிலைப் பட்ட மேற்சான்றிதழ் வகுப்புகளும் இக்கல்வியாண்டில் தொடங்கப்படுகிறது. அவையாவன.

★ ஆற்றல் மேலாண்மை
★ சுற்றுச் சூழல் மேலாண்மை
★ சுற்றுச் சூழல் சட்டம்
★ மழலையர்க்குக் கல்வி கற்பித்தல்


மேலும், இக் கல்வியாண்டில், வானொலி நிலையம், செய்தி அச்சகங்கள், மக்கள் தொடர்புப் பணியகங்கள், திரைப்பட நிறுவனங்கள் மற்றும் ஆள்வினைத் துறை போன்றவற்றின் துணைக் கொண்டு இரண்டு புதிய முதுகலைப் பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் தொடங்குவதாக உள்ளது. அவையாவன:

★ இதழியலும் மக்கள் தகவல் இயலும்
★ தொழிலாளர் இயல்

இப்பட்டம் பெற்றவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்புக்கிட்ட வகையுள்ளது. இதனைச் செவ்வனே செயல்படுத்தச் செய்தி அச்சகங்கள் இப்பட்டவகுப்புகளின் சிறப்பு அம்சங்களை நல்ல முறையில் வெளிப்படுத்தி விளம்பரம் செய்தல் வேண்டும். தொழிலகங்களும் இச் செய்தியினைப் பரப்புவதோடு 'ஆள் வினைப் பயிற்சிக்கு தங்கள் அதிகாரிகளைப் பணியாளர்களை முன் வந்து சேர்க்க வேண்டும். அச்சகங்கள் மற்றும் தொழிலகங்கள் அவ்வித மாணவர்களைத் தங்களது பணியகங்களின் பணிகளில் உடனடியாக அமர்த்திக் கொள்ளலாம். ●


டாக்டர் கே.எம். பாதுஷா
இயக்குநர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழக
அஞ்சல் வழிக் கல்வி நிலையம்
மதுரை.


## தீரமும் துணிவும் மிக்க தில்லையாடி வள்ளியம்மை!



அந்த வீராங்கனையை - எவர் மறந்தாலும், தென்னாப்பிரிக்க 'அறப்போர் கோட்டம்' நிச்சயமாக மறவாது, மறக்கவும் முடியது!

காரணம் - இந்த வீராங்கனையைப் பலி கொண்ட நாடு அதுதான்!

உத்தமர் காந்தியார் - ஏகாதிபத்திய வெறிபிடித்த பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைப் பிடித்தாட்டி- அதன் கொட்டத்தை அடக்கக் கிளம்பிய போது - தில்லையாடி வள்ளியம்மை - பெண்களின் பெரும் படைக்குத் தலைமை தாங்கி நின்றார்.

வீரத்தில் பிறந்து - விவேகத்தால் வளர்க்கப்பட்டு, சுதந்திர ஆர்வத்தால் கொதித்தெழுந்து போராடும் இயல்பு தமிழகத்துப் பெண்மணிகளுக்குத் தனியானதோர் உரிமைச் சொத்து என்பதை விளக்கிக் காட்ட வள்ளியம்மையின் தீரச்செயல் ஒன்றே போதுமானதாகும்!

தில்லையாடி வள்ளியம்மை புறநானூற்று வீரமரபின் வழிவந்தவர்கள், இந்தியச் சுதந்திர இயக்கத்திற்கு - அவர்கள் புரிந்த பெருந்தொண்டு, அம்மாபெரும் சுதந்திர இயக்கத்திற்கே புத்துயிரளித்ததுதான்!

வள்ளியம்மையின் தீரமும் - துணிவும் உத்தமர் காந்தியாரின் உயிரையே அவருக்குப் பரிசாக அளித்தது!

தென்னாப்பிரிக்க நிறவெறியன் ஒருவன் - காந்தியண்ணலைப் பலியாக்கக் கிளம்பியபோதும், அந்த வெறியன் துப்பாக்கிக் குண்டுகளைத் தன் மார்பிலே தாங்கிக் கொள்ள - பாய்ந்தோடி வந்து காந்தியாரின் முன் நின்று, அவர் உயிரையும் காத்துத் தந்த உணர்வு குன்றாத் தனிப் பெருமை - வள்ளியம்மைக்கும், அவரைத் தந்த தமிழகத்துக்குமே உண்டு!

1914-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி உத்தமர் காந்தியாருக்கும் - 'ஜெனரல் ஸ்மட்ஸ்' துரைக்கும் ஏற்பட்ட நிறவெறி ஒழிப்பு ஒப்பந்தத்தால் - எல்லா அறப்போர் வீரர்களும் விடுதலை செய்யப்பட்டனர்!

அப்படி விடுதலையடைந்தவர்களுக்கு இரண்டு மாதக் கொடுந்தண்டனை விதிக்கப்பட்டு வெளிவந்தவர்களில் வள்ளியம்மையும் ஒருவராவர்! ஆனால், அந்தத் தமிழ் மகளுக்குத் தான் தீராத காய்ச்சல் கண்டிருந்தது, தன் தாயுடன் சிறையிலிருந்து வெளி வரும்போதே!

எனவே, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனாலும், சில நாட்களுக்குள் மாண்டே போனார் அந்தத் தமிழகத்து மாணிக்கம்!

இந்தச் சோக நிகழ்ச்சி காந்தியாரைப் பெரிதும் வாட்டியது! தென்னாப்பிரிக்க வீரர் கோட்டத்தைச் சேர்ந்த அத்தனைச் செயல் வீரர்களும் கண்ணீர் விட்டுக் கதறினர்!

வள்ளியம்மையின் - தீரத்தைப் பற்றிக்காந்தியார் குறிப்பிடும் போது, ''வள்ளியம்மை தன் சேவைக்குத் தன் கரங்களாலேயே புகழாலயம் அமைத்துக் கொண்டவர்! அவரின் வீரமும், பெயரும் புகழும் கொண்ட அன்புருவம் இன்று எவர் இதயத்திலும் குடிபுகுந்து விட்டதொன்றாகும்!''

- திரு. தங்கவயல் லோகிதாசன் எழுதிய 'சுதந்திரச் சூரியர்கள்' என்னும் நூலிலிருந்து.

# பிணி தீர்க்கும் கரும்பு



- டாக்டர் ஏ.ஆர். என். துரைராஜ்

கரும்பு இந்தியா முழுவதிலும் ஏராளமாய்ப் பயிரிடப்படும் செடி. இதில் பல வகை உண்டு. அவை: சீனி சர்க்கரை (அஸ்கா) பழுப்புச் சர்க்கரை, கற்கண்டு, நல்ல வெல்லம்.

சாறு வகைகளில்-கருப்பஞ்சாறு, செங்கரும்பின் சாறு, கற்கண்டு சாறு-வேர் மற்றும் இவைகள் மூலம் ஒவ்வொன்றுக்கும் மருத்துவக் குணங்கள் உண்டு.

உடல் எரிச்சல், விக்கல், வாந்தி, அரோசிகம், பித்த குன்மம், வாத ஜுரம், வாத நோய், இரணம், பல்லரனை, இருமல், சளி, கப ரோகங்கள், மூத்திரத் தடை, எரிச்சல், நீரிழிவு, தலைவலி, மயக்கம், தொண்டைப் புண், ஜலதோஷம், இரத்த மூத்திரம் முதலான நோய்களுக்குக் கரும்பு கைகண்ட மருந்து.

**நீரிழிவு நோய், விக்கல் நீங்க**

அஸ்கா சர்க்கரை - அதாவது வெள்ளைச் சர்க்கரை நீர் விடாமல் தேவையானதை எடுத்து மண் சட்டியில் போட்டு, அடுப்பில் வைத்து கருக்க வேண்டும். சிவந்த நிறமாகி பிறகு கஞ்சிகருப்பாக மாறும். இதில் தேவையான நீர் விட்டு குழம்பாக்கி வைத்துக் கொண்டு, இதை 10 மில்லியும், தேன் 10 மில்லியும் சேர்த்துக் கலந்து காலை-மாலை சாப்பிட்டு வர, நீரிழிவு நோய் இரத்தத்தில் கலந்திருப்பினும் நீங்கும். இதைத் தொடர்ந்து ஒரு மண்டலம் முதல் இரண்டு மண்டலம் சாப்பிட நாளடைவில் நீரிழிவு நோயும், தீராத விக்கல் நோயுமீ நீங்கி நலம் பெறும். மற்றும் வயிற்றில் உள்ள கிருமிகளும் வெளிப்பட்டு விடும்.

**ஆராத ரணங்களுக்கு**

வெள்ளைச் சர்க்கரையைத் தேவையான அளவு எடுத்து சுத்தமான அம்மியில் வைத்து மாவாக்கி ஆராத ரணங்களுக்குப் போட்டுக் கட்டி வர, நாளடைவில் எந்தவித ரணமாக இருந்தாலும் அது ஆறி விடும்.

**கண் வலி, கண் ரணம், கண் நோய்**

கண்களில் படிந்த மாசு, கண் வலி, கண் ரணம் முதலிய நோய்களுக்குச் சர்க்கரை 1 பங்கு, நீர் 3 பங்கு சேர்த்துக் கரைத்து, ஒரு மணி நேரத்திற்கு ஒரு தரம் இரண்டொரு துளி கண்களில் விட்டுவர, மேற்படி நோய்கள் நாளடைவில் அடங்கும். இந்நோய்களுக்கு இராக் காலங்களில் கண்ணி மைகளுக்குச் சிற்றாமணக்கு நெய் போன்ற ஓர் எண்ணையைத் தேய்த்து, கண் இமை ஒட்டாதபடி பார்த்துக் கொள்வதுடன், காலையில் சூடான பாலும் நீரும் சேர்த்துக் கண்ணைக் கழுவவும் வேண்டும்.

சர்க்கரையை நாட்பட்ட நோயாளிகளின் படுக்கை அறையில் புகைக்க, சுத்தக் காற்று உண்டாகி அறை சுத்தப்படும்.

சர்க்கரையைப் பாகு செய்து உணவுப் பொருள்களைக் கெடாமல் சேமித்து வைப்பதற்கும் ஜலதோஷம், நீர்ப்பிரிச நோய் இவைகளைப் போக்குவதற்கும் கொடுத்து உதவலாம்

செம்பு, வெள்ளைப் பாடாணம், வீரம் முதலிய நச்சுப் பொருள்களை அருந்துவதனாலுண்டாகும் கேட்டிற்கு சர்க்கரையை மிகச் சிறப்பான நஞ்சு முறிப்பாகக் கொள்ளலாம்

**மலச் சிக்கலுக்கு**

ரோஜா இதழ்களைச் சேகரித்து நிழலில் உலர்த்த வேண்டியது. சர்க்கரையைப் பாகு செய்து அதில் ரோஜா இதழ்களைப் போட்டுக் கிளறி வெய்யிலில் வைத்து பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டியது. தினமும் தேக்கரண்டி வீதம் இரவு படுக்கு முன்பு சாப்பிட மலச் சிக்கலை நீக்கி, இரத்த சுத்தியும் சுறுசுறுப்பும் உண்டாக்கும்.

**பருக்கள் நீங்க**

மஞ்சள் மெழுகும், சர்க்கரையையும் சேர்த்துக் குழப்பி, பருக்கள் மீது தடவ, அவை மறையும்.

**பேதி நிற்க**

திடீரென்று உடல் வெப்பம் காரணத்தினால், பேதி கண்டால், 30 கிராம் கற்கண்டுத்தூள் செய்து வாயிலிட்டுத்தண்ணீர் அருந்த, பேதி நாளடைவில் நிற்கும்.

**கற்கண்டுச் சாறு**

இது மிக்க இனிப்புள்ளது. இதன் சாற்றில் விக்கல் நோய் நிற்கும் உடம்பில் உண்டாகும் எரிச்சலைத் தணிக்க இச்சாற்றோடு தயிர் சேர்த்து அருந்தலாம். கற்கண்டினால் பல்லரனை, இருமல், வாந்தி, சளி, கபரோகங்கள், ஐய அழல் (ஈறு தடிப்பு) ஆகியவை நீங்கும்.

**சிறு நீர் எரிச்சல் நீங்க**

தேவையான கரும்பின் வேரை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு உள்ளுக்குக் கொடுக்கச் சிறு நீர் எரிச்சலைக் குறைக்கும்.

கரும்பின் வேர் 30 கிராம், சோம்பு 10 கிராம், மிளகு 5 கிராம், வெட்டி வேர் 5 கிராம் இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து உரலில் போட்டு இடித்து, இடித்ததை எடுத்து ஓர் மண் சட்டியில் போட்டு அரைப் படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி வடிக்கட்டி தினம் 3 வேளை அருந்த, மூத்திரத் தடை எரிச்சல் ஆகியவை நீங்கும்.

**விக்கல் நீங்க**

1. கரும்பை இரண்டாகப் பிளந்து அதில் திப்பிலிப் பொடி, ஏலக்காய்ப் பொடி இவைகளை நடுவில் வைத்துச் செம்மண் சீலை செய்து கும்பியில் வைத்துப் பதமாகச் சுட்டு எடுத்து, சீலையை நீக்கி அதைப் பிழிந்து எடுத்த சாற்றை தீராத விக்கலுக்குக் கொடுக்க நாளடைவில், விக்கல் குறைந்து சுகம் காணும்.

2. கரும்பைத் துண்டு துண்டுகளாக வெட்டி, சுத்தி செய்த செம்புத் தூளை சட்டியிலிட்டு வறுத்து, வெட்டிய துண்டுகளால் கடைய, செம்பு ஒரு வகைப் பற்பமாகும் (அதாவது - பஸ்பமாகும்). இது செய்வதற்குக் குறைந்தது ஒரு பலம் (35 கிராம்) செம்புத்தூளுக்கு 3 அல்லது 4 முழுக் கரும்பு தேவையாகும். இதைக் கொண்டு பல நோய்களைத் தக்க துணை மருந்துகளால் போக்கலாம்.

**கரும்புச் சாறு**

கரும்புச் சாற்றுடன் இரண்டு திப்பிலி எடுத்து பொடி செய்து சேர்த்து தயிருடன் கலந்து அருந்த, உடம்பிலுள்ள எரிச்சல் எல்லாம் அடங்கும். மற்றும், விக்கல், வாந்தி, அரோசிகம்நீங்கி பசி உண்டாகும்.

**செங்கரும்பின் சாறு**

இதன் சாறு பித்தத்தைச் சாந்தம் பண்ணும். ''செங்கரும்பு பதனற் சாறு தீர்த்திடும் பித்தமெல்லாம்''

**பழுப்புச் சர்க்கரை**

பழுப்புச் சர்க்கரையைப் பூரா சர்க்கரை என்பார்கள். மற்றும் இதற்கு நல்ல சர்க்கரை அல்லது நாட்டுச் சர்க்கரை என்றும் சொல்வதுண்டு. இந்த நாட்டுச் சர்க்கரை உடம்புக்குக் கெடுதல் செய்யாது.

நாட்டு மருத்துவருக்கு நாட்டுச் சர்க்கரைதான் நற் பெயரைத் தேடித் தரும் என்பதில் ஐயமில்லை. பொதுவாக சுக்கு, இஞ்சி, மிளகு போன்ற கலவைகளில் சேர்த்து, குடி நீராக்கி காபி போல கலந்து அளவுடன் நாட்டுச் சர்க்கரையைப் போட்டு அருந்தி வரலாம். இதனால் வாந்தி (அரோசிகம்), குமட்டல் இவற்றைக் கண்டிப்பதுடன், மார்பில் சளி கட்டியாகி விட்ட கபத்தைக் கரைத்து வெளியேற்றவும் உதவும். எனவே, நாட்டுச் சர்க்கரையில் ஒரு கெடுதலும் வராது.

**பொதுப் பண்பு**

தை பிறந்த முதல் தினமே, பண்டிகையின்போது, ஒளிக் கடவுள் கதிரவனுக்குக் கொத்து மஞ்சளும், செங்கரும்பும் வைத்துப் படைப்பது உண்டு.

அப்பண்டிகையின் போது, கரும்பை ஏன் வைக்க வேண்டும்? கரும்பின் சுவையை நாவில் சுவைக்க வேண்டும். மஞ்சள் வாசனையை மூக்கால் முகர்ந்து அறிய வேண்டும். கதிரவன் ஒளியைக் கண்களால் காணவேண்டுமென்பதே.

கரும்பின் மருத்துவக் குணத்தைப் பார்க்கையில் இதன் சாறு சீதள குணம் உடைய தாகையால் சிலேத்தும நோய்களுக்குத் தூண்டுகோலாக அமையும் என்றாலும், உடல் சூட்டைத் தணித்துக் குளிர்ச்சியுண்டாக்கும். உடம்பின் உள் அழற்சிகளை ஆற்றும். மலத்தை இளக்கும்.

கரும்பைப் பற்றிய பழமொழிகளாவன:

1. யானை வாயில் சென்ற கரும்பு திரும்பாது.

2. கரும்பு ருசித்தால் அதை வேருடன் பிடுங்கி விடாதே!

3. அந்தக் காலத்து சித்தர் ஒருவர் சொன்னதாவது:

''இரும்பு கோணிடில் யானையை
வெல்லலாம்,
கரும்பு கோணிடில் சர்க்கரைப்
பாகுமாம்''

-இவ்வாறு அரியதொரு மூலிகையாகக் கரும்பு விளங்குகிறது.

★ **நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு பயணம் முடிந்து விட்டது. ஆனால், இன்னொரு பயணம் தொடங்கிவிட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும், நல்வாழ்விற்குகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும், துவங்கியுள்ள பயணம் இது.**

★ **பசி, வறுமை, சுகாதாரக் குறைவு, எழுத்தறிவின்மை, மூடநம்பிக்கை, மூடப்பழக்கங்கள், பரம்பரை வழக்கங்கள் என்ற கனமான சுமைகளை விஞ்ஞானம் ஒன்றுதான் நீக்க முடியும். மூலாதாரமான பொருள்கள் வீணாவதையும், செல்வம் மிகுந்த நாட்டில் வறுமையால் வாடும் மக்கள் வசிப்பதையும் அதுவே தடுக்க வல்லது.**






# பொங்கி வரும் காவிரி

**காவிரி நீர் பற்றிய முக்கியச் செய்திகள்- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிக்கைகளோடு இணைக்கப்பட்டு வழங்கப்படும் ஒரு செய்தித் தொகுப்பு**

கர்நாடக அரசு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறது; உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அறிவதில் ஆர்வம் காட்டுகிறது மத்திய அரசு.

இதையெல்லாம் சட்டை பண்ணாமல் - கர்நாடகத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து, தமிழகம் நோக்கிப் பொங்கி வருகிறது காவிரி நீர். பத்தாண்டுக் காலமாகக் காணாத இந்தக் கண் கொள்ளாக் காட்சி தமிழ்நாட்டு மக்களைக் களிப்பில் ஆழ்த்தியது.

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதியில் பெய்யும் பேய் மழை காரணமாகக் கிருஷ்ணராஜசாகர் நிரம்பி விட்டது; இனியும் அடைத்துப் பிடித்தால் - கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி ஆகிய அணைகள் உடைந்து கர்நாடகமே வெள்ளக் காடாகி விடும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது (28.7.1991).

124 அடிவரை கிருஷ்ணராஜ சாகரில் தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும்; 123 அடிக்கு நீர்நிலை உயர்ந்துவிட்ட பிறகு - வேறு வழியின்றி விநாடிக்கு 2 இலட்சத்து 26 ஆயிரம் கன அடி தண்ணீர், 90 மதகுகள் வழியே திறந்து விடப்பட்டது!

●●

காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையில் உச்ச நீதிமன்றக் கருத்தறிவது என்கிற மத்திய அரசின் முடிவைக் கண்டிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிக்கையொன்று வெளியிட்டார். (29.7.1991) அந்த அறிக்கை விவரம் வருமாறு:

**'காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக அரசியல் சட்டம் 143-வது பிரிவின் கீழ் மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டின் கருத்தைக் கேட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் தரும் கருத்து, முழுக்க முழுக்க ஆலோசனையாகத்தான் இருக்குமே தவிர, எந்த ஒரு தரப்பையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டதாக இருக்காது.**

'அரசியல் சட்டம் 143-வது பிரிவின்படி சுப்ரீம் கோர்டேகூட, கொடுத்த கருத்தை மறுபரிசீலனை செய்யவும், தேவைப்பட்டால் அதை மீறவும் கூட முடியும்.

'இப்படிக் கருத்துக் கூறுவதன் மூலம், அரசியல் சட்டம் 32-வது பிரிவை சுப்ரீம் கோர்ட்டு ரத்து செய்ய முடியாது. 32-வது பிரிவு, அரசியல் சட்டம் 3-வது பகுதியின் கீழ் வழங்கப்பட்ட அடிப்படை உரிமையை அமல்படுத்துவதற்குத் திருத்தம் செய்ய வழி வகுக்கிறது.

'நடுவர்மன்ற உத்தரவு என்பது தீர்ப்பு ஆகும். அது இரு தரப்பினரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டது. நடுவர் மன்றம் ஜூன் 25-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின்படி கர்நாடக மாநில அரசு 205 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டும்.


'இந்த உத்தரவு மிகத் தெளிவாக இருக்கிறது. இதில் எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடம் இல்லை. எனவே, சுப்ரீம் கோர்ட்டின் கருத்தை அறிய வேண்டிய தேவை இல்லை. அதுவும் சுப்ரீம் கோர்ட்டின் கருத்து எந்த ஒரு தரப்பினரையும் கட்டுப்படுத்தாது என்கிறபோது, அதைக் கேட்டு அறிவதில் என்ன பயன்?'

- இவ்வாறு அமைந்திருந்தது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிக்கை.

காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்



ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி



மேட்டூர் அணை

சினை குறித்து விசாரணை மேற்கொண்டிருக்கின்ற நடுவர் மன்றம், தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடகம் திறந்து விடவேண்டும் என்று இடைக்கால ஆணை பிறப்பித்தது.

அந்த ஆணையைக் கர்நாடக அரசு ஏற்கும்படி செய்ய, இந்தியப் பிரதமர் தவறிவிட்டார் என்பதை எடுத்துக் காட்டும் வகையிலும் இதுகுறித்து உச்சநீதிமன்ற முடிவைக் கேட்கத் தீர்மானித்ததைக் கண்டிக்கும் வகையிலும் - மாண்புமிகு மத்திய தொழிலாளர் நல இணையமைச்சர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் - அமைச்சராகப் பொறுப்பேற்று நாற்பதே நாட்கள் ஆகியிருந்த நிலையில் - 29.7.1991 அன்று டில்லியில், தனது பதவியை விட்டு விலகினார்.

அதுகுறித்துத் தமது கருத்தை அறிவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர்

**'மத்திய அமைச்சர் பதவியைத் துணிச்சலுடன் ராஜினாமா செய்ததற்காகத் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களைப் பாராட்டுகிறோம்.**

**'பொதுவாழ்க்கையில் உயர்ந்த தார்மீகக் கடமையை அவர் செவ்வனே நிறைவேற்றியிருக்கிறார். அமைச்சர் பதவியை அவர் தியாகம் செய்தது, ஐந்தரைக் கோடித் தமிழர்களாலும் பாராட்டப்படுகிறது.**

**'தமிழக மக்களின் நியாயமான உரிமைக்காகப் பதவி விலகத் துணிந்ததன் மூலம், அவர் தமிழக மக்கள் மத்தியில் வீரராக உயர்ந்து நிற்கிறார்.'**

என்று தெரிவித்தார்.

●●

குறுவைச் சாகுபடிக்காக 21.7.'91 அன்று தண்ணீர் திறந்து விடப் பட்ட மேட்டூர் அணையின் மொத்தப் பரப்பளவு 60 சதுர மைல்கள்; தண்ணீர் கொள்ளளவு 120 அடி ஆகும். மேட்டூர் அணைக்கு 2 இலட்சத்து 7 ஆயிரத்து 931 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்ததால் 31-7-1991 அன்று மேட்டூர் அணை நீர் மட்டம் 110 அடி ஆகியது!

அணை நிரம்பியதால் நீர் மின்சார உற்பத்தி அதிகரித்தது; என்றாலும், மேட்டூர் அணையின் பாதுகாப்புக் கருதி, அன்று மேலும் தண்ணீர் திறந்து விடப்பட்டது. பொங்கி வந்த காவிரி நீர், கல்லணையில் சிறிது இளைப்பாறியது. பின்னர் - காவிரி, பெண்ணாறு, கல்லணைக் கால்வாய் ஆகியவற்றின் மூலம் வினாடிக்கு 18,000 கன அடி தண்ணீர் பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்டது.

●●

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்திரவுப்படி புள்ளம்பாடி கால்வாய், புதுக்கட்டளை உயர் மட்டக் கால்வாய் 1.8.9 முதல் திறந்து விடப்பட்டது.

இதனால்-புள்ளம்பாடி கால்வா மூலம் திருச்சி மாவட்டத்தி 22,114 ஏக்கர் பாசனப் பரப்பும் புதுக்கட்டளை உயர்மட்டக் கால்வா மூலம் திருச்சி மாவட்டத்தில் 16,100 ஏக்கரும், தஞ்சை மாவட்டத்தில் 4,500 ஏக்கரும் பயனடையும் என அறிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு கீழ்பவானி பி தான கால்வாய் மற்றும் விரிவாக்க கால்வாய்களில் முதன்முறை பாசனம் 1.8.1991 முதல் தொடா கியது. இதனால், பெரியார் மற்று திருச்சி மாவட்டங்களில் உள் 1,03,500 ஏக்கர் நிலம் பாச வசதி பெறும்.

நீர்த்தேக்கத்தில் உள்ள நீ இருப்பைப் பொறுத்து 30.11.199 வரை தண்ணீர் விடப்படும்.

பிரதான மற்றும் விரிவாக்க கால்வாய்களில் இரட்டைப்பை மதகுகளின் கீழ் உள்ள ஆயக்கட்டு கும், சென்னசமுத்திரம் கிளை வாய் காலில் ஒற்றைப்படை மதகுகளி கீழுள்ள ஆயக்கட்டுக்கும் மேே குறிப்பிட்ட காலங்களில் தண்ணீ விடப்படும்.

நீர் இருப்பைப் பொறுத்து தேவைப்பட்டால், முறைப்பாச முறை அமல்படுத்தப்படும். எக்கா ண்த்தைக் கொண்டும் வரையறுக்க பட்ட தேதிக்குப் பிறகு, பாசன நீ வழங்குவது நீட்டிக்கப்பட மாட்டா

இம்முறை (First turn) பாசனத்தி பயிர்வகைகளுக்குத் தடை கிை யாது. விவசாயிகள் நீரைச் சிக்க மாகப் பயன்படுத்திப் பொது பணித்துறையுடன் ஒத்துழைத் சீரிய முறையில் நீர்ப்பங்கீடு செய் உதவுமாறு தமிழக அரசால் கேட்டு கொள்ளப்பட்டனர்.

●●

காவிரி நதிநீர் தாவா குறி விசாரணைக்காக நியமிக்கப்பட் நடுவர் மன்றம், தனது இடைக்கா தீர்ப்பில் தமிழ்நாட்டிற்குக் கர்னாட 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவி வேண்டும் என்றும், தமிழ்நாடு அர பாண்டிச்சேரி யூனியன் பிரதே திற்கு 6 டி.எம்.சி. தண்ணீர் வி வேண்டும் என்றும் கூறியிருந்தது.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்கும் வகையில் காவிரி நதியிலிருந்து பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு 6 டி.எம்.சி. தண்ணீரை ஒழுங்குப்படுத்தப்பட்ட முறையில் விடவேண்டும் என்று உத்தர விட்டார் (31.7.91).

●●

தமிழ்நாடெங்கும் - குறிப்பாகத் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் 3.8.1991 அன்று ஆடிப்பெருக்கு விழா ஆனந்தமயமாகக் கொண்டாடப்பட்டது. காவிரி வெள்ளம் கரைபுரண்டோடுவதைக் கண்டுகளித்த தமிழ்ப்பெருங்குடி மக்களுக்குத் தமது நல்வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஓர் அறிக்கையினை வெளியிட்டார். அதன் முழு விவரம் வருமாறு:

**'தஞ்சை மற்றும் திருச்சி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எனது அன்பான வணக்கம்!**

**'காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சினையில், கர்நாடக அரசு நமக்கு ஏற்படுத்தியிருக்கிற சிக்கல்களை அறிந்து நீங்கள் மிகுந்த கவலையோடு இருந்தாலும், உங்களுக்கு உதவுகிற வகையில் நானும், தமிழக அரசும் எடுத்துள்ள முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை வழங்கியிருக்கும் என நம்புகிறேன்.**

**'அதன் பலனாக நடப்பு ஆண்டிற்கான குறுவை சாகுபடியை நீங்கள் காலத்தோடு துவக்குவதற்கு ஏதுவாக, மேட்டூர் அணை கடந்த ஜூலை 21-ந் தேதி திறந்து விடப்பட்டுள்ளது.**

**'கர்நாடக மாநிலத்தில் நல்ல மழை பெய்து அணைக்கட்டுகளும், கண்மாய்களும் நிறைந்து வழியும் இந்த நேரத்திலும்கூட 'நடுவர் மன்றம்' வழங்கியிருக்கும் இடைக்காலத் தீர்ப்பை ஏற்று, நமக்கு வழங்க வேண்டிய தண்ணீரை அந்த மாநில அரசு தருவதற்கு இதுவரை முன்வரவில்லை; மத்திய அரசும் நமக்கு உதவவில்லை. எனவே, பாசனத்திற்காகத் தற்போது திறந்து விடப்படுகிற தண்ணீரை விவசாயிகள் வீணாக்காமல், நல்ல முறையில் பயன்படுத்திப் பயன் அடைய வேண்டுமென்று இதன் மூலம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**'தீர்ப்பின் அடிப்படையில் நமக்குக் கிடைக்க வேண்டிய நீரைப் பெறுவதற்கு எத்தனையோ தடைகள்; ஆனால், நியாயம் நம் பக்கம் இருப்பதால் இப்போது கர்நாடக மாநிலத்தில் பெய்துள்ள மழை நமக்கு இயற்கை வழங்கிய கொடையாக நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. இதைக்கண்டு உங்கள் மனம் குளிருவது போல மண் குளிர்ந்து, வேளாண்மை சிறந்து, உங்கள் வேதனைகள் தீர வேண்டும் என்பதே என் விருப்பம்.**

**'நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இந்த ஆண்டு ஆடிப் பெருக்குக்குக் காவிரியில் தண்ணீர் திறந்து விடப்படும் என்ற உத்தரவாதத்தை நான் உங்களுக்கு வழங்கினேன். அந்த உத்தரவாதம் செயல்வடிவம் பெற்று, காவிரியில் நீராட விழையும் ஆயிரக்கணக்கான புதுமணத் தம்பதியினரை அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. மக்களுக்காக அயராது உழைப்பதே எங்கள் அரசின் இலட்சியம் என்ற வகையில் காவிரி வாழ் பெருமக்களுக்கு என்னுடைய மகிழ்ச்சியையும், வாழ்த்தினையும் இந்நன்னாளில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

- இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**நான்காவது அட்டையில்:**

**மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு சரத்பவார் அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார் (2.8.1991).**

சுமார் பத்தாண்டுகளுக்குப் பிறகு மேட்டூர் அணையின் 16 பாலங்களில் 3.8.'91 அன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

அணையின் நீர் மட்டம் 120 அடியைக் கடந்த பிறகு, உபரி நீர் இந்தப் பாலம் வழியாகத்தான் வெளியே விடப்படும்.

வழக்கமாக மற்ற கதவுகள் மூலம் 22,000 கன அடி நீர் திறந்துவிட முடியும். அதற்கு அதிகமான தண்ணீரை இந்தப் பாலம் வழியாகத் தான் வெளியே விடவேண்டும்.

இதற்குமுன் 1981-ஆம் ஆண்டிலும், அதற்குமுன் 1980-ஆம் ஆண்டிலும், இந்தப் பாலம் வழியாகத் தண்ணீர் விடப்பட்டது. அப்போது ஒரு இலட்சம் கன அடிக்கும் குறைவான தண்ணீரே இந்தப் பாலம் வழியாக விடப்பட்டது.

இந்தப் பாலம் வழியாக 1961-இல் மிக அதிக அளவாக 3.21 இலட்சம் கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. அதற்கு முன், 1946-இல் இதன் மூலம் 1.69 இலட்சம் கன அடி நீர் திறந்து விடப்பட்டது.

சனிக்கிழமை அணை நிரம்பியதைத் தொடர்ந்து 22,000 கன அடிக்கும் அதிகமான நீர் இந்தப் பாலம் வழியாக விடப்படுகிறது.

இதற்கிடையில் 120 அடி நீர் நிரம்பியுள்ள மேட்டூர் அணையைக் காண மக்கள் ஆர்வத்தோடு மேட்டூருக்குப் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின் அணை நிரம்பியுள்ளதால் அதிகாரிகளும், விவசாயிகளும் மக்களும் பெரு மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

●●

காவிரி நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை எதிர்த்து, கர்நாடகம் தாக்கல் செய்துள்ள மனு தொடர்பாகத் தமிழ்நாடு, கேரளம், புதுவை மற்றும் மத்திய அரசுக்கு உச்ச நீதி மன்றம் 6.8.91 அன்று நோட்டீஸ் பிறப்பித்தது.

அரசியல் சாசனத்தின் 131-வது பிரிவின்கீழ் இந்த மனு ஏற்கத் தக்கதா என்பது குறித்து இரு தரப்பு வாதங்களையும் நீதிபதிகள் கே.என். சிங், குல்தீப் சிங் ஆகியோர் அடங்கிய 'டிவிஷன் பெஞ்ச்' சிறிது நேரம் கேட்ட பிறகு இந்த நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கு மீது, செப்டம்பர் 10-ஆம் தேதி மீண்டும் விசாரணை நடைபெறுமாம்.

—செய்தித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

# ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்-II

**ஜெயஸ்ரீ பாலச்சந்தர், இ.ஆ.ப.,**
திட்ட ஒருங்கிணைப்பாளர்
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்.

மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டியில், 1980-ஆம் ஆண்டு முதன்முதலாக முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப் பட்டது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம். இது, சுமார் 5 ஆண்டுகளுக்குள் மதுரை, திண்டுக்கல் - அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராசர், இராமநாதபுரம், திருநெல்வேலி - கட்டபொம்மன், வ.உ.சி., அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர், செங்கை-எம்.ஜி.ஆர்., புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் படிப்படியாக விரிவாக்கப்பட்டுச் செயல்பட்டு வந்தது.

இத்திட்டம் குறிப்பாக தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டமாக வெற்றிகரமாகச் செயல்பட்டது. 36 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துவது, ஊட்டச் சத்துக் குறைபாடு நோய்களைக் குறைப்பது, சிசு மரண விகிதத்தைக் குறைப்பது, திட்டப் பணிகள் சிறந்த முறையில் பயனடைவோர்களைச் சென்றடைய வைப்பது, தொடர்புக் கல்வி மூலம் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதுடன், மக்களைத் திட்டத்தில் ஈடுபடச் செய்வது ஆகியவற்றில் சிறந்த வெற்றி கண்டதன் காரணமாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் இரண்டு மாநிலம் முழுவதும் செயல் படுத்தத் திட்டமிடப்பட்டது.

1990 மே மாதம் உலக வங்கியுடன் 'தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் - இரண்டு' பற்றி பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு, ஜூன் மாதம் உலக வங்கி நிர்வாக இயக்குநர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 14.9.1990 அன்று ஒப்பந்தம் கடன் உதவி மற்றும் திட்ட ஒப்பந்தம் கையெழுத்தானது. 1990-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ஆம் தேதி முதல் இந்தக் கடன் உதவி அமலுக்கு வந்தது.

திட்டம் இரண்டு, கிராம அளவில் தாய்-சேய் ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் பள்ளி, முன் பருவக் கல்விப் பணிகளை அளிக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அமைப்பின் மூலம் தாய் சேய் நல நல்வாழ்வுப் பணிகளை அளிக்கவும், மாநில மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உள்ள குழந்தை நல மையங்கள் மூலமாக 3 - 6 வயதுக் குழந்தைகளுக்குப் பள்ளி முன் பருவக் கல்விப் பணிகளை அளிக்கவும், திட்டம் இரண்டு உதவும். இதற்கெனக் கூடுதல் ஊழியர்களையும், பொருட்களையும், போதிய பயிற்சியையும், போதிய மேற்பார்வை அமைப்புகளையும், அளிப்பதன் மூலம், ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பணிகளை மேம்படுத்தும் திட்டப் பணிகளை மக்கள் தாங்களாகவே கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வகையில் சமுதாய ஈடுபாட்டை அதிகரிக்க, ஒரு தொடர்பு வழி முறையைத் திட்டம் இரண்டு செயல்படுத்தும். பெண்கள் கல்வி, பொருளாதார மேம்பாடு, ஆகியவைகளைச் செயல்படுத்த, மற்ற அரசுத் திட்டங்கள், பொது நல நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணிபுரியும்.

**இந்தத் திட்டத்தின் நோக்கங்களாவன:**

◎ தாய்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதன் மூலம் குழந்தையின் பிறப்பிலிருந்தே அதன் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தி, குழந்தை உயிர் வாழ்தல் மற்றும் குழந்தை வளர்ச்சியினை உறுதிப் படுத்துதல்.

◎ 0-6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையைக் கீழ்க்கண்ட வழிமுறைகள் மூலம் மேம்படுத்துதல்.

- மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைவினைத் தவிர்ப்பது.
- தொற்று நோய்களைக் கட்டுப் படுத்தவும், தவிர்க்கவும் பயனுள்ள திட்டத்தைச் செயல்படுத்துவது.
- குறிப்பிட்ட சில ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நோய்கள் வராமல் காப்பது.

◎ 3 முதல் 6 வயதுக் குழந்தைகளுக்குப் பயனுள்ள முன்பருவக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவது.

◎ தனிநபர் மற்றும் சமுதாய நலத்தை மேம்படுத்த, தாய்மார்கள் குடும்பம், சமுதாயம் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் செயல் திறத்தை அதிகரித்தல்.

◎ சுகாதாரம் நலக்கல்வி அளித்தல் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களைத் திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும், மதிப்பீடு செய்வதிலும் சமுதாயத்தின் ஈடுபாட்டைக் கிராம அளவில் அதிகப்படுத்துதல்.

◎ மேற்கூறிய சுகாதாரம் ஊட்டச் சத்து மற்றும் மற்ற நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான மனித ஆற்றலை மேம்படுத்துதல்.

மாநிலத்திலுள்ள ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றுவதற்குத் தேவையான செயல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.



**திட்டம் செயல்படும் இடங்கள்**

மாநிலம் முழுவதும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படாத வட்டாரங்களில், படிப்படியாகத் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் - இரண்டு, செயல்படுத்தப் படும். மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களில், 316 வட்டாரங்களில் திட்டம் - இரண்டு, செயல் படுத்தப்படும். இதில் திட்டம் - ஒன்று, செயல்படும் 122 வட்டாரங்களும், திட்டம் - ஒன்று அல்லது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படாத 194 வட்டாரங்களும் அடங்கும்.

**திட்ட விவரம்**

**கிராம அளவில்**

ஒவ்வொரு 1000 மக்கட்தொகைக்கும் ஒரு சமுதாய ஊட்டச்சத்து மையம் அமைக்கப்படும். இம்மையத்தின் மூலமாகத் திட்டப் பணிகள் அளிக்கப் படும். அருகிலுள்ள ஊட்டச்சத்து மையம் 1.5 கி.மீ. தூரத்துக்கு மேல் இருந்தாலும், மக்கள்தொகை 500 பேருக்கு மேல் இருந்தாலும் சிறப்பு அணுகும் முறையாக ஒரு ஊட்டச்சத்து மையம் திறக்கப்படும். பெண்கள் தொடர்புக் குழுக்கள், இளம் பெண்கள் ஆகியோரின் உதவியுடன் குக்கிராமங்களை அடையும் வழி முறைகள் போலவே சிறுசிறு குடியிருப்புகளுக்கும் இம்முறைகள் பயன் படுத்தப்படும், சமுதாய ஊட்டச்சத்து மையத்துக்கு ஒரு ஊட்டச்சத்துப் பணியாளர் பொறுப்பாக இருப்பார். அவருக்கு உதவியாக உள்ளூர் மருத்துவச்சியே ஆயாவாக இருப்பார். தாய் சேய் நலப் பணிகளை அளிக்க உதவியாக ஒவ்வொரு மாதமும கிராம நலச் செவிலி நான்கு நாட்கள் மையத்துக்கு வருவார்.

ஊட்டச்சத்து மையத்தில் கீழ்க் கண்ட பணிகள் அளிக்கப்படும்:

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், சிறு குழந்தைகளுக்கு அளிக்கப் படும் பணிகள்:

1. கர்ப்பிணிகளை முதல் மூன்று மாதங்களுக்குள் பதிவு செய்தல்.
2. கர்ப்பக் காலக் கவனிப்பு.
3. கர்ப்பக் காலத்தில் ஏற்படும் ஆபத்தான அறிகுறிகளைக் கண்டறிதலும், பரிந்துரை செய்தலும்.
4. இரண ஜன்னி தடுப்பூசி போடுதல்.
5. இரும்புச்சத்து மற்றும் ஃபாலிக் அமில மாத்திரைகள் கொடுத்தல்.
6. இணை உணவு அளித்தல்.
7. பிரசவத்திற்குப் பின் பராமரிப்பு.
8. சுகாதார மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி.
9. பிறந்த குழந்தைப் பராமரிப்பு.

மூன்று வயதுக் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பணிகள்:

1. வளர்ச்சியைக் கண்காணித்தல்.
2. சிகிச்சை முறையாக அளிக்கப் படும் இணை உணவு.
3. தடுப்பு ஊசிகள் போடுதல்.
4. வயிற்றுப் போக்குக் கட்டுப்பாடு.
5. சுவாச மண்டல நோய்களைக் கண்டறிதலும் சிகிச்சையும்.
6. குறைந்த அளவு தேவைப்படும் ஊட்டச்சத்து அளிப்பு.
7. அதிக ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளைப் பரிந்துரை செய்தல்.

கிராமத்தில் நடைமுறையிலுள்ள மதிய உணவு மையங்கள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப் பட்டு முறையாக மேற்பார்வையிடப் படும். மதிய உணவு மையத்திற்குப் பொறுப்பாக குழந்தை நல அமைப்பாளர் ஒருவரும், ஆயாவும் இருப் பார்கள். புதிய திட்டத்தின் மதிய உணவு மையங்கள் தேவைக்கேற்ப திறக்கப்படுவதுடன், தற்போதுள்ள அமைப்பு சீரமைக்கப்பட்டு, நல்ல முறையில் பள்ளி முன் பருவக் கல்வி அளிக்கப்பணியாளர்களுக்கு நல்ல பயிற்சியும் பொருட்களும் அளிக்கப்படும். 3-6 வயதுக் குழந்தைகள் மதிய உணவைத் தொடர்ந்து பெறுவார்கள். இந்த உணவின் ஊட்டச்சத்துக்களின் அளவு, திட்டம் செயல்படும் கால அளவில் மேலும் உயர்த்தப்படும். இக் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்குக் கட்டுப்பாடு, சுவாச மண்டல நோய்கள் கட்டுப் பாடு, குறைந்த அளவு தேவைப் படும் ஊட்டச்சத்துக்கள் அளித்தல் போன்ற சுகாதாரப் பணிகள் சிறப் பாக, கிராம நலச் செவிலியரால் அளிக்கப்படும். மையத்திலுள்ள குழந்தைகளின் மருத்துவப் பரிசோதனை, பரிந்துரை, ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவரால் முறையாகச் செய்யப்படும்.

3-6 வயதுக் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பணிகள்:



சுதந்தரத் திருநாள் தொழுவோம்நாம்
துன்பம் தொலைந்தினி எழுவோம்ஆம்
நிதந்தரும் தரித்திரம் நீங்கிடுவோம்
நீதியும் அறங்களும் ஓங்கிடுவோம்.

—நாமக்கல் கவிஞர்

1. பள்ளி முன் பருவக் கல்வி.
2. மதிய உணவு.
3. மருத்துவப் பரிசோதனை மற்றும் பரிந்துரைத்தல்.
4. வயிற்றுப்போக்குக் கட்டுப்பாடு.
5. சுவாச மண்டல நோய்க் கட்டுப்பாடு.
6. குறைந்த அளவு தேவைப்படும் ஊட்டச்சத்து அளிப்பு.

**மேற்பார்வையும் பயிற்சியும்**

ஒவ்வொரு பதினைந்து ஊட்டச் சத்து மையங்களுக்கும் ஒரு மேற் பார்வையாளர் என நியமிக்கப் பட்டு, அவர் ஊட்டச்சத்துப் பணி யாளர் மற்றும் குழந்தை நல அமைப் பாளர் ஆகிய இருவரது பணிகளை யும் மேற்பார்வையிடுவார். இவர் பெண் சுகாதார மேற்பார்வை யாளருடன் ஒருங்கிணைந்து திட்ட மிட்டுச் செயல்படுவார்.

**வட்டார அளவில்:**

வட்டார அளவில் ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சேர்ந்த மருத்துவ அலுவலர் வட்டாரத்திலும் பணி புரியும் சமுதாயச் சுகாதார செவிலியர் வட்டார விரிவாக்கக் கல்வியாளர், ஊட்டச்சத்துப் பயிற்று நர் ஆகியோர் ஒரு குழுவாக அமைந்து வட்டார அளவில் திட்டத் தில் பணியாளர்களுக்கும், மேற் பார்வையாளர்களுக்கும் பயிற்சி அளிப்பார்கள்.

**மாவட்ட அளவில்:**

மாவட்ட அளவில் பணிபுரியும் இணை இயக்குநர் (மருத்துவம்), துணை இயக்குநர்கள் (பொது சுகாதாரம்), மாவட்டத் திட்ட அலுவலர், மாவட்டத் தொடர்பு அலுவலர், புள்ளியியல் ஆய்வாளர் ஆகியோர் மாவட்டக் குழுவாக அமைந்து திட்டப் பணிகளைத் திட்டமிட்டுச் செயலாற்றுவார்கள்.

**மாநில அளவில்:**

மாநில அளவில் திட்ட ஒருங் கிணைப்பாளர் தலைமையில் திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் செயல்படும். இதில் சுகாதாரம் ஊட்டச்சத்துத் தொடர்புப் பயிற்சி மற்றும் கண்காணித்தல் பரிவுகளைச் சேர்ந்த பிரிவு அலுவலர்கள் செயல் படுவார்கள். ●

## தமிழகத் திட்டக் குழுவில் மாறுதல்

தமிழ்நாட்டில் புதிய அரசு ஏற்பட்டதைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் 'திட்டக் குழு'வில் மாறுதல் செய்துள்ளார்.

இதன்படி மாநில திட்டக் குழுவில் தலைவராகத் திரு. டி.வி.அந்தோனி, இ.ஆ.ப. இருப்பார். துணைத் தலைவராகத் திரு. வி. மாதவன் நாயர், இ.ஆ.ப. நியமிக்கப்பட்டுள்ளார்.

**உறுப்பினர்கள்:**

இந்தத் திட்டக் குழுவில், முழு நேர உறுப்பினராகத் திரு. எச்.ஜே.கே.சுகந்தன் இருப்பார்.

பகுதி நேர உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:

டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் (விவசாயம் மற்றும் விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகள்)
டாக்டர் பி.பி.சுந்தரேசன் (கல்வி மற்றும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகள்)
டாக்டர் எம்.நடராஜன் (மருத்துவம், பொதுச் சுகாதாரம், குடும்ப நலம்)
டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் (சமூக நலம்)
டாக்டர் எம்.ஏ.எம்.ராமசாமி (தொழில்-மின்சாரம்)
திரு. ஆர்.திருமலை (நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளம் பற்றிய கமிஷன் தலைவராக இருக்கும் இவர் இதில் உறுப்பினராகவும் இருப்பார்).

## எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் – தமிழகம்

**2-வது இடம்**

இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. இந்த வரிசையில் கேரள மாநிலம் முதல் இடத்தை வகிக்கிறது. இங்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை 91 சதவிகிதம். தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை 63.72 சதவிகிதம் ஆகும்.

## குழந்தைகள் பாதுகாப்பு மையப் பராமரிப்பில் தொழிற்சாலைகளின் பங்கு!

குழந்தைகள் பாதுகாப்பு மையங்கள் மற்றும் பள்ளிகளை அரசு பராமரித்து வருகிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை காரணமாக அரசே அனைத்துக் குழந்தைப் பாதுகாப்பு மையங்களையும் பராமரிப்பது என்பது இயலாத தொன்றாகும். தொண்டுள்ளம் படைத்த சில தொழிற்சாலைகள் தற்சமயம் இந்தச் சேவையில் ஈடுபட முன்வந்துள்ளன.

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள சுமார் 50 தனியார் தொழில் நிறுவனங்கள், இம்மாவட்டத்திலுள்ள சுமார் 2,000 பள்ளி மற்றும் குழந்தைப் பாதுகாப்பு மையங்களைப் பராமரிக்க இசைவு தெரிவித்துள்ளன.

தற்சமயம் அரசாங்கத்தால் பராமரிக்கப்பட்டு வரும் இந்த மையங்கள், இனி அதன் அருகாமையிலுள்ள தொழிற்சாலையின் உதவியுடன் சீரமைக்கப்பட்டு, கழிப்பறை வசதியுடன் பராமரிக்கப்படும். இந்த மாவட்டத்தில் மொத்தம் 5,463 மையங்கள் தற்சமயம் செயல்பட்டு வருகின்றன.



## மாணவர் பக்கம்

**தெரிந்து கொள்ளுங்கள்**




சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமான அந்தமான்-நிகோபார் தீவுகள் இந்திய நாட்டின் தாயக மண்ணிலிருந்து வெகுதொலைவில் இருக்கின்றன. மொத்தம் 321 சிறிய மற்றும் பெரிய தீவுகளைக் கொண்டது இக்கூட்டம். அடர்ந்த காடுகளும், நறுமண மலர்களும் பலவகைப் பறவைகளும் இங்கு உண்டு.

தலைநகர் போர்ட்பிளேயரில் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் வாழ்கிறார்கள். பலமொழி பேசும் பல இன இந்தியரும் இங்கே இருப்பதால் குட்டி இந்தியாவாக அழைக்கப்படுகிறது.

இங்குள்ள தேசியச் சின்னமான செல்லுலார் சிறை சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்கிறது. இந்தச் சிறையில்தான் நமது சுதந்திரப் போராட்ட வீரர்கள் தனிமைச் சிறையிலே வாடினார்கள். இந்தச் சிறையின் அமைப்பை பார்க்கும்போது இங்கு அடைக்கப்பட்டிருந்தோர் எத்தகைய கடினமான ஒரு வாழ்க்கையை மேற்கொண்டிருப்பார்கள் என்பது நன்றாகப் புரியும். போர்ட்பிளேயரின் நுழைவாயிலில் ரோஸ் தீவுகள் உள்ளன. இங்குதான் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தலைமை ஆட்சிமன்றம் செயல்பட்டு வந்தது.

போர்ட்பிளேயரில் இருக்கின்ற மனிதவளர்ச்சியியல் அருங்காட்சியகத்தில் தீவுகளைச் சார்ந்த பழங்குடி மக்களின் பொருட்கள், அவர்களின் வாழ்க்கை முறைகள் முதலியன சித்திரிக்கப்பட்டுள்ளன. கற்கால மனிதன் எப்படி இந்த விண்வெளிக் காலம் வரை படிப்படியாக வளர்ந்து வந்தான் என்பதைக் குறிக்கும் அரிய சம்பவங்கள் இந்த அருங்காட்சியகத்தில் விளக்கப்பட்டுள்ளன. கார்பியன் பவளக் கடற்கரை, விலங்கியல் பூங்கா, கடல்வாழ் உயிரியல் அருங்காட்சியகம் முதலியவைகளும் போர்ட்பிளேயரில் உள்ளன.

பறவைத் தீவு என்றழைக்கப்படும் ஷிர்யா தாபு தெற்கு அந்தமானின் தென்பகுதியில் உள்ளது. பசுமையான மங்கரோவ் சூழலில் மீன்பிடிக்கும் வசதியைக் கொண்ட இந்த இடம் ஒரு சிறந்த விடுமுறைச் சுற்றுலாத் தலமாக இருக்கிறது.

தெற்கு அந்தமானின் மேற்குக் கடற்கரையில் வண்டூர் கடற்கரை உள்ளது. நீந்துதலுக்குப் புகழ்பெற்ற இடம் இப்போது தேசிய கடற்பூங்காவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வண்டூரிலிருந்து கிறப், ரெட்ஸ்கின், ஜாலி பாய் முதலிய தீவுகளுக்குப் படகு மூலம் செல்லலாம். கடலின் கீழ் உள்ள இவ்விந்தை உலகத்தைக் காண வேண்டுமானால் அதற்கெனக் கண்ணாடிப் படகுகளும் உள்ளன.

பனைமரங்கள் நிறைந்த நிகோபார் மற்றும் கார் நிகோபார் தீவுகளின் கடலில் பலவகையான மீன்கள் காணப்படுகின்றன. கார்நிகோபாருக்குச் செல்வதே ஒரு சுவையான திகிலூட்டும் சாதனையாகும். நடுக்கடலில் கப்பல் நிறுத்தப்பட்டு மோட்டார் படகுகள் வாயிலாகவும் பின்னர் பரிசல்கள் வாயிலாகவும் பயணிகள் தீவுக்குள் அழைத்து வரப்படுகிறார்கள். கடற்கரைப் பகுதியில் அலைகள் அதிகம் இல்லை என்றால் கொஞ்ச தூரம் நாம் நடந்தும் செல்லலாம். இந்திய நாட்டின் தென் முனையான இந்திரா முனை இங்குதான் உள்ளது.

அந்தமான்-நிகோபார் தீவுகளில் விலங்கினங்களுக்குக் குறைவே இல்லை. மான்கள், காட்டுப்பூனை, காட்டு ஆடுகள், பன்றிகள் முதலியன ஏராளமாக உள்ளன. பச்சை ஓணான், ரப்பர் நண்டு போன்ற அரிய விலங்கு வகைகளும் இங்கே வாழ்கின்றன.

அந்தமான்-நிகோபார் தீவுகளுக்கு ஆகாய வழியிலோ அல்லது கடல் வழியாகவோ செல்லலாம். கல்கத்தாவிலிருந்தும், சென்னையிலிருந்தும் இந்தியன் ஏர்லைன்ஸ் போர்ட்பிளேயருக்கு விமான சேவை நடத்துகிறது. டெல்லியிலிருந்தும் இரு வாரங்களுக்கு ஒரு விமானம் விடப்படுகிறது. விசாகப்பட்டினம், சென்னை, கல்கத்தா இவ்விடங்களிலிருந்து போர்ட்பிளேயருக்குக் கப்பல் சேவையை இந்திய ஷிப்பிங் கார்ப்பரேஷன் நடத்துகிறது. தீவுகள் மிதமான தட்பவெப்ப நிலையைக் கொண்டவை. 23 டிகிரி செல்ஷியஸ் முதல் 31 டிகிரி செல்ஷியஸ் வரை காலநிலை காணப்படுகிறது. பலவகையான உணவுகள் சிறப்பாகக் கடல் உணவுகள் கிடைக்கின்றன

## சுதந்தரம் காப்போம்...!

—கவிஞர் பூமிநாதன்

நாடி நரம்பினில் முறுக்கேற!
நமது நாடென்ற செருக்கேற!
கோடி உழைப்புகள் கொடியேற்ற!
கொஞ்சும் வாய்மை அமுதூற்ற!
வாடிப் போனவை தழைத்தோங்க!
வானம் முட்டும் புகழ்வீங்க!
பாடிப் புகழ்வோம் சுதந்தரத்தை!
பரப்புவோம் வந்தே மாதரத்தை...!

## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை-20
## 1990-91-ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

| செயல் ஆதாரம் | | நிதி ஆதாரம் | |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 8309 | ஒதுக்கீடு | 261.406 இலட்சம் |
| பயனடைந்தோர் | 10031 | செலவினம் | 248.770 இலட்சம் |
| பயனடைந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் | 5085 | | |
| பயனடைந்த பெண்கள் | 4075 | | |

**இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்**

| செயல் ஆதாரம் | | நிதி ஆதாரம் | |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 700 | ஒதுக்கீடு | 13.727 இலட்சம் |
| பயிற்சியில் சேர்க்கப்பட்டவர்கள் | 790 | செலவினம் | 13.800 இலட்சம் |
| பயிற்சி முடித்தவர்கள் | 700 | | |
| பயிற்சியில் இருப்பவர்கள் | 90 | | |

**ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்:**

| நிதி ஆதாரம் | | செயல் ஆதாரம் | |
|---|---|---|---|
| நிதி ஒதுக்கீடு | 814.110 இலட்சம் | எடுக்கப்பட்ட வேலைகள் | 3891 |
| இதுவரை பெறப்பட்ட நிதி | 908.218 இலட்சம் | ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் | 3891 |
| செலவினம் | 908.218 இலட்சம் | முடிக்கப்பட்ட வேலைகள் | 3513 |

**மனித சக்தி நாட்கள்**

| | |
|---|---|
| ஒதுக்கீடு | 32,564 |
| ஏற்படுத்தப்பட்ட மனித சக்தி நாட்கள் | 35,147 |

**சமூக நலக்காடுகள்:**

| செயல் ஆதாரம் (நடப்பட்ட கன்றுகள்) | | நிதி ஆதாரம் | |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 20.000 இலட்சம் | ஒதுக்கீடு | 50-010 இலட்சம் |
| ஏற்படுத்தப்பட்ட நாற்றாங்கால் | 20.000 இலட்சம் | செலவினம் | 50.010 இலட்சம் |

**வேளாண்மைப் பெருக்கத் திட்டம்:**

| நிதி ஆதாரம் | | செயல் ஆதாரம் | |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | | ஒதுக்கீடு | |
| நிதி இருப்பு | 36.110 இலட்சம் | பயனடைந்தோர் செலவினம் | 1527 |
| செலவினம் | 35.980 இலட்சம் | பயனடைந்தோர் | 744 |

**கரிம வாயுத் திட்டம்**

| செயல் ஆதாரம் | | நிதி ஆதாரம் | |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 450 | ஒதுக்கீடு | 15.75 |
| முடிக்கப்பட்ட கலன்கள் | 450 | செலவினம் | 14.150 |

**புகையில்லா அடுப்பு:**

| செயல் ஆதாரம் | | நிதி ஆதாரம் | |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 6750 | ஒதுக்கீடு | 3.43 |
| முடிக்கப்பட்டவை | 6750 | செலவினம் | 1.50 |

திரு. மோகன் பியாரே இ.ஆ.ப.
கூடுதல் ஆட்சியர் - வளர்ச்சி மற்றும் திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை

திருமதி கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்
மதுரை

2593/90/செமதொ/மதுரை




இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:


# தமிழ்த் தென்றல் திரு.வி.க.

'தமிழ்த் தென்றல்' என்றதும் நம் நினைவுக்கு வருபவர் திரு.வி.க. அவர்களே ஆவர்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர், தொழிலாளர் இயக்கம் கண்டவர், பத்திரிகைப் பணியில் சிறந்து விளங்கியவர் இப்படிப் பல்வேறு பெருமைகளுக்கு உரியவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள்.

திரு.வி.க. அவர்கள் 26-8-1883 அன்று, செங்கல்பட்டு மாவட்டம், துள்ளம் என்னும் ஊரில் பிறந்தார். பெற்றோர் வே. விருத்தாசலம், சின்னம்மாள். தந்தையார் இசையில் வல்லவர். திரு.வி.க.-வின் செல்லப் பெயர் சின்னச்சாமி.

இவரது மூதாதையர் திருவாரூரைச் சேர்ந்தவர்கள். ஆகவே, திரு - என்பது திருவாரூரைக் குறிக்கும். வி- என்பது விருத்தாசலனாரைக் குறிக்கும். க - என்பது கலியாண சுந்தரனாரைக் குறிக்கும்.



திரு.வி.க. அவர்கள், சென்னை இராயப்பேட்டையில் உள்ள ஆரியன் பிரைமரி பள்ளியில் சேர்ந்தார். பிறகு, வெஸ்லி கல்லூரியில் பயின்றார். வெஸ்லி கல்லூரியில் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளை தமிழாசிரியராக இருந்தார். அவருடன் திரு.வி.க.-வுக்கு நட்பு ஏற்பட்டது. அவர் சொற்பொழிவைக் கேட்பதிலே மிகுந்த ஆர்வம் செலுத்தினார். அவரிடம் இலக்கணம் கற்றார். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் மாணவர் மகாவித்துவான் தணிகாசலரிடம் சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலான சாத்திரங்களைக் கற்றறிந்தார். இதேபோல, சிதம்பர முதலியாரிடம் திருக்குறள் பாடங் கேட்டார். தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரிடம், தம் ஐயங்களையெல்லாம் கேட்டுத் தெளிவு பெற்றார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்த திரு.வி.க. அவர்களின் குடும்பம் வறுமையில் சிக்கித் தவித்தது. பல இடங்களில் வேலைக்கு அலைந்தார். இறுதியில் 1907-ஆம் ஆண்டு ஸ்பென்சர் கம்பெனியில் வேலை கிடைத்தது.

வேலையில் இருந்து கொண்டே அவர் நிறைய புத்தகங்களைப் படித்தார். 1908-இல் கதிரைவேற் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

சுதந்திரப் போராட்டம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நேரம். திரு.வி.க. அதில் ஈடுபட்டார். அதன் விளைவாக வேலையை ராஜினாமா செய்ய நேரிட்டது. மீண்டும் குடும்பத்தில் நெருக்கடி ஏற்பட்டது.

1910-ஆம் ஆண்டில், ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் ஆறாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இதற்கிடையில் அன்னிபெசண்டு அம்மையார் தொடர்பு ஏற்பட்டது. அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான இவர், இந்தியாவில் சுயாட்சி இயக்கம் மலரப் பாடுபட்டவர்.

திரு.வி.க. அவர்களுக்கு 13-9-1912-இல் திருமணம் நடைபெற்றது. மனைவி பெயர் கமலாம்பிகை. 1916-ஆம் ஆண்டு வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

1917-ஆம் ஆண்டு சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு.வி.க. அவர்கள் பேசினார். இதுவே அவர் பேசிய முதல் பேச்சு.

சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்ட திரு.வி.க. அவர்கள், பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க எண்ணினார். அதன் விளைவாக அவர் தமது தமிழாசிரியர் வேலையை ராஜினாமா செய்ய வேண்டியிருந்தது. 1917-ஆம் ஆண்டு 'தேச பக்தன்' என்னும் நாளிதழைத் தொடங்கினார். 'நவ சக்தி' என்னும் வார இதழையும் நடத்தினார்.

இந்த இதழ்கள் தூங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பின.

## தனித்தமிழின் கனிச்சுவை திரு.வி.க.

திரு.வி.கலி யாணசுந் தரனாரின்
செந்தமிழ்க்கட் டுரைகள் என்னும்
அருவிகளில் ஆடியநல் லறிஞர்களும்
அறிவுபெற்றார்; இளையசிட்டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்கேறிக்
குதித்தனவே; பிறசொல் லின்கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்சுவையைக்
கண்டுகளித் தனவே யன்றோ?

—பாவேந்தர் பாரதிதாசன்

(தமிழ்த்தென்றல் திரு.வி.க. பிறந்த நாள்- ஆகஸ்டு: 26)

அவர் எழுதிய தலையங்கங்கள் எல்லோரையும் வெகுவாகக் கவர்ந்தன. நாட்டுப் பற்று, மொழிப்பற்று, பெண் உரிமை குறித்து அவர் எழுதிய கட்டுரைகள் சிந்தனையைத் தூண்டின.

தொழிலாளர் நலனிலும் திரு.வி.க. அவர்கள் மிகுந்த அக்கறை காட்டினார்.

27-4-1918 அன்று சென்னையில் தொழிலாளர் சங்கம் ஒன்று தொடங்கியது. இதுவே இந்தியாவில் தோன்றிய முதல் தொழிற் சங்கம் ஆகும். சர்க்கரைச் செட்டியார், சிங்காரவேலர் ஆகியோரோடு, திரு.வி.க. அவர்களும் இணைந்து அதன் வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்தார். உழைப்பாளர்களுக்கு நீதி கிடைக்கப் போராடினார். 1950-இல் அகில இந்தியத் தொழிலாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழிலாளர் என்பவர் யாவர்? என்பதற்கு அவர் அளித்த விளக்கம் வருமாறு:

"உலகிலுள்ள அனைவரும் தொழிலாளரே யாவார்; அறிவால் தொழில் புரிவோர் சிலர்; கையால் தொழில் புரிவோர் பலர்."

திரு.வி.க. அவர்களின் எழுத்தும் பேச்சும் எல்லாரையும் கவர்ந்தன. இவரது பேச்சாற்றலை நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களும், பாவேந்தர் பாரதிதாசனாரும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

திரு.வி.க. அவர்கள் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். முருகு அல்லது அழகு, முருகன் அருள்வேட்டல், பெண்ணின் பெருமை, நாயன்மார் வரலாறு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்- இவ்வாறு பல நூல்களை அவர் படைத்துள்ளார். அதாவது, சுமார் 55 நூல்களையும் 15-க்கும் மேற்பட்ட செய்யுள் நூல்களையும் அவர் எழுதியுள்ளார்.

அவரது 'வளர்ச்சியும் வாழ்வும்' என்னும் நூலில்,

'சிந்தனை செய்க சிந்தனை செய்க
எந்தப் பொருளையும் சிந்தனை செய்க
சிந்தனை, ஆய்வை உந்துதல் உறுதி;
ஆய்க ஆய்க எதையும் ஆய்க
எதையும் ஆய்க பதைபதைப் பின்றி;
விதையை ஆய்க விளைவை ஆய்க
முதலை ஆய்க முடிவை ஆய்க
கருவை ஆய்க உருவை ஆய்க
பருமையை ஆய்க நுண்மையை ஆய்க
அணுவை ஆய்க மலையை ஆய்க
அண்டம் பிண்டம் அனைத்தையும் ஆய்க
ஆழ்ந்தே ஆழ்ந்தே ஆய்ந்து தோய்க'

- என்று கூறியிருக்கும் அடிகள் நாம் வாழ்க்கையில் முன்னேறும் படிகள்.

"தமிழ்நாட்டில் காந்தியக் கொள்கையைப் பரப்பியவர்களுள் திரு.வி.க.வே முதன்மையானவர் என்பது மிகையன்று. லெனின், காரல் மார்க்ஸ், டால்ஸ்டாய் முதலியோர் கருத்துக்களையும் துருவியாராய்ந்தார்" என்று தமிழ்ப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

திரு.வி.க. அவர்கள் தமிழைப் பாடினார் - தமிழர்களைப் பாடினார் - தமிழ்நாட்டைப் பாடினார். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் தமிழை வளர்த்தார் - தமிழ்ச் சிந்தனையை வளர்த்தார். அவரது சிந்தனையிலே முகிழ்த்த ஒளி முத்துக்கள் பல. அவற்றுள் ஒன்றிரண்டைக் காண்போம்.

"உயிர்கள் அனைத்தும் கடவுள் படைப்பு. அனைத்து உயிரும் ஈசன் குடியிருப்பு. மாசில்லா மனமே ஈசன் கோயில். உயிர்களை நேசி. உனக்குண்டு இறைவன் ஆசி. உயிர்களை வழிபடு. அதுவே கடவுள் வழிபாடு. உயிர்களுக்குத் தொண்டு செய். அதுவே கடவுள் தொண்டு. சடங்குகளும், சம்பிரதாயங்களும் நம்மைக் கடவுளிடம் இட்டுச் செல்லா."

"பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதுவது பேதைமை, அறியாமையின் அடையாளம், சாதி வேற்றுமையைக் கனவிலும் எண்ணாதே. தீண்டாமையை விலக்கு."

"பெண்களின் மேம்பாட்டிற்குக் கல்வி மிக அவசியம். கல்வியே பெண்களைக் கரைசேர்க்கும்."

சிறந்த எழுத்தாளராக
சிறந்த பேச்சாளராக
சிறந்த நூலாசிரியராக
சிறந்த இதழாசிரியராக
சிறந்த தொழிற்சங்கத் தலைவராக

இவ்வாறு எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் 17-9-1953-இல் இயற்கையெய்தினார்.

அவர் மறைந்தாலும், அவர் விட்டுச் சென்ற தமிழ்ச் செல்வங்கள் காலத்துக்கும் குறையாதவை; மறையாதவை;

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் எண்ணம், செயல் எல்லாம் பொதுத் தொண்டிலேயே இருந்தது. மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் மிக்கவர் அவர். நாமும் அவரது வழியைப் பின்பற்றுவோம்.

**'வழிகாட்டிய ஒளிவிளக்குகள்' என்னும் நூலிலிருந்து.**



# இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட வீராங்கனைகள்

**இந்திய நாட்டின் இனிய விடுதலைக்காக ஏராளமான ஆண்கள் மட்டுமல்ல; எண்ணற்ற பெண்களும் தன்னலம் கருதாமல் ஈடுபட்டனர்; அதுபற்றி விளக்கும் அரியதோர் கட்டுரை**

**பு**லியையே முறத்தினால் அடித்து விரட்டிய வீராங்கனைகள் பலரும் நம்முடைய தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள். பகைவரோடு சண்டையிட்ட தன் மகன், முதுகிலே காயம் பட்டு மாண்டான் என்பதை உணர்ந்த அணங்கொருத்தி இப்படிப்பட்ட கோழைக்கா பால் கொடுத்து வளர்த்தோம் என்று வாளெடுத்துத் தன் மார்பகங்களையே அறுத்தெறிந்த வீரத்தின் விளைநிலமே தமிழகம்!

இந்த வீரமண்ணுக்கு, அந்தப் புறநானூற்றுக்காலப் பெண்மணிகளைப் போல ஏராளமான மங்கையர் திலகங்களைப் பெற்றுத் தரும் சக்தி இன்னமும் அற்றுப்போய் விடவில்லை.

இதை மெய்யாக்கும் வகையில் ஒவ்வொரு கால கட்டத்திலும் எண்ணற்ற வீராங்கனைகள் நம்நாட்டின் எங்கோ ஓர் மூலையில் பிறந்திருக்கிறார்கள்; புகழ் நிறுவி இறந்திருக்கிறார்கள்.

குறிப்பாக - சுதந்திரப் போர்க் களத்தில் சுடர்விட்ட அந்த வீரத் தாய்மார்களை நம்மால் மறக்கவே முடியாது.

இந்தியாவில் கும்பினி ஆதிக்கத்தை எதிர்த்து விடுதலை வேள்வி தொடங்கப்பட்ட ஆரம்பக் கால கட்டம் இந்திய விடுதலையின் 45-வது ஆண்டு விழா கொண்டாடும் இந்நாளில், நாம் எண்ணிப் பார்த்து இறும்பூது எய்தத்தக்கது ஆகும். அதிலும் குறிப்பாக, எழுச்சி கொண்டு அந்நாளில் வெகுண்டெழுந்த தாய்க் குலத் தகைமையாளர்களை நாம் நினைவுகூர்தல் நன்று.

ராஜபுத்திர குலத்தில் பிறந்த பத்மினி, கோண்ட் வானா மாநிலத்தில் பிறந்த துர்க்காவதி, மகாராட்டிரத்தில் பிறந்த தாராபாய், ஜான்சி நாட்டு அரசி, ராணி லட்சுமிபாய் போன்ற மங்கையர் திலகங்கள் இந்தியாவைச் சூழ்ந்த அடிமை இருள் விலக்க அரும்பாடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மதுரை மங்கம்மாளைப் போலத் தமிழகத்தில் போராட்டக் களம் கண்டு புகழ்பெற்ற பெண்மணிகள் பலர். இந்தியப் போரில் தம் வாழ்வையே தியாகம் செய்த அந்தத் தன்மானப் பெண்மணிகள் பற்றிய விவரக் குறிப்புகளின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

'விடுதலைப் போரில் கர்நாடகம்' என்ற நூலில், இந்தியாவில் முதன் முதலாக விடுதலை எழுச்சிக்கு வித்திட்டவரே பெண்மணிதான் என்கிற குறிப்புக் காணப்படுகிறது.

'1824-இல் நடந்த கிட்டூர் சென்னம்மாளின் போராட்டம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஜான்சி ராணி லட்சுமி பாய்க்கு ஒரு தலைமுறைக்கு முன்பாகவே, கிட்டூர் ராணி சென்னம்மா, ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி, இந்தியாவிலேயே முதல் புரட்சியாளராக விளங்கினார்' என்று அந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன்பே தமிழகத்தில் பாஞ்சாலங் குறிச்சியில் வீரபாண்டியக் கட்ட பொம்மனால் எழுச்சிக்கனல் மூட்டப் பட்டதும், அந்நூலில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, விடுதலைப் போரில் இறங்கிய முதல் பெண் மணி என்கிற பெருமை வேண்டுமானால் அவருக்குச் சேரக்கூடுமா என்றால் அப்படியும் தெரியவில்லை.

ஏனென்றால், 1783-க்கு முன்பே, கர்னல் ஸ்மித் என்பானோடு, சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த முத்துவடுகரும், அவரது அன்பு மனைவி வீரமங்கை வேலு நாச்சியாரும் போரிட்டார்கள் என்கிறது நம் சுதந்திரக் காலத் தமிழக வரலாறு.

போரில் முத்துவடுகர் மாண்ட பின்னர், அதே வீர உணர்வுகளோடு சிவகங்கையை வேலுநாச்சியாரே ஆட்சி செய்து வந்திருக்கிறார். பிறகு தான் பெரியமருது, சின்னமருது இருவரும் ஆட்சிப் பொறுப்பேற்றனர்.

ஆகவே, விடுதலைப் போரில் முதலிடம் பெறுகின்ற பெண்மணி யார் என்பதை ஆய்வாளர்கள் கருத்துக்கே விட்டுவிடுவோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே - நியூயார்க்கைச்



★ சுதந்தரம் என்பது, இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொரு வரையும் தன் சொந்தச் சகோதரனாகவும், சகோதரியாகவும் கருதுவதைக் குறிக்கின்ற தன்மையாகும்.

சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பாரும் 'தியோசாபிகல் சொசைட்டி' என்ற பிரம்மஞான சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். 1875-இல் தொடங்கப்பட்ட அச்சங்கத்தில், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான அன்னி பெசன்ட் அம்மையார் சேர்ந்தார். பின்னர் அவர் சென்னை வந்து சேரவே 1883-இல் அச்சங்கத்தின் தலைமை நிறுவனம் அடையாறில் நிறுவப்பட்டது.

இந்தியாவில் தேசியக் கல்வி பரப்புவதில் இச்சங்கம் மிகவும் ஈடுபாடு கொண்டது.

1916-இல், பெசண்ட் அம்மையார் காங்கிரசில் சேர்ந்தார். அவரால் தோற்றுவிக்கப்பட்ட 'ஹோம் ரூல்' இயக்கத்தை மகாத்மா காந்தி அடிகளும் ஆதரித்துப் பிரச்சாரம் செய்ததுண்டு.

தமிழ்நாட்டைத் தாய்வீடு போல் கொண்ட அவ்வம்மையார், இந்தியக் குடிமகளாகவே தம்மைப் பதிவு செய்து கொண்டார். இதனாலேயே, 1917-இல் கல்கத்தா காங்கிரஸ் தலைவராக்கப்பட்டார், அன்னி பெசண்ட் அம்மையார். கோவையிலும் உதகமண்டலத்திலும் இருந்த அவரது இல்லங்கள் இரண்டும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவ்வப்போது வந்து பல்வேறு அரசியல் பிரச்சினைகள் பற்றிக் கலந்தாலோசிக்கும் கேந்திரங்களாயின.

'காமன்வீல்' 'நியூ இண்டியா' ஆகிய பத்திரிகைகளையும் துவக்கிய அவ்வம்மையார், தமிழகத்தில் இந்திய விடுதலைக் கனல் மூட்டிய முதல் பெண்மணி என்று கூடக் கூறப்படுவதுண்டு. அந்த அளவுக்குப் பாடுபட்ட அன்னிபெசண்ட், பிரிட்டிஷ் மக்களின் பார்வையை இந்தியாவின் மேல் திருப்பி வெற்றி கண்டவரும் ஆவார்.

திருமதி மார்கரெட் கசின்ஸ் என்கிற வெள்ளைக்காரப் பெண்மணியும், தியோசாபிகல் சங்கத்தின் சார்பில் காங்கிரசில் சேர்ந்தார். 1932-இல், நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை புகுந்தவர் இவர்.

1893-இல், இந்தியக் கம்பெனியின் வழக்கொன்றை நடத்துவதற்காகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார் காந்தியடிகள். அந்நாட்டில் இந்தியர் படும் அல்லல் அவர் கவனத்தில் பட்டது. அங்கே நிற வெறி பிடித்த வெள்ளையரால் ஒப்பந்தக் கூலிகளாக நடத்தப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலோர் சென்னையிலிருந்து கொண்டு, செல்லப்பட்டோராவர்.

இதனால், அங்கு நடத்தப்பட்ட சத்தியாகிரகத்தில், போராட்டங்களில் பெரும்பாலும் தமிழர்களே பங்கேற்றார்கள். தில்லையாடி வள்ளியம்மை என்ற தமிழகத்து வீராங்கனை அப்படிப் போராடியவர்களில் குறிப்பிடத்தக்கவர். சத்தியாக்கிரகப் போராட்டம் காரணமாகத் தமது 17-ஆம் வயதில் சிறையில் அடைக்கப்பட்ட அவர், சிறைக் கொடுமை தாங்கமாமல் நோயுற்று, விடுதலை செய்யப்பட்ட சில நாளிலேயே மாண்டு போனார். மணவிழாக்கூட காணாத அப்பெண்மணிக்கு மரணவிழா எடுக்கப்பட்டது!

இதற்கெல்லாம் பின்னாலேதான் அப்போராட்டத்தில் தாமே ஐக்கியமாகித் தீவிரம் காட்டினார் காந்தி அடிகள். சத்தியாக்கிரகப் போராட்டம் வெற்றி பெற்றது. தென்னாப்பிரிக்காவிலிருந்து 1914-இல் இந்தியாவுக்குத் திரும்பி காந்தியார், அப்படியொரு விடுதலை வேள்வி இங்கேயும் தொடங்கப்படவிருப்பதை உணர்ந்தார். கோபாலகிருஷ்ண கோகலே அவருக்கு அரசியல் வழி காட்டி ஆனார்.

''பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில் தியாகம் செய்து வெற்றி கண்ட தில்லையாடி வள்ளியம்மை முதலான அவர்கள்தான், எனக்கு முதன் முதலில் விடுதலை உணர்வூட்டிய பெருமைக்கு உரியவர்கள்'' என்று பின்னர் சென்னை வந்திருந்த போது, திருவல்லிக்கேணி கடற்கரை திலகர் கட்டத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் பெருமிதத்தோடு குறிப்பிட்டார் காந்தியார். மாயவரம் சென்று, அதற்கு அருகாமையில் உள்ள தில்லையாடியில் இருந்த வீரமாது வள்ளியம்மாள் வீட்டுக்குச் சென்று, மரியாதை செலுத்தி வரவும் அவர் தவறினாரில்லை.

1921-இல் இரண்டாவது முறையாகச் சென்னைக்கு வந்த காந்தி அடிகள், தமிழகத்தின் பல ஊர்களுக்கும் சென்றார். அப்போது பெரியார் ஈ.வெ. இராமசாமியின் இல்லத்திற்குப் போய்த் தங்கினார். பெரியாருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் கைராட்டையில் நூல் நூற்கும் விதத்தைக் கற்றுக் கொடுத்தார். தமது மனைவியார் நாகம்மையார், தமையனார் ஈ.வெ. கிருஷ்ணசாமி நாயக்கர், ஆகியோருடன் சேர்ந்து ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்ட தியாக குடும்பத்தில் தலைவரே பெரியார் ஈ.வெ.ரா. கள்ளுக் கடை மறியலின் போது தமக்குச் சொந்தமான தென்னை மரங்களையெல்லாம் குத்தகைக்கு விட மறுத்ததோடு, இலாபம் எண்ணாமல் அவைகளை வெட்டித் தள்ளவும் செய்தார்.

அம்மறியலில் அவர் மனைவியார் நாகம்மாளும், சகோதரி கண்ணம்மாளும் காட்டிய தீவிரம் காந்தி அடிகளாரையே வியக்கவைப்பதாக இருந்தது.

கள்ளுக்கடை மறியலைக் கைவிடுமாறு ஒருமுறை காந்தியாரிடம் வலியுறுத்தப்பட்டபோது - ''அதைக் கைவிடுவது என் கையில் இல்லை; தமிழ்நாட்டைச் சேர்ந்த ஈரோட்டில் இருக்கும் நாகம்மாள், கண்ணம்மாள் என்கிற இரண்டு பெண்மணிகள் தான் அந்த அமைப்பைத் தலைமை தாங்கி நடத்துகிறார்கள்; அவர்களிடம் போய்ப் பேசிப் பாருங்கள்'' என்றார் அவர்!

அந்த அளவுக்கு விடுதலைப் போர்க்களத்தில் சிறப்புற்றிருந்தார்கள் நம் நாட்டுப் பெண்மணிகள்!

கேரள மாநிலத்தைச் சேர்ந்த வைக்கத்தில், அரிசன மக்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வந்தார்கள். ஆலயங்களுக்குள்ளே புக மட்டுமல்ல; முக்கிய வீதிகளில் நடக்கவும் கூடாதெனத் தடுக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிலை நீங்க, 'வைக்கம் போராட்டம்' பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில் நடத்தப்பட்ட போதும் - திருமதி நாகம்மாளும், திருமதி கண்ணம்மாளும் அதில் ஈடுபட்டுச் சிறைத் தண்டனை பெற்றார்கள்.

அந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலே வெற்றி கண்ட பெரியார் ஈ.வெ.ரா. 'வைக்கம் வீரர்' என்றே சிறப்புறக் குறிப்பிட்டார்.

7.8.1724-இல் திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீமூலம் இறந்துபோன பின், பட்டத்திற்கு வந்த மகாராணி சேதுபார்வதியம்மாள் அந்தச் சத்தியாக்கிரகத் தியாகிகளுக்கெல்லாம் பொது விடுதலையளித்தார்.

1930-ஆம் ஆண்டு, இந்திய விடுதலைப் போரின் ஓர் அங்கமாகத் தமிழ்நாட்டில் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது. அப்போது, அப்போராட்டத்தில் பங்கேற்று ஓராண்டுச் சிறைத் தண்டனை பெற்றவர்களில் செல்வி துர்காபாய், திருமதி ருக்மணி லட்சுமிபதி இருவரும் குறிப்பிடத்தக்க தியாகப் பெண்மணிகளாவர்.

மதுரையைச் சேர்ந்த எல்.கிருஷ்ணசாமி பாரதியின் மனைவியார் திருமதி கே. லட்சுமி பாரதி என்பாரும், இந்திய விடுதலைப் போரில் களம்கண்டு சிறை சென்று சிறப்புற்றார். தமிழ்நாடு சட்டமன்றத்தில், 1937-ஆம் ஆண்டிலும் 1946-ஆம் ஆண்டிலும் உறுப்பினராக அங்கம் வகித்தவர் இவர்.

அந்நியத் துணிக்கடை மறியலில் ஈடுபட்டு திருமதி எஸ். அம்புஜம்மாள், ஜானாம்பாள், கமலாபாய், லட்சமிசங்கர ஐயர் போன்றோரும் சிறைத் தண்டனை ஏற்றார்கள்.



★ 'உலகம் முழுவதும் ஒரு குடும்பமே' என்னும் உணர்வுடன் வாழ வேண்டும். இந்தக் கருத்தை இள வயதிலேயே குழந்தைகளின் மனத்தில் பதிக்கச் செய்ய வேண்டியது அவசியம்.

அதே போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை தண்டனை ஏற்ற திருமதி பி.லீலாவதி, லலிதா பிரபு இருவரும் தலைச்சேரி நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிக்கப்பட்டனர். அவர்கள் கழுத்தில் கிடந்த தாலிக்கயிறும் போலீசாரால் அகற்றப்பட்டது. இதனால், 'தாலியறுத்தான் தலைச்சேரி' என்றே அவ்வூர் அப்போது குறிப்பிடப்பட்டது.

அதை எதிர்த்து, இந்திய மகளிர் சார்பில்-திருமதி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அம்மு சுவாமிநாதன், ஜி. விசாலாட்சி ஆகியோரால் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன; மிகக் கடுமையான எதிர்ப்பு அறிக்கைகள் விடப்பட்டன.

திருமதி சுப்பம்மாள், கன்னட மாநிலத்தில் உள்ள பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக இருந்த மாதவமேனன் என்பாரின் மனைவி திருமதி குட்டியம்மாளு அம்மாள் கைக்குழந்தையோடு சிறைப் புகுந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தேசபக்தர்களுக்கு யாரும் வீடு வாடகைக்குத் தரக்கூடாது என்று அரசே அறிவித்தது; அதை எதிர்த்து, திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அம்மையாரும் அஞ்சலை அம்மாளும் போலீஸ் கமிஷனர் அலுவலக வளைவுக்குள்ளேயே போய் அடுப்புப் பற்ற வைத்துச் சோறாக்கி எதிர்ப்பைக் காட்டினார்கள்.

திருமதி மரகதம் சந்திரசேகர், திருமதி ராதாபாய் சுப்பராமன், மீராபாய், திருமதி நீலாவதி சுப்பிரமணியம், டாக்டர் பிச்சமுத்து அம்மாள், கே.எஸ்.பர்வதவர்த்தனி போன்ற இன்னும் பல பெண்மணிகளும் விடுதலைப் போர்க்களம் புகுந்து சிறை சென்றார்கள்.


சுதந்திரப் போர் மூண்ட காலத்தில், அந்த எழுச்சிக்கனல் மங்காமல் ஒளி விட அரும்பாடுபட்ட தமிழகப் பெண்மணிகளை நினைவு கூரும் நாம், அனைத்திந்திய அளவில் இவ்வகையில் பங்கேற்றவர்களையும் மறந்துவிட முடியாது.

கடமை வீரரான காந்தியடிகளாரின் துணைவியார் கஸ்தூரிபா அம்மையாரும், மோதிலால் நேருவின் மனைவியார் சொரூபராணியும், கவியரசி சரோஜினியும் அவரது சகோதரிகளில் ஒருவரான மிருணாளினி சட்டோபாத்யாவும், அனுசூயா தேவியும் இன்ன பிறரும் இந்திய விடுதலைக்காகச் செய்த தியாகங்களும் இணையற்றவைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

'நாட்டு விடுதலைக்காகப் போராட ஆண்கள் மட்டுந்தான் முன்னிற்பதா? ஆண்களோடு சரிநிகர் சமானமாக நிற்க நாங்களும் தயார்', என்ற வகையிலே தாய்க்குலமும் எழுந்தது இப்படி!

பிறந்த நாட்டைத் 'தாய் நாடு' என்று தானே கூறுகிறோம்? அதை மெய்ப்பிப்பதுபோல் ஆர்ப்பரித்தெழுந்த அவர்களை நாடு மறக்காது!

**- இல. இராசேந்திரன்.**



★ நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகம் பெற வேண்டுமானால், மக்கள் அற வழியில் நிற்க வேண்டும்.

# நூல் நயம்

### மாணவருக்கு
**(அண்ணல் காந்தியடிகள் எழுதியதும், பேசியதும்)**

**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

விலை:ரூ.30 பக்கம்:352

திரு. அ.லெ. நடராஜன் மொழி பெயர்த்துள்ள இந்நூலில், ஒரு நல்ல மாணவன் எப்படி இருக்க வேண்டும்? என்று அண்ணலின் கருத்துக்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இறைவழிபாடு, சமய அறிவு, கல்வியின் குறிக்கோள், அஞ்சாமை, கடமையும் உரிமையும், உண்மையைக் கடைப்பிடித்தல், சொல்லும் செயலும், தியாகம், அகிம்சை, ஆசிரியர்கள் பணி, மாணவர் உலகம் இவ்வாறு பல்வேறு தலைப்புகளில் மாணவர்க்கு மணியான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் காந்தியடிகள். மாணவருலகம் படித்துப் பயன்பெற வேண்டும்.

பி.வி. கிரி

### புரட்சிக் கவிஞரின் கவிதைக் கோட்பாடுகள்

தொகுப்பாசிரியர்: கடலூர் மணிமாறன்
வெளியிட்டோர்:
விடியல் வெளியீட்டகம்
109, மேலைத் தெரு,
கிருட்டிணராயபுரம்
திருச்சி மாவட்டம்-639 102

பக்கம்:144 விலை:ரூ.18

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கவிதைத் திறன் குறித்து 14 பெருமக்கள் படைத்துள்ள ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

பாவேந்தர் வலியுறுத்திய கொள்கைகளை - கோட்பாடுகளை தங்களது பாணியில் எடுத்துச் சொல்லியிருக்கும் ஆய்வாளர்களின் திறன் போற்றுதலுக்கு உரியது. 'மூல ஆசிரியரைவிட உரை ஆசிரியர் மேன்மையானவர்' என்று சொல்லப்படுவதுண்டு. அதுபோல, பாவேந்தரின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து கட்டுரையாளர்கள் படைத்திருக்கும் திறனாய்வைப் படிக்கும் போது மகிழ்ச்சி நிறைகிறது. இக்கட்டுரைகள் பாவேந்தரின் பெருந்திறனை நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. பாவேந்தர் காதலிக்கு ஏற்ற காதலனாக, பகுத்தறிவு பரப்பும் பாவலனாக, பொதுவுடைமை காக்கும் தோழனாக, மொழிநலம் காக்கும் தலைவனாக, பெண் விடுதலையின் ஆதரவாளனாக விளங்கிய செய்திகள் அவரது கவிதை வரிகளைக் கொண்டே ஆணித்தரமாக உணர்த்தப்பட்டிருக்கின்றன.

"புரட்சிக் கவிஞனின் சிந்தனைகளின் சாரதிதான் அவன் கவிதை. கண்ணீரைப் போல வியர்வையைப்போல் அவனது பட்டறிவின் இயற்கை வெளிப்பாடே அவனுடைய கவிதைகள்" எனச் செல்வேந்திரன் குறிப்பிட்டிருக்கும் வாசகம் நூற்றுக்கு நூறு உண்மை! மொத்தத்தில் இந்நூல், பாவேந்தரின் புலமைக்குக் கட்டியங் கூறுகிறது. அவரின் திறமைக்கு வாழ்த்துரை வடிக்கிறது.

- தமிழ்ப்பித்தன்

### தென்குமரி தந்த திருவள்ளுவர்

ஆசிரியர்: டாக்டர் எஸ்.பத்மநாபன்,
வெளியிட்டோர்:
சுபா பதிப்பகம்,
20, ஸ்டேட் பாங்க் காலனி,
நாகர்கோவில் 629 001.

பக்கம்:60 விலை:ரூ.10/-

உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவர் பெருந்தகையின் சொந்த ஊர் இதுதான் என்ற திட்டவட்டமான முடிவு இதுவரை எந்தத் தமிழறிஞராலும் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறப்படவில்லை; இந்நிலையில், வள்ளுவர் பிறந்தது இன்று குமரி மாவட்டம் என்று அழைக்கப்படும் நாஞ்சில் நாடுதான் என்றோர் புதுப் பிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்கிறார் நூலாசிரியர்.

ஆனால் ஒன்று- தனது கருத்தை வலியுறுத்த அகச்சான்று புறச்சான்றுகளையெல்லாம் எடுத்துக் காட்டுகிறார்; இலக்கியம், வரலாறு, கல்வெட்டு, அம்மாவட்ட மக்களின் பேச்சு வழக்கில் உள்ள சொற்கள், சமுதாயப் பழக்க வழக்கங்கள் யாவும் மேற்கோள்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

தமிழறிஞர்களின் சிந்தனைக்கு இந்த நூலோர் சிறந்த விருந்து.

—பி.எல்.ஆர்.

### காலம் ஏன் மாறாது?

**ஆசிரியர்: பிரியா ஜெயசீலன்**
**வெளியீடு:**
நவ்தின் பிரகாசன் கேந்திரா
த.பெ.எண்.1585
காஷ்மீர் கேட்
டெல்லி-110006.

விலை:ரூ.7 பக்கம்:18

**இன்று கொடுமைக்கெல்லாம் கொடுமையாக இருந்து வருவது, வரதட்சணைக் கொடுமையாகும்.**

**இது தனிப்பட்ட பிரச்சினை அன்று; சமுதாயத்தையே, நாட்டையே பாதிக்கும் பிரச்சினையாகும். இதனை ஒழிக்கும் முயற்சியில், அனைவரும் முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகிறது இந்நூல்.**

### 'உரம் இட்டுப் பயிர் வளர்ப்போம்'

ஆசிரியர்: தி. புருசோத்தமன்
வெளியிட்டோர்:
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்
சென்னை-600 098

பக்கம்:156 விலை:ரூ.20

இயற்கை உரங்கள், உயிர் உரங்கள், இரசாயன உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி எப்படி வெற்றிகரமாக, லாபகரமாக விவசாயம் செய்யலாம் என்பதைத் தெளிவாக விளக்குகிறது இந்நூல்.

உரங்களைப் பற்றி மட்டும் அல்லாமல் நிலங்களில் ஏற்படும் மாற்றங்கள், நிலங்களின் தன்மை, அவற்றிற்கு ஏற்ற உரங்கள் ஆகியவையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

### சாதனை புரியும் புத்தகங்கள்!

**புத்தகங்களும் மனிதர்களைப் போலவே சாதனை புரிகின்றன. மிகப் பெரும் காரியங்களை மிகச் சில புத்தகங்கள் சாதித்து விடுகின்றன.**

**—வால்ட்டேர்**



## உர விலையைக் குறைக்கக் கோரி மத்திய அரசுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கோரிக்கை

தமிழகத்தில் உள்ள 71 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் சமீபத்திய மத்திய அரசின் உர விலையை அதிகரிக்கும் முடிவின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு ஆண்டிற்குத் தமிழகத்தில் மட்டும் 20 இலட்சம் டன் செயற்கை இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது இந்தியாவில் பயன்படுத்தப்படும் சராசரி அளவை விட அதிகமாகும்.

எனவே, கலப்பு உரங்கள், வீரிய விதைகள், மேம்பட்ட பாசனமுறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தீவிர விவசாயத்தை மேற்கொண்டு வருகிற தமிழக விவசாயப் பெருமக்களுக்கு இந்த உர விலை ஏற்றமானது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பரவலாக விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வரும் யூரியா, காம்ப்ளக்ஸ், பாஸ்பேட் போன்ற உரங்களின் விலை கணிசமான அளவில் உயர்த்தப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்ட 10 சதவிகித விலை குறைப்பினைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும் விலை உயர்வு அதிகமாகவே உள்ளது. எனவே, இந்த விலை உயர்வினால் விவசாயிகள் பாதிக்கப்படுவதுடன் விளை பொருட்களின் விலைகளும் வெகுவாக உயர வாய்ப்புள்ளது.

எனவே, மத்திய அரசு, உரங்களுக்கு வழங்கி வந்த மானியத்தைத் திரும்பவும் முழுமையாக வழங்கி, உர விலை குறைய வழிவகை காண வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

## ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.1 கோடி உதவித் திட்டம்

பின்தங்கிய மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தில் முன்னேற்றப் பணிகள் தொடங்கிவிட்டன. 'ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் வளர்ச்சிப் பணிக்காக ஒரு கோடி ரூபாய் வீதம் 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிதி வழங்கப்படும்' என்று மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அறிவித்திருந்தார். அதன்படி முதலமைச்சர் தொகுதியான பர்கூர் தொகுதியில் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் 11 வழிகளில் புதிய பேருந்துகளும் துவக்கி வைக்கப்பட்டன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் துவக்கிவைத்துப் பேசினார். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற அடிப்படையில் தான் அரசு இத்திட்டத்தை தீட்டியுள்ளது. இத்திட்டங்கள் சிறப்பாகச் செயல்படவும், திட்டத்தின் பயன் கிராம மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேரவும் அதிகாரிகள் ஒத்துழைப்பும், பொதுமக்கள் ஒத்துழைப்பும் அவசியம் தேவை. தமக்காகத் தீட்டப்பட்ட திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று எண்ணி அனைவரும் இத்திட்டங்கள் வெற்றியடைய உதவ வேண்டும் என்று மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு செல்வகணபதி அவர்கள் கூறினார்.

பர்கூர் பேரூராட்சியிலிருந்து 11 இடங்களுக்கான நகரப் பேருந்து வழித்தடங்களையும் ஒரு புற நகர்ப் பேருந்து வழித்தடத்தையும் துவக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், மேலும் 6 வழித்தடங்களில் பேருந்துகளும், பர்கூரிலிருந்து சென்னைக்கு ஒரு பேருந்தும் விடப்படும் என்றார்.

தர்மபுரி மாவட்டம் குறிப்பாக பர்கூர் தொகுதியை முன்னேற்றும் வகையில் 222 திட்டங்கள் பட்டியலிடப்பட்டு அவற்றில் 6 திட்டங்கள் ஏற்கனவே சேர்க்கப்பட்டுவிட்டன. 120 திட்டங்கள், தொடர்புடைய துறைகளிடம் நடவடிக்கைகளில் உள்ளன. வரும் ஆண்டுகளில் தர்மபுரி மாவட்டம் மற்றெந்த மாவட்டத்தைக் காட்டிலும் வளர்ந்த மாவட்டமாக்கப்படும்.

162342

# செய்திகள் செய்திகள் செய்திகள்

### குழந்தைகள் நல மருத்துவ நிலையம்

''சென்னையில் குழந்தைகள் நல மருத்துவ நிலையத்தில் (ICH) உள்ள இரத்த வங்கி, நாட்டில் உள்ள 10 முக்கிய பயிற்சி நிலையங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவ அலுவலர்கள், தொழில் நுட்ப ஊழியர்கள், மருந்தக ஆய்வாளர்கள் ஆகியோருக்கு இந்த நிலையத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்'' என்று குழந்தைகள் நல மருத்துவ நிலைய இரத்த வங்கி மருத்துவ அலுவலர் டாக்டர் விமலா ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

### படகு போலீஸ் நிலையங்கள்

''தமிழகத்தில் 11 மாவட்டங்கள் கடலோரத்தில் உள்ளன. அவற்றில் படகுக் காவல் நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 1000 கி.மீ. நீளக் கடலோரப் பகுதியில் பாதுகாப்பு மேலும் வலுப்பெறும்'' என்று சட்டம்- ஒழுங்குத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் டபிள்யூ. ஐ. தேவாரம் தெரிவித்துள்ளார்.

### சுற்றுச் சூழல் குறித்த பட்டயப் படிப்பு

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குறித்து ஓராண்டுக்கால முதுகலைப் பட்டயப் படிப்பை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் புதியதாகத் தொடங்கியுள்ளது. இத்தகைய பட்டயப் படிப்பு, இந்தியாவில் வேறெந்தப் பல்கலைக் கழகத்திலும் இதுவரையில் தொடங்கப்படவில்லை'' என்று மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழி தொடர் இயக்கத்தின் இயக்குநர் டாக்டர் கே.எம். பாதுஷா தெரிவித்துள்ளார்.

### இந்திய விஞ்ஞானிக்கு கௌரவப் பதவி

மத்திய இராணுவ அமைச்சரின் விஞ்ஞான ஆலோசகராகப் பணியாற்றுபவர் டாக்டர் வி.எஸ். அருணாசலம். இவர், பிரிட்டனில் உள்ள மதிப்புமிக்க பொறியாளர் பேரவையின் அயல்நாட்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவருடைய திறமையைப் பாராட்டி இவருக்கு இந்தக் கௌரவப் பதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பதவியைப் பெறும் முதல் இந்தியரும் இவர்தான்.

டாக்டர் வி.எஸ். அருணாசலம் ஒரு சிறந்த உலோகவியலாளர். சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது, பத்ம விபூஷண் விருது ஆகிய விருதுகளையும் அவர் பெற்றிருக்கிறார்.

''இராணுவத்தில் இந்தியாவை, வீரமிக்க தலைசிறந்த சுதந்திர நாடாக ஆக்க முடியும். நமது தொழில்நுட்பத்தை மேம்படுத்தி வளர்ந்த நாடுகளுக்கு இணையாக இராணுவத்தில் இந்தியாவை உருவாக்க நமது நாட்டிலேயே போதிய வளங்கள் இருக்கின்றன நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள அதற்குத் தேவையான சக்தி நம்மிடம் இருக்கின்றது.'' என்கிறார் டாக்டர் அருணாசலம்.

### மாணவ மணிகளுக்குப் பரிசு

**1991**-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்த மேல் நிலைப்பள்ளித் தேர்வில் தமிழ், ஆங்கிலம் தவிர இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் உட்பட பிற மொழிப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். இந்தப் பரிசுகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன

கடந்த ஆண்டு தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறப்புத் தமிழ் ஆகிய மூன்று பாடங்களில் மட்டும் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

### பெரிய சரக்கு விமானம்

பெரிய இயந்திரங்கள், வாகனங்கள் போன்ற கனமான பெரிய பெரிய சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கென சோவியத் ரஷியாவில் புதிதாக ஒரு விமானம் உருவாக்கப்பட்டுள்ளது. ''ரஷியன்'' என்ற பெயர் கொண்ட இந்த விமானம் ஒரே சமயத்தில் 150 டன் வரை சரக்குகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. பெரிய டாங்கிகள் (Tanks), ரோடு எஞ்சின், பெரிய இயந்திரங்கள் ஆகியவற்றை அப்படியே இந்த விமானத்திற்குள் ஏற்றி அனுப்பலாம்.

இத்தகைய பெரிய பெரிய சரக்குகளை ஏற்றுவதற்கென இந்த விமானத்தில் அதற்கென்று ஒரு தனி அமைப்பு உள்ளது. சரக்குகள் ஏற்றும்போது இந்த விமானத்தின் அடிப்பகுதி சுருங்கி, உடற்பகுதி தரைமட்ட அளவில் படிந்திருக்கும்படி செய்யப்படுகிறது. இதன் முன் பகுதி மேல் நோக்கி உயர, பின்புறக் கதவுகள் திறந்து பளு ஏற்றும் சாரங்கள் கீழ் நோக்கிச் செலுத்தப்படுகிறது. சரக்கு ஏற்றப்படும் உட்பகுதி, சரக்கு கப்பலின் உட்பகுதி போல் அமைந்திருக்கும்.

மணிக்கு 250 கி.மீ. வேகத்தில் 12 ஆயிரம் மீட்டர் உயரத்தில் பறக்கக்கூடிய இந்த விமானம், புறப்பட்ட இடத்திலிருந்து ஒரு இடத்திலும் நிற்காமல் 16 ஆயிரத்து 500 கி.மீ. தூரம் வரை போகும்! ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. [illegible]
முகவரி : [illegible] சென்னை-600 [illegible]. தொலைபேசி எண் : [illegible]

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



